# இதயம் சொல்லும் என்னுயிரே



அமுதவல்லி கல்யாணசுந்தரம்

# இதயம் சொல்லும் என்னுயிரே!



1

**என்னதான் நடக்கும் நடக்கட்டுமே!**

**இருட்டினில் நீதி மறையட்டுமே!**

**தன்னாலே வெளிவரும் கலங்காதே!**

**ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே!**

கணீர் என்ற குரலினால் தமிழ் திரை உலகை அரை நூற்றாண்டாக கட்டி போட்டு இருந்த சிம்ம குரலோன் டி.எம்.சௌந்தரராஜனின் பாடல் கணினியில் ஒலித்துக் கொண்டு இருக்க அதற்கேற்ற விதத்தில் தலை அசைத்நு, கால்களால் தாளமிட்டுக் கொண்டு இருந்தான் வெற்றிவேல்.

ஹால் சோபாவில் அமர்ந்து வெங்கடேஸ்வரன், பாலாம்பிகை இருவரின் சஷ்டியப்த பூர்த்தி அழைப்பிதழின் முதல் பிரதி 'ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி துணை' என்று எழுதி கொண்டு இருந்தவன், அருகே கேட்ட அரவத்திலும் நாசியைத் துளைத்த காபியின் மணத்திலும் நிமிர்ந்தான்.

புன்னகையுடன் நன்றி சொல்லி காபியை வாங்கி ஒரு வாய் அருந்தியவன் முகம் லேசாக மாறிச் சீரானது.

''பத்திரிகை அதற்குள் வந்து விட்டதா? இன்னும் ஒரு மாசத்திற்கு மேலேயே இருக்குமே? பேர் எழுதுகிறாயா வெற்றி? முதலில் குலதெய்வம் கோவிலில்...'' என்று ஆரம்பித்தவர் மேலாக இருந்த பத்திரிகை கண்ணில் பட்டதும் பெருமூச்சு ஒன்றினை வெளியேற்றினார் பாலாம்பிகை.

அளவான குடும்பத்தை அழகாக நிர்வாகம் செய்யும் சராசரி குடும்பத் தலைவி!

தமிழக அரசின் நெடுஞ்சாலை துறையில் கண்காணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற கணவன் வெங்கடேஸ்வரன்.

ஆசைக்கு ஒரு பெண் வசந்தி, கணவன் ரகுராமன், நான்கு வயது மகள் பவித்ராவுடன், மதுரைக்கு அருகே, பெரிய விவசாயக் குடும்பத்தில் வாழ்க்கை பட்டு, நில புலன்களுடன் வசதியாக வாழ்ந்து வருகிறாள்.

ஆஸ்திக்கு ஒரு மகன் வெற்றிவேல், சர்ச்சைக்குரிய திரை உலகில், சண்டைப் பயிற்சியாளராக கடந்த ஏழு ஆண்டுகளாக பெயருக்கேற்றபடி ஓரளவுக்கு வெற்றிகரமாகவே செயல்பட்டு வருகிறான்.



'இது என்னடா வேலை?' என்று ஆரம்ப காலத்தில் ஒரு மத்திய தரத்து குடும்பத் தலைவியாக முணுமுணுத்தது உண்டு!

படங்கள் இல்லை என்றாலும், தொடர்ந்து வருமானம் ஈட்டுவதற்காக, வளசரவாக்கத்தில் உள்ள பூர்வீகமான இடத்தில் குடியிருக்கும் வீட்டை ஒட்டி, தரை தளமும் முதல் மாடியும் என்று, ஐயாயிரம் சதுர அடி பரப்பில் நவீன உபகரணங்களுடன் ஒரு 'உடற்பயிற்சி நிலையம்' நடத்தி வருவதாலும், ஆண்டுக்கு மூன்று படம் என்ற விகிதத்தில் தொடர்ந்து படங்களில் பணிபுரிவதாலும், வசதிக்குக் குறைச்சல் இல்லை.

''உனக்குச் சொல்லவே வேண்டாம். நீயாகவே செய்து விடுவாய் இருந்தாலும்'' என்று ஆரம்பித்த அம்மாவை பார்த்துக் கேலியாகப் புன்னகை செய்தான்.

''அதான் சொல்லிட்டீங்களே? அப்புறம் என்ன சொல்ல வேண்டாம் என்று கொசுறு?'' என்று சொல்லி விட்டு வேலையைத் தொடர்ந்தவன், அம்மா அடுக்களைக்குள் செல்லாமல் அங்கேயே நின்று இருப்பது புரிய நிமிர்ந்தான்.

''காபி டம்ளரைக் கொண்டு வந்து நான் போடுகிறேன். நீங்க சமையல் வேலையைப் பாருங்க.''

''வருஷத்தில் 365 நாளும், மூன்று வேளையும் இதை தானே செய்து கொண்டே இருக்கிறேன்? வீட்டில் இருக்கும் மூணு பேருக்கு நாலு இட்லியும் ரெண்டு கரண்டி சாம்பாரும் வைக்க எனக்குத் தெரியாதா? நீ உன் வேலையைப் பாரு'' என்றவரின் குரலில் ஆதங்கம் இருந்தது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் அம்மாவின் பேச்சு எந்த திசையில் போகக் கூடும் என்பதை அறிந்து இருந்ததால்,

அவன் பதில் பேசாமல் காபி குடிப்பதைத் தொடர்ந் தான்.

"சர்க்கரையே போடாமல் காபி கொடுத்து இருக்கிறேன். அதில் சர்க்கரை இல்லை என்று வாயைத் திறந்து சொல்கிறானா பாரு...? அப்படியே குடிக்கிறான். ஏன்டா இப்படி இருக்கிறாய்?" என்றவரின் குரலில் ஆதங்கம் கூடியது.

"காபி கசப்பா இருந்தாலும் நல்லா இருக்கு. இனி தின முமே இப்படியே கொடுங்க" என்று டம்ளரை நீட்டிய வனை முறைத்தார்.

"செய்யும் சாப்பாட்டில் இதுல உப்பு கூட, சர்க்கரை கம்மி, கொஞ்சம் காரமா இருக்கு, என்று ஏதாவது ஒரு வார்த்தை சொல்லி இருக்கிறாயா வெற்றி?"

"பசிக்கு தானே சாப்பிடுவது? எது நல்லா இருக்கோ அதுல கூட ஒரு வாய் சாப்பிட்டுட்டு எது நல்லா இல் லையோ அதைத் தள்ளி வச்சுட வேண்டியது தானே? சாப்பாட்டை பழிக்கக் கூடாது. லஷ்மி என்று நீங்களே சொல்லி இருக்கீங்களே? மறந்து விட்டீர்களா?"

"ஆமா, இந்த ஞானம் எல்லாம் நாலு வருஷமா தானே? அதுக்கு முன்னாடி? பனீரை நெய்யில வறுத்து, மிளகுப் பொடி தூவி டூத் பிக் குச்சியில் செருகி சுடச் சுட சாப்பிட்டால் என்று சொன்னது இதே வாய் தானே?"

"அதெல்லாம் சின்ன வயசுல ஆர்வத்தில் செய்த தும்மா! அதுக்கென்ன இப்போ?"

"சின்ன வயசுல செய்ததா? டேய்! உனக்கு வயசு முப் பதைத் தாண்டலை. இன்னும் கல்யாணம் கூட ஆகலை. என்னவோ அறுபது வயசு கிழவன் மாதிரி சர்க்கரை



இல்லாத காபி குடிப்பது, வாழ்வதற்காக சாப்பிடுவது, என்று தத்துவம் பேசிக் கொண்டு இருக்கிறாய்?"

"இந்த காலத்துல பத்து பனிரெண்டு வயசு பசங் களுக்குக் கூட சர்க்கரை நோய் வருகிறது. வயசுக்கும், உணவு கட்டுப்பாட்டுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தவிர்க்க வேண்டிய உணவுகள் பட்டியலில், அரிசி, சர்க்கரை இரண்டுமே இருக்கு. இன்னும் சொல்லப் போனால் என் தொழிலுக்கு உடல் ஆரோக்கியம் தான் மூலதனமே! அதனால் உப்பு காரம் இனிப்பு எல்லாமே அளவோடு இருந்தால் நலமே!" என்று எதுகை மோனை யுடன் கவிதை மாதிரி சொன்னவனை முறைத்தார்.

"நான் இந்த விளக்கத்தை கேட்டேனா? ஒவ்வொரு கேள்விக்கும் தயாரா ஒரு பதில் வைத்து இருப்பாயே? நான் என்ன சொன்னால் நீ என்ன சொல்லிக் கொண்டு இருக்கிறாய்? உன்னுடன் பேசுவதும், இந்த குட்டி சுவரில் முட்டிக் கொள்வதும் ஒன்று."

"பாலா ஏன் அவனைக் கிண்டிட்டு இருக்க?" என்று வெராண்டாவில் பேப்பர் படித்துக் கொண்டு இருந்த கணவனிடம் இருந்து குரல் வந்ததும் அவரின் கோபம் இன்னும் கூடியது.

"ஒன்றும் இல்லைப்பா. பத்திரிகை யாருக்கு அனுப் பணும் என்று பட்டியல் சொல்லிட்டு இருக்காங்க" என்று தாய்க்கும் தந்தைக்கும் இடையே தன்னால் இன்று புதிய வாக்குவாதம் துவங்க வேண்டாம் என்ற எண்ணத்தில் பூசி மெழுகிய மகனை முறைத்து விட்டு கணவனிடம் பாய்ந்தார்.

"வீட்டுல என்ன நடக்குது என்று தெரிஞ்சுக்காதீங்க. பொழுது விடிஞ்சதும் விடியாமல் காபியை கையில்

வச்சுக்கிட்டு சைனாகாரன் குண்டு போட்டானா? அமெரிக்கா காரன் ராக்கெட் விட்டானா என்ற செய்தி தலைகீழா படிச்சு தெரிஞ்சுக்கவில்லை என்றால் தலை வெடிச்சுடுமே உங்களுக்கு?'' என்று பொரிய வெற்றி அவரை அடக்க முயன்றான்.

''எதுக்கு காலங்கார்த்தால அப்பாவுடன் சண்டைக்கு நிக்கறீங்க?''

''நான் அவரிடம் சண்டைக்கு நிக்குறேன். நீ சமா தானம் பண்ண வா. என் பையன் பெண்டாட்டி குழந்தை யோடு நல்லா இருக்கணும் என்று நினைக்கிறதுக்கு அர்த்தம் சண்டை போடுவது என்றால் நான் சண்டைகாரி யாகவே இருந்துட்டுப் போறேன். உன்னை மாதிரியோ, உங்க அப்பாவை மாதிரியோ, இடியே விழுந்தாலும் அப்படியா என்று கேட்கவோ, சத்தமே இல்லாமல் அமைதியாக இருக்கவோ என்னால் முடியாதுப்பா.''

''இப்ப உங்களுக்கு என்னம்மா வேண்டும்?'' என்று சலிப்பாக கேட்டான் வெற்றிவேல். தினமும் பொழுது விடிந்து பொழுது போனால் இதே பாட்டை கேட்க வேண்டி இருக்கிறது. படப்பிடிப்பு இருந்தால் அதை காரணம் காட்டி சீக்கிரமாகவே கிளம்பி விடலாம். இப் போது ஒரு படம் முடித்து அடுத்த படம் ஆரம்பிப்ப தற்கும் நடுவில் உள்ள இடைவெளி இது.

அத்துடன் அப்பா அம்மாவிற்கான சஷ்டியப்த பூர்த்தி நாளும் இடையே வருவதால் புதுப்படத்திற்கான படப் பிடிப்பை தள்ளி வைத்து இருக்கிறான்.

''எனக்கு என்ன வேண்டும் என்று இனிமேல் தான் நான் உனக்கு சொல்ல வேண்டும் பாரு! கல்யாணம் பண் ணிக்கோ என்று சொல்லிச் சொல்லி எனக்கு அலுத்துப்



போச்சு. உன் மூளைக்குள் ஏறின மாதிரி தெரியலை. அஞ்சு வருஷமா, பொழுது விடிஞ்சு பொழுது போனால் இதை தானேடா பேசிட்டே இருக்கேன். உனக்கென்ன காது செவிடா? இல்லை அம்னீசியாவா?''

''ரெண்டும் இல்லை. அடுப்படியில் குக்கர் சத்தம் போடுவது உங்களுக்குக் கேட்குதா? அதை முதலில் கவனிங்க.''

''ஊரைப் போல நாட்டைப் போல, என் பையனும் ஒரு கல்யாணம் பண்ணிக்கணும். காலா காலத்துல பிள்ளை குட்டி பெத்துக்கணும் என்ற நினைப்பு எனக்கு இருக்காதா? அப்படி என்ன அவ உலகத்தில் இல்லாத ரதி? இவனுக்கு என்று பிறந்த பெண்ணை என் கண் ணில் காட்ட மாட்டியா பகவானே?'' என்று புலம்பியபடி உள்ளே சென்றவரின் குரல் வெகு நேரத்திற்குத் தொடர்ந்தது.

வெங்கடேஸ்வரன், வெற்றிவேல் இருவருக்குமே அவரை தேற்றும் வழி தெரியாததால், அதில் காதில் விழுந்தும் விழாத பாவனையில் இருந்தனர். காலை உணவு வேளையில் பயண பையுடன் வந்து அமர்ந்த வெற்றி பார்த்ததும் பாலாம்பிகையின் புருவம் உயர்ந்தது.

''வெற்றி, வெளியூர் பயணமா? எப்ப கிளம்புகிறாய்? ஷூட்டிங்கா? சொல்லவே இல்லை?''

''உங்க அறுபதாம் கல்யாணம் முடியும் வரை இன் னும் ஒரு மாசத்துக்கு ஷூட்டிங் இல்லை. என் அசிஸ் டென்ட் ஒருத்தனுக்கு திருவொற்றியூரில் கல்யாணம். அதை முடித்து விட்டு அங்கே இருந்து அப்படியே மதுரை போகலாம் என்று நினைத்தேன். திருவொற்றி யூரில் இருந்து வளசரவாக்கம் வந்து விட்டு மீண்டும்

எக்மோர் போவது வீண் வேலை. அதனால் பையை எடுத்துக் கொண்டேன்...''

''மதுரையில் என்ன?''

''நீங்க தானேம்மா குல தெய்வம் கோவிலில் பத்திரிகை வைச்சுக் கும்பிடணும் என்று சொன்னீங்க...''

''அதை மிருதுளா கல்யாணத்திற்குப் போகும் போது செய்து கொள்ளலாமே?''

''மிருதுளா கல்யாணம் இப்ப வருதா? அதுக்கு நீங்க கூட வருவீங்க இல்லையா? ஞாபகம் இல்லைம்மா...''

''எப்படி இருக்கும்? எங்க அண்ணன் குடும்பம் என் றால் இளக்காரம் தானே?''

''சும்மா மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச் சுப் போடக் கூடாது. ரகு மேலேயோ, வசந்தி மேலேயோ, எனக்கு எந்த வருத்தமும் இல்லை.''

''எங்க அண்ணி மேல் தான் வருத்தம். அதுவும் அவங்க எனக்காக சொன்ன வார்த்தை தானே? உனக்கு அவளைப் பிடிக்கலை என்று சொல்லிவிட்டாய்.''

''உளறாதீங்கம்மா! அவளைப் பிடிக்காமல் இல்லை. கல்யாணம் பண்ணிக்க பிடிக்கவில்லை. நான் பார்க்க வளர்ந்த சின்ன பொண்ணு! அவளைப் போய்...''

''என் ரகு நம்ம வசந்தியை பண்ணிக்கலையா?''

''அவங்களுக்குப் பிடிச்சு இருந்தது. பண்ணிக் கொண் டாங்க. எனக்கும் மிருதுளாவுக்கும் இடையே எட்டு வயது வித்தியாசம்...''

''இப்போ எதுக்கு அந்தக் கதை? நீ பிடிக்கலை என்று சொன்னதும் அவங்க உன் வார்த்தையை மதிச்சு விட் டுட்டாங்க இல்ல? திருப்பி உன்னைத் தொந்தரவு பண்ணினாங்களா? இன்னும் என்ன மனத்தாங்கல்?''



''அவளுக்குக் கல்யாணம் ஆகட்டும் என்று தான் இருந்தேன். இப்ப கல்யாணம் நிச்சயம் ஆகி விட்டது இல்லையா? அவங்க வீட்டுக்கு நேரே போகிறேன். அங்கே இருந்து கோவிலுக்கு சாமி கும்பிடப் போகிறேன். போதுமா?''

''போதாது...!''

''இன்னும் என்ன?''

''உன் அசிஸ்டெண்டுக்கு எல்லாம் கல்யாணம் நடக்குது. அவனுக்கு நிச்சயமா உன்னைவிட சின்ன வயசாகத்தான் இருக்கும். ஆனால் நான் உன் கல்யாணம் பற்றிப் பேசினால் உனக்கு வாயே அடிச்சுப் போய்டும். உன் கல் யாண பத்திரிகையை நாங்க வீடு வீடா வைக்க வேண் டிய வயசில் எங்க அறுபதாம் கல்யாண பத்திரிகையை நீ வைத்துக் கொண்டு இருக்கிறாய்...''

''பெற்றவர்களுக்கு இதைச் செய்ய வேண்டியது என் கடமை என்று நான் நினைக்கிறேன்மா...''

''கடமை தான். ஆனால் பையனும் பொண்ணும் கல்யாணம் ஆகி வயித்துல ஒண்ணு கையில ஒண்ணு என்று பேரன் பேத்திகள் புடைசூழ இந்த வைபவம் நடத்தினால் சந்தோஷமா இருக்கும் பையன் தனி மரமா நிற்கையில் எங்களுக்கு அறுபதாம் கல்யாணம் ஒன்று தான் குறைச்சல்? இதில குல தெய்வத்துக்கு பத்திரிகை வைக்க கிளம்பிட்ட நீ?'' என்று சொல்ல அதுவரை அமைதி காத்த வெங்கடேஸ்வரன் வாயைத் திறந்தார்.

''இப்ப எதுக்குப் புலம்பற? அவனை நிம்மதியா சாப்பிட விடுறியா?''

''நான் புலம்புறேன். வேற வழி? என் பேச்சை யார் காது கொடுத்துக் கேட்கறா? நியாயமா பார்த்தால்

அவனை நீங்க கேள்வி கேட்கணும். செய்ய மாட்டீங்க! 'அப்பா நல்லவர்' என்ற இமேஜ் போய்டக் கூடாது. இதுல என் வாயை அடைக்க வேறு வந்துட்டீங்களா?''

''பாலா, பொறுத்தார் பூமி ஆள்வார் என்று கேள்விப் பட்டதில்லையா? கால நேரம் கூடி வந்தால் எல்லாம் நல்ல படியா நடக்கும்...''

''பொறுத்தார் பூமிக்குள்ளே போன பிறகு தான் அதை ஆள முடியும். அஞ்சு வருஷமா எட்டிப் பார்க்காத நல்ல நேரம் இனிமேல் தான் இங்கே வரணுமா? அது வரக்குள்ளே நான் பூமிக்குள்ளே போகாமல் இருந்தால் சரி.''

''அம்மா! கல்யாண விஷயத்தைத் தவிர வேறே ஏதாவது சொல்லுங்க. உடனே சரி என்று சொல்கிறேன்...'' என்று வெற்றி சமாதானம் செய்ய முயன்றான்.

''வேறே ஏதாவது சொல்லணுமா? சொல்கிறேன். அஞ்சு வருஷமா வசந்தி எத்தனை தடவை கூப்பிட்டு விட்டாள்? ஒரு நடை போயிட்டு வரக் கூடாதா? இத்தனைக்கும் அது தங்கை வீடு மட்டும் இல்லை. தாய் மாமா வீடு, அவங்களும் இவனை வா வா என்று வருந்தி கூப்பிடுறாங்க இல்லையா?''

''போகிறேன் என்று ஏற்கனவே சொல்லிட்டேனேம்மா...?''

''சும்மா தலையைக் காண்பித்து விட்டு வருவதை நான் சொல்லவில்லை. அவ்வளவு தூரம் போகும்போது அங்கே ஒரு வாரம் தங்கி கல்யாண வேலையில் அவளுக்குக் கூட மாட ஒத்தாசையா இருக்கலாம். செய்வாயா நீ?''



''அவங்க வீட்டுல இல்லாத ஆள் படையா? நான் போய் அங்கே புது ஊரில், புது இடத்தில், அவளுக்கு என்ன ஒத்தாசை செய்து விடப் போகிறேன்?''

''ஒன்றும் இல்லை என்றாலும் பவித்ராவைப் பார்த்துக்கலாம் இல்லையா? அதுவே அவளுக்கு யானை பலம் கொடுக்கும். அத்துடன் சமயம் கிடைக்கும் போது ரகுவுடன் கடை கன்னிக்குப் போய் வரலாம். உனக்கு இஷ்டம் இல்லை என்றால் நீ வெளியே போகவில்லை என்றால், வயல் வேலை நடக்கும் போது வீட்டு ஆள் என்று மேற்பார்வை பண்ணலாம் இது விவசாய சீசன் வேறே...''

''அவ்வளவு தானே? உங்க ராமாயணத்தை ஆரம்பிக்காதீங்க. போயிட்டு கல்யாணம் முடியும் வரை அங்கே ஒரு வாரம் இருந்து விட்டு வருகிறேன். சந்தோஷமா?'' என்று அவன் சொன்னதுமே முகத்தில் பிரகாசம் கூடியது.

''கொஞ்சம் முன்னாடி சொல்லி இருந்தால், அண்ணிக்கு ரவா லட்டும், வசந்திக்கு மகிழம்பூவும், செஞ்சு வச்சு இருப்பேன் இல்லையா?''

''முன்பே சொன்னால், இந்த மாதிரி எக்ஸ்ட்ரா லக்கேஜ் சேர்ப்பீங்க என்று தான் சொல்லலை. நான் ஏற்கனவே அங்கே போக முடிவு பண்ணி டிக்கெட் போட்டு வைத்து விட்டேன்.''

''நீயா தூக்க போகிறாய்? ரயிலில் அந்த ஒரு பை கூடுதலா வைப்பதனால் தான் பயணம் கஷ்டமாகிடுமா? நான் வேண்டுமானால் வந்து ரயிலில் தருகிறேன். அங்கே வந்து வசந்தியை எடுத்துக்கச் சொல்கிறேன் போதுமா?'' என்று அவனிடம் புலம்பியவர் அத்துடன் விடவில்லை.

அண்ணிக்கு பிடிக்கும் என்று ரவா லட்டு, மகளுக்குப் பிடிக்கும் என்று மகிழம்பூ, பேத்திக்கு பிடிக்கும் என்று மைசூர்பாக்கு, அண்ணன் மகனுக்கு பிடிக்கும் என்று காராசேவு, என்று ஒரு மினி பலகாரக் கடையை மூட்டை கட்டி, ரயில் நிலையத்தில் அவனிடம் சேர்க்க வேண்டும் என்ற உத்தரவுடன் கணவனை அனுப்பினார்.

இரவு ஒன்பதரை மணிக்கு பாண்டியன் எக்ஸ்பிரஸ் நிற்கும் நடை மேடையில், மகனை தேடி வந்த வெங்கடேஸ்வரனைக் கண்டதும், ''என்னப்பா வந்து இருக்கீங்க...?'' என்று ஓடி வந்தவனை சமாதானம் செய்தார்.

''அவளுடைய பேத்திக்கு, மகளுக்கு அண்ணிக்கு என்று விதம் விதமா பலகாரம் பண்ணி கொடுத்து இருக்கிறாள். உன்னிடம் சேர்ப்பிக்கச் சொல்லி உத்தரவு'' என்று கையில் கொண்டு வந்த பையை அவனுடைய இருக்கைக்கு அடியில் வைத்தார்.

''இந்த பலகாரம் மதுரையில கிடைக்காத விஷயமா? அப்படியே கொடுக்கணும் என்று முடிவு பண்ணிட்டால் போன் பண்ணினால், நான் வீட்டுக்கு வந்து இருக்க மாட்டேனா? நீங்க ஏன் அலையுறீங்க?'' என்று சொல்ல அவனை தீர்க்கமாக பார்த்தார்.

''என்னப்பா அப்படிப் பார்க்கறீங்க...?''

''பாலா போன் பண்ணச் சொன்னாள். நான் தான் பண்ணலை.''

''ஏன்பா...?''

''நான் உன்னிடம் உங்க அம்மாவுக்குத் தெரியாமல் பேச வேண்டும். நீ இன்னும் அந்த சரண்யாவை நினைத்துக் கொண்டு இருக்கிறாயா?'' என்றதும் அவன் முகத்தை திருப்பித் தூரத்து இருட்டை வெறித்தான்.



''அஞ்சு வருஷமா மறக்காமல் நினைவு வைத்துக் கொள்ளும் அளவுக்கு, அவள் ஒன்றும் நமக்கு நல்ல காரியம் பண்ணவில்லையேப்பா? அவளை நான் நினைப்பதே இல்லை'' என்று கசப்பாகச் சொன்னவன் குரலில் அந்த நின்று போன திருமணம் தந்த வலி அபரிதமாக இருந்தது அவருக்குப் புரிந்தது.

''சரண்யாக்கு வேறே கல்யாணம் நடந்ததா கேள்வி பட்டேனே...?''

''அவளை நினைக்கக் கூடாது என்று தான் நானும் முயற்சி பண்ணுகிறேன். ஆனால் ஏதாவது ஒரு சொல், செயல், காட்சி அவளை நினைவு படுத்தி விடுகிறது. பெண்கள் மேலே நம்பிக்கை வர மறுக்கிறது'' என்றவன் குரலில், அவனுக்கே அவன் செய்கை பிடிக்கவில்லை என்ற உணர்வு தெரிந்தது.

''இன்னும் எத்தனை நாள் இப்படியே இருப்பாய் வெற்றி? நீ சந்தோஷமா ஒரு வாழ்க்கை வாழ வேண்டும் என்ற அம்மாவின் ஆசையைக் குறை சொல்ல முடியாது. அஞ்சு வருஷம் என்பது மிக நீண்ட காலம்! உன் அம்மா சகோதரியும் பெண் தானே? அவர்கள் நல்லவர்கள் இல்லை என்று சொல்ல முடியுமா? போனதையே நினைத்துக் கொண்டு இருந்தால் சரி வராது. எதிர்காலத்தைச் சந்திக்க வேண்டும் இல்லையா?''

''நீங்க சொல்றது என் மூளைக்குப் புரியுதுப்பா. ஆனால் மனசுக்குப் புரியலையே? இன்னும் கொஞ்ச நாள் அவகாசம் கொடுங்கப்பா! சீக்கிரமே என் மனசை கல்யாணத்துக்கு தயார் பண்ணிக் கொள்கிறேன்.''

''அந்த நல்ல முடிவை எங்க அறுபதாம் கல்யாணம் விழாவிலேயே அல்லது அதற்கு முன்னாடியே

எடுத்தால் அதை விட சிறந்த பரிசை நீ எங்களுக்குக் கொடுக்க முடியாது வெற்றி'' என்று வேண்ட அவன் அரை குறை தலை அசைத்தான்.



## 2

''லவ்லி அழகு நிலையம்...'' என்ற பெயர் பலகையில், அழகு தேவதையாக ஐஸ்வர்யா ராய் சிரித்துக் கொண்டு இருக்க, அதன் மீது சீரியல் விளக்குகள் கண் சிமிட்டி அவளின் பொலிவை மேலும் மெருகேற்றிக் கொண்டு இருந்தது.

இரவு ஏழரை மணி. ராகுலுக்கு உணவு கொடுக்கும் நேரம் நெருங்கி விட்டது என்ற எண்ணத்துடன் முன் பக்க கதவை சாத்த வந்த வாணிப்ரியா, அவசரமாக உள்ளே நுழைய முயன்ற பெண்ணை பார்த்துத் தயங்கினாள்.

''பார்லர் மூடும் நேரம் ஆகி விட்டதே மேடம். நாளை வருகிறீர்களா...?'' என்று கேட்க அவளின் முகத்தில் சின்ன கெஞ்சல் தோன்றியது.

''நாளைக்கு வெள்ளிக் கிழமை, நிறைய வேலை இருக்கும். சனிக்கிழமை ஒரு கல்யாணத்துக்கு ஊருக்குக் கிளம்பணும். புருவம் மட்டுமாவது திருத்தி விடுகிறீர்களா...?'' என்று கேட்க அவள் தலை அசைத்தாள்.

''சரி வாங்க மேடம்...'' என்று உள்ளே அழைத்துச் சென்று புருவம் திருத்தியவள், அவள் கூடுதலாகக் கேட்ட ஃபேஷியலையும் முடித்த போது மணி எட்டைத் தாண்டி இருந்தது.



''ரொம்ப தேங்க்ஸ் மேடம். ஆபீசிலும் வேலை பார்த்துக் கொண்டு வீட்டிலும் வேலை செய்யும்போது உங்களை மாதிரி சுதந்திரமா தொழில் செய்யறவங்களை பார்த்துப் பொறாமையா இருக்கு. நினைச்சா செய்யலாம். இல்லை என்றால், கதவை இழுத்து மூடிட்டுப் போகலாம் இல்லையா?'' என்று புலம்பியபடி பணம் செலுத்தியவளை சின்னச் சிரிப்புடன் பார்த்தாள்.

''என்னைப் பார்த்தும் பொறாமைப்பட ஒரு ஆளா...?' என்ற கேள்வி தோன்றியதும் இதழ்களில் ஒரு புன்னகை பரவியது.

''இக்கரைக்கு அக்கரை பச்சை மேடம். அவரவர் நிலை அவரவருக்குத் தான் தெரியும். வெளிப்புறத் தோற்றத்தை வைத்து எதையும் எடை போட முடியாது...''

''எது எப்படியோ...? இன்னொரு நாள் அலைய வைக்காமல் வந்த வேலை திருப்தியா முடிந்தது தேங்க்ஸ். உங்களை மாதிரி அடுத்தவங்களுக்குப் பாவம் பார்க்க ரெண்டு பேர் இருப்பதால் தான், நாட்டுல மழையே பெய்யுது'' என்று சொல்லி வெளியேறியவளை பார்த்துப் புன்னகை செய்தாள்.

ஒரு பெருமூச்சை வெளியேற்றி, முன் வாசல் கதவைப் பூட்டி, பக்கவாட்டில் ஒட்டியே இருந்த வீட்டுக்குள் நுழைந்தாள்.

''எங்கேம்மா ராகுல் சத்தத்தையே காணோம்? என்ன செய்கிறான்?'' என்று கேட்டபடி உள்ளே வந்த வாணிப்ரியாவை எதிர்கொண்டார் கற்பகம்.

''சாயங்காலம் நாலு மணிக்கு பாலும் ரொட்டியும் கொடுத்தேன். சாப்பிட்டு விட்டு விளையாடப் போனவன் கொஞ்ச நேரத்தில திரும்பி வந்து விட்டான். கண்ணில

கண்ணீரும் இருந்தது. என்னடா என்று கேட்கக் கேட்கப் பதிலே சொல்லாமல் போய் பெரிய மனுஷன் மாதிரி கதவை சாத்திக் கொண்டான்...''

''என்னம்மா நீங்க? என்னை நடுவில் கூப்பிட்டு இருக்கலாம் இல்லையா?''

''வந்து பார்த்தேன் வாணி, கஸ்டமர் இருந்தாங்க. அதான் உன்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம் என்று திரும்பி வந்து விட்டேன்...''

''என்னம்மா தொந்தரவு? குழந்தையை விட கஸ்டமரா முக்கியம்? சாப்பிட்டானாம்மா?'' என்று வருத்தத்துடன் கேட்டவள் மகனின் அறைக்குச் சென்றாள்.

''அவனுக்குப் பிடிக்குமே என்று இனிப்பு கொழுக்கட்டை பண்ணி வச்சு இருக்கேன். சமைக்க தான் முடியும். வெளியே வந்தால் தானே சாப்பாடு ஊட்ட முடியும். என்ன பண்ண சொல்கிறாய்...?'' என்று கற்பகம் கேட்க, மகன் இருந்த அறை கதவைத் தட்டினாள்.

''ராகுல்... குட்டி... தூங்கிட்டீங்களா செல்லம்...? எழுந்து வந்து கதவைத் திறங்க பார்ப்போம்...'' என்று கதவைத் தட்டியவள் சாவி துவாரத்தின் வழியே, தூங்குகிறானா என்பதையும் பார்த்தாள்.

கட்டிலில் முட்டியில் தலையைச் சாய்த்து அமர்ந்து இருந்தான். ஒரு சின்ன குழந்தையால் ஒரே இடத்தில் இப்படி அசையாமல் இரண்டு மணி நேரம் அமர்ந்து இருக்க முடியுமா? அப்படி என்ன கோபம்?

''ராகுல் கதவைத் திறடா. அம்மா கூப்பிடுகிறேன்ல?'' என்று விதம் விதமாக அழைத்தமைக்கும் அவனிடம் இருந்து பதில் இல்லை. இந்த முறை, தலை முட்டியில் பதிந்து இருந்த திசை மாறி இருந்தது.



''ராகுலுக்கு பால் கொழுக்கட்டைப் பிடிக்கும் என்று பாட்டி பண்ணி வைத்து இருக்காங்களே. சாப்பிடலையா...?'' என்று ஆசை காட்டினாள்.

''எனக்கு வேண்டாம்...''

''கொழுக்கட்டை வேண்டாமா? அப்பா வனிலா ஐஸ்க்ரீம்...''

''தேவை இல்லை...''

''இங்கே பாருடா! ஐஸ்க்ரீம் வேண்டாம் என்று சொல்லும் அளவுக்கு ராகுல் செல்லத்துக்கு கோபமா? சரி முதலில் கதவைத் திற. அம்மா மடியில் உட்கார்ந்து சாப்பிடு. அப்புறமா அம்மா கழுத்தைக் கட்டி, கன்னத்தில் கிஸ் பண்ணி, ராகுல் என்ன கேட்டாலும், வாங்கி தரேன் என்று அம்மா ப்ராமிஸ் பண்றாங்க. ஒகே...?'' என்று குரலை குழைத்து உரிய ஏற்ற இறக்கங்களுடன் சொல்ல வந்த வார்த்தைகள் வேலை செய்தது.

மெதுவாக கட்டிலில் இருந்து இறங்கி வந்து கதவைத் திறந்தவனை குனிந்து அள்ளி, ''சமத்து சர்க்கரைக் குட்டி, என் செல்லம், அம்மா பேச்சைக் கேட்டு வந்துட்டாங்களே?'' என்று கொஞ்சி மகனின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''இன்னிக்கு என்ன நடந்தது? விளையாடப் போகாமல் ஏன் ரூமுக்குள்ளேயே இருந்தீங்க ராகுல்?'' என்று கொஞ்சியபடி உணவை ஊட்ட, வாங்கிக் கொண்டான்.

''அந்த வினோத் இல்லைம்மா. அவங்க அப்பா பைவ் கலர்ல பெரிசா பட்டம் செய்ஞ்சு தந்தாங்க என்று எடுத்துட்டு வந்தான். அதைத் தொட்டுப் பார்க்க கேட்டேன். தரலைம்மா'' என்று புகார் பத்திரம் வாசித்தவன் குரலில்,

அந்த ஏமாற்றமும் ஆதங்கமும், இரண்டு மணி நேரம் ஆகியும் மிச்சம் இருந்தது.

வினோத் வீட்டு உரிமையாளர் மகன். எட்டு வயது தாயை இழந்தவன் தாய்க்குத் தாயாக நின்று வளர்க்கும் தந்தை! மிக அதிக வசதி. இதெல்லாம் நல்ல விஷயங்கள் என்றாலும் அவரின் பார்வை அடிக்கடி இங்கே தன் மீது பாயும். அது தான் சிக்கல்!

''அடுத்தவங்க வச்சு இருக்கும் பொருளைப் பார்த்து நீ ஏன் ஆசைப் படணும்? அம்மா உனக்கு சிக்ஸ் கலரில் பட்டம் நாளைக்குக் கடையில் வாங்கித் தருகிறேன். உனக்கு என்ன வேண்டும் என்று நீ என்னிடம் கேளு. நான் வாங்கி தருகிறேன்'' என்று உறுதி அளித்தவளுக்கு அடுத்த சில நிமிடத்தில் அந்த உறுதி ஆட்டம் காணப் போகிறது என்பதை அறியவில்லை.

உணவை ஊட்டி, வாயைக் கொப்பளிக்க வைத்து, உடை மாற்றி, கட்டிலில் படுக்க வைத்து விட்டு, ''கொஞ்ச நேரம் கார்ட்டூன் பார்த்துட்டு இருங்க. அம்மா சாப்பிட்டு விட்டு வருகிறேன்...'' என்று சொல்ல, அவர் கையைப் பற்றி அருகே இழுத்தான் ராகுல்.

''ப்ராமிஸ் பண்ணியதை மறந்துட்டுப் போறீங்களே...?''

''சொல்லுங்க. செல்லக் குட்டிக்கு என்ன வேண்டும்...?'' என்று அவனை அள்ளி மடியில் அமர வைத்துக் கொஞ்சலாக விசாரிக்க, அவளின் கழுத்தைக் கட்டி, காதுக்குள், அவன் முணுமுணுத்த வார்த்தையைக் கேட்டு அதிர்ந்தாள்.

''என்ன கண்ணு சொல்ற...? நல்லா சத்தமா சொல்லு...'' என்று மீண்டும் திகைப்புடன் கேட்க, இம்முறை சத்தமாகவே சொன்னான் ராகுல்.



''எனக்கும் வினோத்துக்கு இருக்க மாதிரி அப்பா வேண்டும்...''

''இப்ப திடீர் என்று கேட்கிறாய்? இதை என்னிடம் கேட்கச் சொல்லி யார் சொல்லிக் கொடுத்தாங்க?'' என்று திகைப்பு மாறாமல் கேட்டவளுக்கு இது சங்கரின் வேலையாக இருக்குமோ, என்ற சந்தேகமும் தோன்றாமல் இல்லை.

''யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை. நானே தான் கேட்கிறேன் எனக்கும் அப்பா வேண்டும்...''

''அப்பா, சாமிகிட்டே போய் இருக்காங்க'' என்று சமாளித்து மெதுவாகச் சொன்னவளின் பார்வை. அவளை உணவருந்த அழைக்க வந்து, பேரனின் பேச்சை கேட்டு, வாசலில் அதிர்ந்து நின்ற அம்மாவிடம் பாய்ந்து மீண்டது.

''எப்போ வருவாங்க...?'' என்ற மகனின் கேள்வியில் மேலும் திணறினாள்.

''வர மாட்டாங்க கண்ணு...''

''நமக்கு என்ன வேண்டும் என்றாலும் கண்ணை மூடி, கைகூப்பி சாமிகிட்டே கேட்கலாம் என்று நீங்க தானே சொல்லி தந்தீங்க. சாமிகிட்டே அப்பா இருந்தால் ஏன் சாமிக்கு எனக்கு கொடுக்க மாட்டார்? நான் கண்ணை மூடிக் கேட்கறேன்...'' என்று உடனேயே பிரார்த்தனை ஆரம்பிக்க விழிகளில் கண்ணீர் பெருகியது.

எங்கே தவறு செய்தாள்? சின்ன குழந்தையிடம் இறை நம்பிக்கை வளர்த்தது தவறா? அப்படியே இருந்தாலும், அவள் செய்த தவறுக்கு குழந்தைக்கு ஏன் தண்டனை? நினைவு தெரிந்த நாளில் இருந்து யாருக்கும் எந்த விதமான கெடுதலும் மனத்தால் கூட நினைக்

காதவள். சாதாரண பணியில் மத்திய தர குடும்பத்தில் இருந்தாலும் சந்தோஷமாக வாழ்ந்தவள்.

எதிர்பாராமல் நிகழ்ந்த தந்தையின் மரணம் ஒரு விபத்து என்றால், அதை நிகழ்த்தியவனுடன் தனக்கு நடந்த திருமணம் இன்னொரு விபத்து. எதுவும் இரண்டாக நின்று விடக்கூடாது என்ற எண்ணத்தில் நடந்த மூன்றாவது விபத்து கணவனின் மரணம்!

மணமான ஆறாவது மாதம் வயிற்றில் குழந்தையுடன் தனி மரமாக நின்றதற்கு யார் காரணம்? கிரகங்களா? இறைவன்? நாக்கில் நரம்பில்லாமல் வாய்க்கு வந்ததை பேசும் குறுகிய மனம் படைத்த மனிதர்களா? மனதுக்குள் கேள்விகள் முட்டி மோதினாலும், தன் முகத்தை பதிலுக்காக ஆவலுடன் பார்த்துக் கொண்டு இருக்கும் குழந்தையை என்ன செய்வது?

''உனக்கு அம்மா, அப்பா எல்லாமே நான் தான் செல்லம். உனக்கு என்ன வேண்டுமானாலும் என்னிடம் கேட்கலாம். ராகுல் குட்டிக்கு பைவ் கலர்ஸ்ல பெரிய பட்டம், அந்த வினோத் வச்சு இருந்த மாதிரியே வாங்கி தரேன். சரியா...?''

''எனக்குக் கடையில் வாங்கும் பட்டம் வேண்டாம்...''

''அடம் பிடிக்கக் கூடாது. சொன்னால் கேட்கணும்'' என்று அதட்ட, ''நான் சொன்ன பேச்சு கேட்டேன். நீங்க தான் என்ன கேட்டாலும் தரேன் என்று ப்ராமிஸ் பண்ணிட்டு இப்ப மாத்துறீங்க...'' என்ற குழந்தையின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தாள்.

''அது கடையில் விற்கும் பொருளை சொன்னேன் ராகுல்... அப்பா என்ன கடையில் விற்கும் பொருளா...?



முதலில் உனக்கு அப்பா எதுக்கு? அப்பா செய்யும் எல்லா காரியத்தையும் நானே செய்து கொடுக்கிறேன். போதுமா...?''

''முடியாது!

உங்களால் செய்ய முடியாது!

வினோத் வச்சு இருக்க மாதிரி பெரிய பட்டம் உயரமா பறக்க விடணும். மாஞ்சா நூல் வைத்து போட்டி போட்டு அறுக்கணும். ஞாயிற்றுக்கிழமை ஆனால், அவங்க கிராமத்துக்கு கூட்டிட்டுப் போய், தோளில் தூக்கி வைத்து மாங்காய் பறிச்சு தாணும். பெரிய பச்சை கலர் பைக்கில் ஸ்வீட்டா ஹெல்மெட் போட்டுப் பறந்து போகணும்.

மூச்சு விடாமல் அடுக்கிய ராகுலின் பட்டியலில் வாணிப்ரியாவிற்கு தலை சுற்றி மயக்கம் வந்தது. இது எங்கே போய் முடியும்?

''அப்பா எப்பம்மா வருவாங்க?'' என்று அவளின் காதில் ரகசியம் பேசியவனை தடுக்க வழி தெரியாமல், ''சீக்கிரமே அனுப்பச் சொல்லி கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறேன் ராகுல்'' என்று சொல்லி வைத்தாள்.

''வாணி, நான் ராகுலின் பக்கத்தில் இருக்கிறேன் நீ சாப்பிட்டு விட்டு வா'' என்று உள்ளே வந்தார் கற்பகம்.

''இல்லை வேண்டாம்மா! வயிறு சரி இல்லை'' என்று மகள் சொன்னது புரிந்தது. மகளுக்கு மனம் தான் சரி இல்லை. வயிறு அல்ல என்பதைச் சொல்ல விஞ்ஞானியா வர வேண்டும்?

''குழந்தையைத் தூங்க வச்சுட்டு வா ப்ரியா. நான் உன்னிடம் பேச வேண்டும்'' என்று சொல்லி விட்டு வெளியே சென்ற கற்பகத்தின் மனம் கலங்கிக் கிடந்தது.

இருபத்தி ஐந்து வயது மகள், மூன்று வயது பேரனுடன் இன்னும் எத்தனை நாள் இந்த உலகில் தனியாகப் பொழுதைக் கழிக்க முடியும்? தன் ஆயுள் எத்தனை நாளைக்கோ? மனவலிமை கோரி ஆஞ்சனேயரிடம் விண்ணப்பம் வைத்தார். அனுமன் சாலீசாவை பாராயணம் செய்தார். இரண்டு முறை படித்து முடித்த பிறகும் மகளிடம் அசைவு இல்லை என்றதும் எழுந்து வந்தார்.

''வாணி, குழந்தை தூங்கிட்டானா?''

''ம்ம்ம், என்னம்மா?''

''ராகுலை ஸ்கூலில் சேர்க்க வேண்டாமா? நேற்று போனாயே? என்ன சொன்னாங்க?''

''அப்ளிகேஷன் கொடுக்கவே ஆயிரம் கேள்வி கேட்கறாங்க. மூன்று வயது நிரம்பியாச்சு என்பதற்கு ஆதாரமா பிறப்பு சான்றிதழ் வைக்கச் சொன்னாங்க.''

''பிறப்பு சான்றிதழா? அது முன்னாடியே ஹாஸ்பிடலில் வாங்கி வைக்கலையே? இப்ப இங்கே பதிய முடியுமா?''

''தெரியலைம்மா, உடனே என்றால் தான் மருத்துவமனையில் வாங்கலாமாம். இல்லை என்றால் பல்லாவரம் நகராட்சி அலுவலகத்திற்குப் போகணும். சென்னைக்குப் போகணும்மா.''

''தனியா போயிட்டு வருவியா? அங்கேதானே... அவங்க எல்லாம்...'' என்று முடிக்காமல் இழுத்தார்.

''இருக்கட்டும்மா. நாம அவங்க வழிக்கே போகப் போவதில்லை. அப்புறம் என்ன? எல்லாம் பழகிக்க வேண்டியது தானேம்மா?'' என்று சொல்லி விட்டு அவள் தலை கவிழ்ந்து அமர்ந்து இருக்க சில நிமிடங்கள் அமைதி நீண்டது.



''இன்னிக்கு ராகுல் பேசியதைக் கேட்டு பகீர் என்று இருந்தது'' என்றதும் நிமிர்ந்தவள் முகத்தில் அதிர்ச்சி, ஆதங்கம், கோபம் எல்லாம் தோன்றியது.

''இது இன்றோடு முடியும் விஷயம் இல்லை. தினமும் இந்தப் ப்ரச்னையை எதிர் கொள்ளணும். பள்ளிக்கூடம் சென்றால் இன்னும் கேள்விகள் அதிகமாகும். உன் எதிர்காலத்தை நினைத்தால் என் அடி வயிறு கலங்குது. இன்னும் பிடிவாதமா இருக்காமல் ஒரு நல்ல முடிவா எடு வாணி.''

''என் வாழ்க்கையைப் பற்றி தெரிஞ்சுகிட்டே இப்படிப் பேசறீங்களே? ஜாதகம் ஜோசியம் என்று எத்தனை பேர் என் மனசைக் குத்திக் கிழிச்சாங்க என்று தெரியாதா? எனக்குக் கல்யாணத்தின் மேலே நம்பிக்கை இனி வருமாம்மா?''

''வரணும். பொய் சொல்லி ஏமாற்றியது அவங்களா இருந்த போதும் அந்த செந்தில் இருந்த இதே உலகத்தில் தான், இங்கே இந்த இடத்தை நமக்காகக் கொடுத்த சங்கரும் இருக்கார். அவர் உன்னைக் கல்யாணம்...''

''அம்மா, இந்த மாதிரி பேசாதீங்க என்று ஏற்கனவே சொல்லி விட்டேன். நீங்க அனாவசியமா அவருக்கு நம்பிக்கை கொடுப்பதை இந்த நிமிஷத்தோடு நிறுத்திடுங்க. அவர் இந்த இடத்தை நமக்கு இனாமாகக் கொடுக்கவில்லை. வாடகைக்குக் கொடுத்து இருக்கிறார். கையில் தொழிலும், உழைக்க நம்பிக்கையும் இருப்பவங்களுக்கு எல்லா ஊரிலும் வசதி வாய்ப்புகள் காத்துக் கிடக்கு. இதுக்கு மேல நீங்க இதை தொடர்வதாக இருந்தால் நான் இந்த ஊரை விட்டே கிளம்பிடலாம் என்று நினைக்கிறேன்'' என்று ஆவேசமாக அவள் பேசிய வேளையில்,

''வேண்டாம் வாணி வேண்டாம்...'' என்ற பதட்டமான சங்கரின் குரல் கேட்டு இருவரும் திரும்பினார்கள்.

''உன்னை அந்த மாதிரி இக்கட்டான நிலைக்குத் தள்ள நான் தயாரா இல்லை. அம்மா கொழுக்கட்டைக் கொடுத்தாங்க. பாத்திரம் திருப்பிக் கொடுக்க வந்தேன். கதவைத் தட்டினேன். நீ கவனிக்கலை. திறந்து தானே இருக்கு என்று வந்தது தப்பு தான். அத்துடன் கூடவே நீங்க பேசியதை சில வார்த்தைகள் கேட்க வேண்டியதாகப் போய் விட்டது. என்னை மன்னிச்சுடுங்க. இனிமேல் என்னால உங்களுக்கு எந்தத் தொந்தரவும் இருக்காது...''

''உங்களை நல்ல நண்பனா தான் நினைத்தேன். கல்யாண ஆசை உங்க மனசில் வர நான் காரணமா இருந்து இருந்தால், ஐ ஆம் சாரி சார்.''

''இல்லை. மனைவியை இழந்த எனக்கும், கணவனை இழந்த உங்களுக்கும் இந்த ஏற்பாடு பாதுகாப்பாகவும் சந்தோஷமாகவும் இருக்கும் என்று நானே தான், யோசித்தேன். நண்பனா இருந்தும் கூட குடும்ப வாழ்வில் இணையலாம் தப்பில்லை வாணி.''

''இது பற்றிப் பேச எனக்கு இஷ்டம் இல்லை சார்.''

''ஓ.கே. ஆனால் வேறு ஊர் கிளம்பும் ஐடியாவை விட்டுடுங்க. வரேன்மா'' என்று சொல்லி விட்டு வெளியேறியவனை பரிதாபமாகப் பார்த்தார் கற்பகம்.



## 3

காலை ஆறு மணிக்கு மதுரை ரயில் நிலையத்தில் இறங்கிய வெற்றி, அங்கிருந்து சோழவந்தானுக்கு



செல்ல வாடகை கார் பிடித்த போதே அதன் ஓட்டுனர் ''சோழவந்தானில் யார் வீட்டுக்குண்ணே போறீங்க?'' என்று சிநேகமாக விசாரிக்க புன்னகையுடன் நிறுத்திக் கொண்டான்.

''பட்டணத்துக் காரங்க எல்லாம் கிராமத்து மனுஷங்களை நம்ப மாட்டீங்க? எனக்கும் அந்த ஊர்தான். உங்களைத் தெரியலையே என்று கேட்டேன்...''

மேற்கொண்டு பேச்சைத் தொடர இஷ்டம் இல்லை என்று காட்டும் வகையில் இருக்கையில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

''சார், ஊர் வந்தாச்சு. எங்கே போகணும் என்று சொல்றீங்களா?'' என்ற ஓட்டுனரின் கேள்வியில் நனவுக்கு வந்து பார்வையை ஜன்னல் வழியே செலுத்தினான். மேற்கு தொடர்ச்சி மலையில் மிச்ச சொச்சங்களை தூவிய மாதிரி சின்னச் சின்ன குன்றுகளும், ஊருக்கு நடுவே பாயும் நீரில்லாத வைகை நதியும் அந்த ஊருக்கு குளுமையை வாரி வழங்கி இருந்தது.

மூன்று போகம் நெல், அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைகள் கரும்பு, ஆங்காங்கே தென்னந்தோப்புகள், வெற்றிலைக் கொடிகள் என்று செழிப்பாக இருந்தது. முன்தினம் லேசாகப் பெய்த கோடை மழை மண் வாசனையைக் கிளப்பி இருக்க, கறவை மாடுகளை மேய்ச்சலுக்கும், எருதுகளை உழவுக்கும், ஓட்டிச் செல்லும் ரம்மியமான காட்சி கண்ணில் பட்டது.

''அம்மன் கோவிலை ஒட்டிய தெருவில், மூன்றாவது வீடு'' என்று அடையாளம் காட்ட, ''புவனேஸ்வரி அம்மா வீடா?'' என்று விசாரித்தார்.

வாசலில் கார் நிற்கும் முன்பே, "அத்தை... வெற்றி வந்துட்டான்..." என்ற வசந்தியின் சப்தம், பவித்ராவின் 'மாமா...' என்ற கூச்சலுடன் கலந்து ஒலிக்க அவனுக்கு மனம் நெகிழ்ந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளாக வராதவன் வந்து இருக்கிறான் என்ற எண்ணம் அவர்களிடையே அந்த எதிர்பார்ப்பை அதிகரித்து இருந்தது.

"பவி...!" என்று கொஞ்சியவன் குனிந்து மண்டியிட்டான். "பார்த்து ஒரு வருஷத்துக்கு மேலே ஆச்சு இல்லைடா? பெரிசா வளர்ந்து விட்டாய் செல்லம்..." என்றவனின் குரல் குழைந்து கசிந்தது.

"நான் சின்ன பொண்ணு. தனியா வர முடியாது. நீங்க என்ன சின்ன பையனா? என்னைப் பார்க்க வேண்டும் என்றால் உடனே கிளம்பி வர வேண்டியதுதானே?" என்று பெரிய மனுஷியாகக் கேள்வி கேட்க அவன் புன்னகை செய்தான்.

"உங்க அம்மாவுக்கும், சேர்த்து நீயே கேள்வி கேளு. தப்பு தான் கண்ணு! மன்னிச்சுக்கோ..." என்று கன்னத்தை வருடி எழுந்தவன் தங்கையையும் அணைத்துக் கொண்டான்.

"எவ்வளவு நாளாச்சு! பிடிவாதமா வரவே மாட்டேன் என்று இருந்து விட்டாயே? நாங்களும் ஊரும் என்னடா பண்ணினோம்?" என்றவளின் வார்த்தைகள் தடுமாறின.

"ஏய் வசந்தி, வாசலில் வச்சு பேசற விஷயமா இது? முதலில் அவனை கூப்பிடு..." என்று அதட்டிய புவனேஸ்வரியின் காலை தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கத்தை..."

"மகராசனா இரு. சீக்கிரம் ஒரு கல்யாணத்தை பண்ணி எனக்கு ஒரு பேரனை பெற்றுக் கொடு" என்று ஆசீர்வாதம் செய்ய அவன் புன்னகை செய்தான்.



"என்ன சிரிச்சு மழுப்புற?"

"நீங்க மட்டும் வாசலிலேயே என்னை நிக்க வச்சுப் பேசலாமா?" என்று கேலி செய்யும் போதே உள்ளே இருந்து ரகுராமன் வந்தான்.

"வா வெற்றி, இப்பதான் கொஞ்ச நேரம் முன்னாடி மாமா பேசினாங்க. முன்னாடி ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? நானே கார் எடுத்துட்டு வந்து இருப்பேனே...? ரயில் பிரயாணம் சௌகரியமா இருந்ததா? மிருதுளாவுக்குக் கல்யாணம் முடிந்தால் தான் இந்தப் பக்கம் எட்டிப் பார்ப்பது என்று இருந்தாய் போல?" என்று அணைத்த ரகுராமனை தட்டிக் கொடுத்தான்.

"வரக்கூடாது என்று இல்லை ரகு. அடுத்தடுத்து படங்கள் கமிட் ஆனதில் கொஞ்சம் பிசியா இருந்தேன் வேறு ஒன்றும் இல்லை. போன வருஷம் விளைச்சல் எப்படி? வைகை டேம் தண்ணி நமக்கு வருமா?"

"நெல் போட்டது ஒன்றுக்கு பாதி தான் விளைஞ்சது. தென்னந்தோப்பு இருந்ததால், உர செலவுக்கு கை கொடுத்துச்சு. நிலம் ஓரளவுக்கு மேலே வச்சு இருக்கவங்க பாடு பரவாயில்லை. ஒரு ஏக்கர் ரெண்டு ஏக்கர் வச்சு இருக்கவன் பாடு ரொம்ப கஷ்டம். நீ குளிச்சுட்டு வா. சாப்பிட்டு அப்புறம் பேசலாம்" என்று அனுப்பியவன் மனைவியிடம் கண் காட்டினான்.

"வசு, வெற்றி குளிக்க ஏற்பாடு பண்ணு. எப்பவும் போடுற மாதிரி இல்லாமல் இன்னிக்கு மாப்பிள்ளை ஸ்பெஷலா சமைக்கச் சொல்லிடு..." என்று கண் சிமிட்ட முறைத்தாள்.

"வெற்றி இன்னும் ரெண்டு நாள் இருப்பான். அதுக்கு அப்புறம் சாப்பாடு வேண்டாமா?" என்று கிண்டல்

பண்ணினாலும் அவனுக்கு வேண்டிய உதவிகளை கவனிக்கவும் செய்தான்.

என்ன இருந்தாலும் உடன் பிறந்தவன்! அதுவும் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு வீட்டுக்கு வந்து இருப்பவன். கிராமத்து மணத்துடன் சமையல் தூள் கிளப்ப தான் செய்தது. அம்மா மூட்டை கட்டி கொடுத்து இருந்த பலகாரங்களைக் கொடுத்தவன், குளித்து முடித்த பின்பு பேசிக் கொண்டு இருந்தான்.

''வசு, போதும். என்ன போட்டுட்டே இருக்க? இந்த காலை உணவுக்குப் பிறகு உன் வீட்டில சாப்பிடவே மாட்டேன் என்று முடிவு பண்ணிட்டாயா? இன்னும் பத்து நாள் மிருது கல்யாணம் முடியும் வரை இங்கே தான் இருப்பேன். சொல்லுங்கத்தை, எனக்கு வயிறு வெடிச் சுடப் போகிறது.''

''ஆமாடா! இது கூட சாப்பிடாமல் என்ன சண்டைக் காரன் நீ?''

''பாட்டி அது சண்டைக்காரன் இல்லை, ஸ்டண்ட் மாஸ்டர், சொல்லுங்க பார்ப்போம்'' என்று பவித்ரா சொன்னதும், ரகு வசந்தி இருவருமே சிரிக்க, அவர் நொடித்தார்.

''நான் என்னத்தைக் கண்டேன்? ஆற்றைக் கண்டேனா? அழகரைக் கண்டேனா? உன்னை மாதிரி எங்க ஆத்தா அப்பன் கான்வென்ட் ஸ்கூலிலா படிக்க வச்சாங்க...?''

''படிக்காமலே இந்த போடு போடுறீங்க? இன்னும் படிச்சு இருந்தால் ஒரு ஆள் உங்க முன்னால் நிக்க முடியாது...'' என்று ரகு சொல்ல உணவு வேளை கலகலத்தது.

''அடுத்த இருபத்தி ஏழாம் தேதி, அப்பாவுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு நாள் வருது. அதை ஒட்டி



சஷ்டியப்த பூர்த்தி விழா செய்யணும் என்று ஆசைப்படு கிறேன். அதுக்கு தான் உங்களை எல்லாம் நேரில் பார்த்து அழைக்க வந்தேன். பத்திரிகை குல தெய்வம் கோவி லில் வைச்சுக் கும்பிட்டு அப்புறமா தரேன்...''

''நமக்குள்ளே என்ன பத்திரிகை எல்லாம் வேண்டிக் கிடக்கு? நம்ம வீட்டு நிகழ்ச்சி, ரெண்டு நாள் முன்னா டியே வந்து, ஜாம் ஜாம் என்று அமோகமா நடத்தி விட லாம்'' என்று ரகு சொல்ல, வசந்தி அதை ஆமோதித் தாள்.

''பெற்றவர்களுக்கு அறுபதாம் கல்யாணம் செய்வது புண்ணியம். வெறும் பணம் செலவழித்து ஊரை கூட்டி சாப்பாடு போடும் சடங்கு இல்லை அது. பிள்ளைகளுக் குக் கல்யாணம் பண்ணி, மகன் மருமகளுடனும், மகள் மருமகனுடனும், பேரக் குழந்தைகளுடனும் புடை சூழ நிற்க, செய்வதில் தான் விசேஷம் இருக்கு. நீ தனியா நின்று நடத்துவதில் பெரிசா ஒன்றும் இல்லை. அதைத் தெரிஞ்சுக்கோ...'' என்று புவனேஸ்வரி நீளமாகச் சொல்ல அவனின் முகம் வாடி, இயல்புக்கு சிரமத்துடன் மீண்டது.

''இதே தான் அம்மாவும் சொன்னாங்க. அறுபதாம் கல்யாணத்திற்கு முன்னால் கஷ்டம். ஆனால் சீக்கிரமே கல்யாண சாப்பாடு போட ஏற்பாடு செய்கிறேன்'' என்று சொன்ன வெற்றியை ரகுவும் வசந்தியும் வியப்போடு பார்த்ததைக் கண்டு கொள்ளாமல், ''என்ன பவி, இப்ப நீளமா முடி வளர்க்க ஆரம்பித்து விட்டாயா? ஹேர் கட் பண்றதில்லை...? ஸ்கூலுக்கு சடை பின்னணும் என்று சொல்லிட்டாங்களா?'' என்று மருமகளிடம் மூழ்கி இருந்தான்.

முற்பகல் பொழுது முழுவதுமே, விருந்தினர்களின் வருகையும், திரைத் துறை பற்றிய கேள்விகளுக்கும் பதில் சொல்லி களைத்துப் போன வெற்றிவேல், மதிய உணவுக்குப் பிறகு படுக்கையில் சரிந்த ஒரு மணி நேரத்தில் வந்து எழுப்பினாள் வசந்தி.

''வெற்றி, பவியை கொஞ்சம் பார்லர் வரை அழைச்சுட்டுப் போயிட்டு வாயேன். ப்ளீஸ்...'' என்று எழுப்பினாள்.

''இது உனக்கே நல்லா இருக்கா? இப்படி ஒரு விருந்தை போட்டுட்டு உண்ட மயக்கம் இருக்காதா? நான் இன்னும் பத்து நாள் இருப்பேன் இல்லையா? இன்னாரு நாள் கூட்டிட்டுப் போகிறேனே?'' என்று மீண்டும் கட்டிலில் சுருண்டு தன் மதிய தூக்கத்தைத் தொடர்ந்தான்.

''வெற்றி, பவி அப்பா இல்லைடா! நாளைக்கு பவிக்கு ஸ்கூல் திறக்குது. அப்புறம் முடி வெட்டிக்கப் போக முடியாது. ஹெல்ப் பண்ணுடா...''

''இந்த ஐஸ் வைக்கும் வேலை வேண்டாம். இந்த வெயிலில் என்னால் நிக்க முடியாது. அத்தையைப் போகச் சொல்லு. இல்லை நீ போ. அதுவும் முடியாது என்றால் மிருதுளாவைப் போகச் சொல்லு.''

''ஒரு வாரத்தில கல்யாணத்தை வச்சுக்கிட்டு கல்யாண பெண்ணை வெளியில் அனுப்புவாங்களா? இது கிராமம்! சென்னை என்று நினைத்தாயா? ஆளும் பேரும் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கும் போது நானும் அத்தையும் வீட்டில் இருந்து வரவேற்காமல் வெளியே போனால் நல்லா இருக்குமா? நேற்று அம்மாவிடம் என்னவோ பவியை நான் பார்த்துக்கறேன் என்று சவடால் அடிச்சுட்டு வந்தாயாமே? இது தான் நீ



பார்த்துக் கொள்ளும் லட்சணமா?'' என்று மிரட்ட அவன் பல்லைக் கடித்தான்.

''உனக்கும் உங்க அம்மாவுக்கும் நான் சொல்லும் வார்த்தைகளை ட்விஸ்ட் பண்ணி புதுசு புதுசா அர்த்தம் கண்டு பிடிப்பதே வேலையா போச்சு. பவியை பார்த்துக்கச் சொல்லி சொன்னது அம்மா. நான் சரி என்று சொன்னேன்.''

''இப்ப நீ அவளை அழைத்துக் கொண்டு போக முடியுமா முடியாதா?''

''அங்கே வாசலில் நிக்க என்னால் முடியாது. சென்னை மாதிரி இடத்தில என்றாலும் வெயிட்டிங் ஹால் வைச்சு மேகசின் போட்டு இருப்பாங்க. இங்கே அதுவும் இருக்காது.''

''இதானா உன் பிரச்னை? இதை முதலிலேயே சொல்ல வேண்டியது தானே? அங்கே பிரியங்கா என்று ஒருத்தங்க இருக்காங்க. அவங்களிடம் நான் போன் பண்ணி சொல்லி விடுகிறேன். நீ அவங்களிடம் கொண்டு போய் பவித்ராவை விட்டுட்டு 'லேயர் கட் பண்ணுங்க' என்று சொன்னால் போதும் அவங்க பார்த்துப்பாங்க. நீ அரை மணி நேரமோ முக்கால் மணி நேரமோ கழிச்சுக் கூட்டிட்டு வந்துடலாம். நீ அங்கே நிற்க தேவை இல்லை...'' என்று மீண்டும் தாஜா பண்ண அரை மனதாக எழுந்தான்.

''உனக்கு ரொம்பப் பிடிவாதம்! நான் இல்லை என்றால் என்ன பண்ணி இருப்பாய்? இன்னிக்கு இல்லை என்றால் நாளைக்கு வெட்டிக்கக் கூடாதா?''

''நாளைக்கு பௌர்ணமி அத்தை வெட்ட விட மாட்டாங்க. ஸ்கூல் திறந்து விட்டால் அதுக்கே நேரம்

சரியா இருக்கும். அப்புறம் ஒரு வாரம் ஆகிடும். ரெண்டே நாளில் கல்யாணம் என்ற போது அந்த வேலையைப் பார்ப்பேனா? இவளுக்கு முடி வெட்டுவேனா?''

''போதும்! விட்டால் கிருபானந்த வாரியார் ரேஞ்சுக்கு சொற்பொழிவு ஆற்றுவாய் போல? எல்.கே.ஜி. தானே படிக்கப் போகிறாள்? பெரிய ஐ.ஏ.எஸ். ஐ.பீ.எஸ். பரீட்சைக்குப் படிக்கப் போற மாதிரி இவ்வளவு பில்ட் அப்பா? எங்கே பவி? கூட்டிட்டு வா...'' என்றபடியே எழுந்து உடை மாற்றினான்.

''மாமா பைக்கில் ஸ்பீடா போகலாம்'' என்ற கூச்சலுடன் வந்து முன்னால் ஏற, அந்த உற்சாகம் அவனுக்கும் தொற்றிக் கொள்ள, அவளின் கன்னத்தில் முத்தமிட்டான்.

''உனக்கு டெக்னிக்கே தெரியலை வசு, சத்தமே இல்லாமல் பவியிடம் சொல்லி, கேட்க வைத்து இருக்கணும்...'' என்று சிரிப்புடன் சொல்லி விட்டு பைக்கை உதைத்துக் கிளப்பினான்.

''லவ்லி பியூட்டி பார்லர்'' என்ற பெயர் பலகையின் அருகில் ஐஸ்வர்யா ராய் சிரித்துக் கொண்டு இருக்க, பைக்கை பக்க ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி இறங்கினான். பெண்களுக்கான பிரத்யேக அழகு நிலையம் என்பதால் தயக்கம் இன்றி உள்ளே செல்ல முடியாமல் கதவைத் தட்ட, கதவை பாதி திறந்து கொண்டு, ஒரு நிலா முகம், எட்டிப் பார்த்து அவனை திகைக்க வைத்தது.

இளநீல வண்ணத்தில், வெண்ணிற பூக்கள் போட்ட காட்டன் சல்வார். 'அழகுக்கு அழகு செய்வது என்பது இதுதானோ? அழகு நிலையத்திற்கு வராமலேயே அவள் அழகாக தான் இருப்பாள் என்று தோன்றிய எண்ணத்தை கடிவாளமிட்டு அடக்கினான்.



''ப்ரியா...?'' என்று தன் திகைப்பை உதறிக் கேட்க அவளின் தலை அசைந்தது. அவளை யாரும் அதுவரை ப்ரியா என்று அழைத்ததே இல்லை. வீட்டிலும் வெளியிலும் வாணி தான். ஆனால் அவன் வெகு இயல்பாக ப்ரியா என்று கேள்வியாக நிறுத்த அவளின் தலை அசைத்தது ஏன் என்று அவளுக்கே புரியவில்லை.

''ஆமா! நீங்க...?''

''நான் வசந்தி ப்ரதர் வெற்றிவேல். இது அவங்க பொண்ணு பவித்ரா. லேயர் கட் பண்ண சொல்லி சொன்னாங்க. நான் ஒரு மணி நேரத்தில் திரும்பி வந்து அழைத்துப் போகிறேன்'' என்று சொல்லி, அவளின் பதிலை எதிர்பாராமல், கிளம்பினான்.

''ஹலோ சார், ஒரு நிமிஷம் நில்லுங்க. யார் வசந்தி?'' என்று கேட்ட அந்த பெண்ணை முறைத்தான்.

''உங்க பிரெண்டையே யார் என்று கேட்பீங்களா? வசந்தியிடம் ஏதாவது கோபமா? இருந்தாலும் அவளிடம் வச்சுக்கோங்க. குட்டி பெண்ணை ஜாக்கிரதையா பார்த்துக்கோங்க பவி பத்திரம். சீக்கிரம் மாமா வந்து விடுகிறேன்...'' என்று போகிற போக்கில் சொல்லி விட்டு, அந்த இடத்தில் நில்லாமல் பறந்து விட்டான்.

''கடவுளே! ஒரு சின்னக் குழந்தையை அதிலும் பெண் குழந்தையை இப்படி விட்டு விட்டுப் போகிறானே?'' என்ற பதட்டம் தோன்ற அவளை குனிந்து பார்த்தாள்.

''உன் பேரென்ன கண்ணு...?''

''பவித்ரா. மாமா சொன்னாங்களே? கவனிக்கலையா ஆன்ட்டி...?'' என்று எதிர் கேள்விகேட்க அவள் தலையை அசைத்துக் கொண்டாள்.

''மாமனுக்கேற்ற மருமகள் தான். உங்க முகவரி தெரியுமா?'' என்று கேட்க வேகமாக தலை அசைத்து விட்டு உடனே சொல்லி முடித்தாள்.

''பரவாயில்லை. சின்ன பெண்ணா இருந்தாலும் முழு முகவரி சொல்கிறாயே? அந்த வரையில் உங்க அம்மாவை பாராட்டத்தான் வேண்டும். ஆனால் உங்க மாமா...'' என்று ஆரம்பித்தவள் பாதியில் பேச்சை நிறுத்தி தலை அசைத்தாள்.

''ஓகே பவி, உங்க மாமா வரவில்லை என்றாலும் உன்னை வீட்டில் கொண்டு போய் சேர்த்து விடுகிறேன்...'' என்று தலையை வருடி புன்னகை செய்தவள் அவன் சொன்ன வேலையை முடித்து வாசலிலேயே காத்து நின்றாள்.

45 நிமிடங்கள் கழித்து அந்த அழகு நிலையத்துக்கு வந்த வெற்றி, ''தேங்க்ஸ் ப்ரியா. பவிக்கு அழகா ஹேர்கட் பண்ணி இருக்கீங்க. உங்க கோபம் எல்லாம் போய் விட்டதா? வா குட்டி...'' என்று பைக் இன்ஜினை நிறுத்தாமலே மருமகளை அழைத்துக் கொண்டு கை அசைத்து விடைபெற அவளுக்கு வியப்பாக இருந்தது.

பணம் கொடுக்காமல் போகிறானே என்ற எண்ணம் தோன்றினாலும் அவனை நிறுத்திக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை. எவ்வளவு உரிமையாக மருமகளைக் கொஞ்சுகிறான்? பாசம் மிகுந்தவனாக இருக்க வேண்டும். சகோதரி மகளை இப்படிக் கொஞ்சு பவன் தன் பிள்ளைகளை எப்படிக் கொஞ்சுவான் என்ற எண்ணம் தோன்றியது.

'இதென்ன வேண்டாத சிந்தனை?' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டு உள்ளே போக முயன்றபோது,



மீண்டும் பைக் சப்தம் கேட்கத் திரும்பினாள். அவன் தான்!

''சாரி ப்ரியா, பணமே கொடுக்கவில்லையே? என்ன தான் நட்பு இருந்தாலும் தொழில் வேறு அல்லவா? இந்தாங்க'' என்று ஒரு ஐநூறு ரூபாய் தலை எடுத்து அவளிடம் நீட்டினான்.

ஒரு கணம் தயங்கினாலும் பணம் வாங்க விட்டால் வித்தியாசமாகத் தெரியும் என்று மூளை அறிவுறுத்த, அதை வாங்கியவள் ''இருங்க சேஞ் எடுத்துட்டு வரேன்...'' என்று உள்ளே செல்லத் திரும்பினாள்.

''இல்ல பரவாயில்லை, வசந்தி சார்பில் உங்க வீட்டுக்கு ஸ்வீட் வாங்கிட்டுப் போங்க'' என்று சொல்ல, அந்த பதிலை எதிர்பாராமல் திகைத்து நின்றாள் வாணிப்ரியா.



## 4

அழகு நிலையத்தில் இருந்து பவித்ராவை கூட்டிக் கொண்டு வந்தபோது வாசலிலேயே காத்திருந்தாள் வசந்தி.

''என்ன வெற்றி எங்கே போய் விட்டாய்? நீ அங்கே வரவே இல்லை என்று பிரியங்கா சொன்னாளே? ஒரு மணி நேரமா சத்தமே காணவில்லையே என்று பதறிப் போயிட்டேன். நீ என்னடாவென்றால் சாவகாசமா வருகிறாய்?'' என்றவள் கண்கள் அப்போது தான் மகளின் முடியைப் பார்த்தது.

''என்னடா முடி வெட்டியாச்சா? எங்கே வெட்டினாய்? பார்லர் போகலையா?''

''நீ சொன்ன பார்லர்ல, நீ சொன்ன ஆளிடம் தான் விட்டு வெட்டி அழைத்து வந்தேன். உனக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படி உளறுகிறாய்?'' என்று கேலி செய்ய அவள் விழித்தாள்.

''என்னடா இது? அவள் வரவே இல்லை என்று போன் பண்ணுகிறாள் நீ அங்கதான் வெட்டினேன் என்கிறாய்? ரெண்டு பேரும் விளையாடுறீங்களா?''

''நான் விளையாடுறேனோ? உன்னை மாதிரியே உன் ப்ரெண்டும் இருக்கா வசந்தி உன்னையே யார் என்று என்னிடம் கேட்டாள் என்றால் பார்த்துக்கோ உங்க ரெண்டு பேருக்கும் இடையில் எல்.கே.ஜி. பசங்க மாதிரி காய் விட்டுப் பழம் போட்டுக்குவீங்களோ என்னவோ? யார் கண்டா...?'' என்று அசால்ட்டாய் தோளைக் குலுக்கி விட்டு அவன் செல்ல வசந்தி குழம்பினாள்.

மீண்டும் போன் பண்ணினால் அவள் தன்னைக் கடித்துக் குதறாத குறை. இன்னும் எத்தனை தடவை போன் பண்ணுவ வசந்தி? நீ ஒருத்தி தான் என் கஸ்டமர் என்று நினைத்தாயா? வந்தால் வா, வராவிட்டால் போ இதற்கு என் இத்தனை போன் போட்டு உயிரை வங்கு கிறாய்?'' என்று பொரிந்து தள்ள, தம்பியைத் தேடி வந்தாள்.

''டேய் ஒழுங்கா சொல்லு? எங்கே போனாய்? யார் ஹேர்கட் பண்ணி விட்டா?''

''ஹய்யோ! வசந்தி என் இப்படி கொடுமை பண்ணு கிறாய்? நீ சொன்ன ப்ரியாவிடம் தான் வெட்டினேன்.''



''லக்கி பார்லருக்கு நீ வரவே இல்லை என்று அவள் அடித்துச் சொல்கிறாளேடா'' என்று அவள் கேட்டதும் படுக்கையில் படுத்து போனில் கேம்ஸ் விளையாடியபடி சுவாரஸ்யம் இல்லாமல் ஏனோ தானோவென்று பேசிக் கொண்டு இருந்த வெற்றி திடுக்கிட்டு எழுந்தான்.

''என்னது லக்கி பார்லரா...? அது இருக்கு?''

''பஸ் ஸ்டாண்டை ஒட்டி, சந்தில் இருக்கு...''

''ஓ! நான் மதுரையில் இருந்து காரில் வரும் போது ஐஸ்வர்யாராய் போட்டோ பார்த்தேன். அந்த ஞாபகத்தில் லவ்லி பார்லர் போய் விட்டேன். நான் பஸ் ஸ்டாண்ட் பக்கம் போகவில்லையே? அதனால் என்ன? உனக்கு வேலை முடிந்ததா இல்லையா? ஆளை விடு! சும்மா நோண்டாதே'' என்று தங்கையை அதட்டிய வனின் முகம் யோசனையில் ஆழ்ந்தது.

அப்ப அங்கே வந்து பவித்ராவுக்கு ஹேர் கட் பண் ணியது யாரு? பிரியங்கா என்று கேட்டதற்கு ஆமாம் என்று தலை அசைத்தாளே? இல்லை பிரியா என்று கேட்க வில்லை. பிரியா என்று கேட்டான். அப்படி என்றால் அவள் வேறே பெண்ணா?

சம்பந்தமே இல்லாதவளிடம் அதிகாரமாகப் பேசி, வேலை வாங்கி இருக்கிறானே...? தன்னை பற்றி அடா வடி என்று தப்பாக நினைத்துக் கொண்டு இருப்பாளோ...? பெரிய வேலை இல்லை தான் என்றாலும், அதைச் செய்ய வேண்டும் என்ற அவசியமும் இல்லையே? முக்கால் மணி நேரமும், முன் பின் தெரியாத ஒருவருக்காக செலவு பண்ண வேண்டும் என்று என்ன இருக்கிறது?

இந்த அழகில் மிச்ச பணத்தை வைத்துக் கொள் என்று டிப்ஸ் வேறே கொடுத்தானே...? பண திமிர் பிடித்தவன்

என்று நினைத்து இருப்பாளோ...? அவளைப் பார்த்து ஒரு சாரி சொல்ல வேண்டும் மனதிற்குள் உறுதி எடுத்துக் கொண்டான்.

''வெற்றி வெற்றி டேய்!... கண்ணைத் திறந்து கொண்டே தூங்கும் வித்தையை எங்கே படித்தாய்? காது கேட்குதா?'' என்ற வசந்தியின் குரல் அதட்டலாகக் கேட்க நனவுக்கு மீண்டான்.

''சொல்லு வசந்தி. ரகு எங்கே?''

''அவர் இன்னும் வரலை மற்றவர்கள் எல்லோரும் கீழே இருக்காங்க. நான் உன்னிடம் தனியா பேச வந்தேன்'' என்று அவள் பீடிகை போடும் போதே அவள் என்ன பேசப் போகிறாள் என்பது புரிந்தது இதற்காக தான் இங்கே வரத் தயங்கியதே!

''சொல்லு வசந்தி, என்று ஆரம்பித்தவனுக்கு, காலை உணவின் போது அத்தையிடம் வாய் விட்டதை இப் போது தொடர்ந்து கிண்ட வந்து இருக்கிறாள். இவளிடம் வாயைக் கொடுத்தால், ரெண்டே நாளில் இங்கேயே ஒரு பெண்ணைப் பார்த்து அம்மா அப்பாவையும் இங்கே வரவழைத்து கல்யாணத்தை நடத்தி முடித்தே விடுவாள் என்று தோன்ற, கவலை கூடியது.

''வெற்றி, நீ சின்னப் பையன் இல்லை விவகாரமான சினிமா துறையில் ஆறு வருஷமா ஸ்டண்ட் மாஸ்டரா குப்பை கொட்டும் உனக்கு நான் புத்தி சொல்லி ஆக ணும் என்பதில்லை. அம்மாவுக்கு எப்பவுமே உன் கவலை தான்டா அந்த சரண்யாவை மறந்துட்டு இப்பவாவது வேறே கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன் என்று சொல்ல மனசு வந்ததே!'' என்று அங்கலாய்க்க அவன் மௌனம் சாதித்தான்.



''இத்தனை நாள் மறக்க முடியாமல் போகும் அளவுக்கு அப்படி எத்தனை நாள் அவளோடு பழகி இருக்கிறாய்? அப்படிப் பழகி இருந்தாலும், அவள் அதை அப்போதே மறந்து வேறு ஒரு கல்யாணத்திற்கு தயாரான போது நீ ஏன்டா இப்படி அஞ்சு வருஷமா தேவுடு காக்கிறாய் என்று நானே பல தடவை நினைத்து இருக்கிறேன்! அதெல்லாத்துக்கும் மனசு வந்து முற்றுப் புள்ளி வைத்து விட்டாயே? ரொம்ப சந்தோஷம்!'' என்று பேச அவ னுக்கு பெருமூச்சு வந்தது.

''என் மனசில் அவள் இருக்கிறாள் என்று நான் எப்போ உன்னிடம் சொன்னேன்? அடுத்தவரைப் பற்றி யோசிக் காத சுயநலம் பிடித்த பெண் என்ற சூடு பட்டு இருக் கிறேனே? இனி ஒரு பெண்ணைத் தேர்வு செய்ய வேண் டும் என்றால் அவள் சுயநலம் இல்லாதவளா என்பதை நான் உறுதி செய்ய வேண்டிய அவசியம் இருக்கு என்று சொல்கிறேன்...''

''நீ ஸ்டண்ட் மாஸ்டரா போனதுக்கு கதாசிரியரா போய் இருக்கலாம். இப்படி டயலாக் விட்டுட்டு இருக்க. அந்தப் பொண்ணுக்குக் கல்யாணம் ஆயாச்சு. இதுக்கு முடிவு தான் என்னடா...? அம்மா நிலையைக் கொஞ்சம் நினைச்சுப் பாருடா! நீ ஒரே பையன்.''

''ரெண்டு மாசம் கழிச்சு பெண் பார்க்கலாம் என்று அப்பாவிடம் சொல்லிட்டு வந்து இருக்கிறேன். அவளிடம் எல்லாவற்றையும் சொல்லியே கல்யாணம் பண்ண முயற்சி செய்கிறேன்.''

''வெற்றி, கல்யாணம் பண்ணினால் மட்டும் போதாது. அவளோடு சந்தோஷமா குடும்பம் நடத்தவும் வேண்டும். அதுவும் முக்கியம் சும்மா அம்மாவுக்காக கல்யாணம்

பண்ணி இன்னொரு பெண்ணோட பாவத்தைக் கொட்டிக்கக் கூடாது.''

''எனக்குத் தெரியாதா வசு...? அப்படி அம்மாவுக்காக கல்யாணம் நடப்பது என்றால் எனக்கோ நடந்து இருக்குமே?'' என்று பெருமூச்சு விட்டவன் கட்டிலில் காலை நீட்டிப் படுத்து கண்களை மூடிக் கொண்டான்.

குடும்பத்தினர் பார்க்கும் பெண் தன் மனதைப் புரிந்து கொள்வாளா? அவள் புரிந்து கொள்வது இருக்கட்டும். தன் மனதைத் தானே கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டும். அது தான் முதல் படி!

* * *

வெற்றிவேல் ஹாலில் அமர்ந்து அத்தை கொடுத்த காபியை ரசித்துக் குடித்துக் கொண்டு இருக்க, வீட்டில் வேறு யாரும் இல்லை. பவித்ராவையும் மிருதுளாவையும் அழைத்துக் கொண்டு ரகுவும் வசந்தியும் மதுரைக்கு நகைகளும் ஜவுளியும் எடுக்கப் போய் இருந்தார்கள். அவனுக்கு அதில் ஆர்வம் இல்லை என்பதால் போக வில்லை.

''உங்க காபியும் பக்கோடாவும் சூப்பர் அத்தை'' என்று ரசனையோடு சொன்னவனை முறைத்தார்.

''சினிமாக்காரன் என்பது சரியா தாண்டா இருக்கு. நேற்று நீ என் சமையலைப் பாராட்டினாய் என்று பெருமையா பாலாவிடம் சொன்னால் அவள் சிரிக்கிறாள். காபிக்கு சர்க்கரை போடாமல் குழம்பில் உப்பு போடாமல், காய்கறிக்கு காரம் போடாமல் போட்டால் கூட அவன் ஒன்றுமே சாப்பிடாமல் சூப்பரா இருக்கு என்று சாப்பிடுவான். அவன் பாராட்டை என்னிடம் சொல்ல வந்து விட்டாயா என்று சிரிக்கிறாள். நீ சொல்றதை நான் நம்புவதா வேண்டாமா?''



''அம்மாக்கு உங்க சமையலைப் பாராட்டி விட்டேன் என்று பொறாமை அத்தை. எப்போதுமே நான் நல்லவற்றை மட்டுமே எடுத்துக் கொள்கிறேன்'' என்று சின்னச் சிரிப்போடு சொல்லும் போது போன் அடித்தது.

''வெற்றி போனை எடுத்து ரகுவைக் கேட்டால் மதுரைக்குப் போய் இருக்கான் என்று சொல்லி விடு'' என்று உள்ளே இருந்து குரல் வர அருகில் இருந்த போனை எடுத்தான்.

''ஹலோ...'' என்று அவன் முதல் வார்த்தை சொன்ன உடனே, ''வணக்கம் சார், ரகுராமன் சாரா பேசுறீங்க?'' என்ற ஒரு இளம் பெண்ணின் பதட்டமான குரல் கேட்டது.

''இல்லை நான் அவங்க கசின் பேசறேன். நீங்க யார் பேசறீங்க?'' என்று பதில் சொல்லும் போதே இந்தக் குரலை எங்கேயோ கேட்டு இருக்கோம் என்ற எண்ணம் தோன்றியது.

''என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனால் ஒரு முக்கியமான விஷயம் பேசணும். சார் இருந்தால் கொஞ்சம் கூப்பிடுறீங்களா?''

''ரகு மதுரைக்குப் போய் இருக்கான் வர நைட் ஆகிடும் இன்னும் நீங்க யார் என்றே சொல்லவில்லையே?''

அவள் மேற்கொண்டு பேசாமல் அமைதி காத்தாள். எதிர் முனையில் அவள் அதிர்ச்சியில் இருப்பது புரிந்தது.

''அவனிடம் என்னால் மொபைலில் பேச முடியும். நான் அவங்க மாமா பையன். தான் பேசறேன். ஏதாவது பிரச்சனையா? என்னால் முடிஞ்ச உதவி செய்கிறேன்.'

"சார்... நீங்க பவித்ராவோட மாமாவா?" என்று தயக்கத்துடன் கேட்டவளின் குரலில் இப்போது நம்பிக்கை தெரிந்தது.

"நீங்க ப்ரியாவா?"

"ஆமா சார்! உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் ஆற்றங்கரை பக்கத்தில் ஒரு மேல்நிலை நீர் தொட்டி இருக்கு அங்கே உடனே வர முடியுமா?" என்று கேட்க, 'உடனே வருகிறேன்' என்று வாக்களித்தான் என்ன பிரச்னை என்று அவளும் சொல்லவில்லை அவனும் கேட்கவில்லை.

"அத்தை, ஆற்றங்கரை வரை போய்ட்டு வரேன். பைக் எடுத்துட்டுப் போறேன்" என்று சொல்லிவிட்டுக் கிளம்ப அவர் ஆச்சரியமாக எட்டிப் பார்த்தார்.

"ஆத்துல தண்ணியே இருக்காதே? என்ன பார்க்கப் போகிறாய்?" என்ற அவரின் கேள்விக்குப் பதில் சொல்லக்கூட அவனுக்கு நேரம் இல்லை.

அவள் சொன்ன நீர் தேக்கத் தொட்டி தூரத்தில் இருந்தே தெரிந்ததால் ஐந்து நிமிடங்களுக்குள் அந்த இடத்தை அடைந்து விட்டான். அவளைக் காணவில்லை. சுற்றி லும் ஆள் நடமாட்டம் இருப்பது மாதிரி தெரியவில லையே? தனியாக இந்த இடத்திற்கு ஏன் வந்தாள்?

"ப்ரியா..." என்று சுற்றும் முற்றும் பார்த்தவன், மெல்ல குரல் கொடுத்தான். சப்தம் போட பயமாக இருந்தது. அத்தையின் குடும்பம் கௌரவமான குடும்பம். தன னால், தங்கைக்கு எந்தப் பிரச்னையும் வந்து விடக் கூடாதே?

இரண்டு முறை அழைத்தபோது பதில் இல்லை. மூன்றாவது முறை அழைத்தபோது, 'வரேன்.' என்ற



ஒற்றை வார்த்தையும் காய்ந்த சருகுகள் மிதி படும் ஓசையும் கேட்டது.

மோட்டார் ரூம் இருக்கும் திசையில் இருந்து நடந்து வந்தவளின் முகம் அவனைக் கண்டதும் ஒரு நிம்மதியை வெளிப்படுத்தியதை உணர முடிந்தது.

"வந்துட்டீங்களா? யாரிடம் எப்படி சொல்வது என்று பயந்து கொண்டே இருந்தேன்" என்றவள் கணகளில் நிம்மதி வெளிச்சம் தெரிந்தாலும் கவலை ரேகை மிச்சம் இருந்தது.

"என்ன ஆச்சு...?"

"வந்து... உங்க தங்கை வீட்டில் வேலை செய்யும் தெய்வானை என்பவரின் மகள் ஒன்பதாம் வகுப்பு படிக்கிறாள் அவள் பள்ளி முடிந்து இந்தப் பக்கம் வந்த போது... என்றவளின் குரல் தடுமாற, 'இப்ப எங்கே இருக்கான்...?' என்ற ஆவேசமான அவனின் குரல் கேட்டதும், நெஞ்சில் இதம் பரவியது.

"சீக்கிரம் சொல்லு ப்ரியா, பொண்ணு சேஃப் தானே?" என்று கேட்டதும், அந்த அக்கறையான குரலில், அவளுக்கு விழிகளில் ஈரம் கசிய ஆமோதிப்பாக தலை அசைத்தாள்.

"பயப்படாதே ப்ரியா, என்ன ஆச்சு என்று சொல்லு. ரொம்ப லேட் பண்ணாதே. இப்ப யாருக்கு என்ன உதவி பண்ணனும்? சொல்லும்மா சொன்னால்தானே' என்றவன் குரல் மேலும் கனிந்து ஒலித்தது அவனுக்கே வித்தியாசமாகப் பட்டது.

"அந்த பெண்ணு பத்திரம் தான் ஆனால். ஆனால்... அங்கே... அவளின் குரல் மேலும் திக்க, அவன் அவளின்

கையைப் பற்றி அவள் நடந்து வந்த திசையில் அழைத்துச் சென்றான்.

அவன் கையைப் பற்றியதும் இணைந்த கைகள் வழியே ஏதோ சக்தி பாய்ந்தது போல உணர்ந்தவளுக்கு தைரியம் வந்தது. நூறு அடி தூரத்தில், ஒரு புதரின் அருகே முப்பது வயது மதிக்கத்தக்க ஒருவன் முனகிக் கொண்டு இருந்தான்.

"இவன் தான்... சார்.. அந்தப் பெண்ணை... காப்பாற்ற நான் தான்.. இவனை" என்று முழுசாக சொல்ல முடியாமல் பக்கத்தில் இருந்த ஒரு உருட்டுக் கட்டையைக் காண்பிக்க அவனுக்கு பெருமையாக இருந்தது.

"பரவாயில்லையே? தைரியமா அடித்துப் போட்டு இருக்கிறாயே? அப்புறம் என்ன பிரச்னை? அந்தப் பொண்ணு எங்கே..?"

"இவனை அடித்துப் போட்ட உடனேயே அந்த பெண்ணை நான் போகச் சொல்லி விட்டேன். பாதி தூரம் நானும் வீட்டுக்குக் கிளம்பி விட்டேன் ஆனால்..." என்று இழுத்து நிறுத்தியவளின் கண்களில் கவலை வந்தது.

"இதுவரைக்கும் ஜான்சி ரணி மாதிரி வீரமா செயல்பட்டு இருக்கிறாயே? ரொம்ப பெருமையா இருந்தது. ஆனால் இப்ப என் கண்ணில் தண்ணி வரட்டுமா வேண்டாமா என்று கேள்வி கேட்டு நிக்குது?" என்று பாதி கேலியாகக் கேட்டாலும் அந்த கிண்டலின் மூலம் அவளுக்குத் தைரியம் ஊட்டவும் முயற்சி செய்தான் வெற்றிவேல்.

"இவனை இங்கே விட்டுட்டுப் போனது கொஞ்சம் பாவமா இருந்தது. கூடவே போலீஸ் வந்து விசாரித்தால்



என் மேலே கேஸ் வருமோ என்ற பயமும் இருந்தது. ஆனால் இது ரெண்டையும் விட அந்த பெண்ணோட பேர் இழுபடக் கூடாது என்று நினைத்தேன். அந்த பெண்ணை யார் என்று விசாரித்த போது ரகுராம் சார் சொல்லி போன் நம்பர் கொடுத்தாள். அதான், உங்க வீட்டுக்கு அழைத்தேன். எனக்கு என்ன பண்ணுவது என்று தெரியலை" என்று சொன்னவளை பெருமையுடன் பார்த்தான்.

"நல்லா யோசிக்கிறாய் இவன் போலீசுக்கு போவானா என்ன?" என்று சொன்னபடி கைக்குட்டையால் அவன் முகத்தைப் பிடித்துத் திருப்பி தலை காயத்தை ஆராய்ந்தான்.

"காயம் பலமில்லை அவன் உயிருக்கு ஆபத்து இல்லை. நான் பார்த்துக் கொள்கிறேன் நீ கிளம்பு..." என்று சொல்ல அவள் தயங்கினாள்.

"பயப்படாத. உன் பேரோ அந்த பொண்ணு பேரோ வெளியே வராது தைரியமா போ" என்று உறுதியான குரலில் சொல்ல அவள் நன்றியோடு தலை அசைத்தாள்.

"என்ன செய்யப் போறீங்க என்று ஒரு வார்த்தை சொல்லி விட்டால், மனசு கொஞ்சம் நிம்மதியா இருக்குமே...?"

"அவன் குடி போதையில் கால் தடுக்கி விழுந்து விட்டான் தலையில் கல்மோதி அடிபட்டு விட்டது. அதைப் பார்த்து விட்டு நான் 108க்கு போன் பண்ணினேன். அவனை மருத்துவமனையில் சேர்க்க ஏற்பாடு பண்ணினேன். ஏதாவது விசாரணை வந்தால், ரகு பார்த்துக் கொள்வான். போதுமா?" என்ற கேள்வியில் அவளின் முகத்தில் நிம்மதி பரவி சின்னப் புன்னகையும் பரவியது.

"அது சரி, இந்த நேரத்தில நீ எப்படி இங்கே வந்தாய்? ஊருக்கு இங்கே இருந்து ரெண்டு கிலோ மீட்டர் இருக்கும் போல இருக்கே? எப்படிப் போவாய்?"

"மெயின் ரோடில் வண்டியை நிறுத்தி விட்டு வந்தேன். சின்னமனூரில் வளைகாப்பு அலங்காரம் பண்ணிட்டு வந்தேன். வழியில் இதைப் பார்த்து நின்று விட்டேன். வண்டி இருக்கு. ரொம்ப தேங்க்ஸ் சார்."

"தேங்க்ஸ் சொல்ல வேண்டிய அவசியம் உனக்கில்லை ப்ரியா. ஒரு அயோக்கியனுக்கு கூட ஆபத்து வரக் கூடாது என்று நினைக்கும் உன் இளகிய மனசு எனக்குப் பிடிச்சு இருக்கு. ஆனால் அதைவிட, ஒரு சின்ன பெண்ணின் நற்பெயருக்கு எந்தக் களங்கமும் வரக் கூடாது என்று நினைக்கும் உன்னுடைய பாதுகாப்பு உணர்வு எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிச்சு இருக்கு. அதுக்காக நான் தான் உன்னைப் பாராட்டணும்" என்று வண்டி வரை வந்து வழி அனுப்பியவனை, இரண்டு முறை திரும்பிப் பார்த்து விட்டு வண்டியை நகர்த்தியவள் கண்ணில் இருந்து மறையும் வரை பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டே நின்றான் வெற்றிவேல்.



## 5

வாணி ப்ரியா, சம்பவம் நடந்த இடத்தில் இருந்து நகர்ந்து ஐந்து நிமிடங்கள் கழிந்த பிறகே 108க்கு போன் பண்ணினான் வண்டி வருவதற்குள் ரத்த சேதம்



இல்லாமல் கட்டுப் போட்டு வைத்து இருந்தான். அவன் குடி போதையில் இருந்ததும், சம்பவம் அந்தந்த இடம் அவர்களுடைய நிலமாக இருந்ததும் வெற்றிவேலுக்கு சாதகமாக இருந்தது.

அவன் மோட்டார் திருட வந்தான் போல சார். என்னை இங்கே பார்த்ததும் வேகமாக ஓடி, கல் தடுக்கி விழுந்து விட்டான். போலீசிலும் திருட்டு முயற்சி என்று புகார் கொடுக்க வேண்டும்.

அவர்கள் கேட்ட ஆயிரம் கேள்விகளுக்கு பொறுமையாக பதில் சொன்னான் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு, அவள் கொடுத்த போன் நம்பருக்கு அழைத்து, பிரச்னை முடிந்து விட்டது என்ற தகவலையும் சொல்லிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தபோது மணி ஒன்பதை நெருங்கிக் கொண்டு இருந்தது.

"நாலு மணிக்கு கிளம்பியவன் எங்கேடா போய்ட்டு வரே? கடைக்குப் போன நாங்களே வந்து விட்டோம். நீ எங்க போனாய்?"

"ப்ரெண்டை பார்க்க போனேண்டா!"

"பிரெண்டா? இந்த ஊரில் எனக்குத் தெரியாமல் உனக்கு யாரடா ப்ரெண்ட் இருக்கா?"

"இங்கே புதுசா எனக்கு ப்ரெண்ட் கிடைக்கக் கூடாதா?"

"கிடைக்கலாம் ஆனால்."

"என்ன ரகு! ஆனா ஆவன்னா எல்லாம் படிக்கிறாய்? பவி சொல்லிக் கொடுத்தாளா?" என்று கேலியாக இழுத்தாலும் ப்ரியா பேரை இழுக்காமல் இந்த விஷயத்தை இவனிடம் எப்படிச் சொல்வது என்று யோசனை உள்ளுக்குள் ஓடிக் கொண்டு இருந்தது.

''அஞ்சு வருஷமா கல்யாணம் பண்ணிக்கோ என்று விடாமல் அத்தை அனத்திக் கொண்டு இருக்க, அய்யா இங்கே வந்த உடனே கல்யாணத்துக்கு ரெடி என்ற மாதிரி தெரியுது'' என்றதும் அதிர்ச்சியோடு நிமிர்ந்தான் வெற்றிவேல்.

''என்ன ரகு சொல்ற?''

''இன்று மாலை ஆற்றங்கரையில் யாரோ ஒரு பெண்ணுடன் பேசிக் கொண்டு இருந்தாயாமே?'' என்ற அவனின் நேரடி கேள்வியில் உறைந்தான்.

''என்ன உளறல் இது? சும்மா சாதாரணமா வழியில் போகும் பெண் அட்ரஸ் கேட்க என்னுடன் இரண்டு வார்த்தை பேசினால் அதைப் போய் பெரிசா சொல் விட்டு'' என்று அவசரமாக மறுத்ததும் அவன் சிரித்தான்.

''நான் உன்னை நம்புகிறேன் வெற்றி. ஆனால் கிராமம் பாரு. ஒவ்வொருவரையும் உறவு முறை சொல்லி நிறைய பேருக்கு தெரியும். அதான் உடனே செய்தி காதுக்கு வந்து விட்டது தப்பா எடுத்துக்க வேண்டாம் நல்லது நடந்தால் சந்தோஷம் என்ற ஆதங்கத்தில் கேட்டு விட்டேன் உனக்காக எல்லாரும் சாப்பிடாமல் காத்திருக்காங்க. வா சாப்பிடலாம்'' என்று பேச்சை முடிக்க அனுக்கு நிம்மதியாகப் பெருமூச்சு வந்தது.

அன்று இரவு உணவின்போதே, ''வெற்றி, நாளைக்கு நீ எங்கேயும் ப்ரோக்ராம் வச்சு இருக்கியா?'' என்று விசாரித்தார் புவனேஸ்வரி.

''உங்க வீட்டுக்கு அனுப்பும் போதே, இந்த பத்து நாளும் அத்தை கிழிச்ச கோட்டைத் தாண்டக் கூடாது என்று உங்க அண்ணி சொல்லி அனுப்பி இருக்காங்க. விஷயத்தைச் சொல்லுங்க அத்தை.''



''நாளைக்கு தாலிக்கு பொன் உருக்கி விடப் போறாங்க. மற்றவங்க. லேட்டா வரட்டும். நீயும் நானும், கொஞ்சம் முன்னாடி கிளம்பி, கூடலழகர் பெருமாள் கோவில் பார்த்துட்டு நகை கடைக்கு வந்து விடலாம். என்னுடன் மதுரைக்கு வர முடியுமா?''

''நாளைக்கு எதுவும் விசேஷமா அத்தை?''

''விசேஷம் எதுவும் இல்லை வெற்றி. பெருமாள் எனக்கு இஷ்ட தெய்வம் அவ்வளவு தான். இந்தக் கோவில் ரொம்ப விசேஷம். பொதுவா பெருமாள் நின்ற நிலை, இருந்த நிலை, கிடந்த நிலை என்று மூன்று விதமா தரிசனம் கொடுப்பார். ஆனால் இந்த கோவிலில் ஒரே இடத்தில மூன்று நிலையிலும் தரிசனம் பண்ண முடியும். அதுதான் சிறப்பு. மிருதுளா கல்யாணம் நல்ல படியா முடிய பிரார்த்தனை பண்ணிக் கொண்டேன். கல்யாணத்துக்கு முன்னாடியே நிறைவேற்றி விடலாமே என்று கிளம்பினேன் வருகிறாயா?''

''அப்பா மதுரையில் பிறந்தவர் என்ற பேர் மட்டும் தான் இருக்கு. நான் பிறந்தது படித்தது எல்லாமே சென் னையில் என்பதால், இந்த விஷயம் எல்லாம் எனக்குத் தெரியாது அத்தை. நீங்க சொல்றீங்க! வருகிறேன்?'' என்று பெருமையாக வாக்குக் கொடுக்க, அவர் அடுக் களைக்குள் நகர்ந்த மறு வினாடி அவன் தலையில் ஒரு கொட்டு வைத்தாள் வசந்தி.

''உனக்கு அவங்க உடல்நிலை பற்றி ஏதாவது தெரி யுமா? பெற்ற பிள்ளையையும், மருமகளையும் விட்டுட்டு உன்னை ஏன் கூப்பிடுறாங்க என்று எல்லாம் யோசிக்க மாட்டாயா?''

''என்ன ரகு, வசு இப்படி மிரட்டுறா?''

''உனக்கு உடம்பு இருக்க அளவுக்கு மூளை இல்லை'' என்று அவன் அதற்கு மேலே காய, அவன் தலையைப் பிய்த்துக் கொண்டான்.

''மாமா! பாட்டிக்குப் படி ஏறி இறங்கினால் கால் வலி வரும்'' என்று பவித்ரா காதில் ரகசியம் பேச அவன் விழித்தான்.

''இப்ப என்ன பண்றது வசு?''

''ஆமா இப்ப கேளு என்னை! வாக்குக் கொடுப்பதற்கு முன்னால் யோசிக்கணும் தம்பி?''

''நான் உனக்குத் தம்பியா?''

''இதுல ஒன்றும் குறைச்சல் இல்லை.''

''ப்ச்! நாளைக்கு என்ன பண்ணலாம் என்று ஒழுங்கா சொல்லு வசந்தி.''

''போயிட்டு வாங்க. வேறென்ன சொல்ல? மிருது கல்யாணம் வேண்டுதல் என்று சேர்த்து சொல்லிட்டாங்களே? ஜாக்கிரதையா அழைச்சுட்டுப் போ'' என்று கவலையோடு அனுப்பி வைத்தாள் வசந்தி.

''ஆப்பத்துக்கு ஊற வைத்து அரைச்சு வச்சு இருக்கேன் வசந்தி, கொஞ்சம் தேங்காய் துருவி பால் எடுத்து எல்லோருக்கும் காலை சாப்பாடு கொடுத்து விடு. பத்தரை பனிரெண்டு ராகு காலம் அதையும் ஞாபகம் வச்சுக்கோ. பத்து மணிக்கு கடை திறக்கும்போது அங்கே இருக்கணும். எல்லாரையும் சீக்கிரம் கிளப்பி கூட்டி வருவது உன் பொறுப்பு'' என்று மருமகளுக்கு அறிவுரைகள் சொல்லி விட்டு வெற்றிவேலுடன் பைக்கில் கிளம்பி விட்டார் புவனேஸ்வரி.



கிளம்பும் போது இருந்த அவரின் உற்சாகம், சோழவந்தானில் இருந்து, பைக்கில் கூடலழகர் பெருமாள் கோவிலுக்கு வந்து சேரும் முன்பே வடிந்து விட்டது. பெருமாள் சந்நிதியில் இருந்த இருபதுக்கும் மேற்பட்ட படிக்கட்டுகளை சிரமப்பட்டு ஏறியவர் அங்கே அமர்ந்த கோலத்தில் இருந்த பெருமாளை கண் குளிர தரிசித்தார்.

பிரார்த்தனை செய்து விட்டு நடக்க முடியாமல் சந்நிதியில் தளர்வாக அமர்ந்தவரை கவலையோடு பார்த்தான் வெற்றிவேல்.

''கஷ்டமா இருக்கா அத்தை?''

''ஏன்டா பயப்படுகிறாய்? இதெல்லாம் என்ன கஷ்டம் வெற்றி? பெற்ற பிள்ளைகள் நல்லா இருக்கணும் என்று வேண்டிக் கொண்டு நேர்த்தி கடன் செலுத்தும் போது அதை எல்லாம் பார்க்க முடியுமா? உங்க அம்மா தான் உன்னை இந்தக் கோவிலுக்குக் கட்டாயம் அழைச்சுட்டு போ என்று என்னிடம் போனில் சொன்னாள். அதனால் தான் அழைச்சுட்டு வந்தேன்.''

''அம்மா அழைச்சுட்டுப் போக சொன்னாங்களா? எதுக்கு அத்தை...?''

''என்னடா கேள்வி இது? உங்க அம்மாவுக்கு உன் கல்யாணம் நல்ல படியா முடியணும் என்பதைத் தவிர இறைவனிடம் வேறே என்ன பிரார்த்தனை இருக்கப் போகுது? அதுக்கு தான்...'' என்று சொல்ல அவனின் மனம் யோசனையில் மூழ்க கண்கள் பெருமாளை மீண்டும் ஒரு முறை தரிசித்தது. காக்கும் கடவுள் புன்னகையோடு ஆசீர்வதிக்க மனதில் ஒரு இதம் பரவியது.

பெருமாள் இருந்த கோலத்தில் ஸ்ரீதேவி பூதேவியுடன் நித்ய அலங்காரத்தில் புன்னகை தவழும் முகத்துடன் அபயகரம் காட்ட அவனுக்கு உடல் சிலிர்த்தது.

''இங்கே ஏதாவது காரியம் வேண்டி கொண்டு, 48 நாள் ஒரு மண்டலம் பெருமாளை பக்தியோடு ஒவ்வொரு நாளும் பனிரெண்டு சுற்றுக்கள் வலம் வந்தால் நினைத்த காரியத்தை நிறைவேற்றித் தருவார்.''

''வெளியூரில் இருந்து வருபவர்கள் என்ன செய்ய முடியும் அத்தை? 48 நாள் இங்கேயே தங்க முடியாது இல்லையா?''

''அப்படிப்பட்டவங்க ஒரே நாளில் 108 சுற்றுக்கள் சுற்றுகிறேன் என்று பிரார்த்தனை செய்வதும் உண்டு. திருப்பதியில் இருக்கும் பெருமாளின் நின்ற கோலம், ஸ்ரீரங்கத்தில் இருக்கும் பெருமாளின் கிடந்த கோலம், கும்பகோணத்தில் உப்பிலியப்பனாய் இருந்த கோலம் என்று ஒவ்வொரு தலத்திலும் பெருமாள் ஒரு ஒரு கோலத்தில் தான் காட்சி அளிப்பார். இங்கே மூன்றடுக்கு உப்பரிகையில் மூன்று கோலங்களிலும் காட்சி தரும் பெருமாள் ரொம்ப விசேஷமானவர்'' என்று புவனேஸ்வரி பக்தி சிரத்தையுடன் சொல்ல, வெற்றிவேல் புன்னகையோடு கேட்டு இருந்தான்.

''எனக்காக இல்லை என்றாலும் எங்க அம்மாவுக்காக சீக்கிரமே எனக்கு என்று இருக்கும் பெண்ணை என் கண்ணில் காட்டி விடு பெருமாளே!'' என்று அந்த நேரம் அவனையும் அறியாமல் வேண்டிக் கொண்டான்.

பெருமாள் சந்நிதியில் தட்டுத் தடுமாறி சமாளித்து சுற்றி வந்த புவனேஸ்வரி தாயார் சந்நிதி வரும் போதே கால் மடங்கி சரிந்து அமர்ந்து விட்டார். ''அம்மா...!'' என்ற முனகலுடன் கையை ஊன்றியவரின் கால் முட்டியும் கை விரல்களும் அசைக்க முடியாமல் வலி உயிர் போனது.



''என்ன ஆச்சு அத்தை...?''

''எப்பவும் இருப்பது தான். மூட்டு வலி. ஏற்கனவே வீக்கமா இருந்தது. காலை நீட்டி எட்டு எடுத்து வைக்க முடியவில்லை. மரத்து போன மாதிரி இருக்கு.''

''ரொம்ப இழுத்துப் போட்டு வேலை செய்ய வேண்டாம் என்று சொன்னேன். கேட்டால் தானே? வராதவன் வந்து இருக்கான் என்று ஓடி ஆடி வேலை செஞ்சால், உங்களுக்கு உடம்பு தாங்க வேண்டாமா? பக்கத்தில் டாக்டர் இருக்கறாரா என்று விசாரித்து வருகிறேன்...''

''இங்கே டாக்டர் கிடைப்பது கஷ்டம். கால் வலிக்கு தைலம் தேய்த்தால் பரவாயில்லாமல் இருக்கும். பிரயாணம் அதிகம் நான் செய்வதில்லை. பத்து நிமிஷம் ஒரு இடத்தில அசையாமல் உட்கார்ந்து இருந்தால், கூட ரத்த ஓட்டம் நின்று விடுகிறது வெற்றி. வயசாகுது இல்லை?''

நேற்று கடைக்குப் போகும்போது மிருதுளா அழைத்ததற்கு வரவில்லை என்று சொல்லி விட்டாரே? தனக்காக அம்மா சொல்லி இந்த பிரயாணத்தை மேற்கொண்டுள்ளார் என்பது அவனை மேலும் நெகிழ வைத்தது.

''மணி ஒன்பது ஆகுது ஏதாவது மருந்து கடை திறந்து இருக்கிறதா என்று பார்த்து வாங்கி வருகிறேன். தனியா இருப்பீங்களா?'' என்று மருந்து வாங்க வேண்டும் என்ற அவசரமும், அவரை தனியாக விட்டுச் செல்ல தயக்கமுமாக அவன் ஊஞ்சலாடிய போது, எதிரே அவள் வந்து கொண்டு இருந்தாள். தெரிந்த ஒரு முகம் கண்ட ஆவலில் ஓடி வந்தான்.

''ப்ரியா நீயா? வா வா, உன்னை இங்கே பார்த்த உடனே ரொம்ப சந்தோஷமா இருக்கு. உன்னால் எனக்கு

ஒரு வேலை ஆக வேண்டும்'' என்று அவசரமாக ஆவலுடன் வரவேற்க அவள் திகைப்புடன் பார்த்தாள்.

இவனா? சோழவந்தானில் இருந்து இங்கே எங்கே வந்தான்? அதுவும் இந்த நேரத்தில் இங்கே என்ன வேலை செய்ய வேண்டும்? முதலில் இவன் ஏன் தன்னை ப்ரியா என்று அழைக்கிறான்?

இது மூன்றாவது சந்திப்பு கடந்த மூன்று நாட்களில் தொடர்ந்து சந்திக்க நேர்ந்ததும் தன் பெயர் அவனுக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்கவில்லை. என் பெயர் வாணிப்ரியா என்ற விபரமும் சொல்லவில்லை. நேற்று சந்திக்கும் போது பரபரப்பாக இருந்ததால் இது ஒரு விஷயமாகத் தெரியவில்லை.

அந்த மாதிரி யோசனை எதுவும் இன்றி சரளமாகப் பேசியபடி முன்னால் நடந்தான். ''நேற்று முன் தினம் பார்லருக்கு வந்த போது ஒரு சின்ன தவறு நடந்து விட்டது'' என்று ஆரம்பிக்க அவளின் முகத்தில் முறுவல் பூத்தது.

''என்ன தவறு?'' என்று கேட்டவள் 'அவளை அவன் சகோதரியின் தோழியாக நினைத்தது தவறு' என்று சொல்லி அசடு வழிவான் என்று கண்களில் சிரிப்போடு காத்திருக்க அவனோ வேறு கதை சொன்னான்.

''வசந்தி லக்கி பார்லர் போகச் சொன்னால் நான் லவ்லி பார்லர் வந்து விட்டேன். வீட்டுல செம டோஸ்ங்க. நீங்களாவது சொல்லி இருக்கக் கூடாது?'' என்று கேட்க, அவள் விழித்தாள்.

''நான் என்ன சொல்லி இருக்க வேண்டும்? நான் சொல்ல வந்ததையே நீங்க நின்று கேட்டிங்களா என்ன?''



''நீங்க என்ன சொல்லி இருக்க வேண்டும் என்று பேசுதற்கு முன்பு எங்க அத்தையை கவனிப்போம்'' என்று நடந்தவனை சாவி கொடுத்த பொம்மை போல பின் தொடர்ந்தாள் வாணிப்ரியா.

''இது எங்க அத்தை பிரியா, இவங்களுக்கு கால் மரத்துப் போன மாதிரி நீட்ட மடக்க முடியலை. கோவிலுக்கு வந்த இடத்தில கஷ்டமா போய்டுச்சு. காலில் தேய்க்க தைலம் மாதிரி ஏதாவது வாங்கலாம் என்று பார்த்தேன். தனியா விட்டுட்டுப் போக கவலையா இருந்தது'' என்று சொன்ன அடுத்த வினாடி, அவள் மண்டியிட்டு அமர்ந்தாள்.

''ஆர்த்ரைடிஸ் பிரச்னை இருக்காம்மா...?'' என்று கேட்டபடி இரண்டு கால்களையும் மெல்ல மெல்ல கீழே இருந்து அமுக்கிப் பார்த்தாள்.

''பனிக்காலத்துல இருக்கும். அப்படியே பிரச்னை என்றாலும் தைலம் தேய்த்து சுடு தண்ணி ஊத்திக்க வேண்டியது தான். அதுக்காக வீட்டை விட்டு நகராமல் இருக்க முடியுமா? போக, இப்ப வெயில் காலம் தானே என்று நினைத்தன். போறதுக்கு போய் தானே ஆக வேண்டும். அது சரி, நீ டாக்டரா?''

''இல்லை! நான் டாக்டர் இல்லைம்மா. பியூட்டிஷியன் கோர்ஸ் டிப்ளமா படித்து இருக்கேன். அப்போ மசாஜிங்-க்கு அடிப்படையா சில பயிற்சிகள் சொல்லித் தருவாங்க. அதில ஆர்த்ரைட்டிஸ் இல்லை. ஆனால் எங்க அம்மாவுக்கு இந்த பிரச்னை இருப்பதால் எனக்குத் தெரியும்'' என்று சொல்லி கைப்பையில் இருந்து ஒரு ஆயின்மெண்டை எடுத்து தடவி, உருவி விட ரத்த ஓட்டம் மெல்லச் சீரானது.

''நீ எங்கே இருக்கீங்கம்மா?'' என்று கேட்க, அதற்கான பதில் வெற்றிவேலிடம் இருந்து வந்தது.

''ப்ரியா சோழவந்தானில் தான் பார்லர் வச்சு இருக்காங்க அத்தை. ப்ரியா பவித்ராவோட பாட்டி எங்க அத்தை'' என்று இயல்பாக அறிமுகம் செய்து வைக்க ஆச்சரியத்துடன் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார் புவனேஸ்வரி.

''கால் இப்படி இருக்கும்போது இவ்வளவு தூரம் பைக்கில் அழைத்து வரலாமா?'' என்று அவள் அக்கறையோடு அதட்ட அவன் வருத்த புன்னகை செய்தான்.

''எனக்கு அத்தைக்கு கால் வலி இருக்கு என்று தெரியும். பைக் பிரயாணம் அதை மோசமாக்கும் என்று தெரியாது. கார் அங்கே தேவையாக இருந்தால் விட்டு விட்டு வந்தோம். ஆனால் ப்ரியா, ஒவ்வொரு தடவையும் நான் செய்யும் சொதப்பல்களை சரி பண்ண கடவுள் கரெக்டா உன்னை அனுப்பி விடுகிறார்'' என்று புன்னகை செய்ய புவனேஸ்வரியின் வியப்பு கூடியது.

''உனக்கு இந்த பெண்ணைத் தெரியுமா? எப்படித் தெரியும்?''

''ம்ம், தெரியும் பாட்டி நம்ம பவித்ராக்கு பார்லர்ல முடி வெட்ட ஹெல்ப் பண்ணினாங்க.''

''பெரிய உதவி எதுவும் இல்லைம்மா. அது என் வேலை தான். பணம் வாங்கிக் கொண்டு செய்வதை உதவி என்று பெருந்தன்மையா சொல்கிறார். அப்ப சத்தமே இல்லாமல் சார் செய்யும் உதவியை எல்லாம் என்ன சொல்வது?'' என்று அவனை மறுத்துச் சொல்ல வித்தியாசமாகப் பார்த்தார்.

அடுத்த பதினைந்து நிமிடங்களில் வலி நிவாரணி தன் வேலையைச் செய்ய, உற்சாகத்துடன் தாயார்



சந்நிதிக்கு துள்ளிக் குதித்துக் கிளம்ப வெற்றிவேலும் வாணிப்ரியாவும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை செய்து கொண்டனர்.

''நல்ல சமயத்தில் மருந்து தந்தேம்மா'' என்று சொல்ல அவள் புன்னகை செய்தாள்.

''இங்கேயே இருங்க. மேலே நின்ற கோலமும் கிடந்த கோலமும் தரிசனம் பண்ண தனி டிக்கெட் வாங்கி வருகிறேன்'' என்று கிளம்பினான்.

டிக்கெட் வாங்க வரிசையில் நிற்கும்போது, 'அதென்ன நினைத்தேன் வந்தாய்' என்பது மாதிரி வந்து குதித்து விட்டாள்! சற்று முன்பு இறைவனிடம் வைத்த வேண்டுதல் வேறு குறுகுறுவென்றது. இதமான பாவனையுடன், ரசனையான புன்னகையுடன் சில நிமிடங்களில் வந்து சேர்ந்த போது அவள் இல்லை.

''எங்கே பாட்டி ப்ரியா?''

''காலையில் சீக்கிரமே கிளம்பி விட்டாளாம். வீட்டில் வேலை இருக்கு கடை திறக்கணும் என்று கிளம்பி விட்டாள்.''

''ஏன் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் கூடக் கிளம்பி விட்டாள்?'' என்று பிறந்த கேள்வியில் அவனின் ஏமாற்றம் தெரிந்தது.



## 6

காலை உணவின்போது, ''அத்தை, இன்றும் நாளையும் என்னை எதிர்பார்க்காதீங்க. எனக்கு வேலை இருக்கு.

வசந்தி உனக்கும் தான்'' என்று வெற்றிவேல் அறிவிக்க எல்லோரும் அவனைத் திரும்பிப் பார்த்தனர்.

''என்ன வேலை? ஷூட்டிங்கா? பத்து நாள் ரெஸ்ட் எடுக்கப் போகிறன் என்று என்னிடம் கதை சொன்னாய்? அதுக்குள்ளே மறுபடியும் வேலை வந்து விட்டதா?'' என்று ஆதங்கத்துடன் வசந்தியும்,

''ரொம்ப தூரமா வெற்றி? கார் வேண்டுமா? பைக் பரவாயில்லையா?'' என்று அக்கறையாக ரகுவும் விசாரித்தனர்.

''நான் வந்த வேலையை மறந்து விட்டீர்களா? திருபுவனம் போகணும். அம்மாவோட சஷ்டியப்த பூர்த்தி விழா பத்திரிகை வச்சு சாமி கும்பிடணும் என்று சொன்னேனே? எல்லோரும் சேர்ந்து போகலாம் என்று நினைத்தேன். கல்யாண வீட்டில் உங்களுக்கு இருக்கும் வேலையைப் பார்த்தால் அது நடப்பது மாதிரி தெரியலை. அதான் நான் மட்டும் போயிட்டு வரேன். அவ்வளவு தூரம் பைக் சரி படாது. கார் உனக்குத் தேவைப்படும். டாக்சி வரச் சொல்லி இருக்கேன்...''

''மழை வருவது மாதிரி இருக்கே வெற்றி? கோடை மழை எப்ப வரும் என்று சொல்ல முடியாதே? அங்கே ஆற்றைத் தாண்டி இல்ல கோவிலுக்குப் போகணும்?'' என்று கவலையோடு புவனேஸ்வரி கேட்டார்.

''நான் என்ன சின்னக் குழந்தையா அத்தை? அப்படியே அழகர் கோவில் போயிட்டு வர சாயங்காலம் ஆகிடும். லேட் ஆனாலும் பயப்பட வேண்டாம்'' என்று சொல்லி வெற்றிவேல் கிளம்பும் போதே மழை தூறல் போட்டுக் கொண்டு இருந்தது.



அப்பாவின் சொந்த ஊர் மதுரை. ஆண்டுக்கு ஒரு முறை ஏப்ரல் மாதத்தில் அவனுக்கு எப்போது நேரம் கிடைக்கிறதோ, அப்போது வந்து கோவிலில் பொங்கல் வைத்து பூஜை ஒன்று போட்டு விட்டுச் செல்வது வழக்கம். இப்போது தனியாக வந்ததால் பூஜை எதுவும் செய்யவில்லை.

'சீக்கிரமே அம்மாவின் ஆசைப்படி ஒரு கல்யாணம் முடித்து குடும்பத்துடன் வந்து பெரிதாக பூஜை போடுகிறேன்' என்ற பிரார்த்தனையை அகிலம் காக்கும் அங்காள பரமேஸ்வரியிடம் வைத்த போது 'அவளின்' முகம் நினைவில் மின்னி மறைந்தது. வெளியே வந்தபோது மழை வேகம் பிடித்தது.

மழையோடு காரில் பயணம் செய்ய வேண்டுமா? இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே இருக்கலாமே என்ற எண்ணத்தில் கோவிலின் வெளி பிரகாரத்தில் அமர்ந்தான். பார்வை சுற்றிலும் அலைபாய முப்பதடி தூரத்தில் இருந்த ஒரு மின் கம்பத்தில் வயர் அறுந்து தொங்கிக் கொண்டு இருந்தது கண்ணில் பட்டது.

மழை நேரத்தில் இப்படித் தொங்குவது ஆபத்தாயிற்றே என்று கவலையுடன் அதைப் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே, காற்றில் ஒரு பட்டம் பறந்து வந்து அந்தக் கம்பத்தில் ஒட்டிக் கொண்டது. ஏற்கனவே மழையில் நனைந்து இருந்ததும், மின் கம்பத்தின் சொரசொரப்பான மேற்பகுதியும் சேர்ந்த கொள்ள அது ஒட்டிக் கொண்டது.

காற்றில் பறந்த அந்த பட்டத்தைத் தொடர்ந்து ஓடி வந்தான் அந்த சிறுவன்! மூன்று வயது இருக்கலாம். மஞ்சள் வண்ண டி ஷர்ட், நேவி ப்ளூ ஜீன்சும் அணிந்து

ஓடி வந்ததைப் பார்த்ததும் அவனின் சர்வாங்கமும் பதறியது.

''ஹேய்! குட்டி நோ... தொடாதே...'' என்ற அலறலுடன், அந்த முப்பதடி தூரத்தை நாலே எட்டில் கடந்து தாவி போய் அவனை தடுத்து நிறுத்தினான்.

''யார் நீங்க? எதுக்கு என்னைப் பிடிச்சு இழுக்கறீங்க?'' என்று முறைத்தவனுக்கு பதில் சொல்லாமல் அமர்ந்து இருந்த இருக்கையில் இறக்கி விட்டான்.

''உன்னுடன் யார் வந்து இருக்காங்க? இப்போ எங்கே இருக்காங்க?'' என்று அதட்டலாகக் கேட்டான். பையனை இப்படி மழை நேரத்தில் தனியாக விடலாமா என்ற ஆதங்கம் அவனுக்கு! இவன் இந்த இடத்தைச் சேர்ந்தவன் இல்லை என்பது அந்த உடையின் நேர்த்தியில் புலனானது.

''உங்களை ஒரு கேள்வி கேட்டேன் நான்...?'' என்று இடுப்பில் கை தலையை இடது பக்கம் சாய்த்து, தன் கேள்விக்கு பதில் சொல்லாமல் எதிர் கேள்வி, அதையும் அதட்டலாகக் கேட்டவனைப் பார்த்துச் சிரிப்பு வந்தது.

''நான் கூடத்தான் கேள்வி கேட்டேன்!'' என்று அவனும் சிரிப்பை அடக்கி கண்களை உருட்டி கோபமாக இருப்பது போலக் கேட்டான்.

''முதலில் கேள்வி கேட்டது நான் தான்.''

''ரெண்டாவது கேள்வி கேட்டது நான்? ஒண்ணு பெரிசா ரெண்டு பெரிசா...?'' என்று சிரிக்காமல் கேட்க அவன் திகைத்தான்.

''ஒண்ணுக்கு அப்புறம் தானே டூ வரும்? நீங்க தானே முதலில் எனக்கு பதில் சொல்லணும்'' என்று குழப்பத்தோடு கேட்க, அவனால் இப்போது சிரிப்பை அடக்க முடியவில்லை.



''என் பேர் வெற்றிவேல், சென்னையில் இருந்து இந்த கோவிலுக்கு வந்து இருக்கிறேன். உன் பேர் என்ன?''

''மை நேம் இஸ் ராகுல்.''

''நைஸ் நேம்'' என்று சொன்னதும், முகம் விகசித்தது.

''அது சரி என்னை ஏன் பட்டத்தை எடுக்க விடாமல் இழுத்தீங்க என்று இன்னும் சொல்லவில்லையே?''

''அதுக்கு தான் உன்னுடன் யார் வந்து இருக்கா என்று கேட்டேன். நீ பதிலே சொல்லலை.''

''ப்ச்! அங்கிள் நீங்க ரொம்பப் பிடிவாதம் பிடிக்கிறீங்க.''

''உன்னை மாதிரி'' என்று அவனையே மாதிரியே பாவனையில் திருப்பிச் சொல்லவும் சிரித்து விட்டான்.

''உங்களுடன் பேசிக் கொண்டு இருப்பது ரொம்ப ஜாலியா இருக்கு. அந்த மண்டபத்துல எங்க பாட்டி இருக்காங்க. அவங்க தேடுவாங்க. அங்கே போகலாமா?'' என்று அழைக்க அவனைத் தோளில் தூக்கியபடி எழுந்தான்.

''மழை பெய்யும் நேரம், இந்த மாதிரி மின் கம்பங்களைத் தொடக்கூடாது. அதுவும் இந்த மாதிரி வயர் தனியா அறுந்து தொங்கும் போது கண்டிப்பா தொடக்கூடாது. எது ஷாக் அடிக்கும் அடிக்காது என்று தொட்டுப் பார்த்து தெரிந்து கொள்ள முடியாது இல்லையா? அதனால் எதையுமே தொடாமல் இருப்பது நல்லது. ஷாக் அடிக்குமோ என்ற பயத்தில் தான் தொடாதே என்று சொன்னேன்'' என்று மென்மையான குரலில்

விளக்கமும் சொல்ல, அவன் புரிந்தது போல தலை அசைத்துக் கொண்டான்.

''என்ன சத்தமே காணோம்...? புரிஞ்சதா?''

''புரிஞ்சது அங்கிள். அதனால் தான் அம்மா மழை வந்தாலே வெளியே விட மாட்டேன் என்கிறாங்களா?''

''அம்மா சொல்லி இருக்காங்க, அம்மா பேச்சுக் கேட்ப தில்லையா'' என்று பொய்யாக மிரட்ட அவன் வேக மாகத் தலை அசைத்தான்.

''அம்மா பேச்சு கேட்பேன். அம்மாவை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதனால் தான் அந்த பட்டத்தை எடுக்கப் போனேன். அது அம்மாவோட கிப்ட். இந்த மாதிரி காரணம் சொல்லல'' என்று சொன்னவன் கண்கள் மீண்டும் அந்த மின் கம்பத்தின் பக்கம் சாய அவள் புன்னகை செய்தான்.

''அந்த பட்டம் கட்டாயம் வேண்டுமா?'' என்று அவன் ஆமாம் என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு தலை அசைத்தனன்.

''எடுக்கலாம். ஆனால் அதை தொடுவதற்கு முன்னால் முதலில் செருப்பு போடணும். ரெண்டாவது ஒரு மர குச்சி எடுக்கணும்.''

''எதுக்கு அங்கிள் இந்த குச்சி...?''

''இதுல கரண்ட் வராது. இதை வச்சு அந்த கம்பத்தைத் தொடலாம்.''

''ஐ! கையால் தொட்டால் ஷாக் அடிக்கும். குச்சியால் தொட்டால் ஷாக் அடிக்காதா?''

''வீட்டில் போய் அம்மாவிடம் கைப்பிடி வைத்த பால் பாத்திரம் இருந்தால் நாளைக்கு நான் சொல்ற மாதிரி



செய்து பாரு உனக்கே புரியும். அம்மா பால் காய்ச்சும் போது அடுப்பில் இருக்கும் பாத்திரத்தைத் தொட்டால் சுடும். ஆனால் அதே நேரத்தில் பிளாஸ்டிக் கைப்பிடியைத் தொட்டால் சுடாது. அது மாதிரி தான் இதுவும்'' என்று விளக்கம் சொல்லி குச்சியால் பட்டத்தை எடுத்துக் கொடுக்க அவன் கண்களில் சந்தோஷ மின்னல் வந்தது.

''தேங்க்ஸ் அங்கிள். பாட்டி அங்கே இருக்காங்க. வரீங் களா...?'' என்று அழைக்க அவனும் பின் தொடர்ந்தான்.

அங்கே கண் மூடி அம்மன் சந்நிதியில் விழிகளில் நீர் பெருக எதோ மனப்பூர்வமான வேண்டுதலுடன் அவர் அமர்ந்து இருந்த தோற்றமே அவன் மனதை உருக்கியது.

''பாட்டி...'' என்று அழைக்க முயன்றவன் உதட்டில் கை வைத்து மறுப்பாக தலை அசைத்தான்.

''பாட்டி சாமிகிட்டே பேசிட்டு இருக்காங்க. உனக்காக ஏதாவது கேட்டு இருப்பாங்க. சத்தம் போட்டு தொந்தரவு பண்ண வேண்டாம். இங்கே உட்கார்ந்து இருப்போம் ஒகே?'' என்று ரகசியம் பேசியவன் அந்த சந்நிதியிலேயே ஓரமாக அமர்ந்து அவனை மடியில் இறுத்திக் கொண்டான்.

''சாமிகிட்டே போன என் அப்பாவைத் திருப்பித் தரச் சொல்லி கேட்கறாங்களோ?'' என்று தன் காதுகளில் ரகசியமாக ஒலித்த ராகுலின் குரல் கேட்டு அதிர்ந்து திரும்பினான். இவன் தகப்பன் இல்லாத குழந்தையா?!

''என்ன ஆச்சு சத்தமே காணோம் அங்கிள்?'' என்று மீண்டும் காதுக்குள் கிசுகிசுத்தவனை அணைத்துக் கொண்டான்.

''ஒன்றும் இல்லைடா. நீ ஸ்கூலுக்குப் போகிறாயா?''

''இப்பதான் சேர்க்கப் போறாங்க. எல்.கே.ஜி...''

மெல்லிய குரலில் என்றாலும் அவர்கள் தொடர்ந்து பேசிய பேச்சுக்கள் கற்பகத்தை எட்டி அவரைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

''ராகுல்...! என்ன தம்பி தொந்தரவு பண்ணினானா?'' என்று கற்பகம் கவலையோடு விசாரிக்க அவன் மறுப்பாக தலை அசைத்தான்.

''அதெல்லாம் இல்லைம்மா. அவனோட பட்டம் போஸ்ட் கம்பத்தில் மாட்டிக் கொண்டது. எடுத்துக் கொடுத்தேன். மழை நேரம் பாருங்க! எலெக்ட்ரிக் போஸ்டை தொடக்கூடாது என்று சொல்லி அழைத்து வந்தேன். நீங்க சாமி கும்பிட்டுக் கொண்டு இருந்ததால் பேசிட்டு இருந்தோம். தொந்தரவு இல்லை.''

''ரொம்ப தேங்க்ஸ் தம்பி. எப்பவும் கண் பார்வையை விட்டு அகலக் கூடாது என்று நினைப்பேன். சாரி தம்பி உங்களுக்கு சிரமம் இவனுக்கு ஏதாவது ஒன்று என்றால் அவங்க அம்மா துடித்துப் போய் விடுவாள்...'' என்று ஆதங்கத்தோடு சொல்ல அவனுக்கு மேலும் மனம் பாரமானது.

''எங்கேம்மா வீடு? நான் மதுரை வழியா அழகர் கோவில் போகிறேன். உங்களை மதுரையில் விடட்டுமா?'' என்று கேட்க மறுத்தார்.

''இல்லை தம்பி, ஒரு மணிக்கு பஸ் வரும். அதில் போய் விடுவோம்...''

''சின்னக் குழந்தையை வைச்சு இருக்கீங்க. பஸ் வர நேரம் இருக்கு. ராகுலுக்கு பசிக்காதா? நீங்க வருவதால் எனக்கு எந்தக் கூடுதல் செலவும் இல்லை. அதுக்கு மேல தயக்கமா இருந்தால் பஸ்க்கு நீங்க எவ்வளவு கொடுப்பீங்களோ, அதை என்னிடம் கொடுத்து விடுங்க.



நான் மறுப்பு சொல்லாமல் வாங்கிக் கொள்கிறேன். போதுமா?'' என்று வற்புறுத்த கற்பகம் அரை மனசோடு தலை ஆட்டினார்.

''ராம்ப யோசிக்காதீங்கம்மா! என்னைப் பார்த்தால் வில்லன் மாதிரி தெரியுதா? நான் நல்ல பையன். அதை நானே சொல்லிக்கக் கூடாது தான். ஆனால் நீங்க என்னை இப்படி நம்பிக்கை இல்லாமல் பார்த்ததால் சொல்ல வேண்டியதாக இருக்கு. உங்களுக்கு ப்ரூப் வேண்டுமா?''

''அதெல்லாம் வேண்டாம் தம்பி...''

''பாருங்க எங்க அம்மா அப்பாவுடைய அறுபதாம் கல்யாணத்திற்கான பத்திரிகை முதல் பத்திரிகை குல தெய்வம் கோவிலில் வைக்க வந்து இருக்கிறேன். இது உங்களுக்காக செட் பண்ணியதா இருக்க முடியாது இல்லியா?'' என்றதும் அவர் பதறிப் போனார்.

''என்ன தம்பி, நீங்க என்னென்னவோ பேசறீங்க? நான் அந்த அளவுக்கு எல்லாம் யோசிக்கலை. முன்னே பின்னே தெரியாதவங்க காரில் கையில் குழந்தையோடு போகணுமா என்று தயங்கியது உண்மை தான். அதுக்காக உங்களை நம்பாமல் இல்லை தம்பி...''

''இது என் கார்ட் சென்னைக்கு ஏதாவது வேலையா வந்தால் சொல்லுங்க என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன்...'' என்று சொன்னதோடு ஒரு பத்திரிகையை எடுத்து. அவரின் பெயரை கேட்டு அதில் எழுதி கொடுக்கவும் செய்தான்.

''கிளம்பலாமா அங்கிள்? உங்க கார் எங்கே இருக்கு? என்ன கார்?'' என்று கண்ணில் மின்னலுடன் கேட்ட ராகுலைப் புன்னகையோடு பார்த்தான்.

"இது இண்டிகா. வாடகைக்கு எடுத்த கார். சென்னையில் வீட்டில் ஸ்விப்ட் இருக்கு. ரெட் கலர் உனக்கு என்ன கலர் பிடிக்கும்?"

"எனக்கு ரெட் கலர் தான் பிடிக்கும். ஆனால் கார் இல்லை. பைக் வேண்டும். உங்களுக்கு பைக் ஓட்டத் தெரியுமா?"

"தெரியுமாவா? ரேசர் பைக் கூட ஓட்டுவேன். சினிமாவில் ஸ்டண்ட் சீன்ஸ் வைக்க போவேனே..." என்று அவனுக்குச் சரியாகக் கண்களை அகட்டிப் பேச அவன் மேலும் ஆர்வமானான்.

"வா...வ்! ஸ்டண்ட் பண்ணுவீங்களா? நிஜமாவா...?"

"ம்ம். இப்ப வந்த 'அக்னி சிறை' பார்த்தாயா? கடைசியில் ஹீரோ பிரேம்குமார் பைக் ரேஸ் சீனில் அவருக்கு ஷாட் சொல்லிக் கொடுத்தது நான் தான்" என்று அவன் சொன்னதும் அவனைக் கையில் பிடிக்க முடியவில்லை.

"அங்கிள் நீங்க சினிமா ஸ்டார்ஸ் எல்லாம் பக்கத்தில் இருந்து பார்த்து இருக்கீங்களா? ஆட்டோக்ராப் வாங்கி தருவீங்களா?"

"நீ சென்னைக்கு வா, உன்னையும் அழைத்துப் போகிறேன். ஆட்டோக்ராப் வாங்கி தருகிறேன். உனக்கு யாரிடம் வாங்கணும்...?"

"எனக்கு தருண் ஆதித்யா கிட்டே வாங்கணும்..."

"டாப் ஸ்டார் தான் உங்க எய்மா? வாங்கி தரேன்..." என்று உறுதி அளிக்க அவன் குஷி இன்னும் கூடியது.

"நீங்க நீளமான கத்தி வச்சு சண்டை போடுவீங்களா?"



"தெரியும். அதுக்கு பேர் ஃபென்சிங்..."

"அங்கிள் உங்க ஆம்ஸ் காட்டுங்க" என்று அதைத் தொட்டு பார்த்து 'ஹையோ... குப்பரா இருக்கு...' என்று அவனை வருடி, கொஞ்சி கண்கள் விரிய அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டு இருந்தவனுக்கு மனசுக்குள் இதம் பரவியது.

"கண்ணு கொஞ்ச நேரம் சும்மா இரேன்! இப்படி மூச்சு விடாமல் பேசி அங்கிளை தொந்தரவு பண்ணக் கூடாது" என்று இடையில் கற்பகம் அதட்ட முயற்சி சய்த போதும் ராகுலின் பேச்சு நிற்கவில்லை.

மீண்டும் அவர் அதட்ட முயன்றபோது, "பரவாயில்லைம்மா. இது ஒன்றும் எனக்கு பெரிய சிரமம் இல்லை. குழந்தைதானே..." என்று வெற்றி சொல்லிவிட, மதுரை பேருந்து நிலையம் வரும் வரை, ராகுலின் உற்சாகமான கேள்விகளும் வெற்றியின் பதில்களும் தொடர்ந்து கொண்டே இருந்தன.



# 7

மதுரை பேருந்து நிலையத்தில் இருந்து அழகர் கோவில் வழியில் வெற்றிவேலின் மனம் கற்பகத்தையும் ராகுலையும் சுற்றிச் சுற்றி வந்தது. எல்லா அம்மாக்களும் ஒரே மாதிரி தான். பிள்ளைகளை நலம் நாடுவது ஒன்றே குறி! 'கடவுள் எல்லா இடங்களிலும் இருக்க முடியாது என்பதற்காக தாயைப் படைத்தான்' என்ற பழமொழி தான் எத்தனை உண்மை?

தான் தனியாய் நிற்கிறேன் என்று ஒவ்வொரு நாளும் புலம்பித் தள்ளும் அம்மா ஆகட்டும்! விதவையாய் கையில் குழந்தையோடு நிற்கும் மகளின் எதிர்காலத்திற்காக கோவிலில் கை ஏந்தி அகிலம் காக்கும் பரமேஸ்வரியிடம் வேண்டுதல் விடுத்த கற்பகம் ஆகட்டும்!

அப்பா இல்லாத குழந்தையைத் தன் உயிராக வளர்த்து ஆளாக்க நினைக்கும் அந்த பெண்ணாகட்டும்! எல்லோருமே உயர்வுதான்!

பெண்ணா? அவள் பெயர் என்ன? இவ்வளவு நேரம் பேசி அதை கேட்கவில்லையே? வாகனம் அழகர் கோவிலை நோக்கி விரைய அவனின் சிந்தனை அலை பாய்ந்த போது அலை பேசி அடிக்க எடுத்துப் பார்த்தான்.

''இப்ப தான் உங்களைப் பற்றி நினைத்தேன். உடனே கால் வந்துடுச்சே...'' என்று சொன்ன மகன் குரலில் இருந்த உற்சாகம் அவரைத் திகைக்க வைத்தது.

''என் மகன் என்னைப் பற்றி நினைத்தேன் என்று அதுவும் சந்தோஷமான குரலில் சொல்வதைக் கேட்டால் என்னைக் கையில் பிடிக்க முடியாதே? என்னை எதற்காக வெற்றி நினைத்தாய்...?'' என்று ஆர்வத்துடன் கேட்டார் பாலா.

''இப்பதான் நம்ம கோவிலுக்குப் போய் விட்டு அழகர் கோவில் போய் கொண்டு இருக்கிறேன். உங்களிடம் பேசி இரண்டு நாள் ஆச்சே? பேசலாம் என்று நினைத்தேன்.''

''அவ்வளவுதானா?'' என்றவரின் உற்சாகம் உடனே வடிந்தது.

''வேறே என்ன நினைத்தீங்க?''

''நான் ஒரு பெண்ணை பார்த்தேன். பிடிச்சு இருக்கு. கல்யாணத்தை எப்போ வச்சுக்கலாம் என்று கேட்பாய்



என்று நினைத்தேன்...'' என்று சொன்னதும் அவனுக்கு சிரிப்பு பொங்கி வழிந்தது. சிரிப்பின் ஊடே அவளின் முகமும் தோன்றியது.

''சென்னையில் இருந்து கிளம்பிய நாலே நாளில் நான் கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்து உங்க முன்னால் நிற்கணுமா? இது உங்களுக்கே ஓவரா தெரியலை...''

''ஒரே ஒரு தடவை ரெண்டே ரெண்டு நிமிஷம் அம்மா அப்பா கை நீட்டிய பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறேன் என்று நீ சொன்னது ஓவர் இல்லை. அந்தப் பெண் வீட்டில் சினிமா துறையில் இருப்பதால் உங்க பையன் வேண்டாம் என்று நிராகரிப்பது ஓவர் இல்லை. அந்தப் பெண்ணை நினைத்து நீ அஞ்சு வருஷமா கல்யாணம் வேண்டாம் என்று சந்நியாசி மாதிரி இருப்பது ஓவர் இல்லை. பெற்ற பையன் எனக்குப் பிடிச்சு இருக்கு என்று யாரை கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் பரவாயில்லை என்று நான் சொல்வது மட்டும் ஓவரா இருக்கா?''

''இதெல்லாம் போனில் பேசும் விஷயம் இல்லை. ஊருக்கு வந்த பிறகு பேசிக் கொள்ளலாம். அப்பா என்னை வழி அனுப்ப ஸ்டேஷன் வந்தாரே? வீட்டுக்கு வந்த பிறகு ஒன்றும் உங்களிடம் சொல்லலையா?''

''என்ன சொன்னார்...? ஒண்ணும் சொல்லலையே...?''

''ரெண்டு மாசம் பொறுத்துக்கோங்க. கல்யாணத்திற்கு என் மனசை நான் தயார் பண்ணிக்கறேன் என்று சொன்னேனே...''

''அதுவா? சொன்னார்... சொன்னார்... இது மாதிரி ரெண்டு மாசம் அவகாசம் நீ கேட்டதே பத்து தடவைக்கு குறையாமல் இருக்கும்டா...''

"இல்லைம்மா. இந்த முறை நிச்சயமா ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கிறேன். ஆனால் கல்யாணத் துக்கு முன்பே நான் அந்தப் பெண்ணிடம் தனியா பேசணும்..."

"எதுக்கு? ஏற்கனவே ஒரு பெண் என்னை வேண் டாம் என்று வேறே கல்யாணம் பண்ணிக் கொண்டு போய்ட்டா என்று சொல்லி அவளை ஓட ஓட விரட்டு வதற்கா? அதுக்கு வாய்ப்பே கிடையாது. உனக்கு ரெண்டு மாசம் டைம். அது முடிஞ்ச பத்தாவது நாள். நான் தேர்வு செய்யும் பெண்ணுடன் உனக்குக் கல்யாணம். அது வேண்டாம் என்று நினைத்தால் அதுக்கு முன்னாடி நீயே பெண்ணை பார்த்துப் பதிவுத் திருமணம் செய்து, மாலை யும் கழுத்துமா வந்து நின்றால் கூட எனக்குக் கவலை இல்லை..." என்று சொல்லி விட்டு அவனின் பதிலை எதிர்பாராமல் போனை வைத்து விட்டார் பாலாம்பிகை.

* * *

அம்மாவும், ராகுலும் கோவிலுக்குக் கிளம்பும்போதே, திரும்ப வரத் தாமதமாகுமே என்று தவித்தாள்.

"மழை தூறல் போடுகிறது! இன்றே கட்டாயம் போக வேண்டுமாம்மா?"

"இன்னும் ஸ்கூல் அட்மிஷன் முடியலை. நீ வேற சென்னை போகணும் என்று நிற்கிறாய். தள்ளிப் போயிட்டே இருக்கு. அதனால் இன்றே போய் வந்து விடுகிறேன்" என்று பிடிவாதமாகக் கிளம்பி விட்டார். ஒரு மணிக்கு முன்பாகவே வந்து சேர்ந்தவர்களைப் பார்த்து வியப்பில் விழி விரித்தாள்.

"ஹேய்! செல்லம்! என்னடா இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டீங்க?" என்று ஆச்சரியமாக கொஞ்சியபடி அவனை விசாரித்தாள் வாணிப்ரியா.



"நாங்க காரில் ஸ்பீடா வந்தோம். அதான் சீக்கிரமா வந்துட்டோம்..." என்று சொன்னதை முதலில் அவளால் நம்பவே முடியவில்லை.

மீண்டும் சங்கரா? அவனுக்கு எத்தனை முறை சொன்னாலும் அறிவே இருப்பதில்லை. அவனை என்ன சொல்வது? முதலில் அம்மாவை சொல்லணும் என்ற எரிச்சலோடு வாடிக்கையாளரும் யாரும் இல்லை. பக்க வாட்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்று அம்மாவை விசாரித்தாள்.

"என்னம்மா? ரெண்டு நாள் முன்னாடி அவ்வளவு சொல்லி இருக்கிறேன்? இப்ப திரும்பவும் சங்கரோடு காரில் வந்தீங்களா? சீக்கிரமே நாம் வேறே ஊர் கிளம்ப வேண்டியது தான் என்று நினைக்கிறேன்" என்று அதட்டலாகச் சொல்ல கற்பகம் முறைத்தார்.

"என்ன உளறுகிறாய்? நான் ஏன் சங்கருடன் வரு கிறேன்? அதான் அவர் இனி உன் விஷயத்தில் தலையிட வில்லை என்று தீர்மானமா சொல்லிட்டாரே? அப்புறம் எப்படி வருவார்?"

"ராகுல் காரில் வந்ததா சொன்னானே? வேறே யார்...?" என்று தயக்கமாக நிறுத்தினாள்.

"சங்கர் அங்கிள் கூட இல்லைம்மா! வெற்றிவேல் அங்கிள் கூட வந்தோம்..." என்று அவசரமாக ராகுல் இடையிட்டுச் சொல்ல அந்த பெயர் அவளை ஒரு முறை உலுக்கி எடுத்தது.

"வெற்றிவேலா?!"

"சென்னையில் இருந்து வந்த பையன் கோவிலில் சாமி கும்பிட வந்து இருந்தான். அதுதான் அவங்க குல

தெய்வமாம். அவங்க அம்மா அப்பாவுக்கு அறுபதாம் கல்யாணம் நடக்கப் போகுது என்று முதல் பத்திரிகை சாமிக்கு வச்சு கும்பிட வந்து இருந்தார். அவர் தான் மதுரை வரை கொண்டு வந்து விட்டுட்டுப் போனார்'' என்று சொல்ல அவளின் திகைப்பு கூடியது.

''நம்மளையும் வரச் சொல்லி பத்திரிகை கொடுத்தார்...'' என்று சொல்லி பத்திரிகையை எடுத்து நீட்ட அதை வாங்கிப் பிரித்தவளின் கண்கள் அதிலேயே நிலைகுத்தி நின்றது.

காரணம் அழைப்பிதழின் வலது புறம் அவன் பெயர் மட்டுமே இருந்தது. இடது புறத்தில் வசந்தி - ரகுராமன், பவித்ரா மூவரும் பெயர்களும் இருக்க வலது புறத்தில் அவன் பெயர் மட்டுமே இருப்பது அவனுக்கு இன்னும் திருமணம் நடக்கவில்லை என்பதைக் காட்டியதால் வந்த திகைப்பு.

வயது முப்பது இருக்கும் போல இருந்ததே? ஏன் அவனுக்கு இன்னும் திருமணம் நடக்கவில்லை? தங்கை திருமணம் முடிந்தும் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் ஆகி இருக்க வேண்டும். ஐந்து ஆண்டுகளாக அவன் வீட்டில் அவனைக் கேட்காமலா இருந்து இருப்பார்கள்? இத்தனைக்கும் வசதியானவர்கள் வேறு? இது உனக்கு ரொம்ப தேவை' என்று மனசாட்சி இடித்தது.

''வாடா சாப்பிடலாம்'' என்று சொல்லியபடி பேச்சை பாதியில் நிறுத்தி விட்டு மகனோடு அடுக்களைக்குள் நடந்தாள்.

''அம்மா நாம் எப்போ சென்னைக்குப் போகலாம்?''

''சென்னையில் உனக்கு என்னடா வேலை...?''



''ஆக்டர் தருண் ஆதித்யாவிடம் ஆட்டோக்ராப் வாங்கி தரேன் என்று அங்கிள் சொல்லி இருக்கார்ம்மா. எப்போ போகலாம்?''

''ஒரு பேச்சுக்குச் சொன்னால் அதைப் பிடிச்சுக்கிட்டு பின்னாடியே போய் நிற்கக் கூடாது ராகுல்'' என்று சமாதானம் செய்ய அவன் வேகமாக தலை அசைத்து மறுத்தான்.

''இல்லைம்மா, அங்கிள் பேச்சுக்குச் சொல்லலை. நிஜமா தான் சொன்னார்.''

''சரி, சென்னைக்குப் போகும்போது பார்க்கலாம். பேசாமல் சாப்பிடு'' என்று மகனை அதட்டி அந்தப் பேச்சை மாற்றினாள். ஆனால் அது ஒரு முறை அல்ல இரு முறை அல்ல, பல முறை தொடர்ந்தது.

அழகு நிலையத்துக்கு எப்போதாவது மட்டுமே வரும் மகன், அன்று அங்கேயே குடி இருந்தான். அங்கே இருந்த பெரிய கண்ணாடி முன்பு நின்று தன் கைகளை உயர்த்தி, விதம் விதமாக நின்று திரும்பி, ஒரு நீண்ட குச்சியை வைத்துக் கண்ணாடி முன் நின்று கத்தி சண்டை போட்டவனை ஓரக்கண்ணால் பார்த்தவளுக்குச் சிரிப்பு வந்தது.

''என்னடா குச்சியை வைத்து கத்தி சண்டை போடுற?''

''இது கத்தி சண்டை இல்லை. இதுக்கு பேர் ஃபென்சிங்'' என்று அவளைத் திருத்த அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

''ம்ம்ம் அப்புறம் இதுக்கு பேர் சார்...?'' என்று அவளின் புஜத்தில் விளையாட்டாகக் குத்திக் காண்பிக்க, அவன் கூச்சத்துடன் சிரித்தான்.

"அங்கிளுக்கு ஆர்ம்ஸ் சூப்பரா இருக்கும்மா. ஒரு கையில் என்னை தொங்க விட்டுத் தூக்கினார்" என்று அவன் சொன்ன அழகில் அதிர்ந்தாள். இவன் இவ்வளவு நேரம் பேசியது டி.வி. சினிமா பார்த்து விட்டு என்று நினைத்தால் இவன் அவனையா நினைத்துப் பேசிக் கொண்டு இருக்கிறான்?

இந்த மயக்கத்தை என்ன செய்வது? ஏற்கனவே மூன்று தினங்கள் முன்பு எனக்கு அப்பா வேண்டும் என்று சொன்னதை நினைத்துக் கலங்கிக் கொண்டு இருக்கையில் தற்போது இவன் ரூபத்தில் புதுப் பிரச்னையா?

செய்யாதே என்று சொன்னால் தான் குழந்தைகள் ரொம்பப் பிடிவாதமாகச் செய்யக் கூடும். கண்டு கொள்ளாமல் இருந்தால் காலப் போக்கில் மறந்து போய் விடக் கூடும் என்று அவள் நினைத்தது நடக்கவில்லை.

"சரி கொஞ்ச நேரம் படுத்துத் தூங்கு, சாயங்காலம் பயிற்சி செய்யலாம்" என்று சொல்லி அனுப்பி வைத்த ஒரு மணி நேரத்தில் மீண்டும் அவளைத் தேடி வந்து சேர்ந்தான். மாலை நாலு மணிக்கு அம்மா பால் காய்ச்சும் போது இவன் அழகு நிலையத்திற்கு பக்கக் கதவைத் திறந்து கொண்டு ஓடி வந்தான்.

"அம்மா என்னோட ரெண்டு நிமிஷம் வாங்க. பாட்டி என்னை விட மாட்டேங்கறாங்க" என்ற புகாரும் அழைக்க வந்தான்.

"எதுக்குடா விட மாட்டேங்கறாங்க?" என்ற விசாரிப்புடன் உடன் நடந்தவளை அவன் அடுத்து சொன்ன பதில் திகைக்க வைத்தது.

"பால் பாத்திரத்தைத் தொட்டுப் பார்க்க...?"



"என்னடா விளையாடுறியா? அடுப்பில் இருக்கும் பாத்திரத்தை எப்படித் தொட விடுவாங்க?"

"அங்கிள் அம்மாவிடம் கேட்டு தொட்டு பார் என்றாரே...?"

"எந்த அங்கிள்டா...?"

"வெற்றிவேல் அங்கிள்..." என்ற அவனின் பதிலில் மேலும் அதிர்ந்தாள்.

"என்னடா சொல்கிறாய்?"

"உங்க அம்மா பால் காய்ச்சும்போது நீ தொட்டுப் பாரு. கைப்பிடி சுடாது. பால் பாத்திரம் சுடும் என்று சொன்னாரே."

"எதுக்கு அதைச் சொன்னார்?"

"நீங்க முதலில் வாங்க ரொம்ப லேட். ஆனால் எப்படித் தொட முடியும்? அப்புறமா பதில் சொல்கிறேன்" என்று அவளின் கை பற்றி இழுத்து வர அவளும் அந்த சோதனைக்கு உடன்பட்டாள்.

"ஆமா அவர் சொன்னது கரெக்ட்தான்..." என்று முகம் மலரச் சொன்னவனை வியப்புடன் பார்த்தாள்.

"என்னடா சொன்னார்?" என்ற கேள்விக்கு அன்று காலை கோவிலில் அவர்களுக்கிடையே நடந்த உரையாடலை அவன் சொல்லி முடிக்க அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது அவனை இருக்க வாரி அணைத்துக் கொண்டாள்.

"கண்ணு இப்படி எல்லாம் தனியா புது இடத்தில் வெளியே போகலாமாடா?" என்று கண்ணீரோடு கேட்க அவன் குழம்பினான்.

"ஏன்மா அழறீங்க?"

"ராகுல்... ராகுல்... நீ இல்லை என்றால் அம்மா" என்று திக்கித் திணறியவளின் கோபமும் அழுகையும் அவனுக்குப் புரியவில்லை.

"சாரிம்மா... அழாதம்மா..." என்று தானும் கூட சேர்ந்து அழத் தயாரானவன் கண்களைத் துடைத்துவிட்டு அணைத்துக் கொண்டாள்.

"ராகுல் கண்ணா! இனிமேல் இப்படி தனியா எங்கேயும் போகக் கூடாது ப்ராமிஸ்" என்று கை நீட்ட, அவன் அழுகையோடு தலை அசைத்தான்.

"இதெல்லாம் பாட்டிக்கு தெரியாதாடா?" என்று கண்ணில் நீர் மல்கக் கேட்டவளை குழப்பத்தோடு பார்த்தான்.

"ம்ஹூம்! பாட்டி கோவிலில் அழுதுட்டே சாமி கும்பிட்டுட்டு இருந்தாங்க. பட்டம் விளையாடப் போனேன். அது கம்பில் மாட்டிக்கிச்சு" என்று மெல்ல அவன் நிகழ்ச்சிகளை நினைவு கூற அம்மாவின் கண்ணீருக்கான காரணமும் அப்போது அங்கே வெற்றிவேல் இல்லாவிட்டால் தன் மகனின் நிலை என்ற பயமும் சேர்ந்து கொள்ள அவள் மீண்டும் அவனை அணைத்துக் கொண்டாள்.

வெற்றிவேல் மட்டும் அந்த இடத்தில் இல்லாவிட்டால்...? மேலே நினைத்துப் பார்க்கவே தேகம் நடுங்கியது சம்பந்தம் என்ன தனக்கும் இவனுக்கும்...? எப்படி இவன் தனக்கு தேவையான நேரத்தில் எல்லாம் சரியாக வந்து உதவிக்கரம் நீட்டுகிறான்?

பெருமாள் கோவிலில் நேற்று அவன் கண்களில் தெரிந்த ஆர்வத்தைப் பார்த்துவிட்டு தான் அவனிடம் சொல்லாமல் விலகி வந்தாள். அவனை சபல கேசாக நினைக்க முடியவில்லை என்றாலும் என்னவோ அவன் பார்வையில் வித்தியாசமாக உறுத்தியது.

இப்போது பத்திரிகையில் தனியாக இருந்த அவனின் பெயர் பார்த்த பின்பு தானே அவன் மணமாகாதவன் என்பது தெரிகிறது! ஆனால், அவன் மணமாகாதவன்



என்றால் மட்டும்...? அவசரமாகக் கண்களை இறுக மூடி மேலே பறக்க தொடர்ந்த சிந்தனைக்கு கடிவாளமிட்டாள்.

இனி அவனைப் பார்க்கச் சந்தர்ப்பம் நேர்ந்தால் விலகிச் சென்று விட வேண்டும். மேலும் மேலும் பழக்கத்தை வளர்ப்பது அவனுக்கு நல்லதில்லை! அவனுக்கு மட்டுமென்ன? அவளுக்கும் தான்! முக்கியமாக அவன் ராகுலை சந்திக்க விடக் கூடாது! வினாடி நேரத்திற்குள் ஏகப்பட்ட முடிவுகளை எடுத்த வாணிப்ரியாவால் அதைக் காப்பாற்ற முடியவில்லை.

# 8

"அம்மா நான் இன்று ஸ்கூலுக்கு மாமாவோடு போகிறேன்" என்று உணவு மேஜையில் இருந்த பவித்ரா அம்மாவிடம் செல்லம் கொஞ்ச அவள் சிரித்தாள்.

"மாமா ரொம்ப அலைந்து விட்டு நேற்று நைட் ரொம்ப லேட்டா வந்து தூங்கினார் பவி. களைப்பா இருக்கார். நாளைக்கு அழைச்சுட்டுப் போகச் சொல்கிறேன்."

"இன்று மாமாவை நான் என் பிரெண்ட்ஸ்க்கு காண்பிக்கிறேன் என்று ப்ராமிஸ் பண்ணிட்டு வந்து இருக்கேன்மா. மாமா தான் பாடி பில்டர் ஆச்சே? மாமாக்கு டயர்டா இருக்காது. ப்ளீஸ்மா" என்று கெஞ்சிய மகளைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

"மாமா பத்து நாளைக்கு தான் இருப்பார். அப்புறம் யார் கூடப் போவது? ஒழுங்கா அப்பாவோடு கிளம்பு. சொன்னால் கேட்கணும்."

"அதேதான் நானும் சொல்றேன். மாமா பத்து நாள் தானே இருப்பார். அதனால் இன்னிக்கு மாமாவோடு போகிறேன். அதன் பிறகு எப்பவுமே என்னுடன் இருக்கும் அப்பாவோடு போகிறேன்" என்று மகா புத்திசாலித் தனமாக ஒரு கோரிக்கை வைக்க, அங்கே இருந்த அனைவருமே சிரித்தனர்.

"இந்தக் காலத்துப் பசங்களுக்குப் பேசச் சொல்லியா கொடுக்கணும்? என்ன வாய்?" என்று புவனேஸ்வரி செல்லமாக அலுத்துக் கொண்டார்.

"என்ன வெற்றி, பவியை பார்லருக்குக் கூட்டிட்டுப் போகச் சொன்னதற்கு ரொம்ப சலித்துக் கொண்டாய். இப்ப என்ன சொல்கிறாய்? உன் மருமகளுக்கு நீ தான் அழைத்துப் போகணுமாமே?" என்று கேட்க பவித்ராவின் பாப் செய்த தலையை செல்லமாகக் கலைத்து விட்டான் வெற்றி.

"'ஆல மரக்கிளையிலே' படத்துக்கு ஸ்டண்ட் மாஸ்டர் எங்க மாமா என்று ஸ்கூலில் எல்லோருக்கும் சொல்லிக் காட்டணும். அதுக்கு தானே இந்த பில்ட் அப்...?" என்று கேட்க சிரிப்புடன், 'ஆமா!' என்று ராகத்துடன் கொஞ்சி தலையை மேலும் கீழும் அசைக்க அவளின் சின்ன அன்பான ஜாடையில் மயங்கினான் வெற்றிவேல்.

"அதானே பார்த்தேன்! உங்க கிளாஸ் மிஸ் கிட்டே அறிமுகம் பண்ணி வைக்கிறாயா?" என்று கேட்க அவன் முதுகில் ஒன்று வைத்தாள் வசந்தி.

"சின்ன பெண்ணிடம் என்ன பேசுவது என்று இல்லையா? உன்னை..."

"நீ என்ன எப்பப் பார்த்தாலும் வேறே அர்த்தமே எடுத்துக் கொள்கிறாய்? கிளாஸ் மிஸ் பார்த்து, இது எங்க



அக்கா பொண்ணு, பத்திரமா பார்த்துக்கோங்க. நல்லா பாடம் சொல்லிக் கொடுங்க" என்று அறிவுரை சொல்லப் போறேன் வசு..."

"நம்பிட்டேன்டா.. நம்பிட்டேன்..."

"நீ நம்பலை என்றாலும் அது தான் உண்மை. நாங்க சென்னையில் பார்க்காத பெண்களா? சென்னையை விடு. சினி பீல்டில் பார்க்காத பியூட்டியா...?"

"டேய்! அது எல்லாம் செயற்கை அழகு. இங்கே இருப்பது எல்லாம் இயற்கை அழகு. அதை முதலில் தெரிஞ்சுக்கோ..."

"அப்படியா வசந்தி! ஆனால் இங்கே ஏன், ஒரே தெருவில் ரெண்டு பியூட்டி பார்லர் இருக்கு?" என்று அவன் மடக்க அவள் முறைத்தாள்.

"அவளுக்கு ஸ்கூலுக்கு நேரம் ஆச்சு, கூட்டிட்டு போ..." என்று சமாளிக்க சிரிப்புடன் பவித்ராவை அள்ளிக் கொண்டு பைக்கை நோக்கிச் சென்றான் வெற்றி.

"உங்க பள்ளியில் எத்தனை வகுப்புகள் இருக்கு? உங்க மிஸ் பேர் என்ன? கலர் ட்ரெஸ் போடுவாங்களா?" என்று விதம் விதமாகக் கேள்விகளை அள்ளி வீச, அவளுக்குத் தெரிந்த வகையில் கதை சொல்லியபடி பள்ளிக்கு வழி சொன்னாள் பவித்ரா.

"மாமா.. அங்கே பாருங்க... அம்மாவோட ப்ரெண்ட்..." என்று அவள் ஆர்வமா கை காட்டிய திசையில் பார்த்தவன் விழிகள் வியப்பில் விரிந்தது.

அவசரமாக வாகனத்தை செலுத்தி, அவளின் முன்னால் சென்று பரேக் அடித்து நிறுத்தியவன், "குட்மார்னிங் ப்ரியா" என்று வணக்கம் சொன்னான்.

தன்னை நெருங்கி முன்னேறிய வாகனம் சட்டென்று ப்ரேக் பிடித்து நின்றதில், அதிர்ந்து திரும்பிய அங்கே நின்றவனைக் கண்டதும் ஆசுவாசமாக மூச்சு விட்டாள்.

''சாரி, பயந்துட்டியா?''

''இல்லை... ஆனால்... மை காட்! உங்களுக்கு சாதாரணமாகவே எந்த வேலையும் செய்யத் தெரியாதா? ஒரே வேகம் வேகம் வேகம் தான் போல...?'' என்று கேட்டபடி மீண்டும் ஆழ மூச்செடுத்து தன்னை நிதானப்படுத்தினாள்.

''மேடத்திற்கு ஸ்கூலுக்குப் போக லேட் ஆகி விட்டது. நீ எங்க போகணும்?''

''லிட்டில் பிளவர் கான்வெனட்...''

''நானும் அங்கே தான் போகிறேன். வா கொண்டு போய் விடுகிறேன்'' என்று அவன் இயல்பாக அழைக்க அவள் பதறினாள்.

''அதெல்லாம் வேண்டாம். நான் நடந்தே போய்டுவேன். நேரா போய் வலது புறம் திரும்பினால் பள்ளி தான். பத்தே நிமிஷத்தில் போய் விடுவேன்..''

''அதே ரூட் தான் நானும் போகப் போகிறேன். உங்களை ரெண்டே நிமிஷத்தில் கொண்டு போய் விடுவேன், வா'' என்று மேலும் வற்புறுத்தியபடி பைக்கை முறுக்க அவள் தயங்கினாள்.

''உங்களுக்கு ஏன் வீண் சிரமம்?''

''அட! நீ பவித்ராவுக்கும், எங்க அத்தைக்கும் செஞ்ச உதவிக்கு நன்றி கடன் என்று வச்சுக்கோ. என் மேல் நம்பிக்கை இல்லை என்றால் பவியை நடுவில் உட்கார வச்சுக்கோங்க...'' என்று மேலும் வற்புறுத்தியும் அவள் தீர்மானமாக மறுத்து விட்டாள்.



இவனைப் பார்க்கவே கூடாது என்று அவள் முடிவு கட்டி வைத்து இருக்க வழிய வந்து கண் முன்னால் தோன்றி, பைக்கில் அழைத்துப் போவதாகச் சொல்தை எண்ணி அவள் வெலவெலத்துப் போனாள். பள்ளிக்கு ராகுலை சேர்க்க விண்ணப்பம் வாங்கச் செல்லும் இந்த நேரத்திலும் இவனைச் சந்திக்க வேண்டுமா? ஒதுங்கிப் போவதே நல்லது என்று விலகி போனவளை ரசனையுடன் பார்த்தான்.

இவள் இப்படி தள்ளிப் போவதே அழகாக இருக்கிறது! சோழவந்தானில் பத்து நாட்கள் எப்படி தங்கப் போகிறோமோ என்ற கவலையுடன் வந்து சேர்ந்தவனுக்கு கடந்த நான்கு நாட்களில் நடந்த நிகழ்ச்சிகள் அவனின் கவலையை மாற்றி உற்சாகமாக்கி விட்டது.

இந்த நான்கு நாட்களாக தொடர்ந்து அவளை ஏதாவது ஒரு காரணத்தினால் சந்திக்க நேர்ந்து விட்டது. முதல் நாள் பவித்ராவுக்கு முடி வெட்ட சென்ற போது அழகு நிலையத்தில் சந்தித்தான்.

இரண்டாவது அவள் உதவி வேண்டும் என்று தன்னை அழைத்தாலும் சுற்றி வளைத்து பார்த்தால், இங்கே வேலை செய்யும் ஒரு பெண்ணின் கௌரவத்தையும் எதிர்கால வாழ்க்கையையும் காப்பாற்றி இருக்கிறாள் என்று தான் சொல்ல வேண்டும்.

அத்தையை கூடலழகர் பெருமாள் கோவிலுக்கு அழைத்துச் சென்றபோது சந்தித்தாகி விட்டது. அங்கேயும் அவள் உதவும் இடத்தில் தான் இருந்தாள். இன்று காலை பவித்ராவை பள்ளியில் விடச் சென்றபோது பார்த்துப் பேசியாச்சு!

இந்த மாதிரி சந்திப்புகள் தொடர்ந்து நிகழ்வதும், ஒவ்வொரு சூழலிலும் அவளின் நல்ல குணங்கள்

ஒவ்வொன்றாகப் பார்க்க நேர்ந்ததும் அவளை மனதில் பதிய வைத்தது.

''மாமா, ப்ரேயர் டைம் ஆச்சு. கிளம்புங்க சீக்கிரம். முன்னால் போனால் தான் பிரெண்ட்ஸ் கூட பேச முடியும்'' என்று பவித்ரா உலுக்கிய பன்பே நனவுக்கு வந்தவன் பைக்கைக் கிளப்பினான்.

குழந்தைகளுக்கு கை கொடுத்து ஆட்டோக்ராப் போட்டுக் கொடுத்து, அவர்களுடன் சில வார்த்தைகள் பேசி விட்டு வீடு திரும்பிய பின்னும், அடி மனதில் அவளைப் பற்றிய எண்ணங்களே ஓடிக் கொண்டு இருந்தது.

பிரமாதமான அழகு என்று சொல்ல முடியாது. சென்னையில், அதுவும் சினிமா துறையில் முழு மேக்கப்புடன் பார்க்கும் பல பெண்களை ஒப்பிட்டால் இவள் ஒன்றுமே இல்லை என்று தான் சொல்ல வேண்டும். அந்த எளிமையே, அவளின் அழகைக் கூட்டியது.

மாநிறம்! ரொம்ப உயரம் என்றும் சொல்ல முடியாது. ஐந்தடி தான் இருக்கலாம். தன் ஆஜானு பாகுவான உயரம் உடற்கட்டின் அருகே நின்றால் அருகே நின்றால் சின்னப் பெண் மாதிரி தெரிந்தாலும் அவளின் செயல்கள் பல சமயங்களில் தனியாகத் தெரிந்தது. அக்கறையும் நல்ல குணமும் புரிந்தது. அதனாலேயே 'இவள் தனக்கு மனைவியாக வந்தால்...' என்ற கனவை எழுப்பியது.

இவள் தன் மனைவியாக வந்தால் எப்படி இருக்கும் என்ற கனவு பார்த்த முதல் வினாடியில் வரவில்லை. ஆனால் கடந்த நான்கு நாட்களாகத் தொடர்ந்து சந்தித்ததில், ஒவ்வொரு சந்திப்பிலும் அவளின் குணநலன்கள் மனதைக் கவர்ந்ததில் படிப்படியாக மனதில் இடம்



பிடித்தாள். மனதில் ப்ரியாவைப் பற்றிய எண்ணங்கள் அலை மோத.

'பொன்னை விரும்பும் பூமியிலே, என்னை விரும்பும் ஒருயிரே...' என்று அலைபேசி அழைத்தது.

''அம்மா, போர் அடிக்குதா! பையனைத் தேடுறீங்க?''

''போர் அடிக்கலைடா! நீ அங்கே ஜல்லிக்கட்டு காளை மாதிரி சுத்தி வருகிறாய் என்று புகார் வந்தது. அதான் என்ன விஷயம் என்று கேட்க போன் பண்ணினேன்.''

''புகார் சொன்னது யாரு? அத்தை சொன்னாங்களா?''

''சொன்னது யார் என்பதைப் பற்றி உனக்கென்ன கவலை? சொன்ன விஷயத்தைப் பற்றித் தானே யோசிக்கணும்.''

''சரி என்ன விஷயம் சொல்லுங்க. நிஜமா பொய்யா என்று சொல்கிறேன்.''

''யாரோ பொண்ணு பின்னாடி நாலு நாளா சுத்திகிட்டு இருக்கியாமே?''

''உங்களுக்கு எப்படிம்மா தெரியும்? யார் சொன்னது?''

''அப்ப விஷயம் நிஜம் தான்! அத்தையிடம் சொல்லி ரகுவை அவங்க வீட்டில் போய் பேசச் சொல்லட்டுமா?'' என்று கேட்க அவன் அலறினான்.

''என்னம்மா சொல்றீங்க? அவசரப்பட வேண்டாம். எப்படியும் அடுத்த வாரம் கல்யாணத்திற்கு வருவீங்க இல்லையா? அப்ப பேசிக்கலாம். முதலில் நான் அந்தப் பெண்ணிடம் பேச வேண்டும். அந்தப் பெண்ணுக்கு என்னைப் பிடிக்க வேண்டும். அவளின் பெற்றோருக்கு என்னைப் பிடிக்க வேண்டும்? எவ்வளவு விஷயம்

இருக்கு? கொஞ்சம் பொறுமையா இருங்க. நான் முதலில் அந்தப் பெண்ணிடம் பேசி விட்டுச் சொல்கிறேன்."

"இப்படியே ஒவ்வொரு காரணமாச் சொல்லி நல்ல விஷயத்தைத் தள்ளிப் போடாதே வெற்றி! நூறு சதவிகிதம் சரியா யாராலும் இருக்க முடியாது. மனுஷனா பிறந்தால் குணம் கொஞ்சம் முன்னே பின்னே இருக்கத் தான் செய்யும். அதைத் தள்ளிக் கூட்டி வாழ்வது தான் வாழ்க்கை. உனக்குப் பிடிச்சு இருக்கு என்று தோன்றினால், நாளைத் தள்ளாமல் உடனே அந்தப் பெண் வீட்டில் பேசிடு. நான் வரும்போது நிச்சயமே பண்ணிக்கலாம். அடுத்த முகூர்த்தத்தில் எங்க சஷ்டியப்த பூர்த்திக்கு முன்னாடி கூட கல்யாணம் நம்ம குல தெய்வம் கோவிலில் வைத்து முடித்து விடலாம்..."

"மை காட்! அம்மா, கொஞ்சம் மூச்சு வாங்கிக்கோங்க. கல்யாணம் என்பது அவசரத்தில் முடிவெடுக்கும் விஷயம் இல்லை."

"அதுக்காக அஞ்சு வருஷம் ஆறப் போடும் விஷயமும் இல்லை. எங்களைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம். அப்பா பென்ஷன் இருக்கு. வீடு இருக்கு. நாங்க பார்த்துக் கொள்வோம். இன்னும் கல்யாணத்துக்கு நாலு நாள் இருக்க. உன் மனசுக்குப் பிடிச்சு இருந்தால் அதுக்குள்ளே பேசி ஒரு நல்ல முடிவாச் சொல்லு. நான் காத்திருக்கிறேன்" என்று சொல்லி அம்மா போனை வைக்க அவனுக்கு ஒரு பக்கம் சந்தோஷமாக இருந்தாலும் மறுபக்கம் கவலையாக இருந்தது.

எங்களைப் பற்றிக் கவலைப் படாதே என்று அம்மா சொல்வது அவரின் பெருந்தன்மை. ஆனால் அதற்காக அவரை அம்போ என்று விட முடியுமா? பணத்திற்கு



அவர்கள் கஷ்டப்பட நேரிடாது. ஆனால் ஒரே மகனை வைத்து இருப்பவர்கள் கடைசிக் காலத்தை பேரன் பேத்திகளுடன் சந்தோஷமாகக் கழிக்க வேண்டும். அதை ஒரு நல்ல மகனாக அவன் கொடுக்க வேண்டும்! அவளை சந்தித்துப் பேச வேண்டும். எப்படிச் சந்திப்பது? அழகு நிலையம் சென்றால் என்ன?

"அத்தை, நானே அம்மாவிடம் ஊருக்குப் போய் பக்குவமா சொல்லணும் என்று நினைத்துக் கொண்டு இருந்த விஷயத்தை எனக்கு முன்னாடி உங்க நாத்தனாரிடம் போட்டுக் கொடுத்த உங்களுக்கு ஜே..." என்று சந்தோஷமாக அவரைக் கட்டிக் கொண்டு கொஞ்ச அவர் அவனை விலக்கி நிறுத்தினார்.

"நீ கொஞ்ச வேண்டியது என்னை இல்லை! வசந்தியை! அவள் தான் உங்க அம்மாவிடம் சொன்னாள்..."

"ஆனால் வசந்திக்கு எப்படித் தெரியும்?"

"அதை நீ அவளிடம் தான் டேக்கணும். ஆனால் முசல் பிடிக்கிற மூஞ்சியப் பார்த்தாலே தெரியாதா என்ன? நீ அவளைப் பார்க்கற பார்வையில தான் உலகமே கண்டு பிடிக்குமே? நானும் கோவிலில் பார்த்தேனே?" என்றதும் சிரித்தபடி கிளம்பினான்.

சற்று முன்பு அவள் பள்ளிக்குப் போவதாகச் சொன்னாளே? திரும்பி வந்து இருப்பாளா? திரும்பி வராமல் அங்கேயே குடி இருக்கப் போகிறாளா என்ன? நிச்சயம் வந்து இருப்பாள் என்று எண்ணியபடி பைக்கைக் கிளப்பியவன் மனதில் முதலில் அவள் ஏன் பள்ளிக்குப் போனாள் என்ற கேள்வி எழுந்தது.

தனியாக பார்லர் வைத்து இருப்பவள் எதற்கு பள்ளிக்குப் போகணும்? நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்

என்று உற்சாகமாகக் கிளம்பி வந்தபோது, அழகு நிலையம் இன்னும் திறந்து இருக்கவில்லை. கையைத் திருப்பி மணி பார்த்தான் ஒன்பதரை. பத்து மணிக்கு திறப்பாளோ?

அரை மணி நேரம் என்ன செய்வது? பைக்கை பக்க ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி யோசித்தபோது, ''என்ன அங்கிள் இங்கே இருக்கீங்க? உள்ளே வாங்க'' என்ற குரல் கேட்க திரும்பி பார்த்தவன் முகம் மலர்ந்தது.

''டேய்! ராகுல் நீ எங்கேடா இங்கே வந்தாய்?'' என்று கொஞ்சியபடி குனிந்து அவனைத் தூக்கினான்.

''இதுதான் எங்க வீடு. பாட்டி உள்ளே இருக்காங்க. வாங்க, பாட்டீஈஈஈஈஈ யார் வந்து இருக்கா பாருங்க...''

''ஏன்டா இப்படி கத்துகிறாய்?'' என்று அதட்டியபடி வந்த கற்பகம் அவனைக் கண்டதும் திகைத்தார்.

''தம்பி! நீங்களா? வாங்க வாங்க. உட்காருங்க. நீங்க எப்படி இங்கே? நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவே இல்லை. நீங்க சென்னை என்று சொன்னீங்களே? இங்கே யாரும் சொந்தக்காரங்க இருக்காங்களா? அன்னிக்கு கோவிலில் பார்க்கும்போது, நீ இந்த ஊர் என்று சொல்லவே இல்லையே?'' என்று சரளமாகப் பேசியபடி உபசரித்தார்.

''பாட்டி, உங்களுக்கு ஏதாவது ஜூஸ் குடிக்கக் கொடுங்க...''

''சோ ஸ்வீட் ராகுல் நான் இங்கே வருகிறேன் என்பது தெரியாததால உனக்கு ஒன்றுமே வாங்கி வரலை. வா உனக்கு ஸ்நாக்ஸ் ஏதாவது வாங்கி வரலாம்'' என்று அவனின் கை பற்றி எழ முயற்சி செய்ய கற்பகம் மறுத்தார்.



''இருக்கட்டும்பா. பரவாயில்லை நீ எப்படி இங்கே வந்தாய்?''

''தங்கை வசந்தியை இங்கே தான் புவனேஸ்வரி அம்மா வீட்டில் கொடுத்து இருக்கோம். தாய் மாமா வீடு தான். வருஷத்துக்கு ஒரு முறை ரெண்டு மூன்று நாள் லீவில் வருவதுதான். கடைசி அஞ்சு வருஷம் வரவே இல்லை. இப்பதான் மாமா பொண்ணுக்குக் கல்யாணம் என்று வந்தேன். நாலு நாளா இங்கே இருக்கிறேன். பக்கத்துல ப்ரியான்னு பார்லர் வச்சு இருக்காங்களே அவங்களைப் பார்க்க வந்தேன். ராகுலைப் பார்த்தேன். நீங்க இந்த ஊரிலே எவ்வளவு நாளா இருக்கீங்க?''

''நாலு வருஷம் ஆச்சு. சொந்த ஊர் சேலம் பக்கம். இப்போ பொண்ணு கூட குழந்தையைப் பார்க்க இங்கே இருக்கேன். ராகுலுக்கு ஸ்கூல் அட்மிஷனுக்கு அப்ளிகேஷன் வாங்கப் போய் இருக்கிறாள். வரும் நேரம் தான்...'' என்று இயல்பாகக் கற்பகம் சொல்ல அவன் உறைந்தான்.

''ப்ரியா... உங்க பொண்ணா?''

''ஆமா, முழு பெயர் வாணிப்ரியா. உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா தம்பி?'' என்று அவர் விசாரிக்க அவன் மௌனமாக தலை அசைத்தான்.

ராகுல் இவளின் மகனா?

ஒரு திருமணம் ஆனவள் மீதா ஆசைப் பட்டோம்!

ச்சே ச்சே... இல்லையே!? கழுத்தில் தாலி, காலில் மெட்டி, வகிட்டில் குங்குமம் எதுவும் இல்லையே? ராகுல் தந்தை இல்லாதவன் என்று கோவிலில் சொன்னானே? அவள் கணவனை இழந்தவள். அதனால் தான் வித்தியாசம் கண்டு பிடிக்க முடியவில்லை!

மேலே பேச்சை எப்படித் தொடர்வது? என்று யோசனையில் அவன் மூழ்க, 'அங்கிள், நாம் கிரிக்கெட் விளையாடலாமா? நீங்க பவுலிங் பண்ணுவீங்களா?' என்று விசாரித்தபடி வந்து அவன் கைகளுக்குள் புகுந்து மடியில் சரிந்த ராகுலை தூக்கி அணைத்து முதுகை வருடியவன் மனதில் பாசம் சுரக்க ஆரம்பித்தது.



# 9

ராகுலின் முதுகை வருடியபடி அருகே அமர்ந்து இருந்த வெற்றிவேல் குறைவாகவே பேசினாலும், அவன் சளைக்காமல் பேசிக் கொண்டு இருந்தான். பழச்சாறு கலக்க கற்பகம் உள்ளே சென்று இருந்த வேளையில் உள்ளே நுழைந்த வாணிப்ரியா ஹாலில் மகனை மடியில் இருத்தி சுவாதீனமாக அமர்ந்து இருந்த வெற்றிவேலைப் பார்த்து திகைத்தாள்.

''வாங்க சார். நீங்க... இங்கே... எங்கே?''

மகளின் குரல் கேட்டதும் வெளியே வந்த கற்பகம் ''அன்று கோவிலில் தம்பியை பார்த்தேன் என்று சொன்னபோது நீ அவரைத் தெரியும் என்று சொல்லவே இல்லையே?'' என்று கேட்க அவள் புன்னகை செய்தாள்.

''சார் பேர் அப்போ தெரியாதும்மா...'' என்று அவள் சொன்னது பொய் என்று தெரிந்ததால் அவளைக் கூர்ந்து கவனித்தான் வெற்றிவேல். ப்ரியாவைப் பற்றிய உண்மை தெரிவதற்கு முன்பு வரை வெறும் ஆர்வத்துடன் பார்த்த கண்கள் இப்போது ஆராய்ச்சியுடன் பார்த்தன.



''ஸ்கூலுக்குப் போன வேலை முடிந்ததா ப்ரியா?'' என்று நிதானமான குரலில் விசாரித்தான்.

''இன்னும் இல்லை. அப்ளிகேஷன் கொடுக்கலை. நாளைக்கு திரும்ப வரச் சொல்லி இருக்காங்க...''

''என்ன அநியாயம்? ஒரு விண்ணப்ப படிவம் கொடுக்க இப்படி இழுத்தடிக்கிறாங்க? உங்களுக்கு அந்த பள்ளியில் யாரையாவது தெரியுமா?'' என்று கற்பகம் கேட்ட பிறகே ப்ரியாவின் முகத்தில் இருந்து பார்வையை விலக்கினான்.

''இந்த பள்ளி இல்லை என்றால் வேறு ஒரு நல்ல பள்ளியில் சேர்த்து விடலாம்மா. அது ஒன்றும் பிரச்னை இல்லை'' என்று உறுதி அளித்தவன் மீண்டும் அவள் புறம் திரும்பினான்.

''பள்ளியில் என்ன கேட்டாங்க?''

''ஏற்கனவே பிப்ரவரியில் அட்மிஷன் முடித்தாச்சு என்று சொல்றாங்க.''

''நீ ஏன் அப்ப முயற்சி செய்யவில்லை?''

''முயற்சி செய்யாமல் இல்லை. ஒவ்வொரு நேரம் போகும் போதும் ஒரு ஒரு காரணம் சொல்றாங்க.''

''டொனேஷன் எதிர்பார்க்கறாங்களோ என்னவோ ப்ரியா?''

''அதுவும் ஓரளவுக்குக் கொடுக்கத் தயாராகத்தான் இருந்தேன். ஆனால்...'' என்று தடுமாறியவள் ராகுலை ஒரு முறை பார்த்துவிட்டு உதட்டைக் கடித்துப் பேச்சை நிறுத்திவிட்டாள். அவன் முன்னிலையில் பேச விரும்பவில்லை என்பது புரிந்தது.

''சரிம்மா, நான் மாலையில் ஒரு நாலு மணிக்கு வருகிறேன். இப்ப கொஞ்சம் வேலை இருக்கு...'' என்று சொல்லிவிட்டு எழுந்தான்.

''என்ன தம்பி அதுக்குள்ளே கிளம்பிட்டீங்க? நீங்க ப்ரியாவிடம் ஏதோ பேச வந்தீங்க போல...? பேசலையா?''

''சாயங்காலம் பேசிக் கொள்கிறேன்மா. ராகுல் வரட்டுமா?'' என்று மற்றவர்களிடம் வார்த்தையால் விடை பெற்றவன் அவளிடம் கண்களால் விடை பெற்றான்.

''உன்னிடம் என்னவோ பேச வந்தேன் என்று சொல்லி விட்டு இப்ப ஒண்ணுமே சொல்லாமல் கிளம்பிடுச்சே?'' என்று அம்மா யோசனையோடு இழுக்க அவள் முகத்தில் ஒரு கசந்த புன்னகை மலர்ந்தது.

''இப்பதான் என்னைப் பத்தி முழுசா தெரிஞ்சு இருக்கும் அதான் பேச வந்த விஷயம். பேசாமலேயே போய் விட்டார். மாலை வருகிறேன் என்று சொன்னது ஒரு சாக்கு. இனிமேல் வருவது கஷ்டம்'' என்று தோன்ற மனசின் ஒரு மூலையில் வலித்தது. அவளையும் மீறி ஒரு துளி கண்ணீர் தோன்றியது.

இவனும் எல்லாரையும் போல தான்! ஆனால் ஒரு விஷயத்தில் அவனைப் பாராட்டியே ஆக வேண்டும். விதவை என்றதும், பாவம் பார்க்கிறேன் பேர்வழி என்ற போர்வையில் அத்து மீறிப் பழக முயலவில்லை. உன் நிலை எனக்கு அதிர்ச்சி என்று சொல்லி விட்டான்.

கசப்பாக இருந்தாலும் உண்மையை ஜீரணிப்பதே மேல்! ஒரு பெருமூச்சுடன் தன் வேலையைப் பார்க்க அழகு நிலையத்திற்குள் சென்றாள்.

* * *



அத்தையிடம் வம்பிழுத்து விட்டு வெளியே போன அண்ணன், நிச்சயம் அவளை தான் பார்க்கப் போய் இருக்க வேண்டும் என்று வசந்திக்கு நிச்சயமாக இருந்தால், போன வேகத்தில் திரும்பி வந்த அண்ணனின் முகம் பிரகாசமாக இல்லை என்றதும் அவன் பின்னாலேயே அறைக்குள் வந்தாள்.

''என்ன போன வேகத்தில திரும்பி வந்துட்ட? பார்க்க போன ஆள் இல்லையாக்கும்? முகம் இப்படி கூம்பிப் போய் இருக்கு.''

''கொஞ்ச நேரம் கேள்வி கேட்டு தொணதொணக்காமல் தனியா விடுறியா? நான் யோசிக்கணும்...''

''என்ன யோசிக்கணும்? இந்தப் பொண்ணு வேண்டுமா வேண்டாமா என்றா?'' வசந்தியின் அந்த வெடுக் என்ற கேள்வியில் அதிர்ந்து நிமிர்ந்தான்.

''நீ என்ன சொல்ற?''

''இது ஒன்றும் சென்னை இல்லை. அங்கேயே ஒருத்தர் இல்லாவிட்டால் ஒருத்தர் கண்ணில் பட்டு விடும். இங்கே நீ என்ன செய்கிறாய் என்று கண்டு பிடிப்பதா கஷ்டம்? இப்ப உனக்கு என்ன குழப்பம்? உனக்குப் பிடித்த பொண்ணு கன்னியாக இல்லாமல் போனது ஒரு பிரச்னையா?''

''உளறாதே வசந்தி! அந்த மாதிரி எதுவும் நான் நினைக்கவில்லை.''

''நானாக ஒன்றும் கற்பனை பண்ணவில்லை. உன் வாடிய முகம் அதை சொல்லுது!'' என்றதும் அவன் முகம் கனிந்தது.

''அப்படி இல்லை வசந்த். முதல் அனுபவம் என்றால் சட்டுன்னு சொல்லி விடலாம். அடிபட்ட மனசு அவ்வளவு

சீக்கிரம் இன்னொரு வாழ்க்கையை..." என்று பாதி வாக்கியத்தில் பெருமூச்சுடன் நிறுத்த அவனின் தயக்கம் புரிந்தது.

ஐந்து வருடங்களாக அவனும் அனுபவித்த வேதனை தானே?

"அண்ணா! என்னைப் பாரு..." என்று அவன் முகத்தை நிமிர்த்தி நேராகப் பார்த்தாள். "உண்மையைச் சொல்லு. உனக்கு அந்தப் பெண்ணைப் பிடித்து இருக்கா?" என்று கேட்க அவன் ஆமோதிப்பாக தலை அசைத்தான்.

"அந்த பையனையும் சேர்த்துச் சொல்லு..."

"ராகுலை மட்டும் இல்லை, கற்பகம் அம்மாவையும் சேர்த்துச் சொல்கிறேன். பிடித்து இருக்கு. ஆனால் அவளுக்கு என்னைப் பிடித்து இருக்கா என்று தெரியணுமே?"

"பிடிச்சு இருக்கு..."

"உனக்கு எப்படித் தெரியும்? நீ அவளை நேரில் கூடப் பார்த்தது இல்லை."

"யார் சொன்னா? ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை பெருமாள் கோவிலுக்கு காலை ஆறு மணிக்கு வருவாள். இதுவரைக்கும் அவளை நான் நூறு தடவையாவது பார்த்து இருக்கிறேன். ஆனால் நேற்று கோவிலில் என்னைப் பார்த்துச் சிரித்தாள். அருகே வந்து பேசினாள். பவித்ராவைப் பற்றி விசாரித்தாள். தெரியுமா?"

"அதனால் என்ன?"

"ஹூம்! இப்பதான் அவளுக்கு என்னை அடையாளம் தெரிந்து இருக்கு. வெற்றிவேலின் தங்கையாக! புரியுதா?" என்று சொல்லிச் சிரிக்க அவன் முகம் இன்னும் யோசனையில் இருந்தது.



"இன்னும் நம்பிக்கை வரவில்லையா? உனக்காக ஒரு டெஸ்ட் வைக்கிறேன். நீயே தெரிஞ்சுக்கோ" என்று சொன்னவள் போனில் தன் தோழியான ப்ரியங்காவை அழைத்து விட்டு ஸ்பீக்கர் வகையில் வைத்தாள்.

"ப்ரியங்கா, மிருது கல்யாணத்துக்காக நிறைய விருந்தாளிகள் வந்து இருக்காங்க. அஞ்சு பேருக்கு, ப்ளீச் பேஷியல், மேக் அப் எல்லாம் பண்ணணும் மொத்தமா ஒரு ரேட் பேசி வீட்டுக்கு வந்து செய்து தருகிறாயா?" என்று விசாரித்தாள்.

"வீட்டுக்கா? கஷ்டமாச்சே வசந்தி. முதலில் சாமான் எல்லாம் மூட்டை கட்டணும். ப்ரைடல் மேக் அப் என்றால் வேறே விஷயம். அதுக்கு விலை கூடுதலா கேட்டால் தருவாங்க. மற்றவங்களுக்கு ரேட் கட்டுப்படியாகாது. நீ இங்கே வரச் சொல்லு. நான் காக்க வைக்காமல் சீக்கிரமா முடிச்சு அனுப்பி விடுகிறேன். நார்மல் ரேட்டை விட பத்து பெர்சண்ட் தள்ளுபடி போட்டு பில் போடுறேன்" என்று கறாராக பிசினஸ் பேசினாள் தோழி.

"வீட்டுல தொடர்ச்சியா வேலை இருக்கும். அதான் யோசித்தேன். நான் திரும்பி போன் பண்ணுகிறேன்" என்று இணைப்பைத் துண்டித்தாள்.

"இப்ப அவளுக்கு போடுகிறேன். அவள் என்ன சொல்கிறாள்? எப்படி பேசுகிறாள் என்று நீயே கேளு. வித்தியாசம் உனக்கே புரியும்..."

"ஹலோ... லவ்லி பார்லர்..." என்ற ப்ரியாவின் குரல் கேட்டதும் அவனையும் அறியாமல் உள்ளம் குளிர தான் செய்தது.

"வாணி, நான் வசந்தி பேசுகிறேன் பவித்ராவோட அம்மா..."

"அக்கா நீங்களா? சொல்லுங்கக்கா..." என்றவளின் குரலில் பரபரப்பு ஒட்டிக் கொண்டது வெளிப்படையாகத் தெரிந்தது.

"அடுத்த வெள்ளிக் கிழமை, என்னுடைய நாத்தனாருக்கு கல்யாணம். வீட்டுல நிறைய வேலை இருக்கு. அதனால் பார்லர் போக நேரமே கிடைக்கலை. எங்க ரெண்டு பேருக்கும், வீட்டுக்கு வந்து கொஞ்சம் ப்ளீஸ், பேஷியல் செய்து விட்டுப் போக முடியுமா?"

"ப்ரைடல் மேக் அப் நீங்க வேறே ஆளிடம் சொல்லி இருக்கீங்க தானே?" என்றவளின் குரலில் தயக்கம் இருக்க வெற்றியின் முகம் யோசனையைக் காட்டியது.

"ஆமா! அது மண்டபத்துக்கு வந்து வேறே ஆள் செய்வாங்க..."

"அப்ப சரிக்கா! எப்ப வரணும் சொல்லுங்க. பார்லரில் இருக்கும் சேர் கிடைத்தால் வேலை செய்ய வசதியா இருக்கும். நீங்க ஒரு வண்டி அனுப்பினால் சேரையும் எடுத்து வரலாம். வண்டி அனுப்ப முடியுமா?"

"நிச்சயமா முடியும். நீ ரேட் பேசலையே?"

"ரேட் என்னக்கா ரேட்? பார்த்துக்கலாம். பத்தில் இருந்து ஆறு இங்கே ஆள் வருவாங்க அக்கா. கடையை மூடினால் சரி வராது. அதுக்கு அப்புறம் நீங்க சொல்ற டைம் எதுவா இருந்தாலும் ஓ.கே. எப்ப வரட்டும் சொல்லுங்க...?" என்றவளின் குரலில் உண்மையான அக்கறையும் அன்பும் இருந்தது.

"ஏழு மணிக்கு வருகிறாயா? அதற்குள் நானும் இரவு சாப்பாட்டு வேலையை முடித்து விடுவேன்."



"சரிக்கா, ஏழு மணிக்கு வந்து விடுகிறேன்" என்று உறுதி அளிக்க புன்னகையுடன் போனை வைத்த வசந்தி அவனைப் பார்த்தாள்.

"இப்ப என்ன சொல்கிறாய்?" என்று போனை வைத்து விட்டு அண்ணனைப் பார்த்து புருவம் உயர்த்தினாள்.

"நான் என்ன சொல்றது? அவள் வேலை இல்லாமல் காஞ்சு போய் இருக்கிறாள். அதான் நீ கேட்டதும் உடனே வரேன் என்று சொல்லிட்டாள்" என்றவனை முறைத்தாள்.

"அப்ப காசு பெரிசு இல்லை என்று சொன்னது..."

"அவளுக்கு வேலை தெரியாது. உங்களிடம் தான் கற்றுக் கொள்ளப் போகிறாள்."

"டேய்! என்ன நக்கலா?"

"ஆமா! தனக்கு நல்லா வேலை தெரியும் என்ற நம்பிக்கை இருந்தால், ப்ரைடல் மேக் அப் நானே செய்கிறேன் என்று சொல்லி இருக்க மாட்டாளா?"

"லூசு... அது அப்படி இல்லை. பல விசேஷ வீடுகளில் ஒவ்வொருத்தரும் ஏதாவது சொல்லிச் சொல்லி கடிச்சு இருப்பாங்க. அதனால் அவள் அப்படிச் சொல்லி இருக்கலாம்..." என்று விளக்கம் சொல்ல ஆரம்பித்தவள் அண்ணன் கண்களில் ரசனையைக் கண்டதும் பேச்சை நிறுத்தினாள்.

"நீ உன் ஆளைப் பற்றிய கதை கேட்க நான் தான் கிடைத்தேனா? போடா...!" என்று கிளம்ப முயற்சி செய்ய அவளின் கையைப் பற்றி அமர வைத்தான்.

"வசு... வசு... உட்கார். அஞ்சு நிமிஷம் ப்ளீஸ்..." என்று கை பிடித்து அமர்த்தினான்.

''நான் அம்மாவுக்கு சொல்றதுக்கு முன்னாடியே அவங்களுக்கு நியூஸ் போய் இருக்கே? எப்படி அதைச் சொல்லிட்டுப் போ.''

''எங்க அண்ணன் ஒரு பெண்ணைப் பார்த்து அங்கங்கே நின்னு பேசிச் சிரிக்கிறான் என்றால் என்ன விஷயம் என்று விசாரிக்க மாட்டேனா? நான் தான் ரொம்ப நல்ல பொண்ணு என்று அம்மாவுக்குச் சொன்னேன்.''

''அதெப்படி உனக்குத் தெரியும்?''

''தெரியும் விசாரித்தேன்...''

''யாரிடம்?''

''சின்ன பொண்ணு சொன்னாள்'' என்று சொல்லும் போதே அவளின் குரல் கனிந்து பெருமிதம் மிளிர்ந்தது.

''அவளா...? அவள் என்ன சொன்னாள்? அவளை எதுவும் வெளியே சொல்ல வேண்டாம் என்று சொல்லி வைத்து இருந்தோமே.''

''என்னிடம் சொல்லவில்லை. அவள் அம்மாவிடம் சொல்லி இருக்கிறாள் சரஸ்வதி என்னிடம் சொன்னாங்க. 'எல்லோருக்கும் நல்லது நினைக்கும் அந்த பொண்ணுக்கு ஒரு நல்லது நடக்கணும்மா' என்று மனசு கசிஞ்சு என்னிடம் சொன்னாங்க. நானும் பவித்ர அப்பா மூலமா விசாரித்தேன். ரொம்ப கஷ்டப்பட்ட ஜீவனடா! இனியாவது ஒரு நல்ல வாழ்க்கை அமையட்டும் என்று நினைத்தேன். அது நம் வீடா இருந்தால் சந்தோஷப்படுவேன் வெற்றி...''

''முதல் கல்யாணம் என்ன ஆச்சு?'' என்று விசாரிக்கும் போதே குரல் தடுமாறியது.



''நீங்க அதை எல்லாம் பேசிக்கவே இல்லையா?''

''இல்லை. அந்த விஷயமே எனக்கு இப்பதான் கொஞ்ச நேரம் முன்பு தான் தெரியும்...''

''ஓ!''

''என்ன ஓ? பதில் சொல்லு வசந்தி.''

''சொல்றேன் சொல்றேன். திட்டமிட்டு ஏமாற்றிக் கல்யாணம் செய்த கையோடு, மூன்றாவது மாசம் அவளைத் துரத்தி விட்டுட்டாங்க. அடுத்த ரெண்டாவது மாசமே அவன் காலி. இப்ப அவளை என்ன சொல்வது? அவளை விதவை என்று சொல்வதா? விவாகரத்து பெற்றவள் என்று சொல்வதா? என்று யோசித்துக் கொண்டு இருக்கிறேன்.''

''ரெண்டும் வேண்டாம். என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள, முதல் கல்யாணத்தினால் அவளுக்கு இப்போ சட்ட ரீதியா சிக்கல் இருக்கா என்பதைத் தெரிந்து கொள்ள தான் இந்த கேள்வி. இல்லை என்று சொல்லி விட்டாய். மிச்சத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று சொன்ன வெற்றிவேலின் கண்களில் நம்பிக்கை சுடர் விட்டது.

* * *

அன்று மாலை ஆறரை மணி அளவில் அவளின் அழகு நிலைய கதவை தட்டப்பட, திறந்து பார்த்தவள், கை நிறைய இனிப்புகளுடன் ராகுலுக்கு ஒரு கிரிக்கெட் பேட்டுடன் அவன் புன்னகையோடு நின்று இருந்ததைப் பார்த்ததும் வாணிப்ரியாவிற்கு ஒரு வினாடி மூச்சு நின்று போனது.

''வாங்க...'' என்று தயக்கத்தோடு சொல்ல முற்பட்டவளின் வாயில் இருந்து சப்தம் வெளிப்படவில்லை.

''கஸ்டமர் இருந்தால் நீ பாரு. வசந்தி உன்னை வீட்டுக்கு அழைத்து வரச் சொல்லி அனுப்பினாள். நீ கிளம்பும் வரை வீட்டில் ராகுலுடன் விளையாடிக் கொண்டு இருக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் பக்கக் கதவின் மூலம் வீட்டுக்குள் செல்ல அவனைப் பார்த்தபடியே சில வினாடிகள் திகைத்து நின்றாள்.

பத்தே நிமிடத்தில் இருந்தவர்களை வழி அனுப்பிய கையோடு ஷட்டரை இழுத்து மூடி விட்டு வீட்டுக்குள் நுழைந்தவளின் இதயத் துடிப்பு அவள் காதுகளில் ஒலித்தது.

''அங்கிள்! இடது கையிலேயே கவர் டிரைவ் சூப்பரா அடிக்கிறீங்க. இது கிரவுண்டா இருந்தால் செமையா இருக்கும்'' என்று உற்சாகமாக கதை அளந்து கொண்டு இருந்த மகனின் குரல் கேட்டு நெஞ்சம் விம்மியது. பெருமூச்சு ஒன்றை வெளியேற்றி அவள் உள்ளே செல்ல, கற்பகம் எழுந்தார்.

''அம்மா வந்தாச்சு. சீக்கிரம் எழுந்திரிங்க கிளம்பலாம். உங்க வீட்டு மொட்டை மாடிக்குப் போய் பட்டம் விடலாம் வாங்க...'' என்று அவனின் கை பிடித்து ஆர்வத்துடன் இழுத்த ராகுலை சங்கடமாகப் பார்த்தாள் வாணிப்ரியா.

''ராகுல் நீ பாட்டியிடம் இரு. அம்மா சீக்கிரம் வந்து விடுவேன்...'' என்று ஆரம்பிக்கும் முன்பே மறுப்பாக தலை அசைத்தான் வெற்றிவேல்.

''இல்லை ப்ரியா. அவனும் நம்முடன் வரட்டும். எப்படியும் கார் உன்னைக் கொண்டு வந்து விடப் போகிறது. நீயும் அங்கேயே இருக்கப் போகிறாய். வரும் போது கூட்டி வந்து விடு. இங்கே தனியா இருப்பதை



விட பவியுடன் கொஞ்ச நேரம் சந்தோஷமா விளையாடட்டுமே!'' என்று சொல்ல அவள் சங்கடமாக தலை அசைத்தாள்.

அவன் திரும்பி வருவான் என்றே எதிர்பார்க்கவில்லை. வரும்போது குழந்தைக்கு இனிப்புடன், பரிசுகளும் வாங்கி வந்து இருக்கிறான். இப்போது சொந்தக் குழந்தை போல இவ்வளவு நேரம் விளையாடி இருக்கிறான். இதற்கும் மேலாக அவனின் தனிமையைப் பற்றியும் விளையாட்டுத் துணை பற்றிக் கவலைப் படுகிறான் என்ற செய்தி மனதிற்குள் இனிமை பரப்பினாலும் பழைய கசப்பான அனுபவங்கள் அவளைப் பயமுறுத்த அவள் தடுமாறினாள்.

வெற்றிவேலுடன் ராகுல் சுவாதீனமாக முன் சீட்டில் அமர்ந்து கொள்ள அவள் பின்னால் அமர்ந்து இருந்தாள். அவள் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அமர்ந்து இருக்க, ராகுலுடன் பேசிக் கொண்டு இருந்த வெற்றிவேல் அவளைப் பேச வைப்பதற்கான தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

சுவையான உணவு, சுற்றிலும் ஓடி விளையாட இடம், சேர்ந்து விளையாட பவித்ராவுடன் வெற்றிவேல். அடுத்த மூன்று மணி நேரம் பொழுது மிக மிக இனிமையாக கழிய ஆடிய வேகத்தில், வேலை முடித்து வீட்டுக்கு அம்மாவுடன் திரும்பி வரும்போது காரில் ஏறிய வினாடியே தூங்கி விட்டான் ராகுல்.

''முன்னாடி வந்து உட்கார்ந்து குழந்தையை மடியில் வச்சுக்க ப்ரியா...'' என்று தெருமுனை திரும்பிய உடனே வண்டியை ஓரம் கட்டி நிறுத்திய வெற்றிவேல் அவளை அழைத்தான். தயக்கத்துடன் முன்னே வந்து அமர்ந்தவளை, திரும்பித் தீர்க்கமாகப் பார்த்தான்.

''என்ன பார்க்கறீங்க?'' என்று கேட்டவளின் குரலில் சங்கடம் இருந்தது.

''உன்னிடம் நிறையப் பேசணும் இப்ப பேசலாமா வேண்டாமா என்று யோசிக்கிறேன்.''

''போயிட்டே பேசலாமே?''

''உங்க வீட்டுக்குப் போக அஞ்சு நிமிஷம் ஆகுமா? ஊர்ந்து போனால் கூட எட்டு நிமிஷத்தில் போய் விடலாம் அதற்குள் பேசி முடிக்கும் விஷயம் இல்லை' என்றவன் இருக்கயை பின்னால் தள்ளி சரிந்து அமர்ந்தான்.

''என்னுடன் தனியாக இந்த நேரத்தில் வருவதற்கு உனக்குப் பயமா இல்லையா ப்ரியா...?'' என்று கேட்க அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

''உங்களிடம் எனக்கென்ன பயம்?''

''தைரியசாலி தான். நான் என்ன வேலை பார்க்கிறேன் தெரியுமா?'' என்று கேட்டதும் அவள் புன்னகை செய்தாள்.

''தெரியும்...''

''அப்படியுமா பயம் வரலை...?''

''இல்லை...'' என்று அழுத்தமாகச் சொன்னவள், குரலில் இப்போது சின்ன சிரிப்பே இருந்தது.

அதுவரை இருந்த சங்கடம் நீங்க இருக்கையில் நன்றாக சரிந்து அமர்ந்து, ராகுலை தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

''ஏன்... அப்படி என்ன என் மேல் நம்பிக்கை?''

''நாலு நாளைக்கு முன்னாடி சின்ன பொண்ணு சமாச் சாரத்தில் உதவி கேட்க நம்பிக்கை இருந்தது என்றால்



இன்னிக்கு நம்பிக்கை இருப்பதில் என்ன ஆச்சரியம்? உடல் வலிமையினால் பெண்ணை அடக்கி ஆள நினைப்பவர்கள் யாரும் குழந்தை ஒன்றை வலிய கூட்டிட்டு வரமாட்டாங்க. என்னுடைய பயம் இந்த ஊர் மக்களின் வாயைப் பார்த்தது தானே தவிர உங்களிடம் இல்லை. ஜோக் அடிக்காமல் வண்டியைக் கிளப்புங்க சார். போகலாம்...'' என்று நிதானமாக சொன்னவளைப் பார்த்து ரசித்துப் புன்னகை செய்த வெற்றிவேலுக்கு காரை கிளப்பும் உத்தேசமே இல்லை.



# 10

வசந்தியின் கோரிக்கையை ஏற்று, அவளின் வீட்டுக்கு வந்து அவர்கள் இருவருக்குமான அழகு படுத்தும் வேலையை முடித்து, ராகுலுடன் வீட்டுக்குக் கிளம்பும் வேளையில் வெற்றிவேல் வரக்கூடும் என்பதை எதிர்பார்த்தாள் வாணிப்ரியா. ஆனால் கொஞ்ச தூரம் போனதும் அவன் காரை நிறுத்தக் கூடும் என்று எதிர்பார்க்கவில்லை.

ஒரு நிமிடம் இரண்டு நிமிடம் ஐந்து நிமிடமான பிறகு ''என்ன சார் கிளம்பலையா?'' என்று மீண்டும் நினைவு படுத்தினாள். அதுவரை அவளிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்ற யோசனையில் இருந்த வெற்றிவேல் உணர்வுக்கு வந்து நிமிர்ந்து அமர்ந்தான்.

''ம்ம், கிளம்பலாம். அதுக்கு முன்னாடி உன்னை ஒன்று கேட்கணும். என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

என்ற அந்த நேரடி கேள்வியில் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அங்கே சுத்தி இங்கே சுத்தி விஷயத்திற்கு வந்து விட்டான். என்ன பதில் சொல்வது? அப்போதைக்கு மௌனத்தையே குத்தகைக்கு எடுத்தாள் ப்ரியா.

''இந்த நாலு நாளா, சிறிதாகவோ பெரிதாகவோ வேறே வேறே இடத்தில் எங்களுக்கு உதவி செய்து வந்து இருக்கிறாய். அதுக்கு நன்றி சொல்லணும். அது மட்டும் இல்லாமல்... அதையும் தாண்டி... எப்படிச் சொல்றது? எனக்கு என்ன வயசு இருக்கும் எனறு நினைக் கிறாய்?'' என்று மீண்டும் எங்கெங்கோ சுற்றி கேள்வியில் வந்து நின்றான்.

''என்ன திடீர் என்று இப்படிக் கேட்கறீங்க?''

''கேட்டு விட்டேன் இல்லையா? பதில் சொல்லேன்...''

''வசந்தி உங்களின் தங்கை என்றால், உங்களுக்கு முப்பது வயது இருக்கலாம்...''

''ம்ம், வரும் ஜனவரியில் முப்பது முடியப் போகுது. அடுத்து இன்னொரு கேள்வி உன் மனசில் வரணுமே?'' என்றவன் கேள்வியில் எதிர்பார்ப்பு இருந்தது.

வண்டிக்குள் எரிந்த சின்ன விளக்கும் தெருவில் தெரிந்த மங்கலான வெளிச்சமும் அவளின் முகத்தை ஓரளவிற்குத் தெளிவாகவே காட்டியது. லேசாக சிவந்து இருந்தது. அவளின் மனதில் இருந்த கேள்வியை தான் கண்டு பிடித்து விட்டதால் வந்த கூச்சம் அது.

''நீங்க ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ள வில்லை?'' என்று அவள் கேட்டதும் கசப்புடன் சிரித்தான்.

''கல்யாணம் பண்ணிக் கொள்ள பரஸ்பரம் மனசுக்குப் பிடித்த ஆண் பெண் இருவர் வேண்டுமே? ஒருவரால்



கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்பது என் கருத்து.''

''ஏன் உங்களுக்குப் பிடித்த மாதிரி யாரும் கிடைக் கலையா? பிள்ளையார் மாதிரி அம்மா மாதிரி பொண்ணு வேண்டும் என்று காத்திருக்கிறீங்களா?''

''பிள்ளையார் மாதிரி என்று சொல்லாதே! அவர் பிரம்மசாரி இல்லையா?''

''இல்லையே! வட இந்தியாவில் அவருக்கு சித்தி புத்தி என்று இரண்டு மனைவிகள் இருப்பதாகச் சொல் றாங்க அவர் ஒன்றும் பிரம்மச்சாரி இல்லை...''

''அப்ப சரி. ஆனால் என் காத்திருப்பு வீண் போக வில்லை. எனக்குப் பிடித்த மாதிரி ஒரு ஆளை. இப்ப தான் இரண்டு நாட்களுக்கு முன்பு கண்டு பிடித்து விட் டேன்...'' என்று சொன்னவனின் கண்களில் மின்னல் வெட்டியது.

''நான் கேட்டது இத்தனை நாள் ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்று?''

''தெனாலிராமன் பூனை வளர்த்த கதை தெரியுமா உனக்கு?''

''நான் கேட்டதற்கும், இதற்கும் என்ன சம்பந்தம்?''

''அந்த பூனை மாதிரி தான் நானும் ஆகி விட்டேன். ஒரு தடவை சூடான பாலில் வாயை வைத்துப் பொத்து போன மனசு மீண்டும் பாலைத் தொட அஞ்சியது. ஒரு நாள் இல்லை இரண்டு நாள் இல்லை. ஐந்து ஆண்டுகள்...'' என்ற அவனின் விரக்தியான குரலில் பதறினாள்.

இவனும் என் ஜாதி! இவனுக்கும் திருமணம் தந்த வலி இருக்கிறதா? பெண்கள் என்றால் வாய் விட்டு

அழக்கூடும். சில சமயம் அது மனதளவில் ஒரு நிம்மதியைக் கொடுக்கும். ஆண்கள் என்றால் அழவும் முடியாது. மனதிற்குள் பூட்டி வைத்து புரையேறிப் போன புண்ணாகி இருக்குமோ?

அந்த வினாடியில் அவள் தன்னை விட, தன் வேதனையை விட, அவனுடைய சிரமத்தைக் கூடுதலாக உணர்ந்தாள்.

"என்ன ஆச்சு...? துக்கம் என்று மனசில் அடக்கி வைத்து இருப்பதை யாரிடமாவது பகிர்ந்து கொண்டால் உங்களுக்கு மனசுக்கு இதமாக இருக்கும் துக்கம் பாதி யாகக் குறையும் என்று நீங்க கேள்விப் பட்டதில்லையா? என்னிடம் சொல்லலாம் என்றால் சொல்லுங்க" என்று மென்மையான வருடும் குரலில் சொன்னவள் அவன் புறம் திரும்பியும் அமர்ந்தாள்.

* * *

ஒரு பெருமூச்சுடன் அவன் இருட்டை வெறித்தபடி பேச ஆரம்பித்தான். ஐந்து ஆண்டுகள் முன்பு, நான் அப்போது தான் திரை உலகில் கால் எடுத்து வைக்க முயன்று கொண்டு இருந்தேன். அப்ப சான்ஸ் கிடைக்க வில்லை என்பதால் வரவு இல்லாமல் செலவாகிக் கொண்டு இருந்த நேரம்.

இப்ப இருப்பதைப் போல வசதி அப்ப இல்லை. அரசு உத்தியோகத்தில் கிடைக்கும் சம்பளத்தில் சிக்கனமாகக் குடித்தனம் நடத்தும் அம்மா, வசந்திக்குத் திருமணம் முடித்ததால் வந்த கூடுதல் செலவு, என்று கஷ்டமான நேரம்.

'வைகறை வேளையில்...' என்ற படத்தில் முதன் முதலாக சண்டை பயிற்சியாளராக வாய்ப்பு கிடைத்தது.



அந்த சந்தோஷத்தை எங்க அம்மா கண்ணில் கண்ட அனைவரிடமும் பகிர்ந்து கொண்டார்கள். அப்போது சரண்யாவை எனக்குப் பெண் பார்த்தார்கள். அவள் ஒரு டான்சர்..."

"ஓ! அவங்களும் திரைப்படத் துறையில் இருந்தாங் களா?"

"இல்லை. நாட்டியப் பள்ளி வைத்து நடத்திக் கொண்டு இருந்தாள். சினிமாவில் நடிக்கும் கனவுகளுடன் அவள் இருந்து இருக்க வேண்டும். அது அப்போது எனக்குத் தெரியாது. அவள் வீட்டில் பேசி முடிவு பண்ணினார்கள். நானும் பட வாய்ப்பு கிடைத்து விட்டதால் சந்தோஷ மாகவே சம்மதம் சொன்னேன். திருமணம் நடப்பதற்கு மூன்று நாட்கள் முன்பு படபிடிப்புத் தளத்திற்கு அவள் வந்து இருந்தாள். அங்கே தான் அவளுக்கு நான் சண்டை பயிற்சியாளர் என்ற விபரம் தெரிந்தது போல..." என்று கசந்த குரலில் சொன்னவனால் அன்றைய நினைவில் தொடர்ந்து பேச முடியவில்லை.

"கல்யாண ஏற்பாடுகள் நடக்கும்போது அது தெரிய வில்லையா?"

"ப்ச்!...." என்ற சப்தம் மட்டுமே வந்தது.

"சரி அதனால் என்ன? சண்டை பயிற்சியாளர் என்பது ஒரு கௌரவமான தொழில் இல்லையா?"

"........"

"கல்யாணம் நடந்ததா இல்லையா?"

ஒரு பெருமூச்சை வெளியேற்றியவன் மறுப்பாக தலை அசைத்தான். அவன் கண்களில் ஈரம் இருந்ததா?"

"வெற்றி..." அவள் கரம் நீண்டு அவனின் தோளைத் தொட்டு அழுத்தியது.

"ம்ம்ம்..." என்று சொன்னவன் பேண்ட் பாக்கட்டில் இருந்து கைக்குட்டை எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்து விட்டு நிமிர்ந்து அமர்ந்து புன்னகை செய்தான்.

"அவள் என்னை ஹீரோ என்று நினைத்தாளாம்! கேவலம் ஒரு சண்டை பயிற்சியாளரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் அளவுக்கு அவள் தரம் தாழ்ந்து விடவில்லையாம். இந்தக் கல்யாணம் நின்றாலும் பரவாயில்லை என்று அவள் முடிவெடுத்து விட்டவளுக்குச் சங்கடமே இல்லை. ஆனால் கல்யாணம் ஏன் நின்றது என்று கேட்பவர்களுக்கு எங்களால் பதில் சொல்ல முடியவில்லை. அதே முகூர்த்தத்தில் நான் ஜாம் ஜாம் என்று கல்யாணம் நடத்திக் காட்டுகிறேன் என்று புவனேஸ்வரி அத்தை சூளுரைத்தார்கள். வயது வித்தியாசம் இருந்தாலும் பரவாயில்லை. மிருதுளாவைக் கல்யாணம் பண்ணித் தரத் தயாராக இருந்தார்கள்..."

"மிருதுளாவையா...?" என்று கேட்கும் போதே மனசில் சங்கடம் பரவ, அந்தக் குரலில் தெரிந்த பாவனையைத் துல்லியமாக உணர்ந்தவனின் முகத்தில் புன்னகை பூத்தது.

"நான் பார்க்க வளர்ந்த சின்னப் பெண். முடியாது என்று சொல்லி விட்டேன். அதன் பிறகு, கல்யாணம் பண்ணிக்கோ என்று சொல்லிச் சொல்லி எங்க அம்மா அலுத்துப் போய் விட்டார்கள். எனக்கு அதில் ஆர்வம் இல்லாமல் இருந்தது. மிருதுளா கல்யாணத்திற்காக சோழவந்தான் வரும் வரையில்..." என்று சொல்லி நிறுத்தினான் வெற்றிவேல்.

சில நிமிடங்களுக்கு முன்பு அலையடித்த சோகம் காணாமல் போய், அவனின் முகத்தில் இப்போது



சந்தோஷ மின்னல் வந்து இருந்தது. அந்தப் புன்னகை அவளின் முகத்திலும் எதிரொலித்தது.

"மணியாச்சு. போகலாமா?"

"இன்னும் பேசி முடிக்கலையே ப்ரியா...?"

"நீங்களே கொஞ்ச நேரம் முன்பு சொன்ன மாதிரி காரில் ஊர்ந்து போனால் எட்டு நிமிஷத்தில் போய் விடக் கூடிய தூரத்தை நாம் பதினைந்து நிமிடம் தாண்டியும் சென்றடையவில்லை என்றால் எப்படி?" என்று கேலியாகக் கேட்க அவன் ஆமோதிப்பாகத் தலை அசைத்தான்.

"உண்மை தான்... ஆனால் உன்னையும் என்னையும் இப்போ வீட்டில் தேடும் ஆட்கள் இல்லை என்பது என் ஊகம்..." என்று அவன் சொல்ல அவள் அமைதியாக இருந்தாள்.

'கஷ்டமான நினைவுகளைப் பகிர்ந்து கொண்டால் சோகம் பாதியாகும் என்று சொன்னது எனக்கு மட்டும் தானா ப்ரியா? அது உனக்குப் பொருந்தாதா?' என்று மெல்ல அவளைப் பேச வைக்கத் தூண்டினான். இப்போது இருளை வெறிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட ப்ரியா தலையை ஜன்னல் கண்ணாடியில் சரித்து வெளியே வெறித்தாள்.

"ராகுல் அப்பா இப்ப இல்லை என்று கேள்விப் பட்டேன். எப்படி இறந்தார்...?"

"ப்ச்! நுரையீரல் புற்றுநோய் ஊரில் இருக்கும் கெட்ட பழக்கங்கள் அதனையும் குத்தகைக்கு எடுத்தால் நோய் வராமல் என்ன செய்யும்?"

''எப்படி அந்த மாதிரி ஒரு மாப்பிள்ளையை... உங்க அம்மா அப்பா...'' என்று அவன் ஆரம்பிக்க அவள் வெடுக் என்று திரும்பினாள்.

''ஒரு நாளைக்கு நம் மனசை உடைக்க ஒரு சோகக் கதை போதாதா? பழசைப் பற்றிப் பேசி என்ன சாதிக்கப் போகிறோம். அவரின் மரணத்திற்குப் போன என்னை, பணம் பறிக்க வந்த ஆளாக நினைத்து அங்கே நிற்க விடாமல் துரத்தி விட்ட அந்த பெரிய மனிதர்களைப் பற்றி நாம் பேசுவதை விட பேசாமல் இருப்பதே நல்லது. எல்லாம் தலை விதி! அவ்வளவுதான். இதில் யாரைக் குற்றம் சொல்ல? கிளம்பலாமா ப்ளீஸ்...''

''ஓகே! முடிந்து போன ஒன்றுக்காக நாம் நம்முடைய நிகழ்கால சந்தோஷத்தை இழப்பதில் எனக்கும் சம்மதம் இல்லை தான். ஆனால் ஒரு தடவை என்ன நடந்தது என்று பேசித் தீர்த்துக் கொள்ளலாமே என்று நினைத்தேன். உனக்கு இஷ்டம் இல்லை என்றால் விட்டு விடு...'' என்று சொன்னபடி காரைக் கிளப்ப அவள் நன்றியுடன் அவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

''கடந்த காலத்தை மறந்து விட்டு எதிர்காலத்தைப் பற்றி பேசலாமே? காலையில் ராகுல் பள்ளியில் சேர்ப்பதற்கு பிறப்புச் சான்றிதழ் கேட்டாங்க என்று சொன்னேனே? அது குறித்து நீங்க யாரிடமாவது பேசினீங்களா?'' என்று கேட்க அவன் புன்னகையுடன் திரும்பிப் பார்த்தான்.

''ம்ம்ம்... அப்பாவிடம் சொல்லி இருக்கிறேன்...''

''அவங்க அரசு பதவியில் இருந்து ஓய்வு பெற்றவர் என்று சொல்லி இருக்காங்களே...? அவங்க பிறப்பு



சான்றிதழுக்கு ஏற்பாடு பண்ணி விடுவாங்களா?'' என்று ஆர்வத்துடன் கேட்க அவன் தலை அசைத்தான்.

''ஒரு விண்ணப்பம் எழுதி உன் கையெழுத்து போட்டுக் கொடு. அதை கூரியரில் அனுப்பி வைக்கிறேன் ரெண்டு நாளில் பிறப்பு சான்றுக்கு ஏற்பாடு பண்ணி தருகிறேன் என்று சொன்னாங்க...''

''ரெண்டே நாளில் முடிந்து விடுமா? பரவாயில்லையே?''

''நீ சந்தேகமா கேட்டதைப் பார்த்ததும் எனக்கு இன்னொன்னு தோணுது. விண்ணப்பத்துடன் இன்னொரு வெள்ளை பேப்பரிலும் கையெழுத்து போட்டு கொடு. அரசு அலுவலகத்தில் இது சொத்தை இது சொள்ளை என்று குற்றம் கண்டு பிடிக்க நூறு கேள்விகள் வரும். அதை வைத்து அப்பா சமாளித்து கொள்வார். என்னை நம்பி வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டு தரலாம் இல்லையா?'' என்று கேட்க அவள் சிரித்தாள்.

''உங்களை நம்பாமல் வேறு யாரை நம்பப் போகிறேன் சொல்லுங்க. என் உயிருக்கு மேலான பையன் உயிரை ஆபத்தில் இருந்து காப்பாற்றி தந்து இருக்கீங்க. என்னிடம் இருக்கும் எதையும் உங்களுக்காக நான் விருப்பத்துடன் தரத் தயாராக இருக்கிறேன்...'' என்று சொல்லும்போது அவன் கண்ணில் ஒரு மின்னல் வெட்டியதை கவனித்தாள். ஒரு கணம் சிவந்த முகத்தை உடனே சீர் செய்து பேச்சை இயல்பாகத் தொடர்ந்தாள்.

''நீங்க என்னை ஏமாற்றனும் என்ற நினைத்தால் கூட என்னிடம் பெரிதாக சொத்து சுகம் எதுவும் இல்லை. படிப்பு தொழில், உலகத்தில் நேர்மையா வாழனும் என்ற நம்பிக்கை, இது தான் என்னுடைய சொத்து இந்த

சொத்துக்களை எந்த பேப்பரும் கையெழுத்தும் என்னிடம் இருந்து பிரிக்க முடியாது. இப்பவே கையெழுத்து போட்டுத் தருகிறேன். பேப்பர் இருக்கா?'' என்று சவால் விட அவன் ரசனையுடன் பார்த்தான்.

''இந்த நம்பிக்கை தான் மனிதனை தலை நிமிர்ந்து வாழ வைக்கும். கட்டு சோற்று மூட்டை எத்தனை நாளைக்கு உடன் வரும் என்று சொல்லு பார்க்கலாம். சோ என்னை நம்பி, மூன்று பேப்பரில் கையெழுத்துப் போட்டு கொடு'' என்று டேஷ் போர்டில் இருந்து பேப்பர் பேனா எடுத்துக் கொடுக்க அவள் சிரித்தாள்.

''எல்லாம் தயாரா வச்சு இருக்கீங்க போல?''

''ஆமா! நீ கேட்க மறந்து இருந்தாலும் உன்னை வீட்டில் விட்டு விட்டுத் திரும்பும் போது நானே பேச்சை ஆரம்பித்து இருப்பேன்'' என்று அவன் சொன்ன தொனியில் அவளுக்கு இதயம் உருகியது.

''ரொம்ப தேங்க்ஸ்... சார்...''

''கொஞ்ச நேரம் முன்னாடி வெற்றி என்று சொன்ன மாதிரி இருந்ததே?'' என்று அவன் தலை சாய்த்து கேட்ட போது வீடு வந்து இருந்தது.

அவன் கேட்ட கேள்வி காதில் விழாத பாவனையில், ''இப்ப லிப்டுக்கு தேங்க்ஸ் குட் நைட்'' என்று சொல்லியபடி இறங்க முயன்றவளை அவனின் சிரிப்பு சப்தம் தடுத்து நிறுத்தியது.

''குட்! இப்ப உஷாரா சார் காணாமல் போய் விட்டதே?'' என்று கேலியாகச் சொல்ல அவளும் முறுவலித்தாள்.

''பதிலே சொல்லாமல் சமாளிக்க உன்னிடம் தான் கற்றுக் கொள்ளணும்...'' என்று சொன்னபடி அவள் பார்லரில்



இருந்து கொண்டு வந்து இருந்த நாற்காலியை காரில் இருந்து இறக்கினான்.

''இதை நீங்க ஞாபகமா எடுத்து வைத்தீங்களா? நான் சாப்பிடும்போது நினைத்தேன். அப்புறம் மறந்து விட்டேன். மறுபடியும் தேங்க்ஸ்...'' என்று சொல்லி விட்டு வீட்டு அழைப்பு மணியை அழுத்தினாள் ப்ரியா.

''இன்னும் எத்தனை தேங்க்ஸ் வச்சு இருக்கியோ மொத்தமா எல்லாத்தையும் கொடுத்து விடு கேட்டுக் கேட்டு காதே புளிச்சுப் போச்சு...'' என்று பொய்யாக சலித்துக் கொள்ள அவள் சிரித்தாள்.

''இன்னும் ஒரு தேங்க்ஸ் இன்றைய கோட்டா பாக்கி இருக்கு...'' என்று சொல்லும்போது கதவு திறந்தது.

''வா வாணி, வேலை முடிய இவ்வளவு நேரமாகி விட்டதா? குழந்தை தூங்கி விட்டானா?'' என்றபடி அவள் கையில் இருந்த குழந்தையை வாங்கினார்.

''ஆமாம்மா! படுக்க வையுங்க இந்த சேரை நான் பார்லரில் போட்டு விட்டு வருகிறேன்...''

''தம்பி தண்ணி ஏதாவது வேண்டுமா...?'' என்று வெற்றிவேலை கேட்க அவன் மறுத்தான்.

''இல்லைம்மா! சாப்பிட்டு விட்டு தான் கிளம்பினோம். அஞ்சு நிமிஷத்தில் வீடு. ஒன்றும் வேண்டாம்.''

கற்பகம் உள்ளே சென்று விட பார்லரில் சேரை வைத்து விட்டுத் திரும்பியவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனின் பார்வையும் அவள் முகத்தில் நிலைத்து இருக்க, சில கணங்கள் அமைதியில் கழிந்தது.

கடைசியாக தனிமையில் செலவு பண்ணிய அந்த இருபது நிமிடங்கள், ஏற்கனவே மனதிற்குள் அவனுடன்

இருந்த நெருக்கத்தை மேலும் அதிகப்படுத்தி இருக்க, அதை வெளிப்படுத்தவும் முடியாமல் மறைக்கவும் தெரியாமல் தடுமாறிய வாணிப்ரியா, ''குட்நைட்'' என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

அதற்கு பதில் சொல்லாமல், ''நாளைக்கு அதிசயம் தீம் பார்க் போவதை பற்றி வசந்தி சொன்னாளா?'' என்று கேட்டான் வெற்றிவேல்.

''சொன்னாங்க. ஆனால்... நான்...'' என்று அவள் மறுப்பாகப் பேச ஆரம்பிக்கும்போது ஒற்றை விரலை தன் உதட்டில் வைத்து, ''ஷ்...!'' என்று குழந்தையிடம் சொல்வது மாதிரி மிரட்டினான்.

''நான் உன்னிடம் பேசணும். நாம் இருவரும் தனியாக போகப் போவதில்லை. வசந்தி, ரகு, பவித்ரா என்று ஒரு கூட்டமே வருது பயப்படாமல் கிளம்பி ரெடியா இரு. ஒன்பது மணிக்கு பார்க்கலாம். பை குட்நைட்...'' என்று தீர்மானமாகச் சொல்லி விட்டுக் கிளம்பியவன் கண்ணை விட்டு மறைந்த பிறகும், அவன் சென்ற திசையை வெகு நேரம் பார்த்து நின்றாள் வாணிப்ரியா.



## 11

ரகுராமனுடன் வயலுக்குச் சென்று விட்டு ஒன்பது மணி அளவில் காலை உணவுக்காக திரும்பிய வெற்றிவேல் வாசலில் சோர்ந்த முகத்துடன் இருந்த பவித்ராவைக் கண்டதும் அருகே அமர்ந்தான்.



''ஹேய் ஏஞ்சல்! என்ன உம்முன்னு வாசலில் சோக கீதம் வாசிச்சுட்டு இருக்கிற? என்ன ஆச்சு? அம்மா திட்டினாங்களா..?'' என்று சொன்னபடி அவள் தோளில் கை போட்டு இழுக்க அவன் கையை தட்டி விட்டாள்.

''ப்ச்! என்னிடம் பேசாதீங்க.''

''ஏன்டா குட்டி? செல்லத்துக்கு மாமா மேலே என்ன கோபம்? மாமா என்ன தப்பு பண்ணினேன்? ஏன் என்னுடன் பேச மாட்டேன் என்கிறாய்?''

''ஒருத்தருக்கு ப்ராமிஸ் பண்ணினால் அந்த வாக்கைக் காப்பாற்றணுமா வேண்டாமா?''

''கட்டாயம் காப்பாத்தணும்'' என்று சொன்னவனுக்கு உடனேயே பவித்ராவுக்கு என்ன கோபம் என்று புரிந்து விட்டது.

''அம்மா தான் ரெண்டு நாளில் கல்யாணம் இருக்கு. இந்த நேரத்தில் அதிசயம் தீம் பார்க் போக வேண்டாம். கல்யாணம் முடிஞ்ச பிறகு போகலாம் என்று சொன்னாடா குட்டி.''

''அத்தைக்கு கல்யாணம் என்பதால் தான் நான் ஸ்கூலுக்குப் போகவில்லை. கல்யாணம் முடிஞ்ச பிறகு ஸ்கூலுக்குப் போகாமல் இருக்க விடுவாங்களா?''

''ஸ்கூல் நாளில் ஏன் போகணும்? லீவு நாளில் போறது!''

''லீவு நாளில் அம்மா வரமாட்டாங்க. அவங்களுக்கு வேலை இருக்கும்.''

''நான் கூட்டிட்டுப் போறேன்.''

''பொய் சொல்லாதீங்க மாமா! அடுத்த சன்டே வரை நீங்க இங்கே இருப்பீங்களாக்கும்?''

"ஆமால்ல...?"

"ஆமாவா? இல்லையா?"

"இல்லை மட்டும் தான்..." என்று கை கட்டி வாயில் கை வைத்து பவ்யமாக சொன்ன மாமாவைப் பார்த்ததும் வந்த சிரிப்பை அடக்கினாள்.

"அப்புறம் நான் என்ன பண்றது? அடுத்த வாரம் லீவு நாளில் என்னை கூட்டிட்டுப் போறேன் என்று சொல்ற நீங்க ஏன் இன்னிக்கே என்னைக் கூட்டிட்டுப் போகக் கூடாது?"

"பவித்ரா பாயிண்ட் பாயிண்டா பிச்சு உதருகிறாய் செல்லம். எதிர்காலத்தில் நீ வக்கீலா வர பிரகாசமான வாய்ப்பு இருக்கு. உன் நியாயமான கோரிக்கையைப் பற்றி உங்க அம்மாவிடம் உடனே பேசலாம் வா" என்று அவளையும் தூக்கிக் கொண்டு அடுக்களைக்கு வந்தான்.

"வசந்தி, கிச்சனில் என்ன பண்ணிக் கொண்டு இருக்கிறாய்? முதலில் வெளியே வா" என்று அதட்டலாகக் கூப்பிட்டவன் பவித்ராவைப் பார்த்துக் கண் சிமிட்ட அவளுக்கு முகம் மலர்ந்து சிரிப்பு வந்தது. தனக்கு சாதகமாக அம்மாவை அதட்ட ஒரு ஆள் வந்தாச்சே?

"வசந்தி, ஏற்கனவே நான் பவிக்கு, இன்று அவளை தீம் பார்க் அழைத்துச் செல்வதாக வாக்குக் கொடுத்து விட்டேன். கொடுத்த வாக்கை திருப்பி வாங்குவது நியாயம் இல்லை என்று பவித்ரானந்தமயி சொல்லிட்டாங்க. அதனால நீ வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, நாங்க அதிசயம் தீம் பார்க் போவது போறதுதான் ஒரு தடவை முடிவு பண்ணிட்டாங்க எங்க முடிவை நாங்களே மாற்ற மாட்டோம்" என்று தீர்மானமாகச் சொல்ல அவள் இடுப்பில் கை வைத்து மகளை முறைத்தாள்.



"என்ன மாமன் கிட்டே தனியா டீல் நடக்குதா?"

"எதுக்கு அவளை மிரட்டுற? எதுவா இருந்தாலும் என்னிடம் பேசு. உனக்கு இப்ப என்ன பிரச்னை? எல்லோரும் போகலாம் என்று நான் நினைத்தேன். உனக்கு வேலை இருக்கு என்று நீ சொல்கிறாய் உன்னை நான் தொந்தரவு பண்ணலை. வேலை இருக்கவங்க வேலை பாருங்க. வேலை இல்லாத நாங்க என்ஜாய் பண்றோம் என்ன பவி?" என்று கேட்டதும், 'கரெக்ட் மாமா' என்று மாமன் கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டாள்.

"வசந்தி, ரொம்ப யோசிக்காதே! அவளுக்கு ஆயிரம் வேலை இருக்கும் பவித்ராவை நீ பார்த்துக் கொண்டால் கூட அது அவளுக்குப் பெரிய ரிலீப் தான் என்று அம்மாவே நான் ஊருக்குக் கிளம்பும் போது அதை தான் சொல்லி அனுப்பினாங்க. குழந்தை ஆசைப்படுகிறாள் இல்லையா? நான் அழைச்சுட்டுப் போகிறேன். பத்திரமா பார்த்துக்கறேன்" என்று தாழ்ந்த குரலில் சொல்ல அவள் தலை அசைத்தாள்.

"அதுக்கில்லைடா! காருக்கு இங்கே வேலை இருக்கும்."

"காரை யார் கேட்டா? அதை நீயே வச்சுக்க இங்கே இருந்து 15 கிலோ மீட்டர் இருக்குமா? நாங்க ரெண்டு பேர் தானே? பைக்கில் போயிட்டு வரேன் கவலையை விடு."

"தண்ணியில் இறங்கினால் அவளை மேலே ஏத்துறது ரொம்ப கஷ்டம் பார்த்துக்க" என்று பத்து முறை பெற்ற தாயாய் எச்சரிக்க அவன் சிரித்துவிட்டுக் கிளம்பினான்.

வீட்டு வாசலைத் தாண்டியதும், "மாமா ஒருத்தருக்கு வாக்குக் கொடுத்தால் அதைக் காப்பாற்ற வேண்டியது அவசியம் தானே?" என்று மீண்டும் ஆரம்பித்த பவித்ராவை வியப்போடு பார்த்தான்.

''அதான் காலையிலேயே கேட்டாயே? நீ கேட்டதனால் தானே அம்மாவோடு சண்டை போட்டுக் கிளம்பறோம்? இப்ப எதுக்கு புதுசா ஆரம்பிக்கிற?''

''இது புதுசு தான் மாமா... என்று இழுத்தவள் கண்களில் திருட்டு தனமும் கெஞ்சலும் தெரிந்தது.

''என்ன திருட்டு முழி முழிக்கிறாய் என்ன விஷயம்...?''

''மாமா நேற்று ராகுல் நம்ம வீட்டுல இருந்தான் இல்லையா...?''

''அதுக்கென்ன...?''

''அவனிடம் நான்...'' என்று மேலும் தயங்க அவன் பைக்கை நிறுத்தினான்.

''என்ன சொல்ல வர? பயப்படாமல் சொல்லு.''

''அவனையும் நான் அதிசயம் கூட்டிட்டுப் போகிறேன் என்று சொல்லி விட்டேன். அவனையும் நம்முடன் இப்போ கூட்டிட்டுப் போகலாமா ப்ளீஸ்?'' என்று தயங்க, அவளை நினைத்துப் பெருமையாக இருந்தது.

''அழைச்சுட்டுப் போக நான் ரெடி. அவங்க அம்மா நம்மளோடு தனியா விடுவாங்களா?'' என்று கேள்வி கேட்டவன் முகத்தில் சிரிப்பு இருந்தது. ஏற்கனவே அவளை எப்படி அழைப்பது என்று தான் யோசித்துக் கொண்டு இருக்க மருமகள் அதற்கு தோதாக பேசுகிறாளே என்ற உற்சாகம் பிறந்தது.

''அதெல்லாம் விடுவாங்க இல்லை என்றால் ஆன்ட்டியையும் அழைத்துக் கொண்டு போகலாம்'' என்று சர்வ சாதாரணமாகச் சொல்ல அவனுக்குள் உற்சாக பூ பூத்தது.

இது நல்ல ஐடியாவாக இருக்கே? புது வேகம் பிறக்க பைக்கின் ஆக்சிலேட்டரை வேகமாக முறுக்கினான் வெற்றிவேல்.



அழகு நிலையத்தின் வாசலில் வண்டியை நிறுத்தியவன், ''நீ போய் ராகுலை அழைத்து வா'' என்று சொல்லி பவித்ராவை இறக்கி விட்டான்.

''நீங்க வரலையா மாமா?''

''லேட் ஆகிடுச்சே பவி! சீக்கிரம் கிளம்பினால் தானே அங்கே நிறைய நேரம் விளையாடலாம்'' என்று சொன்னதும், துள்ளி குதித்து உள்ளே ஓடினாள்.

உள்ளே என்ன செய்தாளோ? வீட்டிற்குள் நுழைந்த ஐந்தாவது நிமிடம் ஒரு பெரிய தோள் பையுடன் ஒரு கையில் பவித்ராவையும், மற்றொரு கையில் ராகுலையும் பிடித்தபடி வெளியே வந்தாள் வாணிப்ரியா.

''எங்கே பவி காரை காணோம்?''

''கார் இல்லை ஆன்ட்டி. நம்ம நாலு பேர் தானே? பைக்கில் போகலாம்...'' என்று சொன்னதும் அவளுக்கு பகீர் என்றது.

''உங்க அம்மா அப்பா வரவில்லையா?'' என்று தயக்கத்துடன் விசாரித்தாள்.

''இல்லை பவித்ரா, நீயும் மாமாவும் மட்டும் போயிட்டு வாங்க. நம்ம எல்லோரும் சேர்ந்து இன்னொரு நாள் போகலாம்'' என்று மறுப்பு சொல்வதை உணர்ந்து சற்று தூரத்தில் நிறுத்தி இருந்த வண்டியை அவளின் அருகே கொண்டு வந்து நிறுத்தினான் வெற்றிவேல்.

''பாவம் சின்னக் குழந்தையைக் கிளப்பி விட்டுட்டு திடீர் என்று நிறுத்தினால் அவங்க மனசு சங்கடப் படாதா? வா ப்ரியா.''

''இல்லை சார், பரவாயில்லை. நான் ராகுலை இன்னொரு நாள் கூட்டிட்டுப் போகிறேன்'' என்று

சொன்னபடி ராகுலின் கையைப் பற்றி உள்ளே இழுக்க அவசரமாக அம்மாவின் பிடியில் இருந்து கைகளை உதறிக் கொண்டான்.

''போங்கம்மா. இன்னொரு நாள் இன்னொரு நாள் என்று சொல்வீங்க. ஆனால் கூட்டிட்டே போக மாட்டீங்க. நான் அங்கிளோட போகிறேன்'' என்று வண்டியில் ஏற முற்பட அவளுக்குச் சங்கடமாக இருந்தது.

''ராகுல், அம்மா சொன்னால் கட்டாயம் செய்வேன். இன்னிக்கு அவங்க போகட்டும். நாளைக்கே நாம் போகலாம்...''

''நேற்று என்ன சொன்னீங்க? இன்னிக்கு அதை மறக்கலையா? நாளைக்குப் போவதை இன்றைக்கே போனால் என்ன?'' என்று மேலும் பிடிவாதம் பிடிக்க அவளுக்குச் சங்கடம் மேலும் கூடியது.

''வாங்க ஆன்ட்டி. ராகுலுக்கு சொல்லிட்டோமே என்று தான், நானே மாமாவை கூட்டிட்டு வந்தேன். அம்மா கூட திட்டினாங்க தெரியுமா?'' என்று பவித்ரா தன் பங்கிற்கு வற்புறுத்த மேலும் மறுத்துப் பேச முற்பட்டவளை கை காட்டி நிறுத்தினான்.

''அன்னிக்கும் இப்படித்தான் ஸ்கூலில் கொண்டு போய் விடுகிறேன் என்று சொன்னதற்கு ரொம்ப பிகு பண்ணிக் கொண்டாய்! நேற்று காரில் வர யோசிக்கவில்லையே? அப்புறம் இப்ப என்ன ஆச்சு? பைக்கில் வந்தால், நான் உன்னைக் கடித்து தின்றுவிட மாட்டேன். என்னை பார்த்தால் அப்படியா வில்லன் மாதிரி தெரியுது? என்னை நம்பி என்னோடு வா...''

''ஹையோ! புரியாமல் பேசாதீங்க. உங்க மேலே நம்பிக்கை இல்லாமல் இல்லை...''



''அப்புறம் என்ன...?''

''........''

''ஊருக்கு பயந்தால் இந்த உலகத்துல நாம ஒரு வேலையும் செய்ய முடியாது. அதை ஞாபகம் வச்சுக்கோ. அப்படியே மீறிப் பேசினால், ஆமா நான் அப்படி தான் என்று தைரியமா சொல்லு. நம்ம மனசாட்சி என்ன சொல்லுதோ அதைச் செய்ய எப்பவும் தயங்கக் கூடாது'' என்று ப்ரியாவிடம் அதட்டலாகச் சொல்லிவிட்டு ராகுலிடம் திரும்பினான்.

''அம்மா வரலை என்றால் இங்கேயே இருக்கட்டும். நீ என்னுடன் வருகிறாயா?'' என்று கேட்க அவன் வேகமாக தலை அசைத்தான். அவனுடைய கனவான பல்சர் பைக்கில் நீண்ட தூர பயணம். அதிசயம் தீம் பார்க்கில் ஒரு நாள் கொண்டாட்டம், கரும்பு திங்க கசக்கவில்லை.

''அம்மாவிடம் சொல்லிட்டு வா...'' என்று சொன்னதும் அவன் வந்து அவளின் காலை கட்டிக் கொண்டான்.

''அம்மா, ப்ளீஸ் போயிட்டு வரேன்மா...'' என்று கண்களைச் சுருக்கி காலைக் கட்டிக் கொண்டு, கெஞ்சலும் கொஞ்சலும் கலந்து கேட்கும் மகனை மறுத்துச் சொல்ல வாய் வரவில்லை.

''சரி போகலாம். ஆனால் பைக்கில் இல்லை. நாம் இருவரும் பஸ்ஸில் போகலாம்...'' என்று பாதி சம்மதம் சொல்ல, அவன் முகம் வாடியது.

''பரியா, உனக்கு தானே என்னுடன் வர தயக்கம்? இந்த ஊர் கட்டுப்பாடு குழந்தைக்கு இல்லையே? நீ மெதுவா வா. நான் குழந்தைகளை அழைத்துக் கொண்டு முன்னால் போகிறேன்'' என்று அவளின் தயக்கத்தை

உணர்ந்து, விட்டுக் கொடுக்க ராகுல் உற்சாகமாக பைக்கில் ஏறி அமர்ந்தான்.

அவளின் பதிலைக் கூட எதிர்பாராமல், முன்னால் பவித்ராவையும், பின்னால் ராகுலையும் அமர வைத்து, பைக்கை கிளப்பிக் கொண்டு பறந்து வினாடியில் கண்ணில் இருந்து மறைந்தும் போக, அவன் சென்ற திசையை திகைப்புடன் பார்த்துக் கொண்டே நின்றாள் வாணிப்ரியா.

''என்ன வாணி இங்கேயே நிற்கிறாய்? நீ போகலையா ராகுல் எங்கே?'' என்ற கேள்விகளுடன் பின்னாலேயே வந்த கற்பகம் தனியாக நின்ற மகளிடம் விசாரித்தார்.

''ராகுல் மட்டும் அவங்களோடு போய் இருக்கான்மா. நான் போகலை...''

''என்ன வாணி இது என்ன தான் அவங்க பார்த்துப் பாங்க என்றாலும் அவங்களுக்கு சிரமம் தானே? நீ கூட போனால் தானே நல்லா இருக்கும்.''

''இல்லைம்மா. நான் கூட போனால் நல்லா இருக் காது...''

''என்னடி சொல்ற?''

''இல்லைம்மா, வசந்திக்கா போகலை. பவித்ராவை மட்டும், அவங்க மாமா பைக்கில் அழைச்சுட்டு வந்தார் நான் ராகுலை வேண்டாம் என்று சொன்னேன். அவன் மட்டுமாவது வரட்டும் என்று கூட்டிட்டுப் போய்ட்டார்...'' என்று குழப்பத்தோடு சொல்ல அவர் கவலையோடு பார்த்தார்.

''என்ன வாணி இது? ராகுலை பிடிவாதமா நிறுத்தி இருக்க வேண்டாமா? பைக்கில் இரண்டு குழந்தைகளை



அவ்வளவு தூரம் தனியா அனுப்பி வைக்கலாமா? எதிர்காற்றில் குழந்தைகள் அசந்து தூங்கி விட்டால் அவர் எந்தக் குழந்தையைப் பார்ப்பார்? முதலில் குழந்தை களைப் பார்ப்பாரா? வண்டியை பார்ப்பாரா? முதலில் போனை போட்டு ராகுலைக் கொண்டு வந்து வீட்டில் விடச் சொல்லு...''

''அவன் ரொம்ப ஆசையா கிளம்பிட்டான். நான் பசில் கிளம்பி அங்கே போகிறேன். அட்லீஸ்ட் அங்கே விளையாடும் நேரத்தில் கூட இருந்து பார்த்துக் கொள் கிறேன். போயிட்டு வரேன்மா. நீங்க பத்திரமா இருங்க'' என்று சொல்லி விட்டுக் கிளம்பிய மகளைக் குழப்பத் துடன் பார்த்தார்.

''என்னவோ பண்ணு நீ செய்றது எதுவுமே எனக்குப் புரியலை'' என்று முணுமுணுத்து விட்டு உள்ளே சென்றார்.

இதே மகள், சில நாட்களுக்கு முன்பு மாடியில் இருக் கும் வீட்டு உரிமையாளர் தன் மகன் வினோத்துடன் இவளையும் அழைத்துச் செல்ல கேட்டபோது முடியாது என்று நிர்தாட்சண்யமாக மறுத்தவள்! நீங்களும் சேர்ந்து வாங்க என்று சொன்ன பிறகும் 'நீங்க கிளம்புங்க' என்று புன்னகை இல்லாத முகத்தோடு சொன்னவள்! இப்போ என்ன ஆச்சு?

என்ன ஆகி இருந்தாலும் அது நன்மையாக இருக்கட்டும்! கற்பகத்தின் மனம் இறைவனை நாடியது.

வீட்டில் இருந்து பேருந்தில் கிளம்பி, அவர்கள் மூவரும் பைக்கில் சென்ற அதிசயம் தீம் பார்க்கை அடைவதற்குள் ஒன்றரை மணி நேரம் ஆகி இருந்தது. வரும் வழி எல்லாம் அவளுக்கு யோசனையாக இருந்தது.

அம்மாவின் ஆச்சரியமும் குழப்பமும் சரியே! ராகுலை அவனுடன் அனுப்ப எப்படி மனசு வந்தது? அப்படி அவன் மேல் நம்பிக்கை என்றால், அவளும் அவர்களுடனேயே வந்து இருக்கலாமே?

பைக்கில் பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தை அவர்கள் அரை மணி நேரத்தில் கடந்து இருப்பார்கள். இந்நேரம் உள்ளே போய் இருப்பார்கள்! இப்போது எதற்கு அவள் வந்தாள்? மனசுக்குள் கேள்விகள் குடைந்தது.

அதிசயத்திற்குள் நுழைந்தவளுக்கு அப்போது தான் இவ்வளவு பெரிய வளாகத்தில் அவர்களை எங்கே என்று தேடுவது என்ற ஞானோதயம் உதிக்க அவனின் அலைபேசிக்கு அழைத்தாள்.

''ஹேய் பிரியா வந்துட்டியா? வாடர் ஸ்போர்ட்ஸ் பக்கம் சீக்கிரம் வா, குழந்தைங்களை எவ்வளவு நேரம் கரையில் இருந்தே கண்ட்ரோல் பண்றது?'' என்று அதட்டியதும் ஓட்டமும் நடையுமாக அங்கே சென்றவளின் கண்களில் பட்டவன் தோற்றம் கல்லில் செதுக்கிய சிலையாக மனதில் பதிந்தது.

அதுவரை அவனை பேண்ட் ஷர்ட் என்று முழு ஆடையில் பார்த்துப் பழகிய போது, தெரியாத ஆண்மையும் கம்பீரமும், இப்போது கருப்பு ஷார்ட்ஸும், வெண்ணிற ஸ்லீவ்லெஸ் பனியனும் அணிந்து, இடுப்பில், போன் பர்ஸ் மட்டுமே உள்ளடக்கிய ஒரு பெல்டை கட்டிக் கொண்டு அமர்ந்து இருந்தான்.

தண்ணீரில் குழந்தைகள் விளையாடத் துடித்ததால் அவர்களை முன்னால் இறக்கி விட்டாலும் அவர்களின் பாதுகாப்பிற்காக இரண்டு கையிலும் அவர்களை



பற்றியபடி காலை தண்ணீரில் நனைத்து ஆட்டியபடி அவர்களுடன் சிரித்த முகத்துடன் பேசிக் கொண்டு இருந்தான்.

''ஹேய் அம்மா வந்தாச்சு...'' என்று ஆர்வமாகக் கேட்ட ராகுலின் கூச்சலில் திரும்பி பார்த்தவனும் உற்சாகமாக கை அசைத்தான்.

''குழந்தைகளை ஒரு மணி நேரம் எல்லா ரைடிலும் ஏற்றி இறக்கியாச்சு. தண்ணீரில் ஆட குதிக்கிறாங்க. தனியா விடவும் பயமா இருக்கு. இந்தா இதை வைத்துக் கொள்'' என்று சொல்லி தன் இடுப்பில் இருந்த பெல்டை கழட்டி அவளிடம் கொடுத்தவன் அடுத்த வினாடி நீரில் பாய்ந்தான்.

குழந்தைகளுக்கு சரியாக கும்மாளம் அடித்தான். அங்கே மிதந்த ரப்பர் வளையங்களில் அவர்களைப் படுக்க வைத்து பந்துகளைப் போட்டு விளையாடினான். நீரை வாரி அவர்களின் முகத்தில் இறைத்தான். அவர்கள் இருவரும் தங்களின் பலம் கொண்ட வரைக்கும் வாரி ஊற்றிய தண்ணீரை முகம் சுளிக்காமல் அனுபவித்தான்.

நீச்சல் கற்றுத் தருகிறேன் என்று ஆழத்திற்கு அழைத்துச் சென்று, கைகளில் தாங்கியபடி நீச்சல் பழக்கினான். கை கால்கள் சோர்ந்த நேரம் அவர்களை தன் முதுகில் படுக்க வைத்து அவர்கள் அவன் கழுத்தை இறுகக் கட்டிக் கொள்ள, உற்சாகக் கூச்சலுடன் நீந்தி வந்தான்.

குழந்தைகளுக்கான மாற்றுடை, துண்டு, அவனின் சட்டை, பர்ஸ், போன், எல்லாவற்றையும் தன்னிடம் வெகு இயல்பாக ஒப்படைத்தவன், அவ்வப்போது, நான் கொஞ்ச நேரம் வெளியே இருக்கிறேன். நீ உள்ளே வந்து

கொஞ்ச நேரம் நீரில் விளையாடு என்று அழைக்க ஒவ்வொரு முறையும் அவசரமாக மறுத்தாள்.

"இல்லை நான் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளத் தான் வந்தேன். எனக்கு இதில் ஆர்வம் இல்லை..." என்று ஒவ்வொரு முறை சொல்லும் போது அவள் கண்களில் ஆவல் மின்னி மறைந்ததை அவனால் உணர முடிந்தது.

இன்றெல்லாம் இருந்தால் இவளுக்கு இருபத்தி ஐந்து வயது இருக்கலாமா? இறைவன் ஏன் இவள் வாழ்க்கையில் இப்படி விளையாடி விட்டான்?



# 12

குழந்தைகளுடன் நீரில் துளைந்து விளையாடினாலும், கரையில் தனது பொருட்களுடன் அமர்ந்து இருந்த ப்ரியாவை அவ்வப்போது கவனிக்க வெற்றிவேல் தவறவில்லை.

பத்தொன்பது வயதில் கல்லூரியில் முதலாம் ஆண்டு படிக்கும் பெண்ணுக்கு அவசர திருமணம் என்பதே தேவை இல்லாதது. வாழ்ந்தேன் என்று அவன் பேர் பண்ணியதில் வயிற்றில் ராகுல்!

இதில் இவளையோ பிறக்காத குழந்தையையோ குற்றம் சொல்ல என்ன இருக்கிறது? வேடிக்கையான மனிதர்கள்! அன்பும் பாசமும் அரவணைப்புடன் கூடிய நல்ல குடும்பமும் கொடுக்காத சந்தோஷத்தை பணம் தரும் என்று எதிர்பார்க்கும் அதிசயமானவர்கள்!



எங்கே இவள் ராகுலை காட்டி பணத்திற்கு பங்குக்கு வந்து விடுவாளோ என்று அவள் மேல் ராசி இல்லாதவள், என்று முத்திரை குத்தி வெளியேற வைத்த மனிதத் தன்மை இல்லாத ஈன புத்தி படைத்த பெரிய மனிதர்கள் என்ற ரீதியில் வெற்றிவேல் ப்ரியாவை பற்றிய நினைவுகளில் ஆழ்ந்து இருக்க, அவளும் அவனைப் பற்றிய சிந்தனையில் மூழ்கி இருந்தாள்.

அவளின் ஒரு தொலைபேசி அழைப்பினை ஏற்று ஆற்றங்கரைக்கு வந்து, அந்த சின்னப் பெண்ணின் பிரச்னையே சுமுகமாகத் தீர்த்து வைத்ததில் இருந்து அவன் புறம் நன்றி உணர்வு பெருகியது.

அம்மாவுடன் கோவிலுக்குப் போன ராகுலுடன் நட்பாகப் பழகியதில், அவன் வெற்றிவேலுக்கு விசிறியாக மாறி விட்டான்!

சதா சர்வ காலமும் அவனைப் பற்றியே பேசிக் கொண்டு இருந்தபோது கூட, 'சும்மா இருடா!' என்று ஒரு வார்த்தை தட்டிப் பேசத் தோன்றாமல் அவனின் அருமை பெருமைகளை மனம் ரசித்தது பிறருக்குத் தெரியவில்லை என்றாலும் அவளுக்குமே தெரியுமே!

அவனின் கல்யாணம் நின்ற கதையை நாலே வரியில் சொல்லி முகம் திருப்பியபோது அவன் வலியை தன் வலியாக மனம் உணர்ந்தது!

அவன் வசந்தியிடம் அறிமுகம் செய்து வைத்ததில் அவளும் சின்ன பெண் என்றும் பாராமல் தன்னைத் தோழியாக ஏற்று, ராகுலையும் அவர்கள் வீட்டில் சரளமாக விளையாட விட்டு இருப்பது மனதுக்கு இதமாக இருக்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை என்ற எண்ணத்தில் மூழ்கி இருக்கும்போது...

'பொன்னை விரும்பும் பூமியிலே.

என்னை விரும்பும ஒருயிரே...' என்ற பாடல் சப்தம் அவசரமாக நனவுக்கு வர வைத்தது.

''அம்மா போன் வருது ப்ரியா. எடுத்து அப்புறம் பேசுகிறேன் என்று சொல்லிடு'' என்று பரபரப்புடன் சொன்ன வேகத்தில் முதல் வார்த்தை காற்றில் பறக்க பின் பாதி வாக்கியத்தில், கனவு கலைந்தாள்.

திரையில் மின்னிய, 'மை லவ்' என்ற வார்த்தை களைக் கண்டதும் மூச்சு நின்றதைப் போல இருந்தது.

''ப்ரியா... போனை எடுக்காமல் என்ன பண்ணிக் கொண்டு இருக்கிறாய்? டச் ஸ்கீரின் தான். பாஸ்வேர்ட் கிடையாது. ஸ்வைப் பண்ணினாலே பேசலாம்'' என்று மீண்டும் சொல்ல, அவள் அவசரமாக போனை எடுத்துக் காதில் வைத்து, 'ஹலோ...' என்று சொன்னாள்.

போனை எடுக்க நேரம் ஆனது மட்டும் இன்றி பெண் குரல் கேட்பதும் பாலாம்பிகையின் ஆர்வத்தைத் தூண்ட, ''யார் பேசறது?'' என்று விசாரித்தார்.

''நான்... வெற்றியோட... ப்ச்! மானசீகமாக தலையில் குட்டிக் கொண்டு, வெற்றி தங்கை வசந்தியோட ப்ரெண்ட் அவர் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டு இருக்கிறார். பிறகு பேசுகிறேன் என்று சொல்லச் சொன்னார்...'' என்று திக்கிய நாவைச் சமாளித்து ஒரு வாக்கியம் பேசி முடித்தாள்.

''குழந்தைகளா? யார் யார் இருக்காங்க...?''

''பவித்ராவும்... ராகுலும்...''



''பவித்ரா தெரியும். ராகுல் யாரு...?'' என்ற அடுத்த கேள்வியும் பாய்ந்து வர, அவள் தயக்கத்துடன், 'என் பையன்' என்று சொல்ல எதிர்முனையில் பாலாம்பிகைக்கு மூச்சு நின்றது.

''என் பையன் என்றால் நீ யாரு? நீயும் சோழவந் தானில் இருக்கிறாயா?''

அதுவரை பொதுவாக பேசிக் கொண்டு இருந்தவரின் ஒருமை அழைப்பும், துருவலான கேள்வியும், பொறுமை இழக்க வைக்க, ''ம்ம். 'ஆமாம் வசந்தி அக்காவுடைய ப்ரெண்ட். நீங்க யார் என்று நான் தெரிஞ்சுக்கலாமா?'' என்று பட்டென்று கேட்டாள்.

''ஓ! தாராளமா சொல்லலாமே? நீ சொன்ன வெற்றிவேலுக்கும் அவங்க தங்கை வசந்திக்கும் தூரத்து சொந்தம். என்ன சொந்தம் என்று குழந்தைகளுடன் விளையாடி விட்டு வந்த பிறகு அவரிடமே கேட்டுக் கொள்'' என்று சொல்லி விட்டு எதிர்முனை வைக்கப்பட அவள் திகைத்தாள்.

அவருக்குக் கோபம் வந்து விட்டதோ? ஆனால் தான் எதுவும் தவறாகப் பேசவில்லையே? அவர் என்னை யார் எங்கே இருக்கிறாய் என்று கேட்டால், நான் திருப்பிக் கேட்கக் கூடாதா?

'அம்மா!' என்ற ராகுலின் குரல், கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் ப்ரியா. ஈர உடையில் இருந்து நீர் சொட்டச் சொட்ட, மூவருமே கரை ஏறி வந்து அவள் முன்பு நின்று இருக்க அவள் அவசரமாக பையில் இருந்து ஆளுக்கு ஒரு துண்டை எடுத்து நீட்டினாள்.

''என்ன ப்ரியா ஒரு மாதிரி இருக்க?'' என்று விசாரித்த வெற்றியைப் பார்த்து விழித்தாள்.

''அதெல்லாம் இல்லையே? என் அப்படிக் கேட்க நீங்க?''

''மணி என்ன என்று கேட்க நாங்க மூன்று பேரும் மாறி மாறி அழைத்தும் திரும்பாமல் நீ இருந்தால் அப்படி தான் கேட்பாங்க...'' என்று கேலியாக அவன் கண் சிமிட்ட அவள் மேலும் திகைத்தாள். பவித்ராவின் ஈர முடியை அழுந்த துடைத்துக் கொண்டு இருந்தவளின் கைகள் அசையாமல் நின்றது.

''போனில் கொஞ்ச நேரம் முன்பு பேசியவங்க உங்க தூரத்து சொந்தம் என்று சொன்னாங்க. அதான் யாரா இருக்கும் என்று யோசித்தேன். நீங்க கூப்பிட்டதை கவனிக்கலை. என்று சமாதானமாகச் சொல்ல அவன் எதிரே வந்து அவளின் முகத்தைப் பற்றி நிமிர்த்தினான்.

''இப்ப என்ன சொன்னாய்?''

''போனில் உங்க தூரத்து சொந்தக்காரங்க...'' என்று அவள் ஆரம்பிக்கும்போதே விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தவனை திகைப்புடன் பார்த்தாள்.

ஈரத் தலையில் நீர் சொட்டிய முடியும், எளிமையான உடையும், மலர்ந்த சிரிப்புடன் முகமும், அவள் கண்கள் வழியாக இதயத்திற்கு பயணம் செய்ததை அவளால் தடுக்க முடியவில்லை.

''என் இப்படிச் சிரிக்கறீங்க? என்ன விஷயம் என்று சொன்னால் நாங்களும் சிரிப்போம் இல்லையா?''

''தூரத்து சொந்தம் என்றா சொன்னாங்க அம்மா? ஆமா! ரொம்ப தூ...ரத்து சொந்தம் தான்...'' என்று கேட்டு விட்டு அவன் அடக்க முடியாமல் மேலும் மேலும் சிரிக்க அவன் சிரிப்பின் அழகை ரசிக்க முடியாமல் 'அம்மா' என்று வார்த்தை அவளை திகைக்க வைத்தது.



''அது... உங்க அம்மா தான் என்று எப்படி அவ்வளவு உறுதியா சொல்றீங்க?'' திணறலோடு கேட்டவளை வியப்பாகப் பார்த்தான்.

''இந்த உலகத்தில் எனக்காக என் சந்தோஷத்துக்காக கஷ்டப்படும் ஜீவன் எங்க அம்மா மட்டும்தான். அதனால் தான், அங்க அழைத்தால் 'பொன்னை விரும்பும் பூமியிலே' பாட்டு படிக்கிற மாதிரி டியூன் செட் பண்ணி வச்சு இருக்கேன். அதனால் போனை பார்க்கவே வேண்டாம் எங்கே இருந்தாலும் எங்க அம்மாவோட அழைப்பை மட்டும் என்னால் கண்டுகொள்ள முடியும்'' என்று சொல்ல அவளுக்கு மனம் நெகிழ்ந்தது. கூடவே தான் யார் என்ற கேள்வியும் அவர் மனதில் எழுந்து இருக்குமே என்ற கவலை பிறந்தது.

''பசிக்குது...'' என்று பவித்ரா வெற்றிவேலையும் ராகுல் ப்ரியாவையும் சுரண்டிச் சொல்ல, இருவருமே அவசரமாக அவர்களைக் குனிந்து தூக்கிக் கொண்டனர்.

''சாரிடா செல்லம்! பேசிட்டே உங்களை மறந்துட்டேன் வாங்க சாப்பிடலாம் வா ப்ரியா'' என்று முன்னால் நடந்தான்.

உள்ளேயே இருந்த உணவகத்தில், தோசை பூரி சப்பாத்தி பரோட்டா போன்ற டிபன் வகைகளும், சாம்பார் சாதம், தக்காளி சாதம் எலுமிச்சை சாதம், தயிர் சாதம் போன்ற கலந்த சாத வகைகளும் இருப்பதை பார்த்து விட்டு குழந்தைகளிடம் ''என்ன சாப்பிடுறீங்க?'' என்று விசாரித்தான்.

''எனக்கு பரோட்டா...'' என்று ராகுலும், ''எனக்கு தக்காளி சாதம்'' என்று ப்ரியாவும் சொல்ல அவன் புன்னகையோடு தலை அசைத்து விட்டுச் சென்றான்.

"வெற்றி அனைத்து வகைகளிலும் ஒவ்வொன்று என வாங்கிட்டு வந்துடுங்க வெரைட்டியா இருக்கட்டும்" என்று சொல்ல அவன் வியந்தான்.

"ஆறா? குழந்தைகள் சாப்பிடுவாங்களா?"

"இரண்டு மணி நேரம் தண்ணீரில் ஆடியது குழந்தைகளுக்குப் பசிக்கும். சாதாரணமாச் சாப்பிடுவதை விட இரண்டு மடங்கு சாப்பிடுவாங்க. அதான் அவங்களுக்கு எது பிடிக்குதோ அதைச் சாப்பிடட்டும்..."

"அதுக்குச் சொல்லலை ப்ரியா, எவ்வளவு சாப்பிட்டாலும் பரவாயில்லை. சாப்பிடச் சாப்பிட வாங்கிக்கலாமே!"

"அங்கே நிற்கும் கியூவைப் பார்த்தீங்களா? திருப்பி நீங்க அங்கே நிற்கணுமா? அதுக்கு தான் சொன்னேன்..." என்ற அவளின் தாழ்ந்த குரலில் அவளின் அக்கறையை உணர்த்தியது.

அது மட்டும் இல்லை. அடுத்த அரை மணி நேரம், அவள் ராகுலுக்கும் பவித்ராவுக்கும் உணவைப் பகிர்ந்து ஊட்டிய விதம், பவித்ராவின் தலையைத் துவட்டி விட்ட அழகு, எல்லாமே கண்களை மட்டும் இல்லாமல் மனதையும் சேர்த்து நிரப்பியது.

உணவு முடிந்ததும், இன்னும் விளையாட வேண்டும் என்ற ஆவல் இருந்தாலும், காலையில் இருந்து விளையாடியதும் தண்ணீரில் ஆட்டம் போட்டதும் வயிறு நிறைய உணவு சென்றதும் குழந்தைகள் இருவருக்கும் கண்கள் சொக்கியது. பிரியவும் வெற்றியும் சாப்பிட்டு முடிப்பதற்கு முன்பே அப்படியே நாற்காலியில் சாய்ந்தபடியே தூங்கி இருந்தனர்.



உணவகத்தில் தொடர்ந்து கூட்டம் வந்து கொண்டு இருந்ததால் அவர்களை ஆளுக்கு ஒருவராகத் தூக்கியவர்கள் மரநிழலில் இருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து இருவரையும் மடியில் படுக்க வைத்துக் கொண்டாள் ப்ரியா. அந்தக் காட்சி கண்களை நிறைக்க அலைபேசியைத் தேடி அம்மாவை அழைத்தான்.

"அம்மா...!" என்ற அவனின் ஒற்றை வார்த்தை பாலாம்பிகைக்கு, அவனின் நிறைந்த மனதையும் சந்தோஷத்தையும் சொல்லாமல் சொல்லியது.

"வெற்றி! என்ன அதிசயம் சுத்தி பார்த்தாச்சா...? அதற்குள் அம்மாவைத் தேடுகிறாய்?" என்று கேலியாகக் கேட்க அவன் சிரித்தான்.

"அதிசயத்தை நான் பார்த்தாச்சு நீங்க தான் இன்னும் பார்க்கலை..." என்று சொன்னவனின் மனம் முழுக்க நிறைந்து நின்றாள்.

"எந்த அதிசயத்தைச் சொல்கிறாய் வெற்றி? தீம் பார்க்கை சொல்றது மாதிரி தெரியலையே?" என்றவரின் குரலில் சந்தோஷமும் எதிர்பார்ப்பும் இணைந்து இருந்தது.

"நீங்க என்னிக்கும்மா தப்பா சொல்லி இருக்கீங்க? சரியாதான் சொல்றீங்க..."

"ஏற்கனவே முந்தா நாள் ஆற்றங்கரையில் உன்னை ஒரு பெண்ணோடு பார்த்தேன் என்று ரகு சொன்ன போதே இந்த மாதிரி ஏதாவது விஷயம் வெளியே வரும் என்று நினைத்தேன். ஆனால் இவ்வளவு சீக்கிரம் வரும் என்று நினைக்கவில்லை."

"என்னை வேவு பார்க்க உங்க அண்ணன் மகனை செட் பண்ணி வச்சு இருக்கீங்களா?"

"நான் ஏன் வேவு பார்க்கணும்? கொஞ்சம் முன்னாடி போன் பண்ணினேனே? அப்ப அந்த போனை எடுத்தது யார் என்று யோசித்தால் புரியாதா? என்னை என்ன மரமண்டை என்று நினைத்தாயா?"

"இல்லைம்மா! எங்க அம்மா புத்திசாலி என்பது எனக்குத் தெரியும். இன்னும் சொல்லப் போனால் கொஞ்சம் ஓவராவே புத்திசாலித்தனம் இருக்கு என்றும் தெரியும். ப்ரியாவை சீக்கிரமே நீங்க பார்க்கணும்மா."

"யாருடா ப்ரியா?"

"யார் என்று கேட்டால் என்ன சொல்வது? கையில் குழந்தையோடு மனசில் எதிர்கால கனவோடு தனியாக இருக்கும் ஒரு பெண். தன்னைச் சுற்றி இருப்பவர்களுக்கு தன்னால் முடிந்த உதவியைச் செய்யணும் என்று நினைக்கும் சராசரிக்கும் மேலான பெண். எனக்கு பிடித்து இருக்கு..."

"ஏற்கனவே கல்யாணம் ஆகி..."

"அது முடிந்து போன கதைம்மா. அவளையும் அவளின் குழந்தையையும் நம்ம வீட்டுக்கு அழைச்சுட்டுப் போகணும். அதுவும் உடனே! நீங்க எப்ப கிளம்பி வரீங்க...?"

"மிருது கல்யாணத்துக்கு போட்ட டிக்கெட் இருக்கு இல்லையா? இன்னும் ஒரே நாள் தானே? அதிலேயே வரோம்..."

"ப்ச்! நீங்க இன்னிக்கே வர முடியாதா?"

"இல்லைடா! ஆறு ஏழு மணி நேரம் காரில் வருவது சிரமம். அப்படி என்ன அவசரம்? போக, அப்பாவுக்கு பென்ஷன் தொடர்ந்து வழங்க லைப் சர்ட்டிபிகேட்



நேரில் போய் கையெழுத்து போட நாளைக்கு பேங்க் போகணும். இத்தனை வேலையை வச்சுட்டு அவசரமா கிளம்பணுமா...? நாளை மறுநாள் இரவு கல்யாண மண்டபத்துக்கு வந்து விடுவோம், ஓகே?"

"என்னம்மா நீங்க? வா என்று சொன்னால் உடனே கிளம்பி வருவதை விட்டுட்டு, கதை சொல்றீங்க...?" என்று முனக அவர் சிரித்தார்.

"இதென்னடா ஒரே அரட்டல் உருட்டலா இருக்கு? எவளோ ஒருத்தி பாதியில் விட்டுட்டுப் போனதை நம்பி அஞ்சு வருஷம் கல்யாணமே வேண்டாம் என்று இருப்பாய். இப்ப மிருதுளா கல்யாணத்துக்கு நாளை மறுநாள் வருகிறோம் என்று சொன்னால் ரெண்டு நாள் பொறுக்க மாட்டாயா?"

"ம்ஹூம்! முடிவெடுக்கும் வரை தான் யோசிக்கணும். பொறுமையா இருக்கணும். முடிவெடுத்து விட்டால் உடனே செயல்படுத்தி விடணும்."

"அது சரி, நீ அவளிடம் பேசி சம்மதம் வாங்கியாச்சா?"

"இன்னும் இல்லைம்மா. இன்னிக்கு அது தான் வேலை..."

"முதலில் அதை செய்! அவளிடமே பேசி சம்மதம் வாங்கலை அதுக்குள்ளே எங்களைக் கல்யாணப் பத்திரிகை அடிக்கச் சொல்ற?"

"செய்றேன்மா! செஞ்சு முடிச்சுட்டு, ராத்திரிக்கே உங்களை அழைக்கிறேன்..." என்று சொல்லிவிட்டு அவன் அலைபேசியை வைக்க, புன்னகை செய்தார் பாலாம்பிகை.



# 13

அம்மாவிடம் பேசி விட்டு ப்ரியாவின் அருகே வந்தவன் ராகுலை அவள் மடியில் இருந்து தூக்க முயல அவள் தடுத்தாள்.

"ரெண்டு குழந்தைகளும் மடியில் படுத்து இருந்தால், உன் காலை அசைக்கவே முடியாதே? கால் மரத்துப் போய் விடப் போகிறது. ராகுல் என் மடியில் தூங்கட்டும் சௌகரியமா இரு.." என்று சொல்லி அவள் மறுப்பை மீறி, தூக்கி அருகே இருந்த மற்றொரு இருக்கையில் அமர்ந்தான்.

அருகருகே இருந்த இரண்டு நீண்ட இருக்கைகளில், ஒரு இருக்கையின் இடது புற ஓரத்தில் ப்ரியாவும் அடுத்த இருக்கையின் வலது ஓரத்தில் வெற்றியும் அமர்ந்து இருக்க, குழந்தைகள் கால் நீட்டி படுத்து இருந்தார்கள்.

மடியில் இருந்து குழந்தையைத் தூக்குவதற்கு முதலில் ஆட்சபேணை தெரிவித்த ப்ரியாவின் வாய், அவன் ராகுலைத் தொட்டதுமே வியப்பில் மூடிக் கொண்டது. அருகே இருந்த அவனை பிரமிப்புடன் பார்த்தாள்.

"என்ன ப்ரியா, அப்படிப் பார்க்கிறாய்? ஏதாவது சொல்லணுமா?" என்று அவள் புறம் சரிந்து கேட்க அவள் அவசரமாகப் பார்வையைத் திருப்பிக் கொண்டாள். ஆனால் மனசு அவன் ராகுலை அப்படி உரிமையா தூக்கி மடியில் வைத்துக் கொண்டதில் மனம் நிறைந்து தளும்பியது.



"நீ வாயைத் திறக்கற மாதிரி காணோம்! நானே பேசறேன். இப்ப எங்க அம்மாவிடம் பேசினேன். அவங்க உன்னைப் பற்றி விசாரிச்சாங்க..." என்று ஆரம்பித்த உடனேயே முகம் அவன் புறம் திரும்பியது.

"ஹையோ! அவங்க அப்ப போன் பண்ணின போது நீங்க யார் என்று கேட்டு வச்சேன். கோபமா இருந்தாங்களா...?" என்று கவலையாகக் கேட்க திகைப்புடன் பார்த்த வெற்றியின் முகம் குறும்பிற்கு மாறியது.

"ஓ! அதுதான் என்னை போன் போட்ட உடனே லெப்ட் அண்ட் ரைட் போட்டு வாங்கினாங்களா? ஏன் ப்ரியா அப்படிச் செய்தாய்? நான் தான் அம்மா போன் என்று சொல்லி தானே எடுக்கச் சொன்னேன். அதுவும் அந்த ரிங்டோன் அவங்களுக்காக ஸ்பெஷலா வந்தாச்சே?" என்று சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு சொல்ல அவள் நன்றாகத் திரும்பி அமர்ந்தாள்.

"ஹையோ! சாரி சார். நான் கவனிக்கலை. கவனித்து இருந்தால் அவங்களை யார் என்று கேள்வி கேட்பேனா? நீங்களாவது ஸ்டோர் பண்ணி வைக்கும்போது, அம்மா, மாம், மம்மி, என்று ஏதாவது பேர் போட்டு வைக்கக் கூடாதா?"

"எங்க அம்மாவை எனக்குப் பிடிச்ச மாதிரி பேர் போட்டு வச்சால் உனக்கு என்ன வந்தது? எனக்கு வந்த அழைப்பை எடுத்துப் பேசு என்று சொன்னால் நான் சொன்ன தகவலை மட்டும் சொல்லாமல் அதென்ன எக்ஸ்ட்ரா விசாரணை உனக்கு? ப்ச்! இந்த அதிகப் ப்ரசங்கி தனத்தை நான் உன்னிடம் எதிர்பார்க்கலை ப்ரியா..." என்று சொல்லிவிட்டு வேறு புறம் திருப்பிக் கொள்ள அவள் தவித்தாள்.

''வெற்றி, ஐ ஆம் சாரி, நான் ஒன்றும் தப்பா கேட்கலையே? போன் பண்ணினால் எதிர்முனையில் யார் பேசுகிறார் என்று தெரிந்து கொள்ள கேட்கும் சாதாரண கேள்வி தானே அது? இதில் கோபித்துக் கொள்ளவோ உங்களுடன் சண்டை போடவோ என்ன இருக்கு? எனக்குப் புரியலையே?''

''உனக்குத் தெரியாது ப்ரியா. ஆனால் எங்க அம்மாவுக்கு எல்லாமே தப்பா தான் தெரியும். அவங்க சும்மாவே சண்டை போடக் காரணம் தேடுவாங்க...''

''நேற்று நீங்க உங்க அம்மாவைப் பற்றி சொன்ன போது ஒரே ஒரு காரணத்துக்காக சண்டை போடுவாங்க என்று சொன்னது மாதிரி இருந்தது'' என்றவளின் குரலில் சந்தேகம் இருந்தது.

உள்ளுக்குள் அவளின் புத்திசாலித்தனத்தை ஒரு கணம் ரசித்து சிரித்தவன் முகத்தின் கடின தன்மையை மாற்ற முயலவில்லை.

''நான் போனை எடுக்கலை என்பதே எரிச்சல்! அதை பொண்ணு எடுத்தால் இன்னும் எரிச்சல். அவள் நீ யார் என்று கேள்வி கேட்டால் எரிச்சலோ எரிச்சல்! போட்டு தாளிச்சு எடுத்துட்டாங்க'' என்று அது காதில் விழாத மாதிரி கடுமையான குரலில் மேலும் மேலும் அடுக்கினான்.

''மை லவ் என்று டிஸ்ப்ளே வந்ததும் மனசு தாங்காமல் நீங்க யார் என்று கேட்டுட்டேன். அது ஒரு தப்பா? நான் போன் பண்ணி மன்னிப்பு கேட்கட்டுமா...?'' என்று தான் என்ன சொல்கிறோம் என்று உணராமலே சொன்னவளைத் திரும்பிப் பார்த்தான்.



அதுவரை சிரமப்பட்டு போர்த்துக் கொண்ட கடின பாவனை சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போக அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

''இப்ப நீ என்ன சொன்னாய்? அதை அப்படியே திருப்பிச் சொல்லு...'' என்று சிரிப்பினூடே சொல்ல, அவள் பேசிய வார்த்தைகளை மனதில் ஓட்டிப் பார்த்ததும் உடலில் ஓடிய ரத்தம் முழுவதும் முகத்திற்கு ஓடி வர சூடாகி சிவந்தது! கடவுளே!

அவனுடைய போனில், அவனுக்கு வேண்டிய ஒரு ஆளை மை லவ் என்று ஸ்டோர் பண்ணி வைத்து இருந்தால் அவளுக்கு என்ன வந்தது? அவளுக்கு ஏன் ஆதங்கமோ கோபமோ வர வேண்டும்?

பொறாமை என்ற அளவுகோல் மூலம் மனசில் இருக்கும் அன்பை இப்படியா பட்டவர்த்தனமாகத் தெரிவிப்பாள்?

அவளின் சிவந்த முகமும் அமைதியும் அவனின் முகத்தை மேலும் கனிய வைக்க, இருக்கைகளுக்கு இடையே இருந்த இடைவெளியை இன்னும் குறைத்தான்.

''இதைத்தான்... நீ இப்ப சொன்ன வார்த்தையை தான்... பிரியா இஸ் மை லவ் என்று நான் அம்மாவிடம் சொன்னேன்...'' என்று ஒவ்வொரு வார்த்தையாக அவன் சொல்ல அவள் அவனின் முகத்தை ஆர்வத்துடன் பார்த்தாள்.

''அம்மா என்ன சொன்னாங்க?''

''நான் கல்யாணம் பண்ணிக்கலை என்று தான இத்தனை நாளா என்னைத் திட்டி சண்டை போட்டு இருக்காங்க. எனக்கு ஒரு பொண்ணு பிடிச்சு இருக்கு என்று

சொல்லும்போது எப்படி சண்டை போடுவாங்க ப்ரியா? அவங்க ரொம்ப. ரொம்ப சந்தோஷமா இருக்காங்க..." என்று காதோரம் குனிந்து ரகசியமாகச் சொல்ல, அவளிடம் இருந்து ஒரு பெருமூச்சு வந்தது.

"என்னை பத்தி எதுவுமே அவங்களுக்குத் தெரியாதே?" என்று சொன்னவளின் தலை தாழ்ந்து இருக்க குரல் வருத்தத்தில் தோய்ந்து இருந்தது.

ஒரு வினாடி முன்பு இதே முகம் நாணத்தில் சிவந்ததே? அதற்கும் இப்போதைய பாவனைக்கும் எவ்வளவு வித்தியாசம்? அம்மா சம்மதம் சொல்லி விட்டார் என்று சொன்ன பிறகு கூட சந்தோஷப் படாமல் குழப்பிக் கொள்ளும் இவளை என்ன செய்வது?

அடிபட்ட காயம் ஆழமாக இருக்க வேண்டும் காயம் ஆறி விட்டாலும் தழும்பு இருக்கிறது. ஆசை இருந்தாலும் நம்பிக்கை வருவது கஷ்டம்! கணத்தில் அவளின் மன நிலையை ஊகித்தவன் 'ப்ரியா...' என்று மென்மையாக அழைத்தபடி ஒற்றை விரலால் அவளின் முகவாயை நிமர்த்தினான்.

"அம்மாவுக்கு உன்னைத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் என்னைத் தெரியுமே? அதனால் நான் சொல்லும் வார்த்தையை அப்படியே ஏற்றுக் கொள்வார்கள் நீ கவலைப் படாதே!"

"ஆனால்... உங்களுக்கும்... என்னைப் பற்றி அதிகம் தெரியாதே..." என்றவள் கண்களில் கலக்கமும் குழப்பமும் ஆதங்கமும் போட்டி போட்டது.

"நீ சொல்லு தெரிஞ்சுக்கறேன்..."

"நான்... எனக்கு... ப்ச்! நான் உங்களுக்கு வேண்டாங்க... என்னால் உங்க வாழ்க்கையில் சந்தோஷத்தைத் தர



முடியுமா என்று தெரியலை. நீங்க உங்க அம்மாவிடம் சொல்லி..."

"ப்ரியா... எனக்கு எது சந்தோஷம் தரும் என்று என்னைவிட உனக்கு தான் தெரியுமா? சரி உன் வழிக்கே வருகிறேன். உன்னால் என்ன பிரச்னை எனக்கு வரும் சொல்லு பார்ப்போம்..."

"செந்தில் வீட்டுல அவங்க ரொம்பப் பணக்காரங்க."

"இருந்துட்டுப் போகட்டும். நான் போய் அவங்க வீட்டுல பங்கு கேட்கப் போவதில்லை எனக்கு அது தேவையும் இல்லை. அப்புறம் என்ன பிரச்னை?"

"நாம் அவங்க பணத்தை மதிக்க மாட்டோம் என்பது அவங்களுக்குத் தெரியாது. அதனால் வழிய வந்து நம்மளை. மனசு நோக பேசுவாங்க. காது கொடுத்துக் கேட்க முடியாத வார்த்தைகளால்.. அதை நான் ஏற்கனவே அனுபவிச்சு இருப்பதனால் சொல்கிறேன். அவங்க உங்களைப் பேசினால் என்னால் தாங்க முடியாது வெற்றி. ப்ளீஸ், இந்தப் பேச்சை விட்டுடுங்க..."

"அவங்க இனிமேல் என்னை பேசி உன்னால் தாங்க முடியாமல் போவது ஒரு பக்கம் இருக்கட்டும். ஏற்கனவே அவங்க உன்னை என்ன பேசினாங்க என்று சொல்லு. அதற்கு தகுந்த ஒரு பதில் அவங்களைச் சொல்ல வச்சுடலாம்..." என்று அவன் வேகமாகச் சொல்ல அவள் உச்சு கொட்டினாள்.

"அதெல்லாம் எதுக்குங்க? நானே அவங்க வம்புக்கே போகாமல் ஒதுங்கி இருக்கிறேன்..."

"நீ ராகுல் பிறந்த ஹாஸ்பிடல் சொன்னதை வச்சுப் பார்த்தால், சென்னையில் தான் இருக்காங்க என்று நினைக்கிறேன் கரெக்டா?"

''ம்ம்.. பல்லாவரம்...''

''என்ன பண்றாங்க...?''

''லெதர் ப்ராசசிங் யூனிட் ஒன்று வச்சு இருக்காங்க நிறைய மார்கெட்டிங் ஏஜன்சி வச்சு இருக்காங்க...''

''நீ சேலம் என்று வசந்தி சொன்னாள். பாதி படிப்பில் அவசரமா சென்னையில் இருக்கும் அந்த செந்திலை கல்யாணம் பண்ணிக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது?'' என்று அவன் கேட்ட வினாடியில் அவள் கண்களில் புதிதாக அருவி சுரந்தது. துடைக்கத் துடைக்க நிற்காமல் கண்ணீர் வர அவன் தவித்தான்.

''ப்ரியா... என்ன ஆச்சு? ப்ளீஸ்... கன்ட்ரோல் பண்ணிக்கோ... கஷ்டமா இருந்தால் சொல்ல வேண்டாம். விட்டுடு...'' என்று ஏதேதோ சொல்லியும் அவளின் அழுகை நிற்காமல் தொடர, வலது கையால் அவளை இழுத்து தன் தோளில் சாய்த்துக் கன்னத்தில் தட்டிக் கொடுத்தான்.

'ப்ரியா, அழுகை ஒரு மனிதனின் பலவீனத்தைக் காட்டும் தேவை இல்லாமல் கண்ணீரை சிந்தாதே. அழுகை நமக்குத் தேவையான மாற்றம் கொண்டு வரும் என்றால் சொல்லு நானும் உன்னுடன் சேர்ந்து அழுகிறேன்'' என்று சொல்லியபடி அவளின் தலையை வருடி கொடுக்க அவளின் கண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது.

''அம்மா...'' என்ற சிணுங்கலுடன் ராகுல் வெற்றிவேலின் மடியில் அசைய அவள் அவசரமாக, ''ஐ ஆம் சாரி...'' என்று அவன் தோளில் இருந்து விலக அவன் கனிவாக புன்னகை செய்தான்.



காலையில் மகனுடன் அதிசயத்திற்குக் கிளம்ப தயங்கிய வாணிப்ரியாவின் மனநிலை அன்றைய பொழுது முடியும் போது தலை கீழாக மாறி இருந்தது. அதுவும் மதிய உணவுக்குப் பிறகு தன் மனதில் அடைத்து வைத்து இருந்த பாரத்தில் ஒரு பகுதியை கண்ணீரின் மூலம் அவளையும் அறியாமல் அவனிடம் வெளிப்படுத்திய பிறகு மனம் இலகுவாகி இருந்தது.

'தனியாக வெற்றிவேலுடன் பைக்கில் குழந்தைகளுடன் போவதா?' என்ற யோசனையில் கிளம்ப மறுத்தாள். ஆனால் அங்கே கழித்த பொழுதுகள், இருவருக்கும் இடையில் மனதளவில் கண்ணுக்குத் தெரியாமல் இருந்த தடைகளை தகர்த்து எறிந்து இருந்தது.

ஆறு மணி வரையிலும் அங்கே இருந்த அனைத்து எந்திரங்களிலும் ஏறி இறங்கி காலும் கையும் அசைந்து போன பிறகும் கூட அந்த இடத்தில் இருந்து கிளம்ப குழந்தைகள் இருவருக்கும் மனமே இல்லை.

'இந்த ரைட் ஒரு முறை! அம்மா ப்ளீஸ்!' என்று ராகுல் ஒரு முறை அம்மாவிடம் கொஞ்சினால் அடுத்த முறை பவித்ரா, ''மாமா ப்ளீஸ்...'' என்று வெற்றியிடம் கொஞ்சி, ஐஸ் வைக்க, இருவரும் தலை அசைத்தனர்.

அதற்கு அடுத்த முறை, 'ஆன்ட்டி ப்ளீஸ்... இந்த ஒரே ஒரு ரவுண்ட் மட்டும்...' என்று ப்ரியாவிடம் கெஞ்ச, ராகுலோ அங்கிள் ப்ளீஸ் இது தான் லாஸ்ட். இனிமேல் கேட்க மாட்டேன் ப்ராமிஸ்...' என்று கண்களை சுருக்கிக் கொஞ்ச, இருவரும் தட்ட மாட்டாமல் சம்மதம் சொல்ல நேரம் வளர்ந்து கொண்டே போனது.

அவர்களை அதட்டி உருட்டி வெளியே கிளப்பிக் கொண்டு வந்த பிறகும் அதே கதையை பேசிக் கொண்டு இருந்தனர்.

''அம்மா, கப் அண்ட் சாசர் ரைடில் போகும்போது பவித்ரா பயந்து சத்தம் போட்டாள். நான் தான் அவள் கையைப் பிடிச்சுக் கூட்டிட்டுப் போனேன்...'' என்று ராகுல் அம்மாவிடம் கதை சொல்ல,

''மாமா, நான் டேஷிங் கார் போனப்ப ராகுல் காரை நாலு வாட்டி இடிச்சேன். அவன் மூன்று வாட்டி இடித் தான்...'' என்று பவித்ரா கதை சொல்ல, அங்கிருந்து கிளம்பிய பிறகும் அவர்களுக்கு அந்த நாளின் இனிய நினைவுகள் தொடர்ந்தது.

அவர்களுக்குப் பொருத்தமான பதில்களைச் சொல்லி, தின்பண்டங்கள் வாங்கிக் கொடுத்து, முகம் துடைத்து, கழிவறை கூட்டிச் சென்று இருவரும் தங்களின் குழந்தை களை போல கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொண் டதில் ப்ரியாவிற்கும் வெற்றிக்கும் உடல் களைப்பாக இருந்தாலும் மனம் உற்சாகத்தில் இருந்தது.

''காலையில் பிரெஷ்ஷா இருந்ததால் இரண்டு குழந்தை களையும் வண்டியில் வைத்து ஓட்டி வர முடிந்தது. இப்ப களைப்பா இருக்காங்க. பசங்க தூங்கி விடுவாங்க. தனியா பைக்கில் அழைத்துச் செல்வது கஷ்டம். நீயும் பைக்கில் வந்து விடு ப்ரியா. சேர்ந்தே போய் விட லாம்...'' என்று வெளியே வரும்போதே சொல்ல அவள் திகைப்புடன் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? இவ்வளவு நேரம் என் னுடன் தானே இருந்தாய்? இப்ப இங்கிருந்து வீட்டுக்கு வண்டியில் போகும் அரை மணி நேரத்தில் என்ன ஆகி விடும் என்று பயப்படுகிறாய்?''

''பயம் இல்லை... ஆனால்...''



''ஊர் வாயை மூட உலை மூடி கிடையாது ப்ரியா. என்ன செய்தாலும் அல்லது செய்யா விட்டாலும் பேசிக் கொண்டே தான் இருப்பாங்க. நாம் நம் மனசாட்சிக்கு பயந்து நடந்தால் போதும். பைக்கில் சேர்ந்து போவது ஒன்றும் பெரிய விஷயமில்லை. புரிந்ததா? வா...''

''உங்களுக்கு எதுவுமே பெரிய விஷயம் இல்லை தான்...''

''அப்படிச் சொல்ல முடியாது ப்ரியா. நானும் முக்கிய மாக கருதும் விஷயங்கள் நிறைய இருக்கு. முதலில் நான் செய்யும் தொழிலை மதிக்கிறேன் அதை குறை கூறுவது பிடிக்காது. என் குடும்பம் முக்கியம். என் நண்பர்கள், என் நலம் நாடுபவர்கள் முக்கியம் தான். இது மாதிரி போகிற போக்கில் ஊரார் புறம் கூறிப் பேசும் பேச்சுக்கள் பெரிய சமாச்சாரம் இல்லை'' என்றவனை அவள் பார்த்த பார்வையில் நிறைவு இருந்தது.

''தேங்க்ஸ் வெற்றி...''

''எதற்கு தேங்க்ஸ்...?''

''இந்த நாளை என் வாழ்க்கையில் மறக்க முடியாத நாளாக்கியதற்கு, ராகுலை சந்தோஷமாக இருக்க வைத்த தற்கு, எல்லாத்துக்கும் தான்...''

''அதையே நானும் திருப்பிச் சொல்லலாம் இல்லையா? பவித்ராவை உன் குழந்தை மாதிரி பார்த்துக் கொண்ட தற்கு, அவளுக்கு உடை மாற்றியதற்கு, உணவு ஊட்டிய தற்கு, தலை கோதியதற்கு, எல்லாத்துக்கும் நான் நன்றி சொல்லணுமா?'' என்று அவன் திருப்பிக் கேட்டதும் சிரித்தாள்.

''ஓகே பாஸ்! என்னுடைய தேங்க்ஸ் வாபஸ் வாங்கிக் கிறேன். போதுமா?''

"போதாதே?"

"அப்ப என்ன பிள்ளையார் முன்னாடி போடுற மாதிரி 108 தோப்பு கரணம் போடட்டுமா?"

"தோப்பு கரணம் போடுவது உடலுக்கு நல்லதுதான். ஆனால் அதை தண்டனையா செய்ய வேண்டாம். நான் வேறே வேலை வைத்து இருக்கிறேன். வீட்டில் குழந்தைகளை இறக்கி விட்ட பிறகு சொல்கிறேன்" என்று முடித்தான்.



# 14

காலையில் வீட்டில் இருந்து அதிசயத்திற்கு வரும் போது பகல் பொழுது என்பதால் விரைவிலேயே வந்து விட்ட வெற்றிவேலுக்கு திரும்பப் போகும் வழியில் ஒவ்வொரு கிலோ மீட்டர் தூரம் குறையும் போதும் அவன் வண்டியின் வேகம் குறைந்தது.

இன்னும் பத்து நிமிடம்! கூடுதலாகப் போனால் இருபது நிமிடம்! அதற்கு பிறகு பின்னால் இருப்பவளை இறக்கி விட வேண்டுமே என்ற எண்ணமே அவனின் வாகனத்தின் வேகத்தைக் குறைக்கப் போதுமானதாக இருந்தது.

"ரொம்ப கஷ்டமா இருக்கா?" என்று அவள் நான்கு பேர் இரண்டு சக்கர வாகனத்தில் போவதைப் பற்றிப் பேச, அவன் அவளைப் பிரியப் போகும் எண்ணத்தில், 'ம்ம்ம்...' என்று சொன்னான்.



"அவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டு போக வேண்டாம். நான் தப்பா எடுத்துக்கலை. என்னை அடுத்த பஸ் ஸ்டாப்பில் இறக்கி விடுங்க..." என்று சொல்ல, அவன் பிரேக்கை அழுத்திய வேகத்தில் அவள் பயந்து போனாள்.

"இறங்கிக்கட்டுமா...?" என்று இறங்க முற்பட்டவளைப் பார்த்து பல்லைக் கடித்தான்.

"உன்னை என்ன செய்தால் தேவலாம்? நானே உன்னை வீட்டில் இறக்கி விட்டுட்டு போகணுமே. பத்து நிமிஷம் அஞ்சு நிமிஷம் என்று கவுண்ட் டவுன் பண்ணிக்கிட்டு இருக்கேன்? உனக்கென்ன கிண்டலா?" என்று எரிச்சலோடு சொல்ல அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

அவனுடைய மன நிலை அரசல் புரசலாகத் தெரியும் தான்! ஆனால் அவனே இப்படி வெளிப்படையாக அதுவும் பார்த்த நான்காவது நாளில் சொல்வான் என்று நிச்சயம் எதிர்பார்க்கவில்லை.

அதற்குக் காரணம் இருக்கிறது மதியம் தான் உடைந்து அழுதது அவனின் நம்பிக்கையை வளர்த்து இருக்க வேண்டும்! ஆனால் அவளும் தான், நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அப்பாவின் மரணத்தை நினைத்து அப்படி அழ வேண்டிய அவசியம் என்ன?

தானும் அவனை நெருக்கமானவனாக நினைப்பது நன்றாகவே புரிந்தது. மனதளவில் மட்டுமில்லாமல் உடல் ரீதியாகவும் கூட நெருக்கமும் ஈர்ப்பும் இருப்பது உண்மை. அவன் நீரில் துளைந்த போதும், இதோ இப்போது பைக்கில் அமர்ந்து அவன் அருகாமையை அனுபவித்த போதும் மனம் நிம்மதியையும் சந்தோஷத்தையும் உணர்ந்தது.

அதை அவனிடம் சொல்கிறாளோ இல்லையோ... அவளுக்குத் தெரியுமே? அதே உணர்வு அவனுக்கும் இருக்கிறது என்பதை அறியும் போது மனசுக்குள் மத்தாப்பு ஒளிர்ந்தது.

''போகலாம்...'' என்று முனகலாகச் சொல்லி விட்டு மீண்டும் ஏறி அமர்ந்தவள் இப்போது அவன் தோளிலும் கரம் பதித்து இருக்க அவன் மனம் உருகியது. சில வினாடிகள் முன்பு வந்த கோபம் காணாமல் போனது.

''பவித்ரா தூங்கி விழறா பாரு. நல்லா பிடிச்சுக்கோ'' என்று இதமான குரலில் சொன்னவன் இன்னும் வேகத்தை தழைத்த போது அவள் மனதில் சாரல் அடித்தது.

அவளுடன் கூடுதல் நேரம் செலவழிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் நடுவில் ஒரு ஹோட்டலில் நிறுத்தி, நிதானமாக சாப்பிட்டு, மேலும் அரை மணி நேரம் இழுக்கவும் செய்தான். எவ்வளவு மெதுவாக வண்டி சென்ற போதும் ஊர் வந்து சேர்ந்து விட, முதலில் வசந்தியின் வீட்டுக்கே சென்றவன் வாசலில் நின்றபடியே தங்கையை அழைத்து மகளை ஒப்படைத்தான்.

''ப்ரியாவை அவங்க வீட்டில் விட்டுட்டு வரேன். நாங்க வழியிலேயே சாப்பிட்டு விட்டோம் வசந்தி. சாப்பாடு வேண்டாம்'' எனறு சொல்லி விட்டுக் கிளம்ப கணவனை பார்த்து ரகசிய புன்னகை பூத்தாள் வசந்தி.

''அவன் வர லேட்டாகும். நாம் அவனுக்காக காத்திருக்க வேண்டாம். வாங்க சாப்பிடலாம்'' என்று மனைவி அழைத்த தோரணையில் சிரிப்புடன் அவளைப் பின் தொடர்ந்தான் ரகு.

வீட்டுக்கு கொண்டு வந்து இறக்கி விட்டவன், ''நான் உன்னுடன் கொஞ்சம் பேசணும் ப்ரியா...'' என்று ரகசியமாகச் சொன்னான்.



''இப்பவா..?'' என்று கேட்டவளின் குரலில் இரவு ஒன்பது மணி ஆக போகும் வேளையில் வேண்டாமே என்ற மறுப்பு மிக மெலிதாக தெரிந்தது.

''ஆமா!'' என்று தீர்மானமாகச் சொன்னவன் குரலில் உடும்பின் உறுதி இருந்தது.

''சரி வாங்க...'' என்று அவனை அழைத்து விட்டு ராகுலுடன் உள்ளே சென்றவளை பைக்கை நிறுத்தி விட்டு பின் தொடர்ந்தான் வெற்றிவேல்.

''வாங்க வாங்க. இவ்வளவு நேரம் ஆகிடுச்சா? சாப்பிடலாமா தோசை ஊற்றட்டுமா?'' என்று கேட்டபடி வந்த கற்பகம் மகளின் பின்னால் வந்த வெற்றிவேலை பார்த்து ஒரு கணம் திகைத்து மறு நிமிடம் தெளிந்தார்.

''எல்லோருமே சாப்பிட்டாச்சு. நான் ப்ரியாவுடன் கொஞ்சம் பேசணும்மா! அதுக்காக வந்தேன்...'' என்று நேருக்கு நேர் பார்த்து அனுமதி கோர அவர் தலை அசைத்து விட்டு ராகுலுடன் உள்ளறைக்கு சென்றுவிட்டார்.

''உட்காருங்க. பால், ஹார்லிக்ஸ் ஏதாவது எடுத்துட்டு வரட்டுமா?'' என்று வீட்டு ஆளாக உபசரிக்க அவன் மறுப்பாக தலை அசைத்தான்.

''இங்கே வேண்டாமே... மூச்சு முட்டுற மாதிரி இருக்கு. வெளியிடமா இருந்தால்... பயப்படாதே... வெளியில் இல்லை... திறந்த வெளி... மொட்டை மாடி...'' என்று அவசரமாகச் சொல்ல அவள் தலை அசைத்தாள்.

''பார்லரை ஒட்டி மொட்டை மாடிக்கு படி போகும். நீங்க போங்க. நான் வரேன்...'' என்று சொன்னவள் ஹார்லிக்சுடன் சென்ற போது, அவன் மொட்டை மாடியின் கை பிடி சுவரில் இரண்டு கைகளையும் ஊன்றி தூரத்தில்

தெரிந்த பெருமாள் கோவிலின் கோபுரத்தை பார்த்தபடி நின்று இருந்தான்.

''சொல்லுங்க என்ன பேசணும்...?'' என்று கேட்டபடி கொண்டு வந்த ஹார்லிக்ஸை நீட்ட அவன் மௌனமாக வாங்கிக் கொண்டான்.

''மத்தியானம் பொது இடம் என்பதாலும், நீ சட்டுன்னு மனசு உடைந்து விட்டதாலும் பாதிப் பேச்சில் நிறுத்த வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. அதை இப்போ தொடரலாம் என்று தான் வந்தேன். மதியம் அங்கே ஏன் அப்படி அழுதாய் ப்ரியா? எனக்கு மனசுக்கு ரொம்ப சங்கடமா இருந்தது. நான் உன்னிடம் வேறே சந்தோஷமான விஷயம் பேச வேண்டும் என்று நினைத்து கொண்டு இருந்தேன்...''

''எனக்கே ஏன் என்று தெரியலை... ரொம்ப நாளைக்கு பிறகு என்னையும் அறியாமல்... ப்ச்! சாரி...''

''சாரி யாருக்கு வேண்டும்? உன் கல்யாணம் பற்றி விசாரித்ததற்கு ஏன் அப்படி அழுதாய்? பிடிக்காத கல்யாணமா? நான் உன்னிடம் தகவல் தெரிந்து கொள்ள விசாரிக்கிறேன் ப்ரியா. புரியாத மாதிரி ஆக்ட் பண்ணாதே. என்ன ஆச்சு?'' என்று சொல்ல அவன் அதட்டலும் அவளுக்கு இனித்தது.

''பிடிக்காத கல்யாணம் என்று சொல்ல முடியாது. ஆனால் அது எங்க அப்பாவின் மரணத்தை ஒட்டிய சில நாட்களில் ஒரு கட்டாயத்தில் நடந்த விபத்து. கல்யாணத்தைப் பற்றிப் பேசும்போதே அவரின் மறைவும் சேர்ந்து நினைவு வந்தது. அதான்...''

''உங்க அப்பா விபத்தில் இறந்ததா ரகு சொன்னானே?''



''ஆமா! ஆனால் அது விபத்தா? ஒரு தனி நபரின் பொறுப்பின்மையால், அஜாக்கிரதையால் நடந்த ஒரு சம்பவம் விபத்தாக மாற்றப்பட்டது. குடிபோதையில் இவர் தாறுமாறாக வண்டி ஒட்டி காரை ஏற்றி கொன்றுவிட்டார் என்று தான் சொல்ல வேண்டும்'' என்று ஆவேசமாகச் சொல்ல அதே கோபத்தை அவனும் அந்நேரம் மனதில் உணர்ந்தான்.

''போலீசில் புகார் கொடுக்கவில்லையா? அவங்க என்ன பண்ணினாங்க?''

''புகார் கொடுக்காமல் என்ன? கொடுத்தோம்! வழக்கு பதிவு செய்தேன் என்று பேர் பண்ணினாங்க. பணம் பாதாளம் வரை பாயும். போலீஸ் ஸ்டேஷனுக்கு போகாதா என்ன?'' என்றவளின் முகத்தில் அருவெறுப்பு இருந்தது.

''இவ்வளவு நடந்த பிறகு உங்க அப்பாவின் மரணத்துக்கு காரணமான ஒருவனையே நீ எப்படி மணந்து கொண்டாய் ப்ரியா?''

''அது எங்க அம்மா செய்த பெரிய முட்டாள் தனம். ப்ச்! அப்படியும் சொல்ல முடியாது. அவங்க என்ன செய்வாங்க? ஒரு சராசரி தாய். இவ்வளவு பெரிய பணக்காரங்க, நம்ம வீடு தேடி வந்து விரும்பிக் கேட்கறாங்களே? தன் பெண் நல்லா வாழ வேண்டும் என்ற ஆசையில், அவங்க திட்டம் புரியாமல் சம்மதம் சொல்லிட்டாங்க'' என்று பெருமூச்சை வெளியேற்றினாள்.

கற்பகத்தின் நிலையைப் புரிந்து கொள்ள முயன்றாலும், இருபது வயது நிறையாத ஒரு அப்பாவிப் பெண்ணை அவர்கள் எப்படி எல்லாம் அலைகழித்து இருக்க கூடும் என்ற கற்பனையில் அவனுக்கு ரத்தம் சூடேறியது.

"அப்புறம்... என்ன ஆச்சு?"

"அவங்க என்னைக் கல்யாணம் பண்ணி கொண்டதே, எங்க அப்பாவின் மரணம் நிகழ்ந்த கேசை ஒன்றும் இல்லாமல் பண்ண தான். கல்யாணத்தைக் காரணம் காட்டி அதை ஒன்றும் இல்லாமல் செய்து விட்டாச்சு. அப்புறம் நான் எதுக்கு? டைவேர்ஸ் நோட்டீஸ் கொடுத்து வெளியே அனுப்பியாச்சு..."

"என்ன அராஜகம் இது? இதை எதிர்த்து கேட்கவில்லையா நீ? படித்த பொண்ணு தானே நீ? வக்கீல் நோட்டீஸ் கொடுத்தால் சரியா போச்சா? என்ன தப்பு கண்டு பிடித்தான்..? எதற்கு விவாகரத்து?"

"அடல்ட்ரி... கள்ளக் காதல்..." என்று அலட்சியமாக அவள் சொன்ன பாவனையில் கொதித்து போனான்.

"மை காட்! மனசாட்சி இல்லாத மிருகங்கள். பொய் சொல்வது கூடப் பொருத்தமாகச் சொல்ல வேண்டாமா? வசந்தி உன்னைபற்றிச் சொல்லும் போது இதை சொல்லவில்லையே? ஜாதகம் தோஷம் என்று தானே சொன்னாள்?"

"ஹூம்! அதுவும் உண்டு. ஆனால் அது செந்திலின் மரணத்திற்குப் பிறகு. முதலில் அது இல்லை. ஆனால் அக்காவிற்கு இதை சொல்ல நா கூசி இருக்கும். நல்ல குடும்பத்தில் பிறந்த ஒழுக்கமாக வாழ்க்கை வாழ்பவர்களுக்கு இந்த மாதிரிப் பேசுவது பிடிக்காது. ஆனால் கையில் இருக்கும் அபரிதமான பணத்தை வைத்து யார் குடியை எப்படி கெடுக்கலாம் என்று யோசிப்பவர்களுக்கு அது ஒரு பொருட்டே இல்லை..."

"இது என்ன பைத்தியக்காரத்தனம்? அவன் உன்னை பற்றித் தரக் குறைவாக, உன் நடத்தையைக்



களங்கப்படுத்தும் வகையில் சொன்னால் அதை எதிர்த்துப் போராட வேண்டாமா?"

"போராடணும் தான். கட்டாயம் எனக்கும் இந்த வேகம் வந்தது. ஆனால் பாறாங்கல்லில் முட்டினால் என்ன ஆகும்? என் மண்டை தான் உடைந்தது. ராகுல் வயிற்றில் இருந்தான். அவன் பிறக்கட்டும் டி என் ஏ டெஸ்ட் பண்ணலாம் என்று வாதாடினேன். அதற்கு வந்த பதில்... என்னை என் மன உறுதியை சுக்கு நூறாக உடைத்து விட்டது. அதன் பிறகு அவர்களின் முகத்திலேயே நான் விழிக்க விரும்பவில்லை..."

அவள் குரலில் இருந்த ஆவேசத்தைப் பார்த்து அதிர்ந்து "ப்ரியா..." என்று மெல்ல வருடும் குரலில் சொன்னான்.

"குழந்தை எனக்கு பிறந்தது தான். அது என் ஒழுக்கத்துக்கான சாட்சி தானே? ஆனால் அது எப்படி அவள் நடத்தை தவறவில்லை எனபதற்கு சான்றாகும் என்று கேட்டவனை வெட்டிக் கொன்றால் என்ன என்ற ஆத்திரம் வந்தது. அவன் செத்து போய் விட்டான் என்ற போது அவன் முகத்தில் விழிக்கக் கூடப் பிடிக்கவில்லை. அப்போதும் என் வாழ்க்கையில் நடந்த முழு விபரமும் தெரியாத என் அம்மாவுக்காக, அங்கே மனசை கல்லாக்கி கொண்டு சென்றேன். என் துரதிர்ஷ்டம் பற்றி பேசியது போதாது என்று இன்னும் பிறக்காத குழந்தையைப் பற்றி வாய்க்கு வந்த படி பேசி, ஏன் சென்றோம் என்று எங்க அம்மாவையே வருந்த வைத்து விட்டார்கள். ராகுலைப் பற்றிப் பேசியதை என்னால் மறக்க முடியாது. அவர்களை மன்னிக்கவும் முடியாது..."

''ப்ரியா... ரிலாக்ஸ்... கெட்டவங்களைப் பற்றி ஓரளவிற்கு மேல் நினைக்க வேண்டாம் ப்ரியா. அது நம் உடல் நலத்தை தான் பாதிக்கும். உனக்கு என்று உன் நலம் நாடும் உள்ளங்கள் பற்றிக் கவலை பட்டால் போதும். இந்த மாதிரி ஜென்மங்களைப் பற்றி நினைப்பது கூட பாவம். விட்டுடு. உனக்கு நான் இருக்கிறேன் ப்ரியா'' என்று அவன் ஆறுதல் சொல்ல முயன்றாலும் அவளின் கோபம் குறையவில்லை.

நான்கு ஆண்டுகளாக அடக்கி வைத்து இருந்த ஆத்திரம் பொங்கி பிரவாகம் எடுத்தது.

''நான் ஆசை பட்டது எதுவுமே எனக்குக் கிடைக்காது! கிடைத்தாலும் அது நிலைக்காது. நான் எது மேலே ஆசை பட்டாலும் அது எனக்கு இல்லாமல் போகணும் என்று என் தலையில் அந்த ஆண்டவன் எழுதி வச்சு இருக்கிறான். படிக்க ஆசைப்பட்டேன். அப்பாவின் மரணம் வந்து கெடுத்தது.

கல்யாணம் பண்ணிக் கொண்ட கணவனுக்கு ஒரு நல்ல மனைவியா இருக்கணும் என்று ஆசைப்பட்டேன். மூன்றாவது மாதம் டைவேர்ஸ் நோட்டீஸ் வந்தது.

என் மேல் குற்றம் சாட்டியது பொய் என்று நான் நிரூபிப்பேன், என்று அங்கேயே தங்கி இருந்தால், அடுத்த மூன்றாவது மாசத்தில் அவன் இறந்து போனான் என்ற செய்தி வந்தது.

நல்ல குடும்ப தலைவியா, அந்த வீட்டுக்கு மருமகளா, என் குழந்தைக்கு தாயா, அவர்களுக்கு சேவை செய்யலாம் என்று நினைத்தேன். அதுக்கும் என் புகுந்த வீட்டில் ஜாதகம் ஜோசியம் என்று ஏதேதோ சொல்லி



கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையா வெளியே அனுப்பிட்டாங்க!

இப்ப என்னால எங்க அம்மாவுக்கு குற்ற உணர்வு கண் முன்னால் என்னை பார்த்துப் பார்த்து ரத்த கண்ணீர் வடிக்கிறாங்க. என்னைப் பார்த்தால் சந்தோஷமா இருக்கிற மாதிரி நடிக்கிறாங்க. தெரிந்தும் தெரியாத மாதிரி நானும் நடை பிணமா இருக்கிறேன்.

நான் இந்த உலகத்தில் வந்தே இருக்கக் கூடாது. ஆனால் நான் பிறந்தது என் விருப்பத்தாலா? அதை தடுப்பது என் கையிலா இருக்கு? சொல்லுங்க... செத்து போகலாம் என்றாலும்... ராகுலுக்காக...''

அதுவரை மடை திறந்த வெள்ளமாக அவள் மனதில் அடக்கி வைத்து இருந்த ஆத்திரம் எல்லாம், வடிகால் கிடைத்த மாத்திரத்தில் வார்த்தைகளாக மாறி வெளி வந்து கொண்டு இருந்ததை, அவளுக்கு மன நிம்மதி கிடைத்தால் சரி பேசட்டும் என்று குறுக்கிடாமல் கேட்டு இருந்தவன் அவளின் கடைசி வார்த்தையில் கலங்கி போனான்.

''ஏய்...! என்ன உளறல் இது..?'' என்று அதட்டியவன் அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொள்ள, அவளின் விம்மல் பெரிதாகி கண்ணீர் அருவி மீண்டும் புதிதாகப் பிறந்தது.

ஐந்து ஆண்டுகளாக அவளின் மனதில் பொத்திப் பொத்தி வைத்து இருந்த துன்பம், ஆத்திரம், கோபம் எல்லாம், காட்டாற்று வெள்ளமாக பொங்கி வழிய ஆரம்பித்தது. தேற்றும் வழி தெரியாமல் அவளை அழவிட்டு மென்மையான வருடலுடன் அணைத்து நின்றான் வெற்றிவேல்.



# 15

நான்கு நாட்களுக்கு முன்பு மிருதுளாவின் கல்யாணத்தை ஒட்டி, சோழவந்தானுக்கு அத்தை வீட்டுக்கு வரும் போது 'பொழுது எப்படிப் போகுமோ? யார் யார் எதை எதை பேசி வெறுப்பேற்ற போகிறார்களோ?' என்ற மனநிலையில் வந்தான் வெற்றிவேல்.

ஆனால் கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு தற்செயலாக கிடைத்த ப்ரியாவின் அறிமுகமும் தொடர்ந்து நேர்ந்த சந்திப்புகளும் நிகழ்வுகளும் அவனை உற்சாகப் படுத்தி அவன் வாழ்வில் முக்கியமான ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி இருந்தது.

திருமண பேச்சில் அவனுக்கு இருந்த ஐந்து ஆண்டு கால ஒதுக்கத்தை மறந்து, அம்மாவிடம் 'பெண்ணை பார்த்து விட்டேன் உடனே கல்யாணம் பேச காரில் கிளம்பி வாங்க. என்னால் இரண்டு நாட்கள் கூடப் பொறுக்க முடியாது என்று மிரட்டும் அளவுக்குச் சென்று இருந்தது. இந்த மனநிலையை வெளிப்படையாக ப்ரியாவிடம் சொல்வதிலும் அவனுக்குத் தயக்கம் இல்லை.

'ஐ லவ் யூ' என்று சினிமாக்களில் தவறாமல் சொல்லும் அந்த மேஜிகல் மூன்று வார்த்தைகளை அவளிடம் சொல்லவில்லை.

'என்னை கல்யாணம் பண்ணிகோ' என்று நேரடியாக கேட்கவில்லை.



ஆனாலும் தன் செயல்களின் மூலம் நீ எனக்கு முக்கியம் என்று அவளை உணர வைக்க அவன் தயங்கவே இல்லை.

'உன்னிடம் தனியாகப் பேச வேண்டும்' என்று பின்னிரவு நேரத்தில் வீட்டுக்கே வந்து அழைக்கும் மணமாகாத ஒரு இளைஞனுடைய நோக்கம் என்னவாக இருக்கும் என்று யூகிக்க முடியாத முட்டாளோ சிறு பெண்ணோ ப்ரியா இல்லை. எனவே பேச முற்பட்டதிலேயே அவளுக்கும் அதில் உடன்பாடு இருப்பதை அவனும் புரிந்து கொண்டான்.

அதற்கும் மேலாக கடந்த காலம் குறித்த துயர நிகழ்வுகளை பகிர்ந்து கொண்ட ஆதங்கத்தில் பொங்கிய கண்ணீரை துடைத்து அவளை தன்னோடு சேர்த்து வெற்றிவேல் அணைத்த போது இயல்பாக அதை ஏற்று அவன் மார்பில் சாய்ந்து ஆறுதலும் தேடினாள். பல நிமிடங்கள் கழித்தே அவளின் கண்ணீர் பெருக்கு நின்றதை உணர்ந்து அவளை மெல்ல விலக்கினான்.

''ஐ ஆம் சாரி ப்ரியா. உன் கடந்த கால வாழ்க்கையில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரிந்து கொள்ள வேண்டி இருந்தது. அதனால் ஒரு முறை இந்த துயரம் அனுபவித்து விட்டாய். இனிமேல் இதைப் பற்றி உன்னிடம் யாருமே என் பெற்றோர் உட்பட பேச மாட்டாங்க என்று நான் உறுதி அளிக்கிறேன்.'' என்று சொல்லி அவளின் கண்களை தன் கைக்குட்டையால் மீண்டும் அழுத்தமாக துடைத்து விட்டான் வெற்றிவேல்.

''சாரி தேவை இல்லை...''

''வேறே என்ன வேண்டும். சொல்லு. உடனே தருகிறேன்..'' என்றவன் குரலில் சீண்டல் இருக்க அவள் நிமிர மெலிதாக புன்னகை செய்தாள்.

"இப்படி சிரித்த முகமாகவே இரு ப்ரியா. நம் கண்ணீர் கூட தகுதியானவர்களுக்காக தான் சிந்த வேண்டும். உன் கண்ணீருக்கு அவன் தகுதியானவன் இல்லை ப்ரியா. இனி நீ அழவே கூடாது..."

"செந்திலின் மரணத்தின் பொது கொஞ்சம் அழுதேன். ஆனால் அதற்கு பிறகு கோபம் தான் வரும் அழுகை வராது. ஆனால் இன்று இரண்டு முறை உங்களிடம்... அதுவும் மதியம் பொது இடத்தில... எனக்கே நான் அழுவது புதுசாக இருக்கிறது..." என்று தன்னையே நம்ப முடியாமல் சொல்ல அவன் புன்னகை செய்தான்.

'அழுகை எல்லோரிடமும் வந்து விடாது பெண்ணே! அவர்களை நீ மனதளவில் நெருங்கினால் இவருடன் தன் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று தோன்றினால் தான் வரும்...' என்று மனசுக்குள் சொல்லி கொண்டான். அவனின் எண்ணங்களை ப்ரியாவாலும் உணர முடிந்தது.

"உன் கடந்த காலத்தை, முதல் திருமணம் குறித்த நினைவுகளை இந்த நிமிஷத்தோடு மறந்து விட வேண்டும். அவை இனிமையானவையாக இருந்து, நினைத்து பார்த்தால் சந்தோஷம் கிடைக்கும் என்றால் பரவாயில்லை. இப்படி குமுறி அழுவதற்காக, ஒருவரை குறை சொல்வதற்காக, அவற்றை நினைக்கத் தேவை இல்லை. இனி உன் கண்ணில் இருந்து கண்ணீர் வரக் கூடாது. நான் வர விட மாட்டேன்" என்று சூளுரைக்க அவள் நிமிர்ந்து பெருமையாக பார்த்தாள்.

"இனி அவங்களுக்காக அழ மாட்டேன்... என் கண்ணீர், என் நலம் நாடும் நல்ல உள்ளங்களுக்காக தான் இருக்கும். ஐ ப்ராமிஸ்..."



"நலம் நாடும் உள்ளங்களுக்காக கூட கண்ணீர் சிந்த வேண்டுமா?"

"வார்த்தைக்கு வார்த்தை மடக்க வேண்டாம் நேரமாச்சு. போகலாமா?"

"போகலாம். நாளை மறுநாள் அம்மா வராங்க. உன்னைப் பார்த்து பேசுவாங்க தயாரா இரு..." என்று சொல்ல அவளின் முகம் லேசாக சிவந்து கனிந்ததை ரசனையுடன் பார்த்து விட்டு, அவளின் கை பற்றி மாடி படிகளில் இறங்க ஆரம்பித்தான் வெற்றிவேல்.

* * *

"என்ன வெற்றி இன்று நாள் முழுக்க ரெண்டு பெரும் தனிமையில் அவுட்டிங்கா? நல்லா என்ஜாய் பண்ணினீங்களா?" என்று வீட்டுக்குள் நுழைந்தவனை சிரிப்புடன் விசாரித்தான் ரகுராம்.

"ப்ச்! நான் என்ஜாய் பண்ணியது இருக்கட்டும். நீ தங்கசசி கல்யாணத்துக்கு என்று என்ன வேலை செய்தாய்?"

"நான் ஏற்கனவே முடிவான தங்கச்சி கல்யாணத்திற்கு வேலை செய்தேனா இல்லையா என்பது வேறே விஷயம். ஆனால் கூட பிறக்காத இன்னொரு தங்கச்சி கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ணி இருக்கேன். மிருதுளா கல்யாணத்திலேயே இன்னொரு கல்யாணத்திற்கு நாள் குறிக்கும் வேலையைச் செய்து விட்டேன். அது வரைக்கும் சந்தோஷம் தான்..." என்று பெருமையாகச் சொல்ல அவன் ஒரு கணம் கூர்மையாகப் பார்த்தான்.

"ஓஹோ! நீயும் வசந்தியும் ப்ளான் பண்ணத் தான் கழண்டு கொண்டீர்களா?" என்று கேட்க அவன் சிரித்த

சிரிப்பு அவர்கள் போட்ட திட்டத்தின் வெற்றியை பறை சாற்றியது.

''சும்மா சொல்லக் கூடாது ரகு. செம ப்ளான் செமையா வொர்க் அவுட் ஆகி விட்டது'' என்று சொன்னவன் அவனை அணைத்துக் கொண்டான்.

''ரெண்டு பேரும் பேசினீங்களா வெற்றி?''

''இங்கே அவங்க பார்லரில் தான் பேசினோம். ஆனால் நாள் முழுவதும் சேர்ந்து இருந்ததால் தானே, இங்கே வந்ததும் இயல்பாகப் பேச்சைத் தொடர முடிந்தது. தேங்க்ஸ் ரகு...''

''தேங்க்ஸ் இருக்கட்டும்! கல்யாணத்துக்கு ஓகே சொன்னாளா இல்லையா?''

''அந்த மாதிரி நேரடியா எஸ்.ஆர். நோ மாதிரி கேட்கலை ரகு. ஆனால் பிடிச்சு இருக்கு என்பதை உணர முடிந்தது.''

''பரவாயில்லை இன்னும் மிருதுளா கல்யாணத்திற்கு மூன்று நாள் இருக்கு. அத்தை வருவதற்குள் பேசி விடு'' என்று அழைத்துச் சென்றான்.

* * *

திருமணம் மதுரையில் நடக்க இருந்ததால், சோழவந்தானில் இருந்து திருமணத்திற்கு முன் தினம் காலை பத்தரை மணிக்குக் கிளம்பத் திட்டமிட்டு பேருந்து எல்லாம் ஏற்பாடு செய்து இருந்தனர். பத்து மணி வரை ப்ரியாவும் ராகுலும் வராததால் அழகு நிலையத்திற்கு அழைத்தான்.

''என்ன ப்ரியா இன்னும் கிளம்பாமல் அங்கே என்ன செய்து கொண்டு இருக்கிறாய்?'' என்று அதட்டினான்.



''இப்பவே வந்து நான் என்ன பண்றது? நான் நாளைக்குக் காலையில் கல்யாணத்திற்கு வருகிறேனே'' என்று தயக்கத்தோடு சொல்ல அவன் பல்லைக் கடித்தான்.

''என்ன விளையாடுகிறாயா? ஏற்கனவே நான் என்ன சொல்லி இருந்தேன்?''

''நீங்க சொன்னீங்க... ஆனால்... உங்க தங்கையின் நாத்தனார் கல்யாணத்துக்கு நான் ஒரு நாள் முன்னாடி வீட்டுக்கு வந்தால்...''

''நல்லா இருக்குமா இருக்காதா என்று கேள்விக்கே இங்கே இடமில்லை. உடனே கிளம்பி வா...''

''இல்லை..''

''சரி உன் மனசுக்கு சம்மதம் இல்லாத எதுவும் நீ செய்ய வேண்டாம். நீ அங்கேயே இரு. நான் தனியா வேறே வாடகை கார் எடுத்துட்டு வந்து விடுகிறேன். நாம் நாலு பேர் மட்டும் மண்டபத்துக்கு போகலாம்'' என்று அவன் சொல்லி விட்டு பதிலை எதிர்பார்க்காமல் வைத்துவிட அடுத்த பதினைந்தாவது நிமிடம் ராகுல், கற்பகத்துடன் ஆஜராகி இருந்தாள்.

பேருந்தில் ஐம்பது பேர் பயணிக்கும்போது, உடன் செல்லவே கூசிய அவள், அவன் தனியாக வாடகை கார் எடுத்து வருகிறேன். நாம் மட்டும் போகலாம் என்று சொன்னதில் அதிர்ந்து போனாள். கடவுளே! இந்த வம்பே வேண்டாம் என்று அடுத்த பத்தாவது நிமிடம் ஓடி வந்து இருந்தாள்.

இரு கோடுகள் தத்துவம் பிரமாதமாக வேலை செய்ததை எண்ணிப் பெருமையுடன் தன்னவனைப்

பார்த்து ரசனையுடன் சிரித்துக் கொண்டான் வெற்றி வேல். இவள் ஏன் இப்படி ஊராரின் பேச்சுக்கு இவ்வளவு மதிப்பு கொடுக்கிறாள் என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

அந்த வண்டியில் இருந்த முப்பது பெண்களில் புவனேஸ்வரி, கற்பகம், ப்ரியா மூவரைத் தவிர மற்ற அனைவரும் பட்டுப் புடவை நகைகள் என்று பிரமாத மாக அலங்காரம் செய்து கொண்டு இருக்க, பேருந்தில் தனி தன்மையுடன் தெரிந்த தன்னவளை அவ்வப்போது பார்வையால் தடவிக் கொண்டு இருந்தான்.

* * *

''ராகுல்... ராகுல்... மணி எட்டாச்சே! இந்த பையன் எங்கே போனான்? சாப்பிட வேண்டாமா?'' என்று புலம் பியபடி வண்ண மயமான அலங்காரத்திலும் அபரிமித மான வெளிச்சத்திலும் தேவலோகமாக மின்னிக் கொண்டு இருந்த அந்த பிரமாண்டமான கல்யாண மண்டபத்தின் வாசலுக்கு வந்த கற்பகம் தவித்தார்.

''என்னம்மா டென்ஷனா இருக்கீங்க? என்ன விஷயம்?'' என்று வாசலை ஒட்டிய அறையில் மறுநாள் கொடுக்க வேண்டிய தாம்பூலப் பையில் தேங்காய் போட்டுக் கொண்டு இருந்த வாணிப்ரியா விசாரித்தாள்.

''ராகுல் வாசலில் விளையாடிக் கொண்டு இருந்தான். சாப்பிடக் கூட்டிட்டுப் போகலாம் என்று வந்தேன். நீ பார்த்தாயா! ஆளைக் காணோமே?''

''வெற்றி அவங்க அம்மாவைக் கூப்பிட ஸ்டேஷ னுக்கு கிளம்பினாரும்மா. அவர் கூட பவித்ராவும் ராகுலும் போய் இருக்காங்க. என்னிடம் சொல்லிட்டு தான் கூப்பிட்டுப் போனார்...''



''பவித்ரா இங்கே தான் இருக்கா. ராகுலை தான் காணோம்...''

''ஒருவேளை பவித்ரா போகலையோ என்னவோ? அவங்க அம்மா வந்துட்டாங்களா?''

''இன்னும் வரலை...''

''அப்புறம் என்ன? அவங்க வந்த பிறகும் ராகுல் இல்லை என்றால் அப்ப கவலை படலாம். அவர் கூட தான் இருப்பார்'' என்று தைரியமாகச் சொன்ன மகளை கனிவுடன் பார்த்தார்.

ஒரு வாரத்தில் அவர் மீது எவ்வளவு நம்பிக்கை இவ ளுக்கு? அவருடைய பெற்றோர்கள் இன்று வருகிறார்கள். அவர்களுக்கும் இவளைப் பிடித்து விட்டால், இனி அவளின் எதிர்காலம் பற்றிய கவலையை மறந்து விடலாம்' என்று நிம்மதியோடு திரும்பியவரின் கண் களில் 'அவர்கள்' இருவரும் பட அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

அவர்கள் செந்திலின் தாய் சாரதா மற்றும் ஒன்று விட்ட தங்கை சுகன்யா. இவர்கள் எங்கே இங்கே வந்தார்கள்? அவசரமாக வசந்தியை நாடிச் சென்றார். அவர்களை கை காட்டி விசாரித்ததில் அவளுக்குத் தெரியவில்லை.

''மாப்பிள்ளை வீட்டினராக இருக்கலாமோ என்ன வோம்மா! எனக்குத் தெரியலை'' என்று கை விரித்தாள்.

அவர்கள் யார்? எதற்காக வந்து இருக்கிறார்கள் என்பதை முன்பே ஊகிக்க முடிந்து இருந்தால் வசந்தி ஒரு வேளை அவர்களோடு வாசலோடு திருப்பி அனுப்பி வைத்து இருக்க கூடுமோ? விதி வலியது அல்லவா! அதனால் அவளுக்குத் தெரியவில்லை.

ஆனால் அதைப் பற்றிய எந்த சிந்தனையும் இல்லாமல், மளமளவென்று தாம்பூலப் பையில் பொருட்களை அடுக்கிக் கொண்டு இருந்த வாணிப்ரியா, ''நீ தான் என் மகன் சொன்ன ப்ரியாவா?'' என்று கேட்டபடி கண் முன்னால் வந்து நின்ற பாலாம்பிகையைக் கண்டதும் எழுந்தாள்.

அவர் தான் வெற்றியின் தாய் என்பதைக் கண்டு பிடிக்க துப்பறியும் நிபுணர் எதுவும் தேவை இல்லையே? 'ஆமாம்மா! என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க' என்று அவரின் கால் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டவளின் கன்னத்தை லேசாக வருடி நிமிர்த்தியவர் கண்களில் கனிவும் பரிவுமே இருந்தது.

இவரை அன்று அதிசயத்தில் கோபக்காரி, சண்டைகாரி, என்று என்னவெல்லாம் சொன்னான்? முகத்தில் இருந்த புன்னகை பெரிதாக, அதை மறைத்து, தலையை தாழ்த்திக் கொண்டாள் ப்ரியா.

''வெற்றி என்னை பற்றி வில்லங்கமா ஏதோ சொல்லி வச்சு இருக்கான் போல...?'' என்று ஒரே பார்வையில் கண்டு விசாரிக்க அவளின் முகம் சிவந்தது.

''அப்படி எல்லாம் இல்லைம்மா...'' என்றவளின் முகத்தில் இருந்த சிரிப்பே அவள் சொல்வது பொய் என்று சாட்சி சொன்னது.

''வெற்றி கூட ஸ்டேஷனுக்கு வந்து இருந்த ராகுலை பார்த்தேன். துறு துறுன்னு இருக்கான் குழந்தை. நாலே நாளில் அவனிடம் தனியா வரும் அளவுக்கு நல்லா பழகி இருக்கான் போல?''

''ஆமாம்மா! நான் கூட எதிர்பார்க்கலை. ரெண்டு பேரும் அப்படி ஒட்டிகிட்டு அலையுறாங்க...''



''வெற்றிப்பா கூட அதை நம்பவே இல்லை. திரும்பத் திரும்ப சொல்லி ஆச்சரியப்பட்டாங்க தெரியுமா?'' என்று சொல்ல அவள் புன்னகை செய்தாள். இதற்கு என்ன பதில் சொல்வது?

''நகை நட்டு என்று பெரிசா எதுவும் போடாமலே கண்ணுக்கு நிறைவா இருக்கம்மா! காரில் இருந்து இறங்கிய உடனே உன்னை பார்க்க ஓடி வந்துட்டேன். வசந்தியும் மிருதுளாவும் என்னுடன் சண்டை பிடிப்பதற்கு முன்னால் அவங்களைப் பார்த்துப் பேசிடறேன். அப்புறமா உன் கூட நிறையப் பேசணும்'' என்று சொல்லிவிட்டு அவளின் கன்னத்தை வருடி புன்னகை செய்து விட்டு அவசரமாக விலகிப் போனார் பாலாம்பிகை.

அவர் அன்புடன் பேசி விட்டு சென்றதையே மீண்டும் நினைவில் ஆட விட்டு, இனிமையான நினைவுகளில் ஆழ்ந்து இருந்த வாணிப்ரியாவை கற்பகத்தின் பதட்டமான குரல் அழைத்தது.



## 16

பாலாம்பிகையின் குரலில் இருந்த கனிவையும், பெண்ணையும், அண்ணன் மகளையும் பார்ப்பதற்கு முன்பே மகனின் மனம் கவர்ந்தவளைப் பார்க்க வந்த அவரின் அன்பையும் எண்ணி நெகிழ்ந்தபடி கையில் இருந்த வேலையில் பாதி கவனமாக இருந்த வாணிப்ரியாவை அம்மாவின் குரல் கலைத்தது.

''வெற்றியோட அம்மாவும் அப்பாவும் ஸ்டேஷனில் இருந்து வந்துட்டாங்க வாணி. ஆனால் ராகுலை காணோமே?''

''நிறைய குழந்தைகள் விளையாடிட்டு இருந்தாங்க பாருங்க. மேடையில் நிறைய இடம் இருப்பதால் ஒவ்வொரு தூணை சுற்றியும் ஒளிஞ்சுக்க நிறைய இடம் இருக்கு. நிதானமா தேடிப் பாருங்க'' என்று சமாதானப் படுத்தியபடி வேலையைத் தொடர்ந்தாள்.

''அது எனக்குத் தெரியாதா? அங்கே பந்தியில் இருபது குழந்தைகளுக்கு மேலே இருக்காங்க. இவனை மட்டும் தான் காணோம். அதான் தேடுறேன்'' என்றவரின் குரலில் பதட்டம் இருக்க, அது அவளையும் தொற்றி கொண்டது.

''பயப்படாதீங்கம்மா. இங்கே தான் எங்கேயாவது இருப்பான். நான் பார்த்துக் கூட்டி வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு அந்த விசாலமான கல்யாண மண்டபத்தின் மூன்று தளங்களிலும் தேடி பார்த்தாள். காணோம்!

எங்கே போய் இருப்பான்? பிரதான சாலைக்கு செல்ல வெகு தூரம் இருக்கிறது. அங்கே தனியாக போவதற்கான வாய்ப்பு குறைவு. பசி மயக்கத்தில் தூங்கி விட்டானோ என்று தங்களுக்கு ஒதுக்கிய அறையில் பார்த்தாள். இல்லை.

விடிந்தால் திருமணம் என்ற நிலையில் குழந்தையை காணோம் என்று சொல்லவும் பயமாக இருந்தது. கை கழுவும் இடத்தில் இருந்த கழிவறைகள் ஒவ்வொன்றையும் திறந்து பார்த்தாள்.

சமையல் செய்யும் இடத்தை எட்டி பார்க்கும் போது பயம் வந்தது. சத்துணவு கூடத்தில் சமையல் செய்யும்



போது கொதிக்கும் சாம்பாரில் விழுந்து குழந்தை பலி' என்று எங்கோ எப்போதோ படித்த செய்தி நேரம் கெட்ட நேரத்தில் நினைவு வர அரங்கம் பதறியது.

''ராகுல்.. கண்ணா... எங்கேடா இருக்க...?'' என்று சொல்லும் போதே கண்ணில் நீர் பொங்கி வழிய நெஞ்சில் நடுக்கம் தோன்றியது. அவனை அழைக்கும் சப்தம் தன் காதுகளுக்கே விழாத நிலையில் அது எப்படி குழந்தையை எட்ட முடியும் என்று முயன்று சப்தமாகக் கூப்பிட்டாள்.

குழந்தைகளின் விளையாட்டு கூச்சலும், சந்தோஷ பேச்சுக்களும் மெல்லிசை கச்சேரியின் பாடல் சப்தமும் மண்டபத்தை நிறைக்க, ஒவ்வொரு வினாடிக்கும் அவளின் நெஞ்சில் கலக்கம் கூடிக் கொண்டே போனது. முகத்தில் கவலையும் கண்ணீரும் நிரம்பியது.

சமையல் செய்யும் இடத்தில் சாப்பாடு போதுமா என்று பார்க்க வந்த வசந்தி, ''வாணி, உன்னை எங்கே எல்லாம் தேடுவது? சாப்பிட வேண்டியது தானே? மணி ஒன்பதாக போகுதே! இங்கே என்ன செய்து கொண்டு இருக்கிறாய்? நேரத்தோடு உட்கார்ந்து சாப்பிடு'' என்று வருங்கால தம்பி மனைவியை கரிசனத்தோடு உபசரித்தாள்.

அவளுக்கு பதில் சொல்ல முடியாமல் வெறுமனே தலை அசைத்தாள்.

''என்ன ஆச்சு வாணி? ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?'' என்று விசாரிக்க அவளிடம் சொல்ல வாய் எடுத்த போது ரகுராமன் அழைத்தான்.

''ஒரே நிமிஷம் இதோ வந்துட்டேன்...'' என்று சொல்லி விட்டு கணவனின் கேள்விக்கு பதில் அளிக்க

போனவள் இவளை மறந்து போனாள். கல்யாண மண்டபத்தில் அடுக்கடுக்கான வேலைகள் அவளுக்காக அணிவகுத்து நிற்க சொல்லாமல் விட்ட வாணிப்ரியா வின் கவலை அவளை பாதிக்கும் என்று எதிர்பார்க்க நியாயம் இல்லை.

இந்நேரம் அம்மாவே அவனைக் கண்டு பிடித்து இருக்கலாம் என்ற நம்பிக்கையில் இருபது நிமிடங்கள் கழித்து, மீண்டும் மண்டபத்தின் பிரதான வாயிலுக்கு வந்த வினாடியே ''வாணி என்ன ஆச்சு? குழந்தை எங்கே..?'' என்ற அம்மாவின் கேள்வி துவள வைத்தது.

''இங்கே வரலையாம்மா அவன்?''

''வரலையே! என்ன வாணி, நீதானே அங்கே அனுப்பி இருக்கேன். அழைத்து வருகிறேன் என்று சொல்லி சென்றாய் இப்ப என்னைக் கேட்கிறாய்..?'' என்று அம்மா சொல்லி முடிக்கும் முன்பே கண்களில் கண்ணீர் பெருகி வழிய ஆரம்பித்துவிட்டது. கண்ணீரை அடக்கும் வழி தெரியாமல் வாசலில் அப்படியே சரிந்து விழ, அவளை தூக்கி அமர வைத்தார்.

''வாணி, என்ன பண்ற? தைரியமா இரு, குழந்தைக்கு ஒன்றும் ஆகாது. பசி மயக்கத்துல எங்கேயாவது சாய்ந்து தூங்கி கொண்டு இருப்பான். நல்லா தேடினாயா? வேறே எங்கேயாவது போய் இருக்காங்களா என்று வெற்றிக்கு போன் பண்ணி கேளு'' என்று மகளை தேற்ற முயன்றவருக்கும் கவலையும் பயமும் தோன்றியது.

''பண்ணிட்டேன்மா. ரிங் போயிட்டே இருந்தது. போனை எடுக்கலை. அவர் வண்டி ஓட்டி கொண்டு இருந்தால் போனை எடுக்க மாட்டார். வேறே ஏதாவது வேலையாக போய் இருக்கலாம்...''



''ஏன் அப்படி நினைக்கணும்? இவனும் எவ்வளவு நேரம் என்றாலும் சுத்தி கொண்டே இருப்பானே? அவனோடு கிளம்பி இருக்கலாம்...''

''இல்லைம்மா... என்னிடம் சொல்லாமல் கூட்டிட்டு போக மாட்டார்...'' என்று ஆணித்தரமாக அடித்து சொல்ல கற்பகத்தின் முகத்தில் கவலை வந்தது.

''வாணி... உன்னுடைய மாமியாரும் சுகன்யாவும் இங்கே கல்யாண வீட்டுக்கு வந்து இருக்காங்க. நான் பார்த்தேன். ஒருவேளை அவங்க...'' என்று சொல்லி நிறுத்த அவள் ஆவேசத்துடன் எழுந்தாள்.

''ஹையோ... அவங்க இங்கே எங்கே வந்தாங்க? காசுக்காக என்ன வேண்டுமானாலும் செய்ய அஞ்சாத கும்பல் ஆச்சே? ராகுல் இருந்தால் அவங்களுக்கு இடைஞ்சல் என்று, ஹையோ கடவுளே! வேகமாக எழுந்தாள். மூச்சு நின்றது போல் இருந்தது.

''அம்மா... உடனே போலீசுக்கு போகணும். வாங்க. இனி ஒரு நிமிஷம் கூட இங்கே என்னால் இருக்க முடியாது. உடனே அவனை எனக்கு பார்க்கணும். இதற்கு மேல் தாங்க முடியாது...''

''பொறு வாணி! அவசரபடாதே. இங்கேயே மெல்லிசை கச்சேரி நடக்கும் இடத்தில் மைக்கில் சொல்லுவோம். அப்புறம் கண்டு பிடிக்க முடியலை என்றால் யாரையாவது துணைக்கு அழைத்து கொண்டு போலீஸ் ஸ்டேஷன் போகலாம் வாணி'' என்று கற்பகம் தடுக்க அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு அவசரமாக எழுந்த போது, வாசலில் இருந்து, உற்சாகத்துடன் கையில் ஒரு பரிசு பொட்டலத்துடன் ஓடி வந்த ராகுல் கண்ணில் பட்டான்.

"டேய்! எங்கேடா போன இவ்வளவு நேரம்...?" என்று ஆத்திரத்தோடு விசாரித்தவளின் மனநிலை புரியாமல், "நானும் வெற்றி அங்கிளும் ஜாலியா ரைட் போனோம்மா! அங்கே.." என்று அவன் பேசப் பேச நிற்காமல் வேகமாக வெளியே செல்லும் அம்மாவை வியப்புடன் பார்த்தான் ராகுல். அடுத்த வினாடி அம்மாவை மறந்து, அவன் சென்ற இடத்தில் கண்ட அதிசயத்தை பெருமையுடன் பாட்டியிடம் விவரிக்க கிளம்பிவிட்டான்.

'நான் வெற்றி அங்கிளுடன்...' என்று ஆரம்பித்த உடனேயே அவளின் கோபம் முழுக்க முழுக்க குழந்தையை விட்டு அவனிடம் திரும்ப வேகமாக வாசலுக்கு வந்தவள் கண்களில் காரை நிறுத்தி விட்டு சின்ன விசிலுடன் நடந்து வந்து கொண்டு இருந்த வெற்றிவேல் பட, வேகமாக அவனிடம் சென்று, அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்.

கண் இமைக்கும் நேரத்தில் தன் கன்னத்தில் விழுந்த அறையை கனவிலும் எதிர்பாராத வெற்றிவேல் ஒரு கணம் திகைத்து நின்றான்.

"ப்ரியா, என்ன ஆச்சு? எதுக்கு இவ்வளவு கோபம்?" என்று சாதாரணமான குரலில் விசாரிக்க முயன்றவன் அடுத்த கணம் அவள் மீண்டும் அறைய முயன்ற போது உடனே தடுத்து நிறுத்தினான். அவன் பிடியில் இருந்து தன் கைகளை உதறி விடுவிக்க முயன்றவளால் முடியவில்லை.

"இங்கே ஒருத்தி பெற்றவள் என்று நான் எதற்காக இருக்கிறேன்? என் பையனை என்னைக் கேட்காமல் எங்கே கூட்டிட்டு போனீங்க? முதலில் கையை விடுங்க" என்று பல்லை கடித்து கொண்டு ஆத்திரமாகச் சொன்னது



அவனைக் கோபமூட்டியது. அவளின் கோபத்தை கொஞ்சமும் சட்டை செய்யாமல், அவளின் கேள்விக்கு பதில் சொல்லும் எண்ணமே இல்லாமல், கையை பிடித்து இழுத்தபடி நடந்தான்.

"விடுங்க! விடுங்க என்னை! எங்கே அழைச்சுட்டு போறீங்க? யாராவது பார்த்தால் என்ன நினைப்பாங்க? மண்டபம் முழுக்க உங்க சொந்தகாரங்க இருக்காங்க. அதை எல்லாம் நினைத்து பார்த்தீங்களா?" என்று அவள் அடுக்கிய கேள்விகள் ஒன்றுக்குமே அவனிடம் இருந்து பதில் இல்லை.

இரண்டு முழு நிமிடங்கள் காதே கேட்காதவனை போல நடந்து சென்றவன், அந்த மண்டபத்தின் வெளிச்சம் எட்டாமல், மங்கலாக இருந்த தோட்டத்து பார்க்கிங் பகுதிக்கு சென்றதும், ஒரு காரின் பேனட் பகுதியில் அவளை நிறுத்தி, அவளின் இரண்டு புறமும் கைகளை பதித்து அவளை முறைத்தான்.

"இப்ப அடி..." என்று கடினமான குரலில் சொல்ல அவள் திகைத்து நின்றாள்.

"அது வந்து..." சுற்றிலும் இருந்த இருட்டும், தனிமையும் அவன் முகத்தில் இருந்த கோபக் கனலும் அவளுக்குள் குளிர் பரப்பியது.

'பையனை காணோம்' என்ற பதட்டத்தில் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் தன்னை விட வயதில் மூத்த, சமுதாயத்தில் உயர்ந்த ஒரு அந்தஸ்தில் இருக்கும் ஒரு ஆண்மகனை கை நீட்டி அடித்து இருக்கிறோம் என்பது தாமதமாக உரைத்தது. இனி உரைத்து என்ன பயன்?

''அடி என்று சொல்றேனில்ல....'' என்று மீண்டும் கடினமான குரலில் உறுமலாகச் சொல்ல, ''சாரி..'' என்று முணுமுணுத்தாள்.

''செய்வதை எல்லாம் செய்து விட்டு சாரி சொன்னால் சரியா போச்சா?''

''என்ன பேசறீங்க? நான் எவ்வளவு நேரமா ராகுலை காணோம் என்று எப்படி தேடி, அவனுக்கு என்ன ஆச்சோ என்று பதறி துடித்துக் கொண்டு இருக்கிறேன். நீங்க சாவகசமா காரில் ரைட் போனோம் என்று வந்து சொன்னான். எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? பத்து மாசம் சுமந்து பெற்ற என் வயிறும் நெஞ்சும் துடித்த துடிப்பு உங்களுக்குத் தெரியுமா?''

இப்ப வந்து கேள்வியா கேட்கறீங்க? இப்பவும் உங்களுக்கு நான் அடித்தது தான் பெரிசா போச்சு இல்லை... என் மனசு பட்ட பாடு... புரிஞ்ச மாதிரி தெரியலை...''

''ப்ரியா நான் அம்மாவை கூப்பிட ஸ்டேஷனுக்கு ராகுலை அழைத்து போகிறேன் என்று சொல்லி விட்டுத் தானே போனேன்? அப்புறம் என்ன?''

''அப்புறம் என்ன என்று சாவகசமா கேட்கறீங்க. உங்க அம்மா அப்பா வந்த பிறகும் அவன் இல்லை என்றால் நான் என்ன நினைப்பது? போதாதற்கு.. அந்த சாரதாவும்... சுகன்யாவும்.. இங்கே வந்து... அவங்களை பார்த்த உடனே... எனக்கு...'' என்றவள் அது வரை இருந்த கோபத்தை கை விட்டு, கையால் முகத்தை மூடிக் கதறி அழுதபடி தரையில் சரிந்தாள்.

''நான் எது மேலே ஆசை பட்டாலும் அது எனக்கு இல்லாமல் போகணும் என்று என் தலையில் அந்த ஆண்டவன் எழுதி வச்சு இருக்கிறான். நான் மற்றவரை



குற்றம் சொல்லி என்ன செய்வது? என் குழந்தை தான் என் எதிர்காலம் என்று வாழ்ந்து கொண்டு இருக்கும் போது, நான் அப்படி எண்ணி ஒவ்வொரு வினாடியும் அவனின் நலன் நாடி துடித்து கொண்டு இருக்கும்போது, அவனும் இல்லை என்று ஆனால் நான் இந்த உலகத்தில் உயிரோடு இருப்பதற்கே அர்த்தம் இல்லை...'' என்று கண்ணீருடன் புலம்ப அவன் விக்கித்து போனான்.

இதை அவள் ஏற்கனவே சொல்லி இருக்கிறாள்! ஏற்கனவே குழம்பிய மன நிலையில் இருப்பவள் அவர்களை எதிர்பாராமல் இங்கே கண்டவுடன் ராகுலுக்கு என்னவோ என்று பதறிவிட்டாள்! இந்த நிலையில் தான் கோபம் கொள்வது நியாயம் இல்லை.

''ப்ரியா.. ப்ரியா.. ஐ ஆம் சாரி ப்ரியா.. என்னை பாரேன்... அழாதே ப்ரியா.. ப்ளீஸ்..'' என்று அவன் சொன்ன வார்த்தைகள் எதுவும் அவள் காதுகளை எட்டாமல், கடந்த ஆறு வருடங்களில் அவளின் வாழ்க்கையை புரட்டி போட்ட நிகழ்வுகளை ஒவ்வொன்றாக மீண்டும் அனுபவித்து அந்த வழியை உணர்ந்து கதற அதை கண் கொண்டு பார்க்க முடியாமல், அவளை எழுப்பி இருக்க அணைத்து கொண்டான்.

''ப்ரியா... அவனை உன்னிடம் சொல்லாமல் ராகுலை வெளியே அழைத்து போனது தப்பு தான் ப்ரியா... மன்னிச்சுக்கோ உன்னிடம் சொல்லிட்டு போய் இருக்கணும். கூட்டத்தில் உன்னைக் கண்டு பிடிக்க முடியலை. அரை மணி நேரத்தில் வந்து விடலாம் என்று போனேன் டா!'' என்று சமாதானம் சொல்லியும் அவளின் அழுகை நிற்காமல் தொடர அவசரமாக அந்த காரின் கதவை திறந்து அவளை உள்ளே அமர வைத்தான்.

காரை கிளப்பி சில நிமிடங்கள் பயணம் செய்த பிறகு போக்குவரத்து குறைவான ஒரு சாலையில் நிறுத்தினான். அவள் அருகே நெருங்கி அமர்ந்தவன் அவளின் முகத்தை பற்றி தன் புறம் திருப்பினான்.

''அம்மா அப்பா வைகையில் வந்தாங்க. அவங்களை ஸ்டேஷனில் கூப்பிட போனேன். அங்கே அதே ரயிலில் தருண் ஆதித்யா வந்ததை பார்த்ததும் அவரிடம் ராகுல் ஆட்டோக்ராப் வாங்கணும் என்று சொன்னான். குழந்தையின் ஆசையை தட்ட முடியாமல் பாண்டியன் ஹோட்டலில் அவர் தங்கி இருக்கிறார் என்று தெரிந்ததும் கூட்டிட்டு போனேன் பிரியா. சாரி'' என்று சொன்னதும் அவள் கண்களில் மீண்டும் புதிதாக கண்ணீர் சுரந்தது.

''அம்மா அப்பாவை இங்கே கொண்டு வந்து மண்டபத்தில் விட்டுட்டு போனேன். அங்கே அவர் என்னை தெரிந்தவர் என்பதால் குழந்தையை அவனோடு நிற்க வைத்து ஒரு போட்டோ எடுத்துட்டு கிளம்பினோம். அவரே டின்னர் சாப்பிட்டுட்டு போகலாம் என்று உபசரித்தார். ராகுலின் ஆசையை நினைத்து பார்த்தாயா? அவரோடு அருகே அமர்ந்து பதினைந்து நிமிடம் செலவு பண்ணினால் அவன் எவ்வளவு சந்தோஷபடுவான் என்று நினைத்தேன். என்னால் மறுக்க முடியவில்லை. அங்கே சாப்பிட்டு விட்டு கிளம்பியதால் லேட் ஆகி விட்டது.

''நான் உங்களுக்கு போன் பண்ணினேன் தெரியுமா..? அப்ப எடுத்து ஒரு வார்த்தை பேசி இருந்தால்... இல்லை ஒரு மெசேஜ் பண்ணி இருந்தால் நான் இந்த அளவு பதறி இருக்க மாட்டேனே? என் நிலைமையை



கொஞ்சம் யோசித்து பார்த்தீங்களா?'' என்று விம்மியவளின் பதட்டம் இன்னும் குறையவில்லை. கண்களில் அந்த அதிர்ச்சியும் பயமும் குடி கொண்டு இருந்தது.

''உன் நிலைமையை நான் குறை சொல்லலை எனக்குப் புரியுது. ஆனால் கொஞ்சம் யோசிச்சு பாரு. என் மாமா பொண்ணு கல்யாணம். எங்க அம்மா அப்பாவை ஸ்டேஷனுக்கு அழைக்க போன எனக்கு எவ்வளவு வேலை இருக்கும்? அதை எல்லாம் விட்டுட்டு, ராகுலை தருண் ஆதித்யாவிடம் அறிமுகப்படுத்த வேண்டும் என்று நினைத்தால் எனக்கு அவன் மீது எவ்வளவு பிரியம் என்பதை யோசிச்சு பார்த்தாயா? அவனுக்கு ஒரு ஆபத்து என்றால் என் மனசு தாங்காது ப்ரியா...''

''பிரியம் உங்களுக்கு மட்டும் தான் இருக்கா? எனக்கு இருக்காதா? அதுவும் காசுக்காக எந்த பாதகத்தையும் செய்ய அஞ்சாத ஒரு கும்பலை இங்கே பார்த்த பிறகு எனக்கு... எப்படி இருந்து இருக்கும்... அதெல்லாம் உங்களால் உணர முடியாது...''

''ஷட் அப் ப்ரியா, வாய்க்கு வந்ததை பேசாதே'' என்று அதுவரை அமைதியாக அவளைச் சமாதானப் படுத்த வேண்டும் என்ற பாவனையில் பேசியவன் இப்போது குரலை உயர்த்தி அதட்டினான்.

''என்னைப் பார்த்து அவன் மேல் அக்கறை இல்லை என்று சொல்லி விட்டாயே? நீ பத்து மாசம் அவனை வயிற்றில் சுமந்தாய். நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால் தந்தை என்பவன் மட்டும் பாசம் இல்லாதவன் இல்லை. அவன் காலம் எல்லாம் குழந்தையையும் அதை பெற்றவளையும் சேர்த்து நெஞ்சில் சுமப்பவன்...'' என்று அடி மனதில் இருந்து பொங்கிய

பாச உணர்வுடன் சொன்னவன் அவளை இழுத்து தன்னோடு சேர்த்து அணைத்தான்.

"எனக்கு ராகுலும் வேண்டும். நீயும் வேண்டும் ப்ரியா. அவன் உன் மகன் இல்லை. என் மகன். போதுமா..?" என்று சொல்ல அவள் மெல்ல அவன் அணைப்பில் இருந்து விடுபட்டாள்.

"கடைசியா என்ன சொன்னீங்க? திருப்பி சொல்லுங்க..." என்று கேட்டவளின் முகத்தில் கோபம் இருக்க அவன் திகைத்தான்.



## 17

மகனை காணோம் என்ற பதட்டத்தில் அவள் செய்த எல்லாமே சரி என்பதை புரிந்து கொண்டு, அவளை சமாதானப்படுத்தி, 'நீயும் ராகுலும் எனக்கு வேண்டும். அவன் என் மகன்' என்ற உத்திரவாதத்தை மனப்பூர்வமாக கொடுத்த பின்பும் இப்படி விலகி அமர்ந்து கேள்வி கேட்ட ப்ரியாவைப் பார்க்கையில் அவனுக்குக் குழப்பம் வந்தது.

"ஹேய் என்ன ஆச்சு? திரும்ப முருங்கை மரம் ஏறியாச்சா இப்ப என்ன கோபம்?"

"கடைசியா என்ன சொன்னீங்க? அதை திருப்பி சொல்லுங்க..?" என்று அவள் அதிலேயே நின்றாள்.

"என்ன சொன்னேன்? நல்ல விஷயம் தானே சொன்னேன்? ராகுல் உன் மகன் இல்லை... என்



மகன்..." என்று அவன் மீண்டும் அழுத்திச் சொல்லும் போதே அவன் முதுகில் ஒரு அடி பலமாக விழுந்தது.

"இப்ப எதுக்கு உனக்கு இந்த கோபம்? உன்னை பற்றி நான் அம்மாவிடம் சொல்லியாச்சு, இந்நேரம் கல்யாண மண்டபத்தில் அம்மா உன்னை வலை வீசி தேடிட்டு இருப்பாங்க..." என்று சொல்ல அவள் பதறினாள்.

"ஹையோ... நான் போகணும்.. ராகுல் சாப்பிடவே இல்லையே..."

"விடிய விடிய ராமாயணம் கேட்டுட்டு சீதைக்கு ராமன் சித்தப்பா என்று சொல்லும் பரம்பரையில் வந்து இருக்காயா?" என்றதும் அவன் சொன்ன தருண் ஆதித்யாவுடன் டின்னர் சாப்பிட்டதை சொன்ன கதை நினைவுக்கு வந்தது.

"ஓ! மறந்துட்டேன்..."

"நீ அதை மட்டுமா மறந்தாய்? நிறைய விஷயத்தை மறந்து விட்டாய். என்னை பார்த்த உடனே என்னவோ கேள்வி கேட்டியே? அதை இப்ப திருப்பி கேளு..." என்று சீண்டியவன் குரலிலும் கண்களிலும் சிரிப்பு இருந்தது.

"என்ன கேள்வி...? அதையும் மறந்துட்டேன்" என்று சொன்னவளின் முகத்தில் இப்போது சிரிப்பு வந்து இருந்தது.

"அது எப்படி மறக்கும்? அவ்வளவு ஆவேசமா என்னை அறைஞ்சு கேள்வி கேட்டாய்? இப்ப மறந்து விட்டது என்று கதையா சொல்கிறாய்? கேளு..."

"நி..ஜ..மா மறந்துடுச்சுங்க..."

''அப்ப இங்கே இருந்து போக முடியாதுங்க...'' என்று அவளை மாதிரியே பாவனையுடன் சொல்ல அவள் சிணுங்கினாள்.

''என்ன நீங்க இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறீங்க? ஞாபகம் வந்த உடன் நீங்க எங்கே இருந்தாலும் கட்டாயம் கூப்பிட்டு கேட்கிறேன். இப்ப போகலாம்.''

''யார் வேண்டாம் என்கிறார்கள்? கேள்வியை நீ கேளு. பதிலை நான் சொன்ன உடனே நீ தாராளமா இங்கே இருந்து போகலாம் அதுவரைக்கும் போக முடியாது'' என்று தீவிரமாக சொன்னவன் கைகள் அவளை சேர்த்து அணைத்து இருந்தது.

''உங்களையும் கல்யாண வீட்டில் தேட மாட்டாங்களா?''

''கட்டாயம் தேடுவாங்க அதுவும் நான் அம்மாவையும் அப்பாவையுமே ஆட்டோவில் அனுப்பி வைத்து விட்டு கூடுதலா ரெண்டு மணி நேரம் காணாமல் போனதுக்கு ரகுவிடம் இருந்து எனக்கு அடி விழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை...''

''அப்புறம் ஏன் பிடிவாதம் பிடிக்கிறீங்க? கிளம்புங்க...''

''பிடிவாதம் பிடிப்பது நீதான்! உண்மையிலேயே நீ மறந்து இருந்தால் அதை என்னால் உணர முடியும். நீ சொல்லமாட்டேன் என்கிறாய். அதனால் தான் நானும் அதிலேயே குறியாக இருக்கிறேன். அதுக்கு நான் ஒரு பதில் சொல்லணும்... என்று அவன் தீர்மானமாக சொல்ல அவள் தலையை குனிந்து ஒரு கணம் யோசித்தாள்.

பின் நிமிர்ந்து அவன் கன்னங்களை பற்றி, ''ஐ ஆம் சாரி. நான் அப்போ சொன்னது தப்பு தான். உங்களுக்கு



ராகுல் மேலே பொறுப்பு இருக்கு. இனிமேல் அப்படி பேச மாட்டேன். மன்னிச்சுடுங்க...'' என்று தாழ்ந்த குரலில் உறுதியாக சொல்ல அவன் கரங்கள் உயர்ந்து அவளின் இடையை வளைத்து அருகே இழுத்தது.

''இதில் கேள்வி எங்கே இருக்கு...? நீ கேள்வியை கேளு...'' என்று மீண்டும் சொன்னவன் குரலில் எல்லை இல்லாத அன்பும் கனிவும் பொங்கி வழிந்தது.

''அப்பா! சரியான உடும்பு...'' என்று சலித்து கொண்டவள் சின்ன சிரிப்போடு ''யாரை கேட்டு என் பையனை வெளியே அழைச்சுட்டு போனீங்க..?'' என்று கேட்டதும் சத்தம் போட்டு சிரித்தான்.

''இது.. இது.. இதை தான் எதிர்பார்த்தேன்...'' என்று சொல்லி அவளை மீண்டும் தன் அணைப்புக்குள் கொண்டு வந்து, அவளின் கன்னங்களை வருடியபடி, சிரிப்புடன் ''அவன் என் பையன் யாரையும் நான் ஏன் கேட்கணும்?'' என்ற எதிர்கேள்வி வந்த வேகத்தில் அவள் கரைந்தாள்.

''என் பையனை, நான் வெளியே அழைச்சுட்டு போக, நான் யாரை கேட்கணும்...? இது தான் என் பதில். பதில் சரிதானே..?'' என்று கேட்டவன் நெற்றி அவளின் நெற்றியோடு உறவாடி கொண்டு இருந்தது.

''இல்லை.. தப்பு..'' என்றவளின் வார்த்தைகளை கேட்டு அதிர்ந்து விலக அவனின் கன்னத்தை பற்றி அருகே இழுத்தவள் அவன் செய்த மாதிரியே அவன் நெற்றியில் நெற்றியை பதித்து, அவன் மூக்கை மூக்கால் மெல்ல உரசியபடி, ''அவன் என் பையன் என்று சொல்ல கூடாது. நம்ம பையன்...'' என்று சொல்ல வந்த

வார்த்தைகளை முடிக்கக் கூட அவள் இதழ்களுக்கு சுதந்திரம் இல்லை.

அவன் 'நம் மகன்' என்று சொன்ன வேகத்தில், அவளின் இதழ்களை தன் இதழ்களால் மூடி சிறையிட்டு அவன் மார்பில் சாய்ந்து இருந்த வாணிப்ரியாவை இறுக்கி அணைத்து கொண்டான் வெற்றிவேல்.

என்னுடன் சேர்ந்த சொர்க்கத்தை இனி ஒரு வினாடி காலம் கூட கை விடமாட்டேன் என்று சொல்லாமல் சொல்லும் விதத்தில் இறுக்கமாக இருந்த அணைப்பில் இடைவெளி எதுவும் இருக்கவில்லை.

வினாடிகள் செல்லச் செல்ல, மார்பு சட்டையில் ஈரம் உணர்ந்த பின்பே அவளின் தடையை பற்றி நிமிர்த்தி அவளின் முகத்தை ஆராய்ந்த போதும் இடது கரம் அவளை சுற்றி இருந்த அணைப்பை விடவில்லை.

''என்ன ஆச்சு ப்ரியா? இப்ப ஏன் இந்த கண்ணீர்?'' என்று கேட்டதும் வேகமாக மார்பில் புதைத்து கொண்டவளால் பேச முடியவில்லை.

''எதுக்கு கண்ணீர் என்று சொல்லாவிட்டால் போகுது. இது சோகத்துல, கோபத்துல வந்த கண்ணீர் இல்லையே? ஆனந்த கண்ணீர் தானே?'' என்று சிரிப்போடு கேட்டு அவள் நெற்றியில் முட்டியவனை நெஞ்சில் குத்தினாள்.

''ஹேய் நோ... அங்கே வன்முறை வேண்டாம். எனக்கு வேண்டிய நிறைய பேர் அங்கே குடி இருக்காங்க. உனக்கு நிஜமாவே என்னை அடிக்கணும் என்று தோன்றினால், கை கால் எல்லாம் எப்படி இருக்கு என்று பாரு. இன்னும் சொல்ல போனால் ஒரு கன்னத்தில் தான் அடித்து இருக்கிறாய். இந்த கன்னம் காத்திருக்கிறது...



அங்கே அடி... உன் அடி என்னை ஒண்ணும் பண்ணாது...'' என்று பெருமையாக சொல்ல அவள் முகம் சிவக்க ஒரு கையால் அவன் காட்டிய கன்னத்தை கிள்ளி இதழில் ஒற்றி கொண்டாள்.

''ஹேய்... என்ன இது.. புது மாதிரியான ரியாக் ஷன்..?'' என்று ரகசியமாக கேட்டு அவளின் முகத்தை நிமிர்த்த அவள் கண்கள் அனிச்சையாக மூடி கொண்ட தால் மூடிய கண்களின் மேல் மிக மென்மையாக முத்தமிட்டான்.

அந்த அணைப்பும் மென்மையான முத்தமும் அவளை வேறு உலகத்திற்கு அழைத்து சென்றது. மேலும் அவளை நெருங்க துடித்த மனதிற்கு சிரமப்பட்டு கடிவாளமிட்ட வெற்றிவேல் பெருமூச்சுடன் விலகி னான்.

''போதும் ப்ரியா, இதுக்கு மேலே இங்கே தனியா இருந்தால் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாமல் போய் விடும்'' என்று சொல்லி ஒரு பெரு மூச்சுடன் விலகுவதற்கு முன்பு அவசரமாக கன்னத்தில் ஒரு முத்தமிட்டு விட்டு காரை கிளப்ப, அமைதியுடன் பயணம் தொடர்ந்தது. ரசனையான சிரிப்புடன் அடிக்கடி அவளின் முகத்தை திரும்பி பார்த்து கொண்டே வண்டி ஓட்டினான்.

''என்ன சிரிப்பு?'' என்று கேட்டதும் அவன் சிரிப்பு மேலும் பெரிதாக விரிந்தது.

''சொல்லிட்டு சிரிங்களேன்...''

''வரும்போது அவ்வளவு கேள்வி கேட்டாயே? இப்ப சத்தமே காணோம் என்று நினைத்தேன். சிரிப்பு வந்து விட்டது.''

''சாரி...''

''சாரி இருக்கட்டும். அதென்ன யாரிடமோ பேசுவது மாதிரி அப்படியே மொட்டையாய் வாக்கியம் நிக்குது. நீ என்னிடம் தான் பேசுகிறாய் என்பதை நான் எப்படி அறிந்து கொள்வது?''

''இங்கே நாம் இரண்டு பேர் தானே இருக்கிறோம்...''

''நான் இங்கே என்று சொல்லவில்லை பொதுவாக சொல்கிறேன். எப்போதுமே நீ அப்படி தான் பேசு கிறாய்..?''

''வேறென்ன சொல்லச் சொல்றீங்க? சார் என்று வேண்டுமானால் சொல்லட்டுமா?''

''சாரா..? ரொம்ப கேவலமா இருக்கு..''

''எப்பவாவது ஒரு முறை பேச்சில் சொல்றது வேறே. ஆனால் பொட்டில் அடித்த மாதிரி ஒவ்வொரு முறையும் பேர் எல்லாம் சொல்லி கூப்பிட முடியாது...''

''அப்ப உறவு சொல்லி கூப்பிடு...''

''மாமா..?''

''வயசான மாதிரி இருக்கு...''

''மச்சான்..?''

''சென்னை சூழலுக்கு உவ்வே...''

''அப்ப அத்தான் ஓகே?'' என்று கேட்டவளின் கண்களில் தெரிந்த பிரகாசம் அவன் முகத்தையும் மலர வைத்தது.

''ஸ்வீட்டா இருக்கு.. அப்படியே சொல்லும்போதே... ஜில்லுன்னு உள்ளுக்குள் அப்படியே லவ் பொங்கி



வருது'' என்று கண்கள் செருக கிறக்கமாகச் சொல்ல, அவள் ரசித்து சிரிக்கும் வேளையில் கல்யாண மண்டபம் வந்திருக்க, காரின் வேகத்தை குறைத்தான்.

''என்ன நிறுத்திட்டீங்க?'' என்று கேட்டவளுக்கு காரணம் புரியாமல் இல்லை. இந்த சில நிமிட தனிமையும், அது தந்த சுகந்த நினைவுகளின் தாக்கமும் அவளுக்கும் இருந்ததே! நாளை கல்யாணம் முடிந்தால் கிளம்பி விடுவான். அப்புறம் அவன் பெற்றோர்களுடன் பேசி இங்கே வந்து... நடுவில் அவங்க அம்மா அப்பா வின் சஷ்டியப்த பூர்த்தி விழா வேறு இருக்கிறது. பெருமூச்சு வெளியேறியது.

''அம்மாவிடம் ஏற்கனவே சொல்லிட்டேன், இந்நேரம் அத்தையிடம் பேசி இருப்பாங்க. சீக்கிரமே கல் யாணத்தை முடிச்சுட்டு சென்னைக்கு வர பாரு...'' என்று காதலோடு சொன்னவன் மீண்டும் அவளை அணைத்து முத்தமிட்டான்.

''இதென்ன ஒரு வழி பாதையா? கொடுத்தால் ஒன்றுமே திருப்பி வரவே மாட்டீங்குதே...'' என்று சொன்னவன் இதழ்கள் அவளின் கன்னத்தில் உரசி ஜிமிக்கியோடு ரகசியம் பேசியது.

''எல்லாம் வர வேண்டிய நேரத்தில் கரெக்டா வந்து விடும்...'' என்று சொன்னவளின் கரங்கள் அவன் கழுத்தை சுற்றி வளைத்தது.

''லேட் ஆனால் வட்டி போடுவேனே. பரவாயில் லையா...?'' என்று வம்பு பண்ணியவன் கரங்கள் முதுகில் படர்ந்து இறுக்க அவள் மேலும் உருகிக் கரைந் தாள்.

''அத்தான்...''

''ம்ம்ம்ம்...''

''மணியாகுது...''

''ஆகட்டும்...''

''மண்டபத்துக்கு போக வேண்டாமா?''

''போகலாம்.. போகலாம்...''

''நம்மளை தேடப் போறாங்க'' என்று சொன்னதும் அவன் மெல்ல சிரித்தான்.

''ஹா ஹா! யாரு தேடுவாங்க என்று இவ்வளவு கவலைப் படுகிறாய்?'' என்றவன் கரங்கள் கன்னத்தை வருட கண்கள் குறும்பாக சிமிட்டியது.

''ராகுல்..'' என்று தயக்கமாக சொன்னவளின் முன்பு அவன் கைகடிகாரத்தை காண்பிக்க, அது மணி பதினொன்று என்று சொன்னதும் விலகினாள்.

''ஹையோ! இவ்வளவு நேரமா பேசிட்டு இருந்தோம். கடவுளே!? போகலாம். போகலாம். நீங்க வண்டியை கிளப்ப விட்டால் நானே இறங்கி நடந்து போகிறேன்'' என்று சொல்லி விட்டு இறங்க, அவன் சிரிப்போடு பார்த்து கொண்டு இருந்தான்.

சில எட்டுக்கள் நடந்த பிறகே அவன் தன்னை நிறுத்த வில்லை என்பதை உணர்ந்து திரும்பிப் பார்க்க அவன் பறக்கும் முத்தம் ஒன்றை தந்து விடை கொடுக்கும் பாவனையில் கை அசைக்க அவளுக்கு அப்போதுதான் விஷயம் புரிந்தது.

அவன் தன்னுடன் சேர்ந்து வர விரும்பவில்லை. கல்யாணம் நடப்பது முழுக்க முழுக்க வேறு விஷயம்.



ஆனால் இருவரும் சேர்ந்து இந்நோத்தில் தனியாக வந்து காரில் இறங்குவது பலர் பேச வாய்ப்புக் கொடுக்கும். இவன் என் மனதை அறிந்தவன் என்ற பெருமை பொங்கி வழிய உல்லாசமாக நடந்தாள்.

நான் போகிறேன் மேலே மேலே
பூலோகமே காலின் கீழே
விண்மீன்களின் கூட்டம் என் மேலே
பூ வாளியின் நீரை போலே
நீ சிந்தினாய் எந்தன் மேலே
நான் பூக்கிறேன் பன்னீர் பூ போலே

தடுமாறி போனேன் அன்றே உன்னை பார்த்த நேரம்
அடையாளம் இல்லா ஒன்றை கண்டேன் நெஞ்சின் ஓரம்
ஏன் உன்னை பார்த்தேன் என்றே உள்ளம் கேள்வி கேட்கும்
ஆனாலும் நெஞ்சம் அந்த நேரத்தை நேசிக்கும்



## 18

ராகுலை காணோம் என்று தவித்த போது கல்யாண மண்டபம் முழுவதும் ஓடி ஓடித் தேடியவளின் கால்கள் இப்போது பின்னியது.

தங்களுக்கு ஒதுக்கப்பட்ட அறையில், ராகுல் மடியில் தூங்கி கொண்டு இருக்க, விடிவிளக்கு வெளிச்சத்தில்

கற்பகம் பாலாம்பிகையுடன் அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தார். மெல்லக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தவளைப் பார்த்த பாலாம்பிகையின் முகம் மலர்ந்தது.

''வா. ப்ரியா? வெற்றி உன்னைப் பற்றி தான் மூன்று நாளா ஒரே புராணம் படிச்சுட்டு இருக்கான். உன்னை தான் தேடி கொண்டே இருந்தேன். சாப்பிட்டு விட்டு வந்து பார்த்தால் அதற்கு பிறகு ஆளையே காணோம். வா சாப்பிட்டாயா?'' என்று அவர் பேசப் பேச, பிரமை யுடன் நின்று இருந்தாள்.

அவன் சும்மா ஒரு பேச்சுக்கு சொல்கிறான் என்று நினைத்தால் மூன்று நாட்களுக்கு முன்பே சொல்லி விட்டானா? எப்படி? தன்னிடம் கூட கேட்கவே இல் லையே? அவனை பிடித்து இருக்கிறது என்ற சந்தேகம் தன் மனதில் இருந்தாலும் கூட, ஐயம் இன்றி தெளிந்தது. இப்போது தானே? அதற்குள் அவன் அம்மாவிடம் பேசி இருக்கிறான் என்றால் எப்படி?

''வாணி, செந்திலோட மாமியார் உன்னை கேட்டாங்க. பார்த்து பேசிடு இல்லை என்றால் சிரமம்...'' என்று தாழ்ந்த குரலில் சொல்ல அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''செந்தில் அவளின் முன்னாள் கணவனை பற்றி இவருக்குத் தெரியுமா? வெற்றிவேல் சொல்லி இருப் பானா? மூன்று வயது மகனுடன் இருக்கும் விதவை தாயை, வசதியில் இருக்கும், திருமணம் ஆகாத தன் ஒரே மகனுக்கு மணமுடிப்பார் என்று எப்படி எதிர்பார்த் தாள்?

அன்றே அதிசயத்தில் பாதி பேச்சில் நான் யார் என்று அவனிடம் கேள் என்று சொல்லி பாதி பேச்சில்



போனை துண்டித்தவர் ஆயிற்றே? திகைப்புடன் அவரைப் பார்க்க அவரும் அமைதியாக அவளைப் பார்த்தார்.

''நீ வேண்டுமானால் பேசிட்டு வந்துடும்மா. ஆனால் மணி பதினொன்று ஆகி விட்டதே? இன்னும் விழித்து இருப்பார்களா?''

''இருப்பாங்க அண்ணி. கட்டாயம் இருப்பாங்க இவளிடம் பேசாவிட்டால், அவருக்கு தூக்கமே வராது'' என்று மறை பொருளில் வஞ்ச புகழ்ச்சி அணியில் கற்பகம் தெரிவிக்க வாணிக்கு மீண்டும் அச்சம் உரு வானது.

''எந்த ரூமில் இருக்காங்க?''

''106ல இருக்காங்க. சுருக்கமா பேசிட்டு வந்து விடு. ரொம்ப வாய் கொடுக்க வேண்டாம்.''

''சரிம்மா..'' என்று அவள் எழுந்து போக கற்பகம் பாலாம்பிகையை பார்த்தார்.

''இவள் தான் என் பொண்ணு. தினம் தினம் இவளை பார்த்துக் கொண்டே, வசிப்பது ரொம்ப கஷ்டமா இருக்கு. நீங்க பேசியதை கேட்ட பிறகு நம்பிக்கை வந்து இருக்கு. உங்களுக்கு நிஜமாகவே இதில் முழு மனசோட சம்மதம் தானே? இல்லை பையன் விரும்பி விட்டான் என்று வேறே வழி இல்லாமல்...''

''அப்படி எல்லாம் இல்லை கற்பகம். அஞ்சு நாளைக்கு முன்பே என் அண்ணன் மகன், 'அத்தை இங்கே சைட் ட்ராக் ஓடுது' என்று சொல்லி விட்டான். மூன்று நாளுக்கு முன்பு என் மகன் என்னிடம் சொல்லி

விட்டான். பிள்ளைங்க விருப்பத்தை மதிக்கணும் என்று நினைக்கும் பாசமான அம்மா நான்...''

''அந்த பாசம் தான் அண்ணி என்னையும் பயமுறுத்துது. உங்களை கேள்வி மேலே கேள்வி கேட்க வைக்குது..''என்று சொன்னவரின் குரலில் பயம் இருக்க புன்னகை செய்தார் பாலாம்பிகை.

''நான் இந்த கல்யாண மண்டபத்தில் முதன் முதலில் அடி எடுத்து வைத்த போதே, என் மகளை பார்க்கும் முன்பு, என் பேத்தியை பார்க்கும் முன்பு, கல்யாண பெண்ணை பார்ப்பதற்கு முன்பு ப்ரியாவை பார்க்க போனேன். அதனால வேண்டா வெறுப்பா கல்யாணம் பண்றேனோ என்ற சந்தேகம் உங்களுக்கு வேண்டாம்.''

''உங்க வீட்டுல... அண்ணன்... அவங்க பக்கம் சொந்த காரங்க... யாராவது ஜாதகம் பார்க்கணும் என்று ஆரம்பிப்பாங்களா..?'' என்று உயிரை கையில் பிடித்து கொண்டு கேட்ட கற்பகத்தை பார்க்க சங்கடமாக இருந்தது.

''அஞ்சு வருஷமா அவனைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி கெஞ்சாத வார்த்தை இல்லை. வேண்டாத தெய்வம் இல்லை. சுற்றாத கோவில் இல்லை. இவங்களுக்கு கல்யாணம் ஆகிவிட்டது என்றால், அந்த நேர்த்தி கடனை செலுத்தவே எனக்கு ஆறு மாசம் வேண்டும். அவன் மனசு வந்து ஏதாவது ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்க மாட்டானா என்று ஏங்கும் நிலைக்கு நான் வந்து மூன்று வருஷம் ஆகி விட்டது. வெற்றி கல்யாணத்திற்கு தடை போட இன்னொரு ஆள் பிறந்து தான் வரணும்.''



''பிள்ளைங்க ரெண்டு பேருக்கும் பிடிச்சு இருக்கு என்று மூணு நாளைக்கு முன்னாடியே தெரிந்து விட்டது. இருந்தாலும் இந்த வார்த்தை உங்க வாயில் இருந்து கேட்கணும் என்று தான் காத்திருந்தேன். மனசு நிறைஞ்சு இருக்கு அண்ணி. இனி அடுத்த முகூர்த்தத்தில் கல்யாணத்தை பண்ணி விட வேண்டியது தான்..''என்று உறுதியான குரலில் கற்பகம் சந்தோஷமாக சொல்லிய வேளையில் அதே விஷயத்தை சொல்லி, குத்தி கிழிக்க 106 ஆம் எண் அறையில் திட்டம் தீட்டப்பட்டு கொண்டு இருந்தது.

''வாடியம்மா மகராசி இவ்வளவு நேரம் எங்கே போய் இருந்தாய். ரெண்டு மணி நேரமா தேடிட்டு இருக்கேனே? இப்பதான் எட்டி பார்க்க மனசு வந்ததா?''

''என்ன அத்தை இப்படி கேட்டுட்டீங்க? இந்த மாதிரி கல்யாண வீட்டுக்கு வந்தோமே, வசதியான ஆளை பிடிச்சோமா அவன் கூட ரெண்டு மணி நேரம் செலவு பண்ணினோமா? அடுத்து ரெண்டு மாசத்து செலவுக்கு வழி பண்ணினோமா என்று காரியமே கண்ணா இருக்கும் பெண்ணை பார்த்து இப்படி ஒரு கேள்வி நீங்க கேட்கலாமா?'' என்று அவள் சொல்ல, 'அக்கா...' என்று அதட்டியவளின் முகம் கோபத்தில் சிவந்து சூடேறியது.

''அக்கா. வார்த்தையை அளந்து பேசுங்க...'' என்று அதட்டினாள்.

''தெருவில் பிச்சை எடுக்கும் நீ சேந்தமங்கலம் ஜமீன் வீட்டு மருமகளான என்னை அளந்து பேசச் சொல்கிறாயா? யார் யாருக்குடி அக்கா? செந்தில் உங்க அப்பாவை லேசா காரில் இடிச்சதை சாக்க வச்சுட்டு அவனை

மயக்கி கல்யாணம் பண்ணிகிட்டா, உனக்கு நான் அக்காவா? உன்னோட தரித்திரம் உன்னை தொட்ட அவனையும் பற்றி அல்பாயுசல போக வச்சுடுச்சே?''

''அபாண்டமா பேசாதீங்க. அவர் இறந்தது நுரையீரல் புற்று நோயில். நான் என்ன பண்ணினேன்...?''

''நீ ஒன்றுமே பண்ண வேண்டாம். அதான் உன் முகராசி உனக்கு முன்னாடி போய் நிக்குதே? உன் ராசி பரவாயில்லை... உன் மகன் ராசி அதுக்கும் மேலே பிறப்பதற்கு முன்பே அப்பனை முழுங்கிய...''

''சை நீங்க எல்லாம் ஒரு மனுஷங்க என்று நம்பி பேச வந்தேனே என்னைச் சொல்லணும்... ஒரு பச்சை குழந்தையை போய் இப்படி எல்லாம் வாய்க்கு வந்தபடி பேச உங்களுக்கு எப்படி தான் மனசு வருதோ? நல்லா இருங்க. நான் வரேன்..'' என்று வெடுக் என்று சொல்லி விட்டு அந்த அறையை விட்டு வெளியேற முயன்றாலும் அவர்களின் குத்தல் பேச்சுக்கள் நிற்கவே இல்லை.

''நாங்க நல்லா தான் இருப்போம். நீ நல்லா இருக்கியான்னு பாரு... தினமும் ஒரு ஆள் என்று சுற்றாமல் ஒழுங்கா...'' அதற்கு மேல் அவர்கள் பேசுவதைத் தாங்க முடியாமல் திரும்பி வந்துவிட்டாள். ஆனாலும் அவர்கள் பேசியது அவள் காதில் விழத்தான் செய்தது.

''வாசலில் மெரூன் கலர் சைலோ காரில் நல்லா ஆஜானுபாகுவா ஒரு ஆளோட வந்து இறங்கியதை நான் பார்த்தேன். பேரு வெற்றிவேலாம். இவளை முன்னாடி போக விட்டுட்டு, இவளுக்கு பின்னால் ஒன்றும் தெரியாத மாதிரி நடந்து வரான்...'' என்று எக்ஸ் நாத்தனாரும்,



யாருன்னு கேட்டேன் சினிமாவுல இருக்கானாம். அப்ப குணம் பத்தி கேக்கவா வேணும்? அவனுக்கு ஏற்கனவே நிச்சயம் ஆன கல்யாணத்தை அந்த பொண்ணு நிறுத்தி விட்டதாம்... காரணம் இவனோட குணம்...'' எக்ஸ் மாமியாரும் பேசியதை கண்டும் காணாமல் நகர்ந்தாள்.

'கல்யாண பெண்ணுக்கு கூட கட்டிக்குற முறையாம். இந்த பெண்ணைக் கல்யாணம் பண்ணித் தரச் சொல்லி கேட்டும் இவங்க முடியாது என்று சொல்லிட்டாங்களாம். தெரியுமா?'' என்று குத்தி காட்டிய போது அவளுக்கு கோபம் வரவில்லை வருத்தம் தான் வந்தது. உண்மையை எப்படி எல்லா திரித்து பேச முடியுமா?

'கிளியை வளர்த்து பூனை கையில் கொடுக்க அவங்க என்ன முட்டாளா என்ன? அவனோட தங்கையே அவனுக்கு சப்போர்ட் பண்ணலை என்றால் பார்த்துக் கோங்க...'

'அவன் நாளைக்கு ஒரு பெண்ணோட தாராளமா சினிமாவில் போக்கும் வரத்துமா சுத்திட்டு இருக்கான் சுகன்யா...'

'நாலு நாள் கல்யாணத்திற்கு வந்த இடத்தில் கூட ஒரு பெண்ணை சரி கட்டிட்டான் என்றால் அவனை என்னம்மா சொல்றது...?'

'அவனை விடு. ஊசி இடம் கொடுக்காமல் எப்படி நூல் நுழையும்? அவன் இழுத்த இழுப்பிற்கு போகும் இவளை என்ன சொல்றது?'

'தரமான குடும்பத்தில் பிறந்து இருந்தால் இந்த புத்தி வருமா அம்மா?'

'குடும்பத்தை விட்டுத் தள்ளு. இவளுக்கு தான் கல்யாண ராசி அமோகமா இருக்கே? கட்டிக்க போறவன் நாலே மாசத்தில் காணாமல் போய் விடுவான். அதனால் தான் கல்யாணம் வேண்டாம் என்று இருக்கிறாள். அந்த நல்ல மனசை பாராட்டணும் சுகன்யா..!' என்ற அந்த வாக்கியம் காதில் விழுந்த போது அவர்கள் நினைத்தது நடந்தது.

அவர்களிடம் இருந்து விலகி வந்தாலும் கூட, அவள் காதுகளில் வெவ்வேறு சந்தர்ப்பத்தில் விழுந்து கொண்டே இருந்தது. விழ வேண்டும் என்றே அவர்கள் திட்டமிட்டு பேசியது எப்படி விழாமல் போகும்?

அதுவரை வேண்டாத பேச்சு, மனசில் போட்டு கொள்ள கூடாது. நமக்கு ராகுலும் அவனின் நலம் நாடும் வெற்றியும் முக்கியம் என்ற எண்ணத்தை மனதிற்குள் உருவேற்றி வைத்து இருந்தவளை உடைத்தது.

ஒரு வாரமாக சிறிது சிறிதாக மொட்டு விட்டு மலர்ந்த காதலை, 'கட்டிக்க போறவன் நாலே மாசத்தில் காணாமல் போய் விடுவான்' என்று புறம் பேசி, கருக வைத்த பெருமை இரண்டு பெண்களை சென்று சேர்ந்தது. பெண்ணுக்கு பெண்ணே எதிரி என்பது உண்மை தானோ?

* * *

உறவும் நட்பும் புடைசூழ மிருதுளாவின் திருமணம் கோலாகலமாக முடிந்து இருந்தது. முதல் நாள் இரவு பதினோரு மணி அளவில் மண்டபத்தின் வாசலில் இறக்கி விட்ட வெற்றிவேல் அதன் பிறகு அவளைச் சந்திக்கவே இல்லை.



அம்மாவும் அவளை பார்க்க நள்ளிரவு வரை காத்திருந்து விட்டு திரும்பி வந்து விட்டார்கள். அம்மாவிடமும் அவள் பேசவில்லை. ராகுல் பவித்ராவுடன் பத்து மணி வரை சுற்றிக் கொண்டு இருந்தான்.

கல்யாணம் முடிந்த பிறகு, அவனையும் பார்க்கவே இல்லை. அலைபேசிக்கு முயற்சி செய்தால் அணைத்து வைக்கப்பட்டு இருந்தது. சார்ஜ் இல்லாமல் இருக்கும் என்று மனதை தேற்றி கொண்டான். அன்று மாலை மிருதுளாவை மாப்பிள்ளையுடன் வழி அனுப்பிய அடுத்த வினாடி அம்மாவிடம் வந்து நின்றான்.

"அம்மா அப்பா எங்கே உடனே கிளம்புங்க நாம் ப்ரியாவை பார்க்கப் போகலாம்..."

"மணி ஏழாச்சு இந்த நேரத்திலா? காலையில் போகலாம்.."

"ப்ச் இப்ப வர போறீங்களா? இல்லை நானும் அப்பாவும் போகட்டுமா?" என்ற ரீதியில் அவன் இறங்கவே எழுந்தார்.

"வெற்றி, லூசு மாதிரிப் பேசாதே. முதல் முதலில் பெண்ணைப் பார்க்கப் போகும் போது புடவை, நகை, பலகாரம் என்று வாங்கி போகணும்டா. நாளைக்கு காலையில் கடை திறந்ததும் எல்லாம் வாங்கி கொண்டு பனிரெண்டு மணிக்கு சீரும் சிறப்புமா பார்ப்பது எப்படி? வீசின கையும் வெறும் கையுமா போனால் நல்லாவா இருக்கும்? ஒரு ராத்திரி பொறுத்துக்கோ..." என்று சொல்ல அவன் மறுப்பாகத் தலை அசைத்தான்.

"இல்லைம்மா நேற்று ராத்திரியே உங்களை எல்லாம் சந்தித்து பேச வைக்கணும் என்று நினைத்தேன். தருண்

ஆதித்யா வந்ததில் ப்ரோக்ராம் மாறி விட்டது. இனியும் தள்ளி போட எனக்கு இஷ்டம் இல்லை. சும்மா போக வேண்டாம் என்று நினைத்தால் தேங்காய், பழம், பூ இங்கேயே வாங்கிக்கோங்க. இப்பவே கிளம்பலாம் எனக்கு மனசு என்னவோ போல இருக்கு'' என்று சொல்ல அவர் பதறிப் போனார்.

அடுத்த பத்தாவது நிமிடம் உடை மாற்றி கணவனுடன் பையில் தேங்காய் பழத்துடன் கிளம்பி வந்து நின்றார்.

''வெற்றி, இந்த பெண் உனக்கு மனைவி என்று யோசித்து முடிவெடுத்து விட்டாயா?'' என்று நிதானமாக கேட்டார் வெங்கடேஸ்வரன்.

''ஏன்பா உங்களுக்கு சந்தேகம்...?''

''இன்னிக்கு உணர்ச்சி வேகத்தில் முடிவெடுத்து விட்டு, நாளைக்கு நாலு பேர் நாலு வார்த்தை சொல்லும் பொது மனசு சங்கடப்படக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்...''

''வெளியில் இருக்கும் நாலு பேரைப் பற்றி எனக்குக் கவலை இல்லைப்பா. ஆனால் ஒரே வீட்டுக்குள் ஒண்ணா இருக்க போகும் நாலு பேர் இந்தக் கல்யாணத்திற்கு நிச்சயம் சம்மதம் சொல்லணும். நீங்க ரெண்டு பேர், பிரியா, ராகுல், இவங்களுக்கு சந்தோஷம் என்றால், எனக்கு மற்றவர்களை பற்றி எனக்கு கவலை இல்லை..'' என்று அழுத்தமாகச் சொல்ல வெங்கடேஸ்வரன் வியப்புடன் பார்த்தார்.

''என்னடா! இப்படி சொல்லிட்ட? வசந்தி சம்மதம் வேண்டாமா?''



''அவளுக்கு சம்மதம் தான்மா. ஆனால் இப்பவே சொல்லி விடுகிறேன் ஒருவேளை அவளுக்கு மாறுபட்ட கருத்து இருந்தாலும், என் கல்யாணத்தில் அவளுடைய உரிமை லிமிடட் தான்...'' என்று தீர்மானமாகச் சொல்ல இப்போது வெங்கடேஸ்வரன் திருப்தியோடு தலை அசைத்தார்.

பதினைந்தாவது நிமிடம் அவர்களின் வீட்டிற்கு காரில் சென்று இறங்கிய போது, அழகு நிலையத்தில் விளக்கெரிந்தது.

''கடமை தவறாதவள் போல! மதுரையில் இருந்து வந்து உடனே திறந்து வைத்து இருக்கிறாளே?'' என்று பெருமையுடன் சொன்னவன் ''நீங்க இப்படி முன் வாசல் வழியா போங்கம்மா நான் அவளை கூட்டிட்டு அந்த பக்கமா வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு அழகு நிலையத்தின் கண்ணாடி கதவை தட்டினான் வெற்றிவேல்.

''யாரு...?'' என்று கேட்டபடி வெளியே வந்தவள் அங்கே நின்றவனை கண்டதும் பொங்கிய உணர்வுகளை மறைத்து உணர்ச்சி அற்ற பார்வை பார்த்தாள்.

''என்ன சார் இந்த நேரத்தில வந்து இருக்கீங்க?''

''சாரா...? உள்ளே கஸ்டமர் இருக்காங்களா?'' என்று கடினமாக கேட்க அவள் மறுப்பாக தலை அசைத்த வேகத்தில் கதவை மறித்து கொண்டு நின்றவளை ஒரு கையால் பற்றி உள்ளே தள்ளியவன் வேகமாக நுழைந்து அதே வேகத்தில் ஷட்டரை இழுத்து மூடினான்.

''சார்... என்ன பண்றீங்க...? நான் இங்கே...''

''ஏன் காலையில் என்னிடம் சொல்லாமல் கிளம்பி வந்து விட்டாய்?'' என்று அதட்டலாக கேட்க அவள் மௌனம் சாதித்தாள்.

''உனக்கு என்ன ஆச்சு என்றே தெரியலை. அப்பப்போ மூட் மாறிட்டே இருக்கு. ரொம்ப படுத்தாதே! என்ன கோபமா இருந்தாலும் அப்பறமா நமக்குள் பேசிக்கலாம். இப்ப அம்மா அப்பா உன்னை பார்க்க வந்து இருக்காங்க வா போகலாம்...'' என்று உறுதியான குரலில் சொல்லி விட்டு முன்னே செல்ல அவள் பின் தொடர்ந்தாள்.

இவனிடம் இப்போது மறுப்பை எடுத்து சொன்னால் ஒத்து கொள்ள மாட்டான். இவனை வேறு வழியில் தான் சந்திக்க வேண்டும்! என்று மனதில் நினைத்தாலும், செய்ய போகும் காரியத்தின் வீரியத்தினால் உள்ளே ரத்த கண்ணீர் வடியத்தான் செய்தது.

''வாங்க.. வாங்க.. நீங்களா? நான் எதிர்பார்க்கவே இல்லை'' என்று சந்தோஷமாக வரவேற்றார் கற்பகம்.

''மிருதுளா கல்யாணம் முடிஞ்ச கையோடு வெற்றிக்கும் பேசி முடித்து விடலாம் என்று தான் நினைத்தேன். முடிவு பண்ணிய பிறகு எதற்குத் தள்ளிப் போடணும்? அதான் உடனேயே கிளம்பி வந்து விட்டோம்.''

''ரொம்ப சந்தோஷம் அண்ணி! இன்றே இங்கே வருவீங்க என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இவளுக்கு ஒரு நல்ல வழி பிறக்கணும் என்று அங்காள பரமேஸ்வரியை நான் வேண்டியது வீண் போகவில்லை...'' என்று கற்பகம் நெகிழ்ச்சியுடன் சொல்ல, அதை ஆமோதித்தார் பாலாம்பிகை.



''மனித ரூபத்தில் தான் தெய்வம் தான் செய்ய வேண்டியதை நடத்தும். வெற்றியும் மனசளவில் நொந்து போனவன் தான். ரெண்டு பேரும் கடைசி வரை ஒருத்தருக்கு ஒருத்தர் ஆறுதலா இருந்து சந்தோஷமா குடும்பம் நடத்தினால் நமக்கு வேறென்ன வேண்டும் சொல்லுங்க'' என்று பாலாம்பிகை சொல்ல, மற்ற இருவரும் ஆமோதித்தனர்.

''சில சமயம் மனுஷங்க அளவு மீறிய முக்கியத்துவத்தை பணத்துக்கு கொடுத்து விடுகிறார்கள். குழந்தை முகத்தை பார்த்துக் கூட மாறாத மனுஷங்களும் இருக்காங்களே? என்ன சொல்றது? ஆமா ராகுல் எங்கே?'' என்று வாணிப்ரியாவின் பழைய வாழ்வில் தொடர்புடையவர்களை லேசாக சாடி விட்டு, அதே கையோடு உங்கள் மகள் மட்டும் இல்லை, பேரனும் எங்களுக்கு முக்கியம் என்பதை சொல்லாமல் சொல்லும் வகையில் விசாரித்தார் வெங்கடேஸ்வரன்.

''நேற்றும் இன்றும் ஒரே ஆட்டம் பாருங்க. அதோடு பஸ் பயணம் வேறே. தூங்கிட்டான். நீங்க என்ன சாப்பிடுறீங்க..?'' என்று எழுந்தார் கற்பகம்.

''ஒன்றும் வேண்டாம் அண்ணி. ப்ரியாவை கூப்பிட்டு வரேன் என்று தம்பி அந்தப் பக்கம் வந்தான். இன்னும் காணோமே?'' என்று பாலாம்பிகை சொல்லும் போதே உள்ளே நுழைந்தான். பின்னால் அவளை காணோம்.

''வாணி எங்கே வெற்றி..?''

''இதோ வருகிறாள்.''

''வாங்க.. வணக்கம்...'' என்று மொட்டையாய் சொல்லி கரம் குவித்தவளை பார்த்து புன்னகை செய்தனர்.

"வாம்மா, இப்படி வந்து உட்கார்..." என்று பாலா கை காட்டிய இடத்தில் அமர்ந்தவள், "சொல்லுங்க, இந்த ராத்திரி நேரத்தில் எங்க வீடு தேடி என்ன விஷயமா வந்து இருக்கீங்க?" என்று மெல்லிய உறுதியான குரலில் விசாரிக்க அந்த கேள்வியில் அங்கிருந்த நான்கு பேரில் யாருக்கு அதிக அதிர்ச்சி என்று இனம் பிரித்து அறிய இயலவில்லை.



## 19

வாணிப்ரியாவின் கேள்வியில் அதிர்ந்து வாயடைத்து போன நாலு பேரில் முதலில் சுதாரித்தது இள வயதின் காரணமாக வெற்றிவேல் என்றாலும் அவன் எதுவும் பேசவில்லை. கூர்மையான பார்வையால் அவளை அளந்தபடி அசையாமல் அமர்ந்து இருந்தான்.

"என்ன பேசுகிறோம் என்று தெரிந்து தான் பேசுகிறாயா வாணி? வீடு தேடி வந்தவங்களை இப்படி கேட்பது தான் மரியாதையா? அவங்க எதுக்கு வந்து இருக்காங்க என்று உனக்குத் தெரியாதா?" என்று அதட்டலாகச் சொன்னார் கற்பகம்.

"ஊகத்தின் அடிப்படையில், எந்த வார்த்தையையும் தேவை இல்லாமல் விட்டு விட கூடாது என்பதற்காக தான் இந்தக் கேள்வியை நான் கேட்டேன்மா. சொல்லுங்க ஆன்ட்டி..." என்று கேட்க அவர் வெற்றியை பார்த்தார்.



"என் பையனுக்கு உன்னை மணமுடிக்க உங்க சம்மதம் கேட்டு வந்து இருக்கோம்மா..." என்று நிதானமாக வெங்கடேஸ்வரன் சொல்ல, "நான் மணமாகாத கன்னி பெண் இல்லையே சார்...?" என்ற அவளின் கேள்வியில் அதிர்ந்து இப்போது அவரும் மகனை குழப்பத்தோடு பார்த்தார்.

"ப்ரியா.. என்ன இதெல்லாம்..?" என்று சுத்தியின் கூர்மையோடு கேள்வி வெற்றிவேலின் வாயில் இருந்து புறப்பட்டு வர, அவனை நேராக பார்த்து, "அது நான் கேட்க வேண்டிய கேள்வி சார்..?" என்று எதிர்கேள்வி இட்டாள்.

"ப்ரியா என்ன ஆச்சு உனக்கு? நேற்று இரவு வரை நல்லா தானே இருந்தாய்? கல்யாண வீட்டில் இருந்து சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி விட்டாய்? யார் என்ன சொன்னா? அம்மா அப்பா முன்னிலையில் அசிங்க படுத்தாதே ப்ரியா. உன்னிடம் நான் திருமணத்துக்குச் சம்மதம் கேட்கவில்லையா?"

"இல்லை... கேட்டு இருந்தால் அப்போதே சொல்லி இருப்பேன்..."

"என்னவென்று..?"

"எனக்கு... இதில் இஷ்டம் இல்லை என்று..."

"ப்ரியா.." என்ற அதட்டலுடன் ஆவேசமாக இருக்கையில் இருந்து அவளை நோக்கி நகர்ந்த மகனை கை பிடித்து அவசரமாக தடுத்தார் வெங்கடேஸ்வரன்.

"வெற்றி... பொறுமையா இரு..."

"ஏனம்மா உனக்கு இஷ்டம் இல்லை..?" என்று இப்போது கவலையுடன் பாலாம்பிகை இடையிட்டார்.

''அவர்.. சினிமா துறையில் இருப்பது.. எனக்கு பிடிக்கவில்லை...'' மூச்சை பிடித்து கொண்டு அவள் சொல்லி முடிக்க, அடுத்த வினாடி, ''ஏய்! என்னடி சொன்ன?'' என்று பாய்ந்து சென்று அவளின் முகவாயை பற்றி தூக்கியவனை வேகமாக இழுத்தார் வெங்கடேஸ்வரன்.

''வெற்றி என்ன இது? ஏன் இப்படி நடந்து கொள்கிறாய்? எதுவா இருந்தாலும் மரியாதையா பேசு. இப்ப அவள் மேல் உனக்கு எந்த உரிமையும் இல்லை...'' என்று அதட்டலாக சொல்லி கையைப் பற்றி இழுக்க அவன் அவளை உதறி விட்டு முறைத்தான்.

''கேட்டுக்கோ... நல்லா கேட்டுக்கோ! எனக்கு உன் மேலே உரிமை இல்லையாம்... அதனால் நீ வாய்க்கு வந்ததை பேசு.... சை!'' என்று பல்லை கடித்தவன், ''இன்னும் ஏன் இங்கே உட்கார்ந்து இருக்கீங்க? வாங்க போகலாம்'' என்று சொல்லிவிட்டு வெளியே சென்று விட பெற்றவர்கள் தடுமாறினார்கள்.

அவர்களின் கலக்கத்தை உணர்ந்து, ''வாணி என்ன உளறல் இது? ஏன் இப்படி பேசுகிறாய்? உனக்கென்ன பைத்தியமா பிடித்து இருக்கு?'' என்று அதட்டினார் கற்பகம்.

''இல்லைம்மா. ஒரு வாரமா இருந்த பைத்தியம் இன்று தெளிந்து விட்டது...'' என்று சொல்லிவிட்டு அவள் அறைக்குள் சென்று விட கற்பகம் கண்களில் நீர் பெருகியது.

'இது என்ன சோதனை? வெண்ணை திரண்டு வரும் என்றதில் இப்படி தாழியை போட்டு உடைக்கிறாளே...'



என்ற அவரின் பரிதவிப்பை அவர்களால் உணர முடிந்தது.

''நாங்க கிளம்புகிறோம்'' என்று பொதுவாக சொல்லி விட்டு அவர்கள் தளர்ந்த நடையுடன் வாசலுக்கு செல்வதைப் பார்க்கப் பார்க்க ஆற்றாமையால் துடித்தார் கற்பகம். அவர்களைப் போகாதே என்று சொல்ல ஆசை தான்! ஆனால் அதை மகள் அல்லவோ சொல்ல வேண்டும்?

அவர்கள் வெளியேறிய அடுத்த வினாடி அறைக்குள் ஆவேசமாக நுழைந்த கற்பகம், தரையில் முட்டியில் முகம் பதித்து அமர்ந்து இருந்த மகளை தலை முடியை பற்றி எழுப்பி, ஓங்கி அறைந்தார் கற்பகம்.

''வீடு தேடி வந்த நல்ல மனசு காரர்களிடம் இப்படியா பேசுவாய்?'' என்று கேட்ட போது அவள் திக்பிரமை பிடித்த மாதிரி அவர் அறைந்த கன்னத்தில் கையை வைத்து அசையாமல் நின்று இருந்தாள். கண்களில் இருந்து கண்ணீர் அருவியாக கொட்டிய போதும் அவள் வாயில் இருந்து ஒரு வார்த்தை கூட வெளியே வரவில்லை.

''சங்கர் திருப்பி திருப்பி கேட்ட போதும் கூட உனக்கு இஷ்டம் இல்லை என்று நீ மறுத்த போது நான் கட்டாயப்படுத்தினேனா? ஆனால் இந்த தம்பி எனக்கு பிடிக்கலை என்று என்னிடம் எப்போதாவது சொல்லி இருக்காயா? சொல்லுடீ'' என்று அம்மா தோளை பற்றி ஆவேசமாக உலுக்கியதற்கும் அவளின் பதில் மௌனமே!

''இவ்வளவு நேரம் வாய் கிழிய அவர்களிடம் பேசினாயே இப்ப பேச வேண்டியது தானே? ஏன் வாய்

அடைத்து போய் விட்டாய்? அந்த தம்பி உன்னிடம் சம்மதம் கேட்கவில்லை என்று வாய் கூசாமல் சொன்னாயே? உங்களுக்குள் பேசினீங்களா என்று எனக்குத் தெரியாது. ஆனால் உனக்கு விருப்பம் இருக்கு என்றதை ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் என்னிடமே நீ வெளிப்படுத்தி இருக்கிறாய்! அதை அவர் மட்டும் உணராமலா இருந்து இருப்பார்?

''அவர் பெற்றோர்களிடம் சொல்லி அழைத்து கொண்டு வீடு வரை வந்த பிறகு அவர் தொழில் பிடிக்கவில்லை என்று சொல்கிறாயா? அவர் என்ன வேலை செய்கிறார் என்று இன்னிக்கு தான் உனக்குத் தெரிந்ததா?'' என்று ஆத்திரமாகக் கேட்டு முடித்து கன்னத்தில் மேலும் ஒரு அறை வைத்த பின்னரே, அவரின் இயலாமையும் ஆதங்கமும் ஓரளவுக்கு மட்டு பட்ட பின்னரே, அவள் கண்களில் பெருகி வழிந்து கொண்டு இருந்த நீரை கவனித்தார்.

''நான் ரெண்டு அடி கன்னத்தில் அடித்ததற்கு உனக்கு கண்ணில் தண்ணி வருதா? அவரை வீட்டுக்கு கூட்டி வச்சு நெஞ்சுல அடிச்சியே? அவர் கண்ணில் ரத்தம் வராதா?'' என்று மேலும் கோபத்தோடு சொன்ன வினாடியில் அவளின் விம்மல் பெரிதாக, அப்படியே தரையில் சரிந்து மீண்டும் விம்மி அழ ஆரம்பித்த போது அவளின் அழுகைக்கு காரணம் வேறு என்பது புரிய அவரும் அருகே அமர்ந்து அவளின் தோளை தொட்டார்.

''வாணி! எதுக்கு அழற?'' என்று கேட்ட அடுத்த வினாடி அவரின் தோளில் சாய்ந்து சப்தமாக அழ ஆரம்பித்த மகளைத் தேற்ற வழி தெரியாமல் தவித்தார்



''நீயும் இவ்வளவு சங்கடப்பட்டு, அவர்களையும் அழ வச்சுட்டு ஏன் வாணி அப்படி பேசினாய்?''

''நான்... அவராவது நல்லா இருக்கட்டும் என்று...'' முடிக்க முடியாமல் விம்மி அழுதவளின் மனதில் என்ன இருந்தது என்று கண்டுபிடிக்க முடிந்தது.

''மூன்று நாளா அவரைப் பற்றியே பேசிட்டு இருந்தியே? ராகுல் கூட அவரிடம் நல்லா ஒட்டிக் கொண்டு திரிந்தானே? என்ன ஆச்சு? யார் என்ன சொன்னா...?'' என்று அவர் விதம் விதமாக விசாரிக்க அவருக்கு பதில் கிடைத்த பாடில்லை.

* * *

வெங்கடேஸ்வரனும் பாலாம்பிகையும் வாணிப்ரியாவின் வீட்டை விட்டு வெளியே வந்த போது வெற்றிவேல் காரை உறுமவிட்டு காத்திருந்தான்.

பெற்றோர் ஏறியதுமே, வண்டி சீறி பாய, அவனின் மனநிலை உணர்ந்து, அமைதியாக இருந்தனர். வீட்டுக்குள் நுழைந்ததுமே உடை கூட மாற்றாமல் உணவை மறுத்து விட்டு மொட்டை மாடிக்கு சென்று படுத்து விட்டான்.

''நான் போனால் பேசாமலே மௌனம் சாதித்து விடுவான். எனக்கு தான் B.P. ஏறும். நீங்க பேசி பாருங்க...'' என்று கணவனை மாடிக்கு அனுப்பினார். காலடி ஓசை கேட்டாலும் அம்மாவோ அப்பாவோ வந்து இருக்க கூடும் என்பதால் அவன் கண்களைத் திறக்கவே இல்லை.

''வெற்றி, நான் உன்னுடன் கொஞ்சம் பேசணும்...'' என்றதும் எழுந்து அமர்ந்தான்.

''சொல்லுங்கபபா.''

''நீ அந்த பெண்ணிடம் திருமணத்திற்கு சம்மதம் நேரடியாக கேட்கவில்லையா?'' என்றதும் அவன் கண்களில் கனல் வந்தது.

''கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையாப்பா?''

''சாதாரணமாகத் தேவை இல்லைதான். ஆனால் ஒவ்வொரு பொது விதிக்கும் சில விதிவிலக்குகள் இருப்பதில்லையா? அது மாதிரி விஷயம் என்று வைத்து கொள்ளேன்! நீ கேட்டாயா இல்லையா?

''என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா என்ற நேரடி வார்த்தைகள் மட்டுமே கணக்கில் எடுத்து கொள் ளப்படும் என்றால் இல்லை. ஆனால் இந்த ஒரு வாரத் தில் நாங்கள் சந்தித்துக் கொண்ட பல சந்தர்ப்பங்களில் பல விதமாக எங்களின் முந்தைய திருமண வாழ்க் கையின் தோல்வி வரை பேசி இருக்கிறோம் நேற்று கூட...'' என்று ஆரம்பித்தவன் அதை சொல்வது முறையாகாது என்று பாதியில் நிறுத்தினான்.

''நீ என்ன சொல்ல வருகிறாய் என்று புரியுது. ஆனால் இது ரொம்ப டெலிகேட்டான விஷயம். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று கல்யாணத்தை நடத்த முடியாது இல்லையா?''

''மனசு இருந்தால் முடியும்பா. ஏன் முடியாது? நான் உங்க சஷ்டியப்த பூர்த்தி திருமணத்திற்கு முன்னால் இதை நடத்த நினைத்து, என்னவெல்லாம் திட்டம் போட்டு வைத்து இருந்தேன். தெரியுமா?''

''வெற்றி...! கோபத்தை ஓரம் கட்டி வைத்து விட்டு, இன்னிக்கு வாணி அப்படி பேச என்ன காரணம் என்று யோசித்து பார். பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும்...''



''நான் என்ன தொழில் செய்கிறேன் என்று மறைத்து வைத்தா இதுவரை நான் பேசினேன்? இன்னும் சொல்ல போனால், முந்தைய திருமணம் நின்ற காரணம், அதன் பிறகு என்னுடைய கோபம் வருத்தம் எல்லாமே அவ ளிடம் நான் சொல்லி இருக்கிறேன். அப்படி இருக்கும் போது, என்னவோ இன்று தான் தகவல் தெரிந்த மாதிரி பேசுகிறாளே?''

''பொதுவா பெண்கள் எமோஷனலா முடிவு எடுப் பாங்க. அதுவும் அவங்க தேவை, விருப்பத்தை விட, ஊரார் என்ன சொல்வார்களோ என்ற பயம் முன்னால் நிற்கும். இது என்னுடைய அனுபவத்தில் சொல்வது. அவளுடைய கோபம் அவள் போர்த்தி கொண்ட ஒரு போர்வை. அதன் அடியில் ஒளிந்து இருக்கும் கவலை பயம் என்ன என்று அறிந்து அதை நீக்க பாரு...''

''சரிப்பா, நாளைக்கே அவளிடம் பேசிப் பார்க்கிறேன்...''

''இல்லை வெற்றி, அவள் வேண்டும் என்றே போர்த்தி கொண்ட போர்வையை உன்னிடம் விலக்க சாத்திய கூறு கம்மி. அதனால வேறே யாரை அணுக லாம் என்று யோசித்து பாரு...''

''அவங்க வீட்டில் இருப்பது இரண்டே பேர். ஒன்று அவங்க அம்மா. இன்னொன்று ராகுல். அம்மாவிடம் தான் பேசணும்...''

''பேசு. ஆனால் கூடிய வரையில் அவளுக்கு தெரி யாமல் பேசு. நல்லதே நடக்கும். எனக்கோ அம்மா வுக்கோ இந்த பெண்ணிடம் எந்த பிரச்சனையும் இல்லை. ஒரே வீட்டில் வசிக்கப் போகும் நம்மிடையே பரஸ்பரம் நம்பிக்கையும் புரிந்துணர்வும் இருப்பது அவசியம். அவ்வளவு தான்...''

"நிச்சயமா அவளுடைய சம்மதம் இல்லாமல் கட்டாயப்படுத்தி கல்யாணம் செய்ய முடியாதுப்பா. அவளின் மனசை மாற்ற முயற்சி செய்கிறேன்..."

"எவ்வளவு சீக்கிரம் செய்கிறாயோ அவ்வளவு சீக்கிரம் கல்யாணத்தை நடத்தி விடலாம். உங்க அம்மாவுக்காவது ஊர் கூட்டி திருமணம் செய்ய வேண்டும் என்ற ஆசை இருக்கும். எனக்கு அதுவும் கிடையாது. திருமணம் என்பது இரண்டு மனங்களின் சேர்க்கை. அது எங்கே நிகழ்கிறதோ அங்கேயே அந்த வினாடியே திருமணம் முடிந்து விட்டது என்று தான் நான் சொல்வேன். சட்டத்தின் கருத்து வேறு மாதிரி இருக்கிறதே..? அதனால் பதிவு திருமணம் செய்து கொள்ளலாம் அம்மாவின் ஆசைக்கு பெரிதாக வரவேற்பு நடத்தி கொள்ளலாம். எங்கே எப்படி என்று சீக்கிரம் முடிவு பண்ணி விட்டு சொல்லு" என்று முடித்து விட்டு அவர் கீழே இறங்கிச் சென்றார்.

பதினைந்து நிமிடங்களுக்கு முன்பு இருந்த கோபம், ஆத்திரம் அப்பாவிடம் பேசியதில் வடிந்து இருக்க, இப்போது யோசிக்க முடிந்தது. நேற்று இரவு அவளை மண்டபத்தில் இறக்கி விட்ட பிறகு என்ன நடந்து இருக்கும் என்று யோசிக்க முடிந்தது.

அடுத்த நாளே கற்பகத்திடமும் அம்மாவிடமும் விசாரித்ததில் அவளுடைய முதல் திருமண சொந்தங்கள் வந்து இருந்ததையும் அவளிடம் பேசியதையும் கண்டறிய முடிந்தது. அவர்களுக்குத் தகுந்த பாடம் புகட்ட திட்டம் தீட்ட வைத்தது.

* * *



முந்திய இரவின் வாக்குவாதத்தின் முடிவில் 'என்னவோ செய்' என்று அம்மா விட்டு விட்டாலும் இருவருமே இரவு முழுவதும் தூங்காமல் கண்ணீர் பெருக்கி கொண்டு இருந்தனர். ஒருவர் அழுவது மற்றவருக்குத் தெரிய கூடாது என்பதில் கவனமாகவும் இருந்தனர்.

காலையில் ஆறு மணிக்கே எழுந்து, 'மனசு சரி இல்லை. பெருமாள் கோவில் போயிட்டு வரேன். நேரம் ஆனாலும் பயப்பட வேண்டாம்' என்று சொல்லித் தனியாக கிளம்பி சென்று இருந்தார் கற்பகம்.

காலை எட்டு மணிக்கு ராகுலின் தட்டில் இட்லியை சிறு சிறு துண்டுகளாக்கி ஒரு சின்ன கிண்ணத்தில் சாம்பாரும் வைத்து, "ராகுல் பள்ளிக்கூடம் போகும் பெரிய பையன் ஆகி விட்டான். இனிமேல் அவனாக சாப்பிடப் பழகிக்கணும். அம்மாவையோ பாட்டியையோ ஊட்டி விடச் சொல்லக் கூடாது" என்று சொல்லி தட்டை வைத்து விட்டு நகர்ந்தாள் வாணி.

அவர் சென்ற பிறகு எழுந்து வழக்கமான வேலைகளை கவனித்தாலும் அவளுக்கும் மனசு வலிக்கவே செய்தது. முன்தினம் பாதி பேச்சில் அவன் விருட் என்று கிளம்பி சென்ற காட்சி மீண்டும் மீண்டும் மனதில் தோன்றி மனசை காயப்படுத்தியது.

ஏற்கனவே ஒரு முறை சூடு பட்டு இருந்த அவனிடம் மீண்டும் அந்த வார்த்தை சொல்லி இருக்கக் கூடாது. வேறு என்ன சொல்லி இருந்தாலும் அவன் தன்னிடம் வாதாடவோ விளக்கம் சொல்லியோ இருப்பான். அவன் வேலையைப் பற்றிக் குறைவாகச் சொன்னதும் தானாக முடியாமல் கிளம்பி விட்டான் என்பது புரிந்தது.

ஏற்கனவே செய்யும் தொழில் தெய்வம் என்று தன்னிடம் சொல்லி இருக்கிறான். வேண்டும் என்றே திட்டமிட்டு செய்தது நிறைவேறி விட்டது என்ற சந்தோஷம் ஏன் வரவில்லை? உயிரின் பாதி கரைந்தது போல நெஞ்சம் தவிப்பது ஏன் என்று புரியாமல் இல்லை.

"அ..ம்...மா..!"

"ஏன்டா இப்படி கத்துற? இங்கே தானே இருக்கேன்..."

"நீங்க இங்கே தான் இருக்கீங்க. ஆனால் என்ன என்று கேட்கவே இல்லையே? நான் உங்களை த்ரீ டைம்ஸ் கூப்பிட்டேன் தெரியுமா?" என்றவன் உதடுகள் செல்ல கோபத்தில் பிதுங்க அவள் அவசரமாக நிகழ்காலத்துக்கு வந்தாள்.

"சொல்லு என்ன வேண்டும்..?"

"எனக்கு ஸ்பூன் தரீங்களா..?"

"இட்லி சாப்பிட ஸ்பூனா?" என்று இழுத்தபடி அவன் கேட்டதை கொண்டு வந்து தரவும் செய்தாள். இனி பழையதை நினைக்க கூடாது. ஒரு சின்னக் குழந்தை தன்னை விரல் நீட்டி, குற்றம் சொல்லும் அளவுக்கு கவன குறைவாக இருந்து விட்டாளே என்ற குற்ற உணர்வு தோன்ற அவள் கூடுதல் கவனத்துடன் அருகே அமர்ந்து இருந்தாள்.

அம்மாவிடம் ஆசை பட்டு ஸ்பூனை கேட்டவன், அதை இடதுகையில் வைத்து கொண்டு, அதால் தட்டில் இருந்த இட்லியை எடுத்து சாம்பாரில் தோய்த்து சாப்பிட முயன்று கொண்டு இருந்தான்.



தட்டில் இருக்கும் இட்லி துண்டை ஸ்பூனால் எடுக்க முடியவில்லை. தப்பி தவறி எடுத்தாலும் அதை சாம்பார் கிண்ணத்துக்கு கொண்டு போக முடியவில்லை. அந்த கண்டத்தை தாண்டினாலும் அது வாய்க்குள் போகும் முன்பே மீண்டும் தட்டில் விழுந்தது. சில நிமிடங்கள் அமைதியாக அவன் செய்வதை வேடிக்கை பார்த்தவள், அவன் தலையில் செல்லமாக வருடினாள்.

"ராகுல், நீ ஸ்பூனில் சாப்பிடுகிறேன் என்று சொன்னால் அம்மா கிண்ணத்தில் போட்டு தந்து இருப்பேனே? போக இடது கையை வைத்து ஏன் சிரமப்படுகிறாய்? வலது கையால் எடுத்தால் இன்னும் கொஞ்சம் சுலபமா எடுக்க வரும் இல்லையா?" என்று மென்மையாக சொன்னபடி ஸ்பூனை இடது கையில் இருந்து வலது கைக்கு மாற்ற முயன்றாள்.

"இல்லைம்மா... இது ப்ராக்டீஸ்.. வலது கையில் ஏற்கனவே சாப்பிட எனக்கு வரும். இடது கையில் சாப்பிட தான் ப்ராக்டீஸ் எடுக்கிறேன்" என்று சொல்ல அவள் திகைத்தாள்.

"என்ன ப்ராக்டீஸ் பண்ற?"

"அன்னிக்கு தருண் ஆதித்யா அங்கிள் கூட பாண்டியன் ஹோட்டலில் சாப்பிட்டோம் இல்லையா? அப்போ வெற்றிப்பா சாப்பிட்டு கொண்டே, இடது கையால், வேகமா பேப்பரில் எழுதினாங்க..."

"அதுக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம்...?" என்றவளின் முகம் கடின பாவனையை குத்தகைக்கு எடுத்தது.

"அவர் சாப்பிடுவது, எழுதுவது, பேட்டிங், பவுலிங் எல்லா வேலையும் வலது கை, இடது கை இரண்டிலும்

செய்வாராம். சொன்னார். அதுதான் நானும் முயற்சி பண்ணிப் பார்த்தேன். இன்னிக்கு வரலை. சீக்கிரம் வந்துடும். வெற்றிப்பா அப்படி தான் சொன்னாங்க...'' என்று அவன் சொன்ன செய்தியில் திகைத்தவள் அங்கிள் என்ற வார்த்தையை தவிர்த்து வெற்றிப்பா என்று அழைப்பதைக் கவனிக்கவில்லை.

வெற்றிவேலின் மேல் இருக்கும் இவனின் ஹீரோ வொர்ஷிப் எப்படி குறையும்? கவலை கூடியது. மீண்டும் கேள்விகள் மனதிற்குள் குடைய ஆரம்பித்தது.



## 20

மதுரையில் இருந்து சென்னைக்கு வந்ததில் இருந்து இரண்டு தினங்கள் அமைதியாக இருந்த வெற்றிவேல், அன்று காலையில் ஏழு மணிக்கு வெளியே செல்ல தயாராக கிளம்பி வந்ததை பார்த்ததும் பாலாம்பிகை வியப்பாக புருவம் உயர்த்தினார்.

''என்ன வெற்றி, இவ்வளவு சீக்கிரம் எங்கே கிளம்பி விட்டாய்?''

''முக்கியமான வேலை இருக்கும்மா! எங்கே போகிறேன் என்று சொல்லாமல் நான் வெளியில் போக கூடாதா?''

''என்னவோ ஒரு மாசம் பிரீம்மா. உங்க அறுபதுக்கு அறுபது முடிஞ்ச பிறகு தான் வெளியே போவேன் என்று சொன்னதெல்லாம் கதையா?''



''வேண்டும் என்றே வம்பிழுத்தால், எனக்கு கெட்ட கோபம் வரும்...''

''கோபம் என்றாலே கெட்டது தானே? இதுல நல்ல கோபம் வேறே இருக்காக்கும்? அது உனக்கு வர ஒர காரணம் கூட வேண்டுமா?''

''அம்மா...! நேரம் கெட்ட நேரத்துல ஜோக் வேறயா?''

''ஜோக் இல்லை வெற்றி! உண்மையிலேயே ரொம்ப கவலையா இருக்கு. நிஜமாவே வேலையா? இல்லை வீட்டில் இருக்கப் பிடிக்காமல்...'' என்று கவலையுடன் இழுத்து நிறுத்த அவன் சிரித்தான்.

''நான் நல்லா இருக்கேன். ஏற்கனவே ஒருத்தி என்னை வேண்டாம் என்று சொல்லிவிட்டு போன போது மனசு ஒடிஞ்சா போனேன்? இப்ப மட்டும் என்ன வித்தியாசம்? என்ன நடந்தாலும் சரி, அதுக்காக மனசு ஒடிஞ்சு போகும் பழக்கம் என்னிடம் இல்லை.''

''அது எங்களுக்காக சம்மதம் சொன்ன பொண்ணு தானே? அவள் மேலே உனக்கு அவ்வளவு நல்ல அபிப்ராயம் என்று சொல்ல முடியாதே?''

''அவளையே நான் லட்சியம் செய்யலை. இவள் நான் பார்த்த பொண்ணு. அவளோட குணாதிசயம் எனக்கு நல்லா தெரியும். என் ப்ரியா என் மேல் எவ்வளவு அன்பு வைத்து இருக்கிறாள் என்று தெரிந்து விட்டதனால் கவலை இல்லை. நான் ரொம்ப சந்தோஷமா இருக்கிறேன். இன்னிக்கு இல்லை என்றாலும் நாளைக்கு அவளே என்னைத் தேடி வருவாள். கவலைப்படாதீங்க.''

''அவள் வரும்போது வரட்டும். நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் சொல்லலையே?''

''அவள் வரும்போது வரட்டும் என்று அவள் போக்கில் விட முடியாதே? அவளை நம்மை தேடி வரவைக்க என்ன செய்யணுமோ அதைச் செய்யப் போகிறேன். அதுல நான் ரெண்டு வேலை பார்க்கப் போகிறேன். அப்பாவுக்கும் ஒரு வேலை கொடுத்து இருக்கேன்...''

''நான் வாயை திறந்தாலே என்னவாவது கதை சொல்லி என் வாயை அடைப்பதே உனக்கு வேலையா போச்சு! எங்கே போவதாக இருந்தாலும் சாப்பிட்டுட்டு போ'' என்று சலித்து கொண்ட அம்மாவை பின் தொடர்ந்தவன் கண்களில் சிரிப்பு மின்னியது.

''அப்படியே எனக்கும் தட்டை போடு பாலா. நானும் கிளம்பணும்'' என்று மகனின் பின்னால் வெளியே செல்லத் தயாராக வந்த வெங்கடேஸ்வரனை வியப்பாகப் பார்த்தார்.

''நீங்க எங்கே கிளம்பிட்டீங்க?''

''எனக்கும் ஒரு வேலை பல்லாவரம் நகராட்சி அலுவலகத்தில் இருக்கு. போயிட்டு ஒரு மணிக்குள் வந்து விடுவேன்.''

''உங்க ரெண்டு பேருக்கு மட்டும் தான் முக்கியமான வேலை இருக்கா? எனக்கும் ஒரு வேலை கொடுங்க. நான் மட்டும் தனியா வீட்டில் உட்கார்ந்து என்ன செய்யப் போகிறேன்?'' என்று கிண்டலாகவும் அதே சமயத்தில் மகனின் திருமணத்திற்காக அவர்கள் திட்டமிட்டு செய்யும் காரியத்தில் தனக்கும் பங்கு வேண்டும் என்ற



ஆர்வத்துடனும் பாலாம்பிகை கேட்க சிரிப்புடன் அம்மாவின் அருகில் வந்தான் வெற்றிவேல்.

''நீங்க இவ்வளவு ஆசை படும்போது, உங்களை மட்டும் ஒதுக்கி வைப்பது நல்லா இருக்காது. உங்களுக்கும் ஒரு வேலை தருகிறேன். நீங்க செயின்ட் மேரீஸ் ஸ்கூலில் ஏற்கனவே அட்மிஷனுக்கு சொல்லி வைத்து இருக்கிறேன். என் பேரை சொல்லி அங்கே எல்.கே.ஜி.க்கு அட்மிஷன் பாரம் ஒன்று வாங்கிட்டு வாங்க'' என்று சொல்ல அவர் விழித்தார்.

''என்னடா சொல்கிறாய்? யாருக்கு அட்மிஷன்?'' என்று கேட்கும் போதே அதற்கான பதிலும் அவருக்குத் தெரிந்தே இருந்தது.

''உங்க ஊகம் கரெக்ட் தான். அதை சொல்ல ஏன் இவ்வளவு தயங்குறீங்க? ராகுலுக்கு தான் அட்மிஷன்...''

'டேய்! இதெல்லாம் நிஜமாவே நடக்குமா? ஆனால் அந்த பொண்ணு இன்னும் சம்மதம் சொல்லவே இல்லையே?'' என்று நம்பிக்கைக்கும் நம்பிக்கை இன்மைக்கும் இடையே ஊசலாடிய படி கேட்டார் பாலாம்பிகை.

''நடக்கும். நடக்க வைப்பேன். அதுக்காக தானே இந்த பாடு? அதனால் தான் சஷ்டியப்த பூர்த்தி வேலை எல்லாம் ஓரம் கட்டி விட்டு இன்றைய பொழுது அவளை இங்கே வர வைக்க மட்டும் தான். நான் கமிஷனர் ஆபீஸ் போகிறேன். அப்பா பல்லாவரம் நகராட்சி அலுவலகம் போகிறார். நீங்க செயின்ட் மேரிஸ் பள்ளிக்கு போயிட்டு வாங்க. வேலை மூவருக்கும் பங்கிட்டு கொடுத்த மாதிரி ஆகி விடும். சந்தோஷம் தானா?''

''நகராட்சிக்கு பிறப்பு சான்றிதழ் வாங்கப் போகணும், பள்ளியில் சேர்க்க விண்ணப்பம் வாங்கப் போகணும். ஆனால் கமிஷனர் ஆபீசில் என்ன வேலை? புரியலையே?''

''அது சஸ்பென்ஸ்...'' என்று கண் சிமிட்டியவன், கமிஷனர் ஆபீசில் ஒரு புகார் கொடுத்த கையோடு, உயர்நீதி மன்றத்திற்கு சென்று ஒரு வக்கீலையும் கலந்தாலோசித்தான்.

காவல் துறையில் கொடுத்த புகார் உயிரழந்து காணாமல் போய் விட கூடாது என்பதை மனசில் வைத்து, திரை துறையில் தனக்கு தெரிந்த நண்பர்கள் மூலம், அந்த செய்தி பத்திரிகையில் வெளி வருவதையும் உறுதி செய்து கொண்ட வெற்றிவேலின் மனதில் திருப்தி வந்தது.

இந்த மும்முனை தாக்குதலில் அவர்கள் நிலை குலைவதும் அவளின் காலடியில் விழுவதும் நிச்சயம் என்பது புரிய, இன்றைய முயற்சி அவளை தன்னிடம் கொண்டு வந்து சேர்க்கும் என்று நம்பிக்கை வந்தது.

* * *

வழக்கத்திற்கு முன்னதாகவே ஏழு மணிக்கு அழகு நிலையத்தை அடைத்து விட்டு, வந்து அறைக்குள் படுத்து இருந்த வாணிப்ரியாவின் காதுகளில், பாட்டிக்கும் பேரனுக்கும் இடையே முணுமுணுப்பாக ஆரம்பித்த பேச்சு வார்த்தை கொஞ்சம் கொஞ்சமாக உயர அவள் சிரமத்துடன் மூடி இருந்த கண்களைத் திறந்து வெளியே நடந்த உரையாடலைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

''நீங்க பொய் சொல்றீங்க பாட்டி...''



''இல்லை கண்ணு! நிஜமாவே அம்மாவுக்கு உடம்பு சரி இல்லைடா கண்ணு. அதனால ரொம்ப தூரம் உட்கார்ந்து சென்னைக்கு போக முடியாது. கொஞ்ச நாள் போகட்டும். அம்மாவுக்கு உடம்பு சரி ஆன உடனே போகலாம்.''

''அம்மாவுக்கு உடம்பு சரி இல்லை என்றால் அவங்க இங்கே இருக்கட்டும். நீங்களும் நானும் போகலாம்'' என்று அவன் விடாமல் தன் கருத்தை வலியுறுத்த அவனுக்கு பதில் சொல்ல தடுமாறிப் போனார் கற்பகம்.

''அம்மா எப்படி தனியா இருப்பாங்க? ஜுரம் வேறே இருக்கும் போது தனியா விட்டுட்டு போகலாமா? பாட்டி சொன்னால் கேட்கணும்.''

''ம்ஹூம்! கேட்க மாட்டேன். வெற்றிப்பா என்னை அங்கே வர சொன்னாங்க. நான் அங்கே போகணும்...'' பாட்டியும் பேரனும் அங்கே கொஞ்சம் கொஞ்சமாக குரலை உயர்த்தி விவாதம் நடத்திக் கொண்டு இருக்க, உள்ளே அறையில் படுத்₹ இருந்த வாணிப்ரியா எழுந்து வந்தாள்.

''என்னம்மா கேட்கறான்? கொடுக்கறேன் என்று சொல்லுங்களேன். நீங்க விடாமல் இப்படி விவாதம் பண்ணிக் கொண்டு இருந்தால் எனக்கு தலை வலிக்குது...'' என்ற அம்மாவின் குரல் கேட்டதும், பாட்டியை அம்போ என்று விட்டு விட்டுத் துள்ளிக் குதித்து ஓடி வந்தான்.

''அம்மா! பாட்டி உங்களுக்கு உடம்பு சரி இல்லை என்று பொய் தானே சொல்றாங்க?''' என்று அவள் காலை கட்டி கொண்டு கொஞ்சலாக மகன் கேட்க அவள் புரியாமல் பார்த்தாள்.

அம்மாவை விட்டு கொடுக்காமல், ''லேசா தலைவலி இருந்தது உண்மை தான் ராகுல்! உனக்கு என்ன வேண்டும் சொல்லு. ஏன் பாட்டியை போட்டு படுத்தி எடுக்கிறாய்'' என்று அவன் தலையை வருடி விசாரித்தாள்.

''சென்னையில வெற்றிப்பா வீட்டுல ஒரு கல்யாணம் இருக்கு என்று நம்மளை வர சொன்னாங்க இல்லையா? அதுக்கு போக ட்ரஸ் எடுத்து வைங்க என்று சொன்னேன். பாட்டி உங்களுக்கு உடம்பு சரி இல்லை. அதனால் போக முடியாது என்று சொல்றாங்க.''

''பாட்டி சொல்றது கரெக்ட் தான் ராகுல், அம்மாவுக்கு உடம்பு சரி இல்லை.''

''நீங்களும் பொய் சொல்றீங்க! அன்னிக்கு பவித்ரா நமக்கு கொடுத்த ப்ராமிஸ் காப்பாத்த தானே, நம்மளை அதிசயம் கூட்டிட்டு போனாள். வெற்றிப்பாக்கு கொடுத்த ப்ராமிஸ் நம்ம மட்டும் காப்பாற்ற வேண்டாமா?'' என்று அவன் அவளை விட்டு விலகி நின்று முகத்தை சுளித்துக் கோபத்துடன் கேட்ட வார்த்தைகளில் இருந்த உண்மை அவளைச் சுட்டது.

அவனின் அந்த கோபமான கேள்வி மட்டும் இல்லாமல் அவள் அதிர்ந்து நின்றதற்கு மேலும் இரண்டு காரணங்களும் இருந்தது. அங்கிள் எப்போது வெற்றிப்பாவாக மாறியது? யார் சொல்லி கொடுத்தது? அவனேவா? எப்போது? அதை அவள் எப்படிக் கவனிக்கத் தவறினாள்?

மூன்று வயது நிரம்பாத சிறுவன் கொடுத்த வாக்கை காப்பாற்றுவது குறித்து அவனை விட ஒரு வயது



பெரியவளான பவித்ராவை காட்டி விளக்கம் சொல்ல, தான் அவனுக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்தது ஏனோ? வாணி பேச்சிழந்து நிற்க, கற்பகம் தன் பங்கிற்கு அவளை கரைக்க முயன்றார்.

''இன்னும் நான்கு நாட்களில் சஷ்டியப்த பூர்த்தி விழா வருகிறது. நீ, நான், ராகுல் மூவரும் ஒரே குடும்பம் என்று தெரிவதற்கு முன்பே, உன்னுடன் பேசி பழகி, கல்யாண பேச்சு ஆரம்பிப்பதற்கு முன்பே கோவிலில் வைத்து அவர் பத்திரிகை கொடுத்தார். அதன் பிறகும் மூன்று பேரும் வீடு தேடி வந்து இன்னொரு பத்திரிகை கொடுத்து விட்டு போய் இருக்கிறார்கள்...''

''ப்ச்! நம் வீட்டுக்கு வரும் எல்லா பத்திரிகைகளுக்கும் போகிறோமா என்ன?''

''ராகுல் சென்னைக்கு போகணும் என்று கேட்கிறான். இவ்வளவுக்குப் பிறகும் நீ வேண்டாம் என்று சொல்வது நியாயமே இல்லை வாணி. நீ வந்தால் நல்லது. இல்லை என்றாலும் நாங்க போய் வருவது தான் நியாயம். நீ பிடிவாதம் பிடிக்காமல் அனுப்பி வைத்தால் சந்தோஷ படுவேன். அது முடியாது என்றால் வசந்தியுடன் ராகுலை மட்டுமாவது அனுப்பி வைக்கலாம் என்று நினைக்கிறேன். இதற்கும் நீ மறுத்தால் அப்புறம் நான் பேச ஒன்றுமே இல்லை'' என்று சொல்லி விட்டு மகள் தன்னைக் கடித்துக் குதறுவதை எதிர்பார்த்துக் காத்திருக்க அப்படி எதுவும் நடக்கவில்லை.

''அவங்களுக்கு என் வீண் சிரமம்? நான் உங்களுக்கு சனி இரவு ரயிலில் முன்பதிவு பண்ணித் தருகிறேன். கல்யாணத்தை முடிச்சுட்டு நீங்களும் ராகுலும் ஞாயிறு

இரவு கிளம்பி வந்துடுங்க'' என்று நல்ல தனமாகவே பதில் சொல்ல கற்பகத்தின் மனதில் உற்சாகம் பிறந்தது. மகள் மனசு கொஞ்சம் இளகுதோ? கடைசி நேரத்தில் வற்புறுத்தினால் அவளும் வரக்கூடுமோ? ஆசை கொண்ட தாயின் மனது கற்பனைகளில் இறங்கியது.

''நிஜமாவா சொல்கிறாய் வாணி?''

''நிஜமா தான் சொல்கிறேன். ஆனால் இந்த விசேஷ வீட்டிற்கு நீங்க போகலாம் என்று சொன்னதனால் புதுசா ஏதாவது கற்பனையை வளர்த்துக்காதீங்க. ராகுலின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்று நீங்க நினைக்கறீங்க. அதனால் அவனுக்குத் துணையா நீங்க போக வேண்டியதாகி விட்டது. அவ்வளவுதான். இதனால் என் மனசு மாறிவிட்டது என்றோ, கல்யாணப் பேச்சை தொடரலாம் என்றோ அர்த்தம் இல்லை. அதை ஞாபகம் வச்சுக்கோங்க'' என்று அழுத்தமாகச் சொல்ல அவரின் முகம் வாடி சுருங்கியது.

''ராகுல் நீ பாட்டியோடு சென்னைக்கு போகலாம். அம்மா உங்களுடன் வரவில்லை. புது இடம் இல்லையா? துணைக்கு ஆள் இல்லாமல் எங்கேயும் தனியா போகக் கூடாது. அங்கே போகலாம் இங்கே போலாம் என்று சும்மா தொந்தரவு பண்ணக் கூடாது. உனக்காக தான் அம்மா பாட்டியை அனுப்புகிறேன். சமத்தா இருக்கணும். ஓகே?'' என்று அறிவுரை சொல்ல அவன் ஓடி வந்து அம்மாவை கட்டிக் கொண்டான்.

''செல்ல குட்டி அம்மா... தேங்க்யு'' என்று கொஞ்சி முத்தமிட்டவனை அன்புடன் அணைத்துக் கொண்டவளுக்கு தானும் அவனுடன் செல்லலாமா என்ற ஆசை



கணநேரம் தோன்ற தான் செய்தது. ஆனால் கூடவே மிருதுளா கல்யாண வீட்டில், சாரதாவும் அவரின் மகள் சுகன்யாவும் நாவில் நரம்பின்றி பேசிய வார்த்தைகள் நினைவுக்கு வர முகம் கடினமாகியது.



## 21

வாணிப்ரியா பெரிய மனது பண்ணி கற்பகத்தையும் ராகுலையும் சென்னை செல்ல அனுமதித்து பகல் ரயிலில் முன் பதிவு செய்து பயணசீட்டையும் கொடுத்து விட, ஒரு வகையில் திருப்தி அடைந்த கற்பகம் சென்னை திருமணத்திற்கு தேவையான ஜவுளிகளை வாங்க கடை தெருவிற்கு வந்து இருந்தார்.

இருவருக்கும் வேஷ்டி சட்டை, புடவை வாங்கிய கையோடு இரண்டு கிராமில் மகாலஷ்மி படம் பொரித்த ஒரு தங்க காசும் வாங்கி கொண்டு இருந்த போது அங்கே வருகை தந்த வசந்தியை பார்த்து முகம் மலர்ந்தார்.

''என்னம்மா கடைக்கு தனியா வந்து இருக்கீங்க?'' என்று சிரித்தபடி அருகே வந்து வசந்தி விசாரிக்க, ''அம்மாவுக்கு கொடுக்க வாங்கினேன்'' என்று தான் வாங்கிய காசை காண்பித்ததும் முகம் மலர்ந்தும் மனம் கனிந்தது.

''ஒரு வழியா வாணி மனசை மாத்தியாச்சா? அப்ப அண்ணனிடம் சொல்லிக் கல்யாணத்துக்கு நாள் குறிக்க

சொல்லலாமா'' என்று உற்சாகமாக கேட்க அவர் மறுப்பாகத் தலை அசைத்தார்.

''இல்லை வசந்தி. அவளுக்கு வரும் உத்தேசம் இல்லை. அவள் மனசை மாற்றிக் கொள்ளவும் இல்லை. ராகுலின் பிடிவாதத்திற்காக எங்க இருவரையும் அனுப்ப முடிவு பண்ணி இருக்கிறாள். சனியன்று பகல் ரயிலில் டிக்கட் போட்டு இருக்கு...''

''மிருதுளா கல்யாண வீட்டுக்கு நான் தான் வற்புறுத்தி முதல் நாளே கூட்டிட்டு போனேன். அவளாக வந்திருந்தால் மறுநாள் காலையில் வந்து விட்டு திரும்பி இருப்பாள். தேவை இல்லாத பிரச்சனை வந்து இருக்காது. அண்ணனுடன் அவங்க தனியா பேசிட்டு இருந்ததை பார்த்துட்டு யார் என்ன சொன்னாங்க என்று தெரியலை. இப்படி ஒரேயடியா கூட்டுக்குள்ளே போய் விட்டாள்...'' என்று வருத்தமாகச் சொல்ல பெருமூச்சு விட்டார் கற்பகம்.

''என்ன நடக்கணும் என்று தலையில் எழுதி இருக்கோ, அதை அனுபவித்து தானே ஆக வேண்டும். வாணிக்கும் ராகுலுக்கும் ஒரு நல்ல எதிர்காலம் கிடைத்தது என்று நினைத்தேன்...''

''இப்பவும் அது மாறலைம்மா. நீங்க கவலைப் படாதீங்க. எடுத்த காரியத்தை அரைகுறையா விடும் ஆள் இல்லை வெற்றி. இப்ப அம்மா அப்பாவோட சஷ்டியப்த பூர்த்தி விழா வேலை இருக்கு என்று சத்தம் இல்லாமல் கிளம்பிட்டான். அத்துடன் வாணி மனசு கொஞ்சம் தெளியட்டும் என்று விட்டுப் பிடிக்கிறான் அவ்வளவுதான்...''



''நீ எப்ப சென்னை கிளம்பற?''

''நாங்க மூன்று பேரும் நாளை மாலை நாலு மணிக்கு காரில் கிளம்புறோம். வாணி தான் வரலையே? அப்புறம் நீங்க ஏன் தனியா ரயிலில் வரணும்? எங்களோடு வந்து விடுங்க. உங்களுக்கு என்று தனியாகவா பெட்ரோல் போடவா போறோம்? என்ன ஒரு நாள் முன்னதாக கிளம்பணும். உங்களுக்கு வேற முக்கியமான வேலை எதுவும் இருக்கா?''

''வேலை எதுவும் பெருசா சொல்ற மாதிரி இல்லை வசந்தி. ஆனால் இங்கே அவள் தனியா இருப்பாளே? ராகுல் இருந்தால் ஏதாவது பேசிட்டு இருக்கும்போது தனிமை தெரியாது. நாங்க ரெண்டு பேரும் வந்து விட்டால் அவள் உள்ளுக்குள் ஒடுங்கி சரியா சாப்பிடக் கூட மாட்டாள். அது தான் பார்க்கிறேன்...'' என்று கவலையோடு சொல்ல அவள் புன்னகை செய்தாள்.

''கொஞ்சம் தனிமையை அனுபவிக்கட்டும். ஒரு வேளை அந்த தனிமையே அவளுக்கு துணையின் அவசியத்தை புரிய வைக்கலாம். நல்லதே நினைப்போம் அத்தை...''

''அத்தையா...?''

''அண்ணனுக்கு மாமியார் ஆக போறீங்க என்று முடிவு பண்ணியாச்சு. அப்புறம் ஏன் அம்மா என்று சொல்லணும்? சரியான முறை சொல்லிக் கூப்பிடுகிறேன். நீங்க நாளைக்கு மாலை கிளம்ப மறந்துடாதீங்க. இன்னிக்கே வீட்டுக்கு போனதும் மூட்டை கட்டிட்டு ரெடியா இருங்க'' என்று புன்னகை செய்த வசந்தியிடம் விடை பெற்ற கற்பகத்தின் மனம் நிறைந்து இருந்தது.

வசந்தியுடன் கழித்த அந்த சில நிமிடங்கள் தந்த நிம்மதியும் சந்தோஷமும் கற்பகத்திற்கு நிலைக்கவில்லை. அடுத்த சில நிமிடங்களில் வீட்டை நெருங்கும் போது தெரு முனையில் வாணிப்ரியாவின் பேரை சொல்லி விசாரித்தபடி நின்று கொண்டு இருந்த 'வினோத்தை' பார்த்ததும் அடி வயிற்றில் பய பந்து உருண்டது.

இவன் இறந்து போன செந்திலின் தம்பி ஆயிற்றே? இவன் எங்கே இங்கே வந்தான்? எதற்கு வாணியை விசாரிக்கிறான்?

பக்க வாட்டு சந்தில் நுழைந்து, அவனுக்கு முன்பாக அழகு நிலையத்தின் கதவை திறந்து வியர்க்க விறுவிறுக்க உள்ளே வந்தவரை வியப்புடன் பார்த்தாள் வாணி.

''என்னம்மா அவசரமா வரீங்க என்ன ஆச்சு? ஏதாவது தெரு நாய் துரத்துச்சா?''

''நாயே தேவலாம். இது அதை விட பெரிய ஆபத்து. உன்னை பார்க்க சென்னையில் இருந்து வினோத் வந்து இருக்கான்'' என்று சொன்ன உடனே படபடப்புடன் எழுந்தாள் வாணிப்ரியா.

''இந்த அட்ரஸ் அவங்களுக்கு எப்படி தெரியும்?''

''தெரியலை. கல்யாண வீட்டில் கேட்டு இருப்பான். ரொம்ப கோபமா இருக்கான் என்று நினைக்கிறேன்...''

''எதுக்கு கோபம்? என்ன விஷயமா வந்து இருக்காங்க?''

''எல்லா கேள்வியையும் என்னையே கேட்காதே. நான் ராகுலை கூட்டிட்டு வெளியே போகிறேன். குழந்



தையை அவன் கண்ணில் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. நீயே பேசி அனுப்பிடு. எந்த தொடர்பும் தேவை இல்லை என்று சொல்லிடு. அவங்க சங்காத்தமே நமக்கு வேண்டாம்'' என்று கற்பகம் அதட்டலாகச் சொல்ல, அவள் வெளியே வந்தாள்.

''வாங்க வினோத்...'' என்று கை குவித்து முகத்தில் அளவான புன்னகையை ஏற்றி, சொல்ல அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. வீட்டுக்குள் சென்றவளை வேண்டா வெறுப்பாக பின் தொடர்ந்தான்.

''என்னம்மா நடிக்கிறா? பிள்ளையையும் கிள்ளி விட்டுட்டு தொட்டிலையும் ஆட்டும் வித்தை கற்று வச்சு இருக்கா பாரு'' என்று ஆத்திரத்துடன் மனதில் நினைத்து கொண்டவனின் எண்ணம் புரியாமல் அவனை உள்ளே அழைத்துச் சென்று அமர சொல்லி உபசரித்தாள்.

''உட்காருங்க. என்ன சாப்பிடுறீங்க?''

''உங்க வீட்டில் சாப்பிட நான் வரலை.''

''பரவாயில்லை. வந்த பிறகு உங்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் சும்மா அனுப்ப எனக்கு மனசு வராதே? எலுமிச்சை ஜூஸ் குடிக்கிறீங்களா? வெயிலுக்கு இதமா இருக்கும். ஒரு நிமிஷம்! இதோ வந்து விடுகிறேன்'' என்று சென்றவள் கையில் கண்ணாடி டம்ளருடன் வந்தாள்.

''குடிச்சுட்டு என்ன விஷயமா என்னை பார்க்க வந்தீங்க என்று சொல்லுங்க'' என்று பதமாக விசாரித்தவளுக்கு பதில் பட்டாசாகப் பொரிந்தான்!

''சத்தம் இல்லாமல் இங்கே உட்கார்ந்து கொண்டே சென்னையில் போலீசில் சொல்லி எங்களை நிம்மதி இல்லாமல் பண்ண முடிவு பண்ணி போடுற ஆட்டம் ரொம்ப நல்லா இருக்கு!''

''நீங்க என்ன சொல்ல வரீங்க என்று புரியலை. சென்னைக்கு நான் வந்தே நாலு வருஷம் இருக்கும். நீங்க நிம்மதி இல்லாமல் இருக்கும் அளவுக்கு நான் என்ன செய்தேன்?''

''இந்த பூனையும் பாலை குடிக்குமா என்ற போஸ் கொடுத்து, ஒண்ணுமே நடக்காத மாதிரி உபசரணை பண்ணுற அப்பாவி தனம் அதுக்கும் மேலே! உன்னை மாதிரி ஒரு நடிகையை நான் உலகத்தில் எங்கேயுமே பார்த்ததே இல்ல...'' என்று ஆத்திரமாக பொரும, அவளுக்கும் பொறுமை குறைந்தது.

''ஹலோ! உங்களுக்கு என்ன வேண்டும்? ஏன் இப்படி சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசறீங்க?''

''சினிமாக்காரனோட பழக்கம் வச்சால் நடிப்பு வராமல் போகுமா?'' என்று மேலும் குத்தலாக அவன் பேச, அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. நாக்கிற்கு பதில் ஆண்டவன் சாட்டையை படைத்து இருக்க வேண்டும்.

''யாருடன் பழக்கம் வைத்து கொள்ள வேண்டும் என்று அட்வைஸ் எனக்குத் தேவை படும்போது உங்களுக்குச் சொல்லி அனுப்புகிறேன். ஜாடை பேசாமல் தயவு செய்து என்ன விஷயம் என்று சொல்றீங்களா?''

''சம்பாதிக்கும் குடும்ப தலைவர் அகால மரணம் அடைந்து விட்டாரே என்று பாவம் பார்த்து, செந்தில் கல்யாணம் பண்ணி கூட்டிட்டு வந்தால், ஆறே



மாசத்துல குடும்பம் நடத்த துப்பில்லாமல் அந்த வீட்டை விட்டு ஓடி வந்துட்டு...''

''ஷட் அப்! என்னைப் பற்றியோ என் குடும்ப வாழ்க்கை பற்றியோ விமர்சனம் பண்ண உனக்கு எந்த உரிமையும் இல்லை. கெட் அவுட்..''என்று ஆத்திரமாகச் சொல்ல அவன் அசையாமல் நாற்காலியில் அழுத்தமாக அமர்ந்தான்.

''எனக்கு உரிமை இல்லையா? ஹா ஹா... நல்லா நடிக்கிறாய் மிசஸ் வாணிப்ரியா செந்தில். அப்படி என்றால் ஏன் என் பெயருக்கு, என் பிள்ளைக்கு பாதி சொத்து வேண்டும் என்று வக்கீல் நோட்டீஸ் விடணும்? அம்மா சொன்ன போது கூட நான் நம்பவில்லை. ஆனால் இப்போ ஒத்துக் கொள்கிறேன் உனக்கு நெஞ்சழுத்தம் ஜாஸ்திதான்.''

''நான் வக்கீல் நோட்டீஸ் கொடுத்தேனா? என்ன உளறல் இது?''

''இருபது வருஷமா ராப்பகலா உழைச்சு, நாங்க சொத்து சேர்த்து வச்ச நாங்க பேசறது உளறல். நாலு நாள் முன்னாடி வீட்டுக்கு வந்த நீ, நோகாமல் நுங்கு தின்ன, உட்கார்ந்த இடத்தில் இருந்தே பேப்பரில் சண்டை போடுற நீ சாமர்த்தியசாலி. எல்லாம் விதி கொடுமை. வேறென்ன சொல்ல?''

''இதோ பாருங்க. நீங்க தேவை இல்லாமல் என்னென்னவோ பேசறீங்க. நான் உங்க வழிக்கே வர வேண்டாம் என்று முடிவு பண்ணி எத்தனையோ வருஷம் ஆச்சு. வீடு தேடி வந்தவங்களை விரோதியா இருந்தால் கூட மதிச்சு பேசணும் என்று தான் உங்களை உள்ளே

அழைத்தேன். உங்களிடம் பேச எனக்கு ஒரு விஷயமும் இல்லை...''

''எங்களிடம் நீ ஏன் பேசப் போகிறாய்? அதான் உன் சார்பில் பேச தனியா ஒரு ஆளை ரெடி பண்ணி வச்சு இருக்கியே?''

''நான் யாரையும் ரெடி பண்ணலை. அந்த அவசியமும் எனக்கு இல்லை. உங்க சொத்தில் இருந்து ஒரு பைசா கூட எனக்கு வேண்டாம். அவ்வளவு தான். நீங்க கிளம்பலாம்'' என்று கடுமையான முக பாவனையுடன் சொன்னவளை ஆத்திரத்துடன் முறைத்தான்.

''உனக்குத் திமிருடி! சும்மாவே நீ ஆடுவ? இப்ப வசதியா ஒரு இடம் கிடைத்ததும் ரொம்ப துடுக்கா பேசுகிறாய். பையனுக்கு வரும் பணத்தை காட்டி மடக்கினாயா? இல்லை உன்னையே காட்டி...''

''டி-யா? டேய்! இதுக்கு மேலே ஒரு வார்த்தை பேசின, போலீசை கூப்பிடுவேன்...''

''அதுக்கும் போலீசை கூப்பிடுவாயா? சென்னையில் கமிஷனர் ஆபீசில் உன் செல்வாக்கு கோடி கட்டி பறக்குது என்று நினைத்தேன். நீ கண் காட்டியதும் அங்கே ஒருத்தன், 'நுரையீரல் புற்று நோயில் செத்தவனை நான் தான் சொத்துக்கு ஆசைப் பட்டு தீர்த்து கட்டிட்டேன்' என்று நாலு வருஷத்துக்கு முன்னாடி க்ளோஸ் பண்ணிய செந்தில் கேசை திரும்பி தூசி தட்டி கொண்டு இருக்கிறான். சோழவந்தான் ஸ்டேஷனிலும் நீ பெரிய ஆளா? உனக்கு செல்லும் இடம் எல்லாம் சிறப்பு தானா?'' என்று சொன்னவன் குரலில் இகழ்ச்சி இருந்தது.



''பரவாயில்லையே! புதைக்கப்பட்ட சத்தியம் மீண்டும் எழுந்து வருதா? எங்க அப்பா மரணத்தில் கிடைக்காத நியாயம், செந்தில் மரணத்தில் கிடைக் கட்டும். சத்தியத்துக்கு எங்கே போனாலும் மரியாதை கிடைக்கும். ஆனால் சத்தியம் என்றால் என்னவென்றே தெரியாத உன்னிடம் அதைப் பற்றி பேசுவதில் பிரயோஜனம் இல்லை...''

''ஆமா! நீ தான் உலகத்திலேயே உண்மை விளம்பி...''

''நான் உண்மை விளம்பியோ இல்லையோ? ஆனால் உன்னை போல பணத்தாசை பிடிச்ச பேய் இல்லை. நான் உன்னிடம் எந்த உதவியும் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்க்கவும் மாட்டேன். என் பிள்ளையை வளர்க்க எனக்குத் தெரியும். உன்னிடம் பேச எனக்கு விருப்பம் இல்லை. கிளம்பு...'' என்று பொங்கிய கோபத்தை அடக்கி வெளியே கை காட்டினாள்.

''என்னையா வெளியே போக சொன்னாய்? ஐயோ பாவம் சின்ன குழந்தை ஒன்றை வைத்து கொண்டு தனியா முன்னே பின்னே தெரியாத ஊரில் கஷ்டப்படுகிறாயே? நம்மளா பார்த்து சமாதானமா பேசி நாலு காசு கொடுத்து வாழ வைப்போம் என்று நல்ல எண்ணத்தோடு வந்த எனக்கு நல்ல பாடம் சொல்லி கொடுத்து விட்டாய். உனக்கு பட்டால்தான் புரியும். வக்கீல் உனக்கு மட்டும்தானா? எனக்கு இல்லையா? நீயா நானா என்று கோர்ட்டில் பார்க்கிறேன்'' என்று ஆத்திரத்துடன் பேசிவிட்டு வெளியேற, அவள் அப்படியே தொய்ந்து அமர்ந்தாள்.

இவனுக்கு என்ன வேண்டும்?

ஏன் இங்கே வந்து இப்படி கத்துகிறான்?

நான் எந்த வக்கீலைப் பார்த்து நோட்டீஸ் கொடுத்தேன்?

இருக்கும் பிரச்சனை எல்லாம் போதாது என்று புதிதாக இந்தப் பிரச்சனை வேறயா?

எரிச்சலோடு முனகியவளுக்கு அப்போது தான் அவன் பேச்சில் அடிக்கடி வந்த சினிமாக்காரன் துணை, நடிப்பு ஆகிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தது. கடவுளே! வெற்றிவேல் அந்த நோட்டீசை கொடுத்து இருப்பானோ? அவனுக்கு அதில் என்ன பலன்?

போக என் பெயரில் நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்றால் அதில் என் கையெழுத்து தேவை இல்லையா? வேண்டும் என்றே தன்னை வம்பிழுத்து சீண்டி அவனை தேடி வரவைக்க முயற்சி செய்கிறானோ? கேள்விகள் புதிதாக பிறக்க, ஏற்கனவே இருந்த தலைவலியும் மன உளைச்சலும் மேலும் கூடியது.

* * *

மூன்று நாளில் விசேஷம்! மறுநாள் வசந்தியுடன் கிளம்புவதற்காக ராகுல் தன் உடைகளையும் பொருட்களையும் பையில் பாட்டியுடன் சேர்ந்து எடுத்து வைத்துக் கொண்டு இருக்க ராகுலுக்கு எதை எடுத்து செல்வது? எதை விட்டு செல்வது என்பதில் நூறு சந்தேகங்கள் வந்தது.

''அம்மா நான் கல்யாணத்திற்கு எந்த ட்ரெஸ் எடுத்துக்கட்டும்மா?'' என்று கேட்டபடி ஒரு நான்கு செட் உடைகளுடன் தன் முன் ஆவல் மின்ன வந்து நின்ற மகனை பார்க்க அவளுக்கு மனசுக்குள் பிசைந்தது.



இவனுக்கு இவ்வளவு ஆர்வம் எங்கே இருந்து எப்படி வந்தது? இந்த ஆர்வமும் ஆசை வேகமும் வெற்றிவேலுக்கு இவன் கொடுத்த வாக்கிற்காக! ஒரு ஆண்மகனின் அருகாமையை எப்படி ரசிக்கிறான்?

அவனுக்கு கொடுத்த வாக்கை எப்படி மதிக்கிறான்? அவனுக்கு இருக்கும் அந்த தீவிரம் தனக்குள் ஏன் இல்லாமல் போனது? ஏன் மாற்றி பேசினாள்?

'திருமணம் செய்து கொள்கிறாயா?' என்று அவனும் கேட்கவில்லை. செய்து கொள்கிறேன் என்று அவளும் வார்த்தையால் சம்மதம் சொல்லவில்லை என்ற தைரியம் தானே? ஆனால் வார்த்தைகள் மட்டும் தான் பேசுமா? விழிகளும் உணர்வுகளும் ஜாடைகளும் சொல்வதெல்லாம் எந்தக் கதையில் சேர்ப்பது?

அந்த உணர்வுகளின் பரிமாற்றம்?

அதிசயம் சென்ற போது அங்கே அவனை ரசித்தது?

அந்த பைக் பயணம்?

மிருதுளாவின் கல்யாண வீட்டில் நிகழ்ந்த அந்த கார் பயணம்?

பரிமாறிய முத்தங்கள்?

அதற்கெல்லாம் என்ன அர்த்தம்? எதுவுமே இல்லையா? மனம் சுட்டது!

''அம்மா... பதில் சொல்லுங்கம்மா...?'' என்று முந்தானையை பிடித்து மகன் உலுக்க அவள் நனவிற்கு வந்தாள்.

''இந்த ரெட் கலர் இருக்கு கண்ணு வச்சுக்கோ'' என்று சொல்ல, அவன் துள்ளி குதித்து ஓடினான்.

''பாட்டி இதை என் பையில் வச்சுடுங்க அப்புறம் ரெண்டு ஷூ, அந்த கிரிக்கெட் பேட், பால் மறந்துடா தீங்க...''

''எதுக்கு இவ்வளவு லக்கேஜ் சேர்க்கற? பேட், பால் வேண்டாம் ராகுல்...''

''ம்ஹூம்! வெற்றிப்பா பீச்சுக்கு அழைச்சுட்டு போறேன் என்று சொல்லி இருக்காங்க. அங்கே கிரிக்கெட் விளையாடலாம் என்று சொல்லி இருக்காங்க பாட்டி. கட்டாயம் வேண்டும்...''

''தூக்க முடியாது ராகுல். பாட்டிக்குச் சிரமமா இருக்கும் இல்லையா? தேவையானது மட்டும் எடுத்துக்கோ செல்லம்'' என்ற அம்மாவை பார்த்து சிரித்தான்.

''ஏன் தூக்கணும்? நாங்க காரில் தானே போறோம்? உங்களுக்குத் தெரியாதா?''

''காரிலா? யார் காரு? என்னம்மா இதெல்லாம்? என்னிடம் சொல்லவே இல்லையே? நீங்க ரயிலில் போறதா தானே நான் நினைத்தேன்'' என்று கேட்ட வளின் மூளைக்குள் கேள்விகள் குடைந்தது.

வசந்தி வீட்டு காராக தான் இருக்க வேண்டும். இதை கண்டு பிடிக்க பெரிய சைண்டிஸ்ட் மூளையா வேண்டும்? ஏற்கனவே முற்பகலில் அந்த வினோத் வந்து கத்தி விட்டு போனதில் மூளை கொதிப்படைந்து இருக்க, இப்போது முளைத்த பிரச்சனையில் பொறுமை இழந் தாள்.

''ஏன்மா இப்படி ஆளாளுக்கு என்னை பிச்சு எடுக்க றீங்க? மனுஷியை நிம்மதியா இருக்க விடக் கூடாது என்று எல்லாரும் சேர்ந்து பாடா படுத்துறீங்க?'' என்று



பொரிந்து விட்டு அறைக்குள் சென்று கதவை சாத்தி மகளை பரிதாபமாக பார்த்தார் கற்பகம்.



## 22

கோபத்துடன் உள்ளே சென்று கதவை சாத்தி கொண்ட மகளை உடனடியாக தொந்தரவு செய்ய வேண்டாம் என்று விட்டு பிடித்தார் கற்பகம். அரை மணி நேரம் சென்ற பிறகு, ராகுல் மூலமாக சாப்பிட அழைக்க வாணிப்ரியா மேற்கொண்டு விவாதம் நடத்தாமல் வந்து அமர்ந்தாள்.

''காலையில் வசந்தியை கடையில் பார்த்தேன். எப்போ எப்படி வரீங்க? என்று கேட்டாள். சொன்னேன். எதுக்கு அத்தை குழந்தையையும் கூட்டிக் கொண்டு அலையறீங்க? மூன்று பேர் தான் காரில் போகப் போறோம். இங்கே வேற எதுவும் முக்கியமான வேலை இல்லை என்றால் ஒரு நாள் முன்னாடி கிளம்பி எங்களுடனே வந்து விடலாமே என்று கேட்டாள். சரி என்று சொல்லி விட்டேன். உனக்கு இஷ்டம் இல்லை என்றால் நான் போகவில்லை. உன்னைக் கேட்காமல் முடிவெடுத்து விட்டேன் என்ற உன் கோபம் புரியுது வாணி. ஆனால் என் வயசைக் கொஞ்சம் நினைச்சுப் பாரு. நான் உன்னை எந்த விஷயத்துக்கும் கட்டாயப்படுத்த வில்லை...'' என்று ராகுல் உணராத அளவில் தன் தரப்பு நியாயத்தை எடுத்து வைக்க அவளுக்கு பெருமூச்சு வந்தது.

"எதுக்கும்மா அவங்களுக்கு சிரமம்தானே?"

"அது நீயா நினைத்து கொள்வதுதானே? சிரமம் என்று அவங்க நினைத்து இருந்தால் என்னிடம் ஏன் கேட்கப் போறாங்க? இதே மாதிரி நீயா கண்டதையும் கற்பனை பண்ணி கொள்வதை நிறுத்தினாலே உன் வாழ்க்கை சந்தோஷமா இருக்கும்..."

"எங்கே இருந்து எங்கே தாவுரீங்கம்மா? நான் சந்தோஷமா தான் இருக்கேன்."

"அதான் கொஞ்ச நேரம் முன்னாடி நீ ரொம்ப சந்தோஷமா ஆடி பாடினதை கேட்டேனே? ஆனால் ஒரு விஷயம்! நீ எப்படி இருக்கியோ எனக்குத் தெரியலை. நான் சந்தோஷமா இல்லை. எனக்குப் பிறகு என்று நினைத்தாலே மனசு பதறுது. ஒரு நாளை போல தினமும் ராத்திரி படுத்தா தூக்கம் வர மாட்டேங்குது..."

"தேவை இல்லாமல் விஷயத்தை டைவர்ட் பண்ணாதீங்க. நான் உங்களை ஒன்றும் சொல்லவில்லை. ரெண்டு பேரும் பத்திரமா போயிட்டு, ஊரெல்லாம் சுத்தி பார்த்து விட்டு, எப்போ என் நினைப்பு வருதோ அப்போ சென்னையில் இருந்து வந்தால் போதும். இங்கே நான் தனியா இருந்துக்கறேன். போதுமா?" என்று வேகமாக சொன்னவளின் குரலில் மறைந்து இருந்த ஆதங்கம் கற்பகத்திற்குப் புரிந்தது.

"நீ ஏன் இங்கே தனியா இருக்கணும் வாணி? நீயும் எங்களுடன் வாயேன். நீ வருவதா இருந்தால் ஒரு நாள் முன்னாடி இவர்களுடன் போக வேண்டும் என்ற அவசியம் கூட இல்லை. முதல் நாள் இரவு ரயில் பயணம் செய்தால் கூட போதும்..." என்று மீண்டும் ஒரு



முறை முயற்சி செய்ய அவள் அது காதிலேயே விழாதது போல அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டாள்.

தொலைக்காட்சியை போட்டு விட்டு, இலக்கின்றி எதையும் பார்க்காமல் ஒவ்வொரு சேனலாக மாற்றி மாற்றி போட்டபடி திரையை வெறித்துக் கொண்டு இருந்தவளின் காதுகளில் தொலைபேசி மணி அடிப்பது கூட விழவில்லை. உள்ளே அறையில் துணி அடுக்கிக் கொண்டு இருந்த கற்பகம் ஹாலுக்கு வந்து அதை எடுக்க, அருகே இருந்தவள் அதை உணராமல் அமர்ந்து இருந்தாள்.

"ஏன்டீ, இங்கே தான் உட்கார்ந்து இருக்க? இந்த போனை எடுத்தால் தேய்ந்தா போவாய்?" என்று அதட்டி விட்டு போனை எடுத்தவர் எதிர்முனையில் இருப்பது வசந்தி என்றதும் மேலும் வியப்பானார்.

தொடர்ந்து மாறிக் கொண்டு இருந்த சேனலில் கோலிவுட் செய்திகள் என்ற பெயரில் 24 மணி நேரமும் சினிமா செய்திகளை தரும் ஒரு தனியார் தொலைக் காட்சி சேனலில் அன்று நடந்த தீ விபத்து பற்றிய செய்தி ஒளிபரப்பாக கைகள் இயங்காமல் நின்றது.

"இளவேனில் காலம்", திரைப்படத்திற்கான இறுதி கட்டப் படப்பிடிப்பு நடந்த தளத்தில் எதிர்பாராமல் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்தார் பதிமூன்று பேர் காயம் அடைந்தனர் என்ற செய்தியையும் விபத்து அந்தந்த இடத்தையும் மருத்துவமனையில் இருப்பவர் களையும் சுற்றிக் காட்டிய செய்தி ஒளிபரப்பாகிக் கொண்டு இருக்க, வாணிப்ரியாவின் கண்கள் இமைக் காமல் தொலைக்காட்சி திரையை வெறித்தபடி இருந்தது.

இதுதானே அவன் கடைசியாக பண்ணிய படம்! ஷூட்டிங் முடிந்து விட்டது என்று சொன்னானே? திரும்ப என்ன நடந்தது? ஒருவேளை இது பழைய செய்தியோ? மறு ஒளிபரப்பு செய்கிறார்களோ என்று எண்ணுவதற்கு வழி இன்றி தீ விபத்து நடந்த படப் பிடிப்பு தளம், காயம் பட்டவர்கள் அனுமதிக்கப்பட்டு இருந்த மருத்துவமனை முன்புறம் என்று தொடர்ச்சியாக காட்சிகளும் அங்கே இருந்தவர்களின் பேட்டியும் ஒளிபரப்பாக அது புதிய செய்தி தான் என்பது உறுதி யானது. உள்ளம் பதற திரும்பியவளின் காதுகளில் அம்மாவின் அதிர்ச்சியான குரல் கேட்டது.

''வசந்தி நீயா...? என்னம்மா இந்நேரத்தில...?'' என்ற அவரின் வார்த்தைகள் வாணியின் காதில் விழ அவள் அவசரமாகத் திரும்பிப் பார்த்தாள். எதிர்முனையில் அவள் என்ன சொன்னாளோ?

''ஹையோ! அண்ணனுக்கு என்ன ஆச்சு...?'' என்ற கற்பகத்தின் அலறல் வாணிப்ரியாவின் காதுகளில் விழ, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு திரும்பிப் பார்த்த வளின் அவளின் உள்ளம் பதற, உடல் நடுங்கியது. உடனே அவனைப் பார்க்க வேண்டும் என்று ஆவல் பேரலையாக மனதில் எழுந்தது.

கற்பகம் பேசிவிட்டுப் போனை வைக்க அவரையே திகைப்புடன் பார்த்துக் கொண்டு இருந்த வாணி, ''அம்மா...'' என்று வேகமாக அழைத்தபடி அவரின் கை பற்றி இழுத்தாள்.

''என்ன...?'' என்று திரும்பியவர் அவளின் முகத்தில் இருந்த பரபரப்பையும் விழிகளில் வடிந்த நீரையும் பார்த்துத் திகைத்தார்.



''போனில் யாரும்மா...?''

''வசந்தி....! ஏன் கேட்கிறாய்?''

''அவருக்கு என்ன ஆச்சு...?''

''யாருக்கு என்ன ஆனால் உனக்கென்ன?'' என்று அவர் நிதானமாக விசாரிக்க அவள் அவரின் தோளைப் பற்றி உலுக்கினாள்.

''அம்மா வசந்தி என்ன சொன்னாங்க? சீக்கிரம் சொல்லுங்க. அங்கே பாருங்க...'' என்று அவள் கண்ணீர் வழிய ஆவேசமாக அவள் சொன்ன வார்த்தைகளில் ஆடிப் போனார்.

அவள் விரல் நீட்டி காட்டிய தொலைகாட்சி திரையில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டு இருந்த ஒரு திரைப் பட செட்டிங்கும், மருத்துவமனை முகப்பும் பின்னணி யில் மாறி மாறித் தெரிய, விபத்து பற்றிய விபரங்களைச் சொல்லிக் கொண்டு இருந்த அறிவிப்பாளரின் குரல் ஒலித்துக் கொண்டு இருந்தது.

அவளின் ஆவேசத்திற்கான காரணம் புரிந்தது. ஆனால் அவருக்கு உண்மை தெரியும் என்பதால் நிதானமாக யோசிக்க முடிந்தது. இவளுடைய நல்ல எதிர்கால வாழ்க் கைக்காக இவளின் இந்த பதட்டமான மன நிலையைப் பயன்படுத்திக் கொண்டால் என்ன என்ற எண்ணம் தோன்றியது.

''அந்த விபத்து செய்தி உண்மைதான். அதை தான் அவளும் இப்போது சொன்னாள். அதனால் நாளை பிற்பகல் கிளம்புவதாக இருந்த திட்டத்தை இன்றே இப்போதே கிளம்புவதாக இருந்த திட்டத்தை மாற்றி விட்டேன் என்று தகவல் சொல்லி விட்டு நீங்களும்

இப்பவே வரீங்களா என்று கேட்டாள். ஏற்கனவே நீ கோபத்தில் இருக்கிறாய்? இதுல மூன்று நாள் முன்னாடி அங்கே போனால் என்ன செய்வாயோ, என்று வரலை என்று சொல்லி விட்டேன்...'' என்று கற்பகம் பேசிக் கொண்டு இருக்கும்போதே அவசரமாக எழுந்தாள்.

ஒரு மணி நேரமாக படுக்கையில் புரண்டு இருந்ததால் கசங்கி இருந்த உடை, கலைந்து இருந்த தலை, ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், ''அம்மா நான் வசந்தி அக்காவை பார்த்து விட்டு வருகிறேன்'' என்று போகிற போக்கில் சொல்லி விட்டு ஓட்டமும் நடையுமாக தெருவில் சென்ற மகளைப் பார்த்துக் குழம்பினார் கற்பகம்.

கைப்பையை எடுத்துக் கொள்ளவில்லை. வீட்டுக் கதவை சாத்தவில்லை. இரு சக்கர வாகனத்தை எடுத்தால் விரைவாக போகலாம் என்ற யோசனை கூட இல்லை. பைத்தியம் பிடித்தவள் மாதிரி இந்த ராத்திரி நேரத்தில் அங்கே எதற்குப் போகிறாள் என்று குழம்பியபடி வசந்திக்கு தொலைபேசியில் அழைத்தார்.

''சொல்லுங்க ஆன்ட்டி.''

''நாளைக்கு ப்ரோக்ராம் மாத்தி அவசரமா உடனே கிளம்புறீங்களே? அங்கே உங்க அண்ணனுக்கு விபத்தில் அடி ஒன்றும் பலமில்லையே?'' என்று கவலையாக விசாரித்தார்.

''ஷூட்டிங்ல விபத்து என்று டி.வி.யில் நியூஸ் பார்த்துட்டு பயந்து போய் அண்ணனிடம் நானே பேசிட்டேன் அத்தை. நல்லா இருக்கான். அவருக்கு ஒன்றும் இல்லை. நீ பரவுவதைப் பார்த்ததும் முதல் மாடியில்



இருந்து குதிச்சு இருக்காங்க. அதனால் வலது காலில் சுளுக்கு. கொஞ்சம் சிராய்ப்பு காயம் அவ்வளவுதான். பயப்பட ஒன்றும் இல்லை.''

''எல்லாம் கண் திருஷ்டி தான் வசந்தி. நியூஸ் பார்த்துட்டு அரக்க பறக்க வாணி அங்கே ஓடி வருகிறாள். கொஞ்சம் உட்கார வச்சு நல்லபடியா பேசி அனுப்பு...''

''என்ன சொல்றீங்க அத்தை?'' என்று வியப்புடன் கேட்ட வசந்தியின் மனதில் வேறொரு திட்டம் வேகமாக உருவாகியது.

''டி.வியில் நியூஸ் பார்த்துட்டு வாணி அரக்கப் பறக்க ஓடி வருகிறாள் என்று சொன்னேன்.''

''அத்தை. நான் ஒன்று சொன்னால் செய்வீங்களா?''

''என்ன செய்யணும்னு சொல்லு.''

''உங்களுக்கு எங்க அண்ணனைப் பிடிச்சு இருக்கா?''

''இதென்னம்மா கேள்வி? எனக்குப் பிடிப்பதா முக்கியம்?''

''அதுவும் முக்கியம் தான். நீங்க பதில் சொல்லுங்க.''

''எனக்கும் பிடிச்சு இருக்கு. ராகுலுக்கும் பிடிச்சு இருக்கு. அவ்வளவு ஏன் அவளுக்குமே பிடிச்சு தான் இருக்கு. ஆனால் அதை வெளியே தான் சொல்ல மாட்டேன் என்கிறாள்...''

''கரெக்ட் அதை சொல்ல வைக்கணும். அதுக்கு நான் ஒரு ஐடியா பண்ணுகிறேன். நீங்க ஒத்துழைக்கணும்.''

''நான் என்ன செய்யணும்..?''

''ஒன்றும் இல்லை, அம்மா அப்பாவோட சஷ்டியப்த பூர்த்தி கல்யாணத்திற்கு காரில் நாம் எல்லோருமே இப்ப

கிளம்பலாம். நீங்க அவளுக்கும் ட்ரெஸ் எடுத்து வச்சுக்கோங்க. அவளிடம் இந்த விபத்து செய்தியைப் பயன்படுத்தி அண்ணனைப் பார்க்கப் போவதா சொல்லி அவளையும் அழைத்துச் செல்லலாம்.''

''அங்கே போன உடனே உண்மை தெரிந்து விடுமே...?''

''தெரிய விட்டால் தானே?''

''புரியலையே வசந்தி...''

''அண்ணனையும் ஆஸ்பத்திரி ரூமில் ரெண்டு நாள் ரெஸ்ட் எடுக்க வைத்து விடுவோம் அத்தை...'' என்று அவள் சிரிப்புடன் சொன்னபோது தான் அவருக்கு விஷயம் புரிந்தது.

''ஆனால் உங்க அம்மா அப்பா கல்யாண வேலை இருக்கும்போது...''

''இன்னும் மூன்று நாள் தானே இருக்கு? கல்யாண வேலைகள் முக்கால் வாசி முடிந்து போய் இருக்கும். அப்படியே ஒண்ணு ரெண்டு மிச்சம் இருந்தாலும் நாளைக்கு பவித்ரா அப்பாவை வைத்துப் பார்த்துக் கொள்ளலாம். ஏதாவது சின்ன சொதப்பல்கள் வந்தால்கூட இந்த சஷ்டியப்த பூர்த்தி கல்யாணம் நின்று விடப் போவதில்லை. ஆனால் வெற்றி - வாணியோட கல்யாணம் நடக்க இந்த சொதப்பல்கள் உதவி பண்ணும் என்றால் செய்வோமே? மூன்று நாள் ரெண்டு பேரும் ஒரே வீட்டில் இருந்தால் எல்லாம் சரியாகிடும் என்று என் மனசு சொல்லுது அத்தை.''

''உங்க அம்மா அப்பாக்கு அவள் மேலே வருத்தம் இருந்தால் என்ன செய்வது? அவர்கள் ஒத்துக் கொள்ள வேண்டாமா?



''வருத்தம் இல்லை என்று தான் நான் நினைக்கிறேன். ஆனால் ஒருவேளை வீடு தேடி வந்தவங்களை அவள் சரியா நடத்தலை என்ற மனக்குறை இருந்தாலும், அதையும் சரி பண்ணித்தானே ஆகணும்? இந்தக் கல்யாண வீட்டு வேலைகளை அவள் இழுத்துப் போட்டு ரெண்டு நாள் செய்தால் எங்க அம்மாவோட மனசு குளிர்ந்து விடும் அத்தை. அதை நான் பார்த்துக்கறேன். நீங்க உங்க சம்மதம் சொல்லுங்க.''

''நிச்சயமா என்னுடைய சம்மதமும் ஆசீர்வாதமும் உண்டு வசந்தி.''

''தேங்க்ஸ் அத்தை. போனை வச்சுடறேன். வெளியே சத்தம் கேட்குது'' என்று சொல்லி விட்டு அவசரமாக போனை வைத்தவள் முகத்தை சோக பாவனைக்கு மாற்றிக் கொண்டாள்.

''வா வாணி! என்ன இந்த நேரத்துல இப்படி அவசரமா ஓடி வருகிறாய்?'' என்று வாசலில் இருந்த புவனேஸ்வரி வரவேற்றார்.

''வசந்திக்கா இல்லையா?'' என்று கேட்கும்போதே வேகமாக நடந்து வந்ததில் மூச்சு வாங்கியது.

''வாணி, நான் அவசரமா ஊருக்குக் கிளம்பிட்டு இருக்கேன் விஷயம் அவசரமான எதுவும் இல்லை என்றால் அப்புறமா பேசலாமா?'' என்று அவளிடம் பரபரப்பாகச் சொல்லி விட்டு,

''பவித்ராவை அப்பாவை ட்ரைவர் அங்கிளுக்குப் போன் போடச் சொல்லு. அப்படியே பெட்டியோட சீக்கிரம் கீழே இறங்கி வாங்க'' என்று மகளை ஒரு புறம் விரட்டிய கையோடு.

''அத்தை ரெண்டு பெரிய பாட்டிலில் தண்ணியும் பிஸ்கட் பாக்கெட் ஒரு பையில் போட்டுக் கொடுத் துடுங்க'' என்று அத்தையையும் ஏவிய வேகத்தில் வாணிக்கு மேலும் கலவரம் மூண்டது.

''ஊருக்கு என்றால் சென்னையா?'' என்று கேட்கும் போதே தொண்டைக்குள் அடைத்தது.

''ஆமா! இதென்ன கேள்வி? அவசரமா ராத்திரி கிளம்பும் நேரத்தில் வந்து...? ப்ச்! அதை விடு. அம்மா அப்பா அண்ணன் எல்லா உறவும் எனக்குத் தானே? என் டென்ஷன் எனக்கு. அதை ஏன் உன் மேல் ஏத்த ணும்? சொல்லு. நீ என்ன விஷயமாக வந்தாய்? அவ சரமா எதுவும் இல்லை என்றால் அடுத்த வாரம் பேசலாம்.''

''அண்ணனுக்கு என்ன ஆச்சு...?''

''எங்க அண்ணனுக்கு என்ன ஆனால் உங்களுக்கு என்ன அக்கறை?'' என்று குத்தலாகக் கேட்டவளின் கேள்வி கணை வாணியின் கண்களில் உடனடி அருவியைச் சுரக்க வைத்தது.

அவளின் கலங்கிய முகமும் கண்ணீர் நிரம்பிய கண் களும் மனசை சங்கடப் படுத்திய போதும், இதே செய்ய வேண்டிய மருத்துவம் என்று தன் மனதைத் திடப் படுத்திக் கொண்டாள் வசந்தி.

''உயிருக்கு ஒன்றும் ஆபத்து இல்லை'' என்று சொல்ல ஆரம்பித்தவள் 'பயப்பட வேண்டாம்' என்று தொடர்ந்து வந்த வார்த்தையை பாதியில் நிறுத்திக் கொணடாள். அவள் பயந்தால் தானே காரியம் ஆகும்.

''அதென்னவோ அவன் வாங்கி வந்த வரம் போல! அவன் என்ன நினைத்தாலும் அது நடப்பேனா



என்கிறது? இத்தனைக்கும் பார்ப்பதற்கு முரடன் மாதிரி தெரிந்தாலும் ஒரு ஆளுக்கு கூட தீங்கு நினைக்காத நல்ல மனுஷன் அவன் கல்யாணத்தை நடத்தி வைக்க எங்க அம்மா அப்பா ரெண்டு தடவை முயற்சி பண்ணி அதுதான் நடக்கலை. அம்மா அப்பா கல்யாணத்தை நல்லபடியா நடத்தி வைக்க அவன் ஆசைப்பட்டான் அதுக்கு கூட அவனுக்குக் கொடுத்து வைக்குதா பாரேன்? சில சமயம் கடவுளுக்கு கண் இல்லையோ என்ற எண்ணம் தான் வருது. அதை உன்னிடம் சொல்லி என்ன பிரயோஜனம்? சரிம்மா நாங்க கிளம்பப் போகிறோம்... நீ?'' என்று கேள்வியாக நிறுத்தினாள்.

''நானும் உங்களோடு வருகிறேன்...'' என்று கண் களைத் துடைத்துக் கொண்டு தீர்மானமாக சொன்ன வளை வியப்புடன் பார்த்தாள்.

''வரட்டுமா என்று அனுமதி கூடக் கேட்கவில்லை நல்ல முன்னேற்றம் தான். இப்படியே மெயிண்டெயின் பண்ணிக்கோ வசந்தி'' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

''உங்க வீட்டுல அப்படியே உங்க அம்மாவையும் ராகுலையும் கூட அழைத்து செல்லலாமா? அவங்களும் சென்னைக்கு வருகிறேன் என்று சொன்னவர்கள் தானே?'' என்று முடிவை அவளிடம் திணித்தவள், அவளை மேலே யோசிக்கவே விடாமல் வண்டியில் ஏற்றினாள்.

அவசரமாக அருகே இருந்த கணவனுக்கும், ஐநூறு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த அண்ணனுக்கும் கையில் இருந்த அலைபேசியில் இருந்து பயண நேரமான ஆறு மணி நேரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட

குறுஞ்செய்திகளை விடிய விடிய அனுப்பிக் கொண்டே இருந்தாள் வசந்தி.



# 23

அடித்துப் பிடித்து வாணியை யோசிக்க விடாமல், வண்டியில் ஏற்றி, வழியில் ராகுலையும் கற்பகத்தையும் ஏற்றிக் கொண்டு வாகனம் நெடுஞ்சாலையில் விரைய துவங்கும் வரை வசந்திக்கு பதட்டமாக இருந்தது.

எல்லோருக்கும் தகவல் சொல்லி, கூடிய வரையில் எல்லோரும் ஒரே மாதிரிப் பொய்யைச் சொல்ல வேண்டும். சென்னை சென்றடையும் வரையிலாவது இவளின் பதட்டத்தைப் பிடித்து வைத்து இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்த வசந்தியிடம் ப்ரியாவால் முதல் பதினைந்து நிமிடங்கள் எதுவுமே கேட்க இயலவில்லை. அதன் பிறகே 'அக்கா...' என்று அழைத்தாள்.

"சொல்லு வாணி..."

"நீங்க விபத்து தொடர்பா யாரிடம் பேசினீங்க? இப்ப அவர் எப்படி இருக்கிறார்? எங்கே இருக்கிறார்?" என்று கண்ணில் உயிரைத் தேக்கி பரிதாபமாகக் கேட்டவளைப் பார்க்கையில் உள்ளுக்குள் உருகியது.

இவ்வளவு ஆசையை வச்சுக்கிட்டு ஏன் வாணி நடிக்கிறாய் என்று கேட்க நுனி நாக்கு வரை வார்த்தை வந்துவிட அதற்கு அங்கேயே பூட்டு போட்டு நிறுத்தினாள்.



"அவனிடம் தான்..." என்று ஆரம்பித்து விட்டு தொண்டையைச் செருமி சமாளித்து, "பேச முடியாதே அப்பாவிடம் தான் பேசினேன். அப்ப நானும் பதட்டமா இருந்தேனா? கிளம்பிய பிறகு விசாரிக்கலாம் என்று இந்த வேலையை கவனிக்க வந்துட்டேன். இரு அப்பாவிடம் பேசுகிறேன்" என்று சொல்லி அப்பாவை அழைத்தாள்.

தான் இவளிடம் என்ன சொல்லப் போகிறோம் என்பதை அவனும் அப்படியே கேட்டுக் கொண்டால் நல்லது. நாமாகச் சொன்னால் ஒன்றிரண்டை விட்டு விட வாய்ப்பு இருக்கிறது என்ற முன் யோசனை அவளை அழைக்க வைத்தது.

"அப்பா, நான் வசந்தி பேசறேன். இங்கே இருந்து கிளம்பி பதினஞ்சு நிமிஷம் ஆகுது வெற்றி அண்ணா எப்படி இருக்காங்கப்பா?"

"அண்ணனுக்கு என்ன? நல்லா இருக்கான். காலில் ஒரு சின்ன பேண்டேஜ் அவ்வளவு தான். அவனே நாலு பேரை தீயில் இருந்து வெளியே தூக்கிப் போட்டு இருக்கான். கடைசியில் குதிக்கும்போது கணுக்காலல் சுளுக்கு."

"அச்சோ அப்புறம்..." என்று பதற இங்கே வாணியின் இதயத் துடிப்பு எகிறியது.

"இப்ப எதுக்கு நீ இந்த ஓவர் ரியாக்ஷன் கொடுக்கிற? அப்புறம் ஒண்ணும் ஆகலை. எல்லாரையும் ஹாஸ்பிடல் சேர்த்துட்டு வீட்டுக்கு வந்து குளிச்சு சாப்பிட்ட பிறகு திரும்பி அங்கே போக கிளம்பிக் கொண்டு இருக்கிறான். ஏற்கனவே பேசும் போதே சொல்லி இருந்தானே! இப்ப என்ன புதுசா கதை கேட்கிறாய்? அவனிடம் பேசு அப்ப

தான் உன் டென்ஷன் குறையும்'' என்று சொல்லி விட்டு மகனிடம் போனைக் கொடுத்தார் வெங்கடேஸ்வரன்.

''சொல்லு வசந்தி.''

''உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லையேப்பா?''

''அப்பாவா? வசந்தி, நான் வெற்றி பேசறேன்.''

''தெரியுதுப்பா! ஆண்டவன் நல்லவங்களை தான் ரொம்ப சோதிக்கிறான் என்னுடன் வாணியும் வராப்பா...''

''வாணியா? நிஜமாவா?''

''ஆமாப்பா! அண்ணனுக்கு விபத்து என்றதும் பதறி அடிச்சு ஓடி வந்துட்டாங்க. சரி என்று நானும் அவங்க மனசு புரிந்து கூட கூட்டிட்டு வரேன். அண்ணனுக்கு ஆபத்து என்றதில் ஆடிப் போய்ட்டாங்கப்பா. இப்ப அண்ணன் எப்படி இருக்காருப்பா...? பேசினாரா...?''

''உனக்கு என்ன வேண்டும்? நான் பேசணுமா பேசக் கூடாதா...?'' என்று அவளின் நாடகம் புரிந்து தொடர்ந்தவன் குரலில் சிரிப்பு இருந்தது.

''உயிருக்கு ஆபத்து இல்லையே? அதுவே போதும்பா. வலது கையில் பிராக்சரா? ஹையோ...!''

''ஏய்! இப்ப ஏன்டி என் கையை உடைக்கிறாய்? அவளை என் பக்கத்தில் உதவி செய்ய இருக்க வைக்கப் போகிறாயா?''

''காலில் ஒரு பேண்டேஜ் தானேப்பா? எக்ஸ்ரே பார்த்தாச்சு தானே? பிராக்சர் இல்லையே?''

''வசந்தி போதும்! இன்னும் ஏதாவது பார்ட்டை நீ உடைச்சால் நான் நடமாட முடியாது. இன்னும் ரெண்டு நாளில் விசேஷம் நடக்கப் போற வீடு இது. இங்கே



கூட்டிட்டு வந்து விட்டால் நான் பார்த்துக்கறேன். ஆக மொத்தத்தில் திங்கள் கிழமை ரெண்டு கல்யாணம் நடக்கும் என்று சொல்ற. வசந்தி உன்னைப் போல எல்லா அண்ணன்களுக்கும் ஒரு தங்கை இருந்தால் போதும்! காதல் வாழ்ந்து விடும்...''

''சரிப்பா, மனசை தேத்திக்கோங்க. அண்ணன் சீக்கிரமே உங்க அறுபதாம் கல்யாணத்திற்கே எழுந்து உற்சாகமா எல்லா வேலையும் ஓடி ஆடி செய்வாங்கப்பா. நான் சொல்வது நிச்சயம் நடக்கும்.''

''தேவதைகள் எல்லாம் ததாஸ்து சொல்றாங்க வசந்தி தேங்க்ஸ்...''

''காலையில் மூன்று மணிக்கு வந்து விடுவோம் என்று நினைக்கிறேன். வீட்டுக்கு தான் வருவோம். அம்மாவிடமும் சொல்லிடுங்க...'' என்று சிரிக்காமல் வசந்தி பேசி முடிக்க போனை வைத்த வெற்றிவேலின் சிரிப்பு அடங்க வெகு நேரமானது.

* * *

''என்னக்கா வீட்டுக்கா இப்ப போகணும்?'' என்று தயக்கத்தோடு விசாரிக்க ஆமோதிப்பாக தலை அசைத்து விட்டு அவளின் முகத்தை வருடினாள்.

''ஆமா வாணி வீட்டுக்குப் போய் குளிச்சுட்டு மருத்துவமனை போய்ட்டா அங்கேயே இருந்து அண்ணனைப் பார்த்துக் கொள்ளலாம் இல்லையா? அம்மா வேறே இங்கே இருப்பாங்க. பார்த்து ஹலோ சொல்லிட்டு அப்புறமா ஹாஸ்பிடல் போகலாம்'' என்று தேற்ற, அவனைப் பார்க்க வேண்டும் அவனுக்கு ஆபத்து இல்லை என்பதை நேரடியாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற

வாணிப்ரியாவின் துடிப்பு வினாடிக்கு வினாடி அதிகரிக்க அன்றைய இரவு பொழுது முழுவதும் அவள் தூங்கவே இல்லை.

வீட்டுக்குள் கார் நுழையும்போதே, "வா வசந்தி, வா வாணி" என்று இருவரையும் வரவேற்ற பாலாம்பிகை "எங்கே ரகு?" என்று அண்ணன் மகனையும் விசாரித்தார்.

"பவித்ராவைத் தூக்கிட்டு வராரும்மா. ராத்திரியில் சப்தம் வேண்டாம். அண்ணா எங்கே?" என்று ரகசியமாக விசாரிக்க அவளை விட தாழ்ந்த குரலில் பதில் சொன்னார் பாலாம்பிகை.

"கையோடு அண்ணியையும் அழைத்துக் கொண்டு வந்து விட்டாய் போல? என் பொண்ணு சமத்து! என்னை மாதிரி. அப்பாவுக்கும் பிள்ளைக்கும் சமர்த்து அவ்வளவு போறாது..." என்று சொல்ல ஒற்றை விரலை வாயில் வைத்து அம்மாவை அடக்கினாள்.

'ஓவர் ஆக்டிங் பண்ணி கெடுத்துடாதீங்கம்மா. பையன் ஹாஸ்பிடலில் இருக்கும் போது இப்படி தான் விருந்து உபசரணை பண்ணுவீங்களா?" என்று அதட்டியதும் அவர் அப்படியே சோபாவில் சரிந்து அமர்ந்தார்.

"என்னம்மா ஆச்சு? வாணி, கொஞ்சம் தண்ணி எடுத்து வா. அவனுக்குக் கெடுதல் எதுவும் வரக் கூடாது என்று வேண்டிக்கிற இத்தனை பேர் இருக்கும்போது, அண்ணனுக்கு ஒண்ணும் ஆகாதும்மா..." என்று சொல்லிக் கொண்டு இருக்க அவள் மின்னல் வேகத்தில் நீருடன் வந்து இருந்தாள்.

"ஆண்டவன் புண்ணியத்தில பெரிசா ஒன்றும் இல்லை. நைட் வீட்டுக்கு வந்தாச்சு. மேலே அவன்



ரூமில் படுத்து இருக்கான்..." என்று கற்பகம் மெதுவாகச் சொல்ல வாணிக்கு உடனே மாடிக்குச் சென்று அவனைப் பார்க்க வேண்டும் என்று கையும் காலும் பரபரத்தது.

"வீட்டிற்கு அழைத்து வந்தாச்சா? நேற்று நான் கேட்கும்போது கூட ஆஸ்பத்திரியில் இருப்பதாகத் தானே சொன்னான்...?" என்று விசாரித்தபடி வாணியின் முகத்தை எடை போட்டாள் வசந்தி. அவளின் கவனம் இங்கே இல்லை. அம்மா சொன்னதும் அவள் காதில் விழுந்த மாதிரி தெரியவில்லை.

"சரிம்மா நான் பார்த்து விட்டு வருகிறேன் அண்ணனுக்கு காபி, ஹார்லிக்ஸ் மாதிரி எதுவும் கொடுக்கணுமா...?"

"மேலேயே ப்ளாஸ்க்ல வெந்நீர் வச்சு இருக்கேன் வசந்தி. இந்நேரம் தூங்கிட்டு தான் இருப்பான். உன்னை பார்த்து விழித்தால் பசிக்கும். அப்ப கலந்து கொடு."

"சரிம்மா, நீ வா வாணி..." என்று அவள் சொன்ன வார்த்தை காதில் விழுந்ததும் வண்டியில் இருந்து அம்மா தூங்கும் குழந்தையைத் தூக்கி வர சிரமப்படுவார்களே என்ற எண்ணம் இல்லாமல் அவள் பின்னாலேயே சென்றவளை கற்பகமும் பாலாம்பிகையும் பரிவுடன் பார்த்தார்கள்.

"என்ன சொல்லி எப்படிக் கிளப்பினாய் கற்பகம்?" என்று பாலாம்பிகை கேட்க அவர் சிரிப்புடன் தலை அசைத்தார்.

"எதுவும் சொல்லி கிளப்பவில்லை அண்ணி. மாப்பிள்ளை பத்திரமா இருக்கார் என்ற தகவலைச் சொல்லாமல் கிளப்பினோம்..."

''இவ்வளவு பாசத்தையும் மனசுக்குள் புதைச்சு வச்சுக்கிட்டு எப்படிப் பேசினாள் பாருங்களேன்...''

''அதை மனசுல வச்சுக்காதீங்க அண்ணி. அது முதல் நாள் கல்யாண வீட்டில் நாம பார்த்த ரெண்டு பேர் பண்ணிய வேலை...''

''அவங்களை எல்லாம் வெற்றி பார்த்துப்பான். இங்கே வந்த அடுத்த நாளே ஒரு பக்கம் கமிஷனர் ஆபீஸ் போய் புகார், இன்னொரு பக்கம் வக்கீல் நோட்டீஸ் கொடுத்து, என்று நாலா பக்கமும் நெருக்கடி கொடுத்து இரண்டே நாளில் அவங்களை வீடு தேடி வர வச்சுட்டான். அவங்க இனி மேல் வாணியின் பக்கம் தலை வைத்துக் கூட படுக்க மாட்டாங்க.''

''உங்க பெரிய மனசுக்கு நான் எப்படி நன்றி சொல்வேன்? இனிமேல் வாணியைப் பற்றிய கவலையை விட்டுட்டு கிருஷ்ணா ராமா என்று தேசாந்திரம் கிளம்பிடுவேன்'' என்று சொல்லும்போதே அவரின் கண்களில் நன்றிப் பெருக்கினால் கண்ணீர் துளிர்த்தது.

''அடடா! சின்னக் குழந்தை மாதிரி அழுதுகிட்டு? கண்ணைத் துடை. உங்க பெண்ணுக்கு மட்டும் இல்லை. இது என் பையனும் விரும்பிக் கேட்டு இருக்கும் வாழ்க்கை. இதுல என் பையன் சந்தோஷமும் இருக்கே? அதை விட்டுட முடியுமா? குழந்தைகளை என் ரூமில் படுக்க வைக்கலாம். வாங்க செத்த நேரம் தூங்கட்டும்'' என்று தூக்க முயல தூங்கும் குழந்தைகள் கனத்தன.

''வசந்தி, அண்ணனை விசாரித்து விட்டால் குழந்தைகளைத் தூக்கி படுக்க வை வா...'' என்று மாடியை நோக்கிக் குரல் கொடுத்தார் பாலாம்பிகை.

* * *



வசந்தியுடன் சென்னை வரை பயணம் செய்ய நேர்ந்ததே இவன் நலத்தை அறியத்தான் என்பதால் கணநேர தயக்கம் கூட இன்றி வேகமாக வெற்றிவேலின் அறைக்குள் வந்து விட்டாள் வாணிப்ரியா. மெல்லிய இரவு விளக்கொளியில் கண் மூடி துயில் கொண்டு இருந்தவனை அவசரமாக ஆராய்ந்தாள்.

இடது புறம் நெற்றியிலும் வலது தாடையிலும் சின்ன பிளாஸ்திரிகள் வலது கையில் கட்டுப் போட்டு இருக்க வேண்டும். அதன் மேலே காக்கி கலரில் உரை மாதிரி போட்டு, கைகளை மடித்த வாக்கில் தொட்டில் இருந்தது. இடை வரை போர்வை போர்த்து இருக்க கீழே காயம் இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை.

தன்னுடன் திருமணம் பற்றி பேசியதால் தான் இவனுக்கு இந்த விபத்து நேர்ந்து விட்டதோ என்ற கவலையில் அந்த வினாடி வரை தவித்தவள், அவன் முழுசாக இருக்கிறான். சுவாசம் சீராக ஏறி இறங்கியது. முக்கியமாக அவன் மருத்துவமனையில் இல்லை. வீட்டில் அவனுடைய அறையில் இருக்கிறான் என்ற எண்ணமே அவளுக்கு பெருத்த நிம்மதியைத் தர அப்படியே அறை வாசலில் கால் மடங்கிச் சரிந்து அமர்ந்தாள்.

தூங்கிக் கொண்டு இருக்கும் அண்ணனை எழுப்பலாமா வேண்டாமா என்று வசந்தி யோசித்துக் கொண்டு இருந்த சில வினாடிகளிலேயே இவை நடந்து முடிக்க அவள் அவசரமாக வாணியின் புறம் திரும்பினாள்.

''ஹேய் வாணி என்ன ஆச்சு?'' என்று மெல்லிய குரலில் அரற்றியபடி ஓடி வந்து அவளின் அருகே அமர்ந்தாள் வசந்தி.

அந்த மெல்லிய குரலிலேயே வெற்றிவேல் விழிக்க "யாரு?" என்ற அவனின் கனத்த குரல் தூக்கக் கலக்கத்துடன் அதட்டியது.

"நான் தான் வசந்தி."

"வசந்தியா? எப்போ வந்த?" என்ற கேள்வியோடு மெல்ல எழ முயல, 'உன்னை யார் இப்ப எழுந்திரிக்கச் சொன்னா? பேசாமல் படு' என்று அதட்டியபடி அவனைப் படுக்க வைத்தாள்.

"அது யாரு? ப்ரியாவா...?" என்றவன் இம்முறை எழுந்து அமர்ந்து இருந்தான்.

"ஆமா உன்னைப் பார்க்க தான் வந்து இருக்கிறாள்."

"என்னைப் பார்க்கவா...? ஹூம் இந்தக கதையை எவனாவது பஜனை மடத்துல காதுல பூ வச்சவன் இருந்தால் அவனிடம் சொல்" என்று சொல்ல அவளின் கண்ணில் நீர் சுரந்தது.

"டேய் அண்ணா! ரொம்பப் பேசாதே. கோபித்துக் கொண்டு போய் விடப் போகிறாள்" என்று சன்னமாக காதுக்குள் அதட்டியவள், அவனை மீண்டும் படுக்க வைத்தாள்.

"நைட் சரியா சாப்பிடலை என்று அம்மா சொன்னாங்க. ஏதாவது குடிக்கிறியா?"

"ம்ம்ம்."

"வாணி, அந்த ஹார்லிக்ஸ் கொஞ்சம் கலந்து கொடேன்" என்று இயல்பாக அவளை வேலைக்குள் இழுத்தவள், "டாக்டர் என்ன சொன்னாங்க? எக்ஸ் ரே எடுத்தாயா?" என்று அவனின் நலம் குறித்த கேள்விகளை அடுக்க, கீழே அம்மா அழைக்கும் குரல் கேட்டது.



"வரேன்மா! இந்த ஹார்லிக்ஸ் கொடு வாணி. நான் அப்பா பொண்ணு ரெண்டு பேருக்கும் படுக்கை ஒழிச்சு கொடுத்துட்டு வரேன். நான் போகலை என்றால் அடுத்த அவரிடம் இருந்து சத்தம் வரும். ப்ளீஸ்..." என்று வேண்டுதலுடன் கையில் இருந்த டம்ளரை அவளின் கையில் திணித்து விட்டு அவள் வேகமாக செல்ல தடதடக்கும் இதயத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள் வாணிப்ரியா.

வசந்தியின் வார்த்தையைத் தட்ட முடியாமல் அவனின் அருகே நகர்ந்தவளை கை காட்டி தடுத்து நிறுத்தி, "என்ன விஷயமா வந்த?" என்று அவன் கேட்ட கேள்வியில் கண்களில் அருவி பெருகியது.

"என்ன கேள்வி இது? நான் உங்களைப் பார்க்கத் தான்..."

"என்னைப் பார்க்கவா? என்னைப் பார்க்க நீ யாரு? அதுவும் இவ்வளவு தூரம் ராத்திரியோட ராத்திரியா பிரயாணம் பண்ண வேண்டிய அவசியம் என்ன? உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?" என்ற வார்த்தைகளில் நிமிர்ந்தாள்.

'ஏற்கனவே என்ன காரணமாக அவளைத் தள்ளி நிறுத்தினோமோ அந்த காரணம் இன்னும் அப்படியே இருக்கிறது. அது மாறவில்லை. அதனால் நீ ரொம்ப ஒன்றும் உருகாதே!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு நிமிர்ந்தாள்.

"ஒரு இக்கட்டான சூழலில் நான் இருந்த போது நீங்க உதவி செய்தீங்க என்ற சம்பந்தம். நான் நன்றி மறவாத பெண் என்றதால் உங்களுக்கு விபத்து என்று கேள்விப் பட்டதும் மனம் தாளாமல் வந்தேன். நீங்க நலமாக

இருப்பதை பார்த்து விட்டேன். கிளம்பி விடுவேன்'' என்று சொல்லி விட்டு கையில் இருந்த டம்ளரை அருகே இருந்த ஸ்டூலில் வைத்து விட்டு அறையை விட்டு வெளியேறத் திரும்பினாள்.

''அதற்காக மட்டும் தான் வந்தாயா? இந்த விபத்து நடந்து இருக்கா விட்டால் என்னிடம் சொல்வதற்கோ கேட்பதற்கோ ஒன்றும் விஷயம் இல்லையா?'' என்றவன் கேள்வியில் தூண்டில் இருந்தது.

''உங்களிடம் எனக்கென்ன கேட்கணும்?'' என்று சொல்லிவிட்டு அறையை விட்டுக் கிளம்பத் திரும்பிய போது தான் முன் தினம் காலை வினோத் வந்து ஆத்திரமாகக் கத்திச் சென்ற விஷயம் நினைவு வந்தது.

''நில்லு. போறதுக்கு முன்னாடி இதைப் பார்த்துட்டு போ.''

''என்னது?''

''ம்ம்ம். லவ் லெட்டர் உனக்கு பதினஞ்சு வயசு. எனக்கு பதினெட்டு வயசு. வீட்டை விட்டு ஓடிப் போய் கல்யாணம் பண்ணிக்கலாமா என்று கேட்கும் லவ் லெட்டர்...'' என்று அவன் சொன்ன வேகத்தில் அவள் இதழ்களில் அத்தனை டென்ஷனையும் மீறி சின்ன புன்னகை பூத்தது. இந்தக் கோபம் என் மேல் இருக்கும் அன்பில், அக்கரையில் விளைந்தது அல்லவா? நான் இவனை கண்டு கொள்ளாமல் போகிறேன் என்ற ஆத்திரத்தில் பிறந்தது.

''படிக்கத் தெரியாதா? நானே படித்துக் காட்டட்டுமா?'' என்று அவன் சொன்ன வேகத்தில் அவன் கையில் இருந்து காகிதத்தைப் பிடுங்கி படித்தவள் முகம் வெளிறியது.





# 24

முன்தினம் வினோத் வந்து தன்னிடம் ஆத்திரமாகப் பேசிய அத்தனை விஷயங்களும் உண்மை! எதுவுமே கூடுதலாக சொல்லப்பட்டது கூட இல்லை. தன் பெயரில் அனுப்பப்பட்டு இருந்த இரண்டு கடிதங்களைப் பார்த்ததுமே அவளுக்குக் கோபம் வந்தது.

முதலாவது என் கணவரின் மரணத்தில் எனக்கு சந்தேகம் இருக்கிறது. அந்த மரணத்திற்கு காரணம் எனது மைத்துனர் வினோத் என்று காவல் துறை தலைவருக்கு கொடுத்த புகார் கடிதம்.

அடுத்தது என் மகனுக்கு சேர வேண்டிய சொத்துக்களை தர மறுக்கிறார்கள். அதை பெற்றுத் தர வேண்டும் என்று வக்கீலுக்கு அனுப்பிய கடிதம்.

இரண்டு கடிதங்கள், அதற்கு வந்த பதில்கள், தொடர் நடவடிக்கைகள் என்று கற்றையாக இருந்த அந்த காகித கட்டை மேலோட்டமாகப் பார்வையிட்டவள் எரிச்சலுடன் அவனை முறைத்தாள்.

''என்ன கண்ராவி இது? நான் எப்போ இந்த மாதிரி கடிதங்கள் யாரிடம் கொடுத்தேன்...?''

''உன் பெயரில் நோட்டீஸ் அனுப்ப நான் ஏற்பாடு செய்தேன்...''

''நான் உங்களைக் கேட்டேனா?''

''நான் கேட்காத மரியாதையை நீ எனக்கும் எங்க அம்மா அப்பாவுக்கும் சேர்த்து செய்தாயே? மறு வார்த்தை பேசாமல் கிளம்பி வரலை? இப்ப எதுக்கு நீ இந்த குதி குதிக்கிறாய்?''

''ஏற்கனவே அவங்க என்னைப் பேசிய பேச்சை எல்லாம் மறக்கவே எனக்கு ஏழு ஜென்மம் வேண்டும். இதுல உங்க சொத்துல பாதி ராகுலுக்கு வேண்டும் என்று கேட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பி இருக்கீங்களே...? உங்களுக்கு என் மேலே அக்கறை இருந்தால் இப்படி செய்வீங்களா?''

''உன் மேலே அக்கறை இருப்பதால் தான் இப்படிச் செய்தேன்...''

''இது என் பெயரை கெடுப்பது மாதிரி. நேற்று வினோத் அங்கே வீட்டுக்கே வந்து என்னவெல்லாம் பேசினான் என்று எனக்கு மட்டும் தான் தெரியும்.''

''உன் பேரை கெடுப்பது நான் இல்லை. அவங்க தான். அவங்களுக்கு ஒரு படம் புகட்ட தான்...''

''இது என் பேரை இன்னும் கூடுதலாகக் கெடுக்கும்...''

''இல்லை அவர்களை உன் காலில் விழ வைக்கும்...''

''எப்படி...?''

''பொறுத்து இருந்து பாரு...''

''நான் இப்பவே கிளம்பி பல்லாவரத்தில் அவங்க வீட்டுக்குப் போய்...''

''மதியாதார் தலைவாசல் மிதியாதே என்ற சொல் உனக்குத் தெரியாதா? என்னை 'மீறி நீ அங்கே போவது என்றால் தாராளமாகப் போ. ஏற்கனவே ஒரு தடவை



என்னை நம்ப வைத்து கழுத்தை அறுத்தாச்சு. ஆனால் அதுவாவது என் பெற்றோர்கள் முன்னிலையில் நடந்தது. இப்போ இவங்க முன்னாடி இன்னொரு முறை என் முகத்தில் கரியைப் பூச வேண்டும் என்றால் தாராளமா போ...'' என்றவன் குரலில் அதட்டலும் அதிகாரமும் இருந்தது. அந்த வார்த்தை அவளைச் சுட்டதால் மேற் கொண்டு பேச்சை அந்த திசையில் தொடர முடிய வில்லை.

''எனக்கு எது நிம்மதி தரும் என்று ஒரு நிமிஷம் கூட யோசிக்கவே மாட்டீங்களா?''

''உனக்கு எது நல்லது என்று ஓவரா யோசிச்சதால் வந்தது தான் செய்த வேலை தான் இது. உனக்கு என் நலன் பற்றி அக்கறை இருக்கோ இல்லையோ. எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு நீ நல்லா இருக்கணும் என்ற நினைப்பு இருக்கு...''

''நீங்க சொல்வது உண்மையாக இருந்தால். முதலில் இந்த வக்கீல் நோட்டீசை வாபஸ் வாங்க என்ன பண்ண ணுமோ அதைச் செய்யுங்க...''

''செய்கிறேன். அதுக்கு முன்னாடி நீ எனக்கு ஒரு வாக்குறுதி தரணும்.''

''என்ன...? உங்களைக் கல்யாணம் பண்ணிக் கணுமா?''

''உன்னை ப்ளாக்மெயில் பண்ணிக் கல்யாணம் பண்ணி கொள்ளும் அளவுக்கு நான் தரம் தாழ்ந்து போகவில்லை ப்ரியா. எனக்கு மனசு இருக்கு. அதில் காதலும் இருக்கு. என்னை வேண்டாம் என்று தூக்கிப் போட்ட பெண்ணே வந்து, உங்களைத் தவிர வேற யாரும் எனக்கு

வேண்டாம் என்று சொன்னால், ஒருவேளை நான் பரிசீலிப்பேனே தவிர, நானே உன்னிடம் இனி கேட்க மாட்டேன். நெவர்...'' என்று அழுத்தம் திருத்தமாக அவன் சொன்ன விதத்தில் அவளின் இதயம் உடைந்தது.

பேச்சுக்காகக் கூடச் சொல்ல மாட்டானா? அப்படியா தான் வேண்டாதவளாகப் போய் விட்டோம்? அவன் இப்படிப் பேசுவதற்கு தானே காரணம் என்பது அந்த வினாடி உரைக்கவில்லை. தன்னை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்ற ஆதங்கமே பெருகி கண்ணீராக மாற, சிரமப்பட்டு அதை அடக்கினாள்.

''ரொம்ப சந்தோஷம்! வேறென்ன வாக்குக் கொடுக்கணும்?''

''உன் அன்பிற்கினிய, உன் மனசுக்கு நெருக்கமான, இந்த உலகத்திலேயே மிக உயர்ந்தவர்களா, முக்கியமானவர்களா, நினைக்கும் அந்த வீட்டில் இருந்து இருவர் உன்னைச் சந்திக்க வருகிறார்கள். அவர்களுக்கு உன்னிடம் எதோ வேண்டுமாம். நீதான் இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிட வகை ஆள் தானே? அவங்க கேட்பதைக் கொடுத்து விடு...'' என்று பாவனையோடு அவன் சொன்ன விதத்தில் நக்கல் குறைவின்றி இருந்தது.

இவனுக்கு என்ன ஆனதோ என்று பதறி இரவோடு இரவாக இவனைப் பார்க்க வந்தால், காலையில் கண் விழித்தது முதல் இந்த நிமிடம் வரை ஒவ்வொரு வார்த்தையும் நக்கலாகவே சொல்லிக் கொண்டு இருக்கிறான். இவன் மனதில் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறான்? பெரிய இவனா?



''எனக்கு முக்கியமானவர்களிடம் நான் எனக்குப் பிடித்ததைச் செய்வேன். நான் என்ன செய்யணும் என்று நீங்க என் டைரக்ஷன் கொடுக்குறீங்க? அது உங்களுக்குத் தேவை இல்லாதது.''

''நீ பேசியதில் இந்த ஒரு வாக்கியம் தான், உண்மை என்று என் மனசுக்குப் படுது. இது எனக்குத் தேவை இல்லாத விஷயம் தான்! என் காலில் வந்து விழுந்தாங்க. என்னால் மன்னிக்க முடியாது. போனால் போகட்டும் என்று விடும் அளவுக்கு எனக்குப் பெருந்தன்மை இல்லை. அதனால் நீங்க கேட்பதை என்னால் தர முடியாது. அது அவங்க முடிவு என்று சொல்லி விட்டேன். அதனால் உன்னிடம் வராங்க.''

''அவங்களுக்கு என்ன வேண்டும்?''

''அதை ஏன் என்னிடம் நீ கேட்கிறாய்?''

''நீங்க தானே அவங்களுக்கு வக்காலத்து வாங்கிட்டு வரீங்க?''

''அவங்களோட கோரிக்கையை எல்லாம் கேட்க எனக்குப் பொறுமை இல்லை. அவங்களே உன்னிடம் வந்து கேட்பாங்க. என்ன இந்த வக்கீல் நோட்டீசை வாபஸ் வாங்க சொல்வாங்களா இருக்கும்?''

''அவங்க கேட்பதற்கு முன்னாடி நானே அதைச் செய்து விடுவேன். எனக்கு யார் சொத்து மீதும் ஆசை இல்லை. எனக்கும் என் மகனுக்கும் வேண்டியதை என்னால் சம்பாதிக்க முடியும்.''

''அதை ஏன் என்னிடம் சொல்கிறாய்? காலையில் பதினோரு மணிக்கு உன்னைப் பார்க்க வருவாங்க. மனதிற்கு இனிய அந்த உறவினர்களிடத்தில் போய்

சொல்லு'' என்று சொல்லி விட்டு கட்டிலில் படுத்துக் கொண்டான்.

மூச்சுக்கு முன்னூறு தடவை உன் மனதுக்குப் பிடித்த உறவினர்கள் என்று நக்கலாக அவன் சொல்வது அவளுக்குப் பிடிக்கவில்லை. சொல்லாதே என்று சொன்னால் அவன் கேட்கவில்லை. சொல்லாதே என்று சொன்னால் வேண்டும் என்றே அழுத்தமாக மீண்டும் மீண்டும் சொல்கிறான்.

திமிர் பிடித்தவன்!

இவனுக்கு ஏன் தன் மீது இவ்வளவு ஆத்திரம்?

எரிச்சலுடன் குமைந்தபடி படி இறங்கிக் கீழே வந்தவள் இன்னும் பொழுது முழுதாகப் புலரவில்லை என்பதால் அங்கங்கே இருந்த அறைகளில் அனைவரும் படுத்து இருக்க, ராகுல் அருகே படுத்துக் கண்களை மூடிக் கொண்டவளுக்கு அழுகையும் ஆத்திரமும் போட்டி போட்டுக் கொண்டு வந்தது.

அவனுக்கு ஆபத்து இல்லை என்பதை உணர்ந்ததும் அவனிடம் தழைந்து போக மனம் வரவில்லை. உனக்காகத் தானே வந்தேன். அதைக் கூட உணராமல் நீ என்ன என் மேல் அன்பு வைத்து இருக்கிறாய் என்ற கோபம் பெருக கூடவே கண்ணில் நீரும் பெருகியது.

இரவு முழுவதும் தூங்காமல் பயணம் செய்து இருந்ததால் அவளையும் மீறி கண்கள் செருகிவிட, அவள் கண் விழித்தபோது மணி எட்டை நெருங்கிக் கொண்டு இருந்தது. அவசரமாகக் குளித்துக் கிளம்பி வெளியே வந்தபோது வசந்தி வெளியே கிளம்பத் தயாராக நின்று இருந்தாள்.



''வாணி, காலையில் கற்பகாம்பாள் கோவிலில் அபிஷேகத்துக்கும் ஸ்பெஷல் பூஜைக்கும் சொல்லி இருந்தது. குழந்தைகளை அழைத்துக் கொண்டு போனால் ரொம்ப நேரம் கோவிலில் கட்டி மேய்க்க முடியாது. நான் கோவிலுக்கு பவி அப்பாவுடன் சென்று வருகிறேன். நீ கொஞ்சம் குழந்தைகளைப் பார்த்துக் கொள்கிறாயா?'' என்று பவித்ராவையும் விட்டு விட்டு கோவிலுக்குக் கிளம்பினால் வசந்தி.

''நான் பாட்டியிடம் தான் சாப்பிடுவேன்'' என்று இருவரும் செல்லம் கொஞ்ச வேறு வழி இன்றி தட்டை கற்பகத்திடம் கொடுத்தாள். அதே நேரம் வெங்கடேஸ் வரன் சாப்பிட வர அவருக்கு பாலாம்பிகை பரிமாறிக் கொண்டு இருந்த வேளையில், ''வசந்தி பசிக்குது சாப்பிடலாமா?'' என்று மேலே இருந்து வெற்றியின் குரல் கேட்டதும் வாணிக்கு சிலீர் என்றது.

தானே கொண்டு போய் அருகில் இருந்து பரிமாற வேண்டும் என்ற ஆசை அளவில்லாமல் அலை போல எழுந்த அதே நேரம், அதை எப்படிக் கேட்பது என்ற எண்ணம் தோன்றி தடை போட்டது.

''வாணி, நீ சாப்பாடு கொடுத்து விட்டு வா. அவங்களை அலைய விடாதே'' என்று கற்பகம் சொல்ல அவள் தயக்கத்தோடு பாலாம்பிகையைப் பார்த்தாள்.

இங்கே நுழைந்த முதல் நிமிடம், அவர் பேசிய பொதுவான விசாரணையுடன் சரி. அவரும் அவளிடம் தனிப்பட்ட முறையில் எதுவும் கேட்கவில்லை. அவளும் எதுவுமே பேசவில்லை.

அது மரியாதையாக இருக்காதே? பேச வேண்டும். முக்கியமாக அன்று அவர்களை வீட்டில் இருந்து திருப்பி

அனுப்பியதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும். தயக்கத்தோடு அவர் அருகில் வந்து நின்று அவரையும் வெங்கடேஸ்வரனையும் பார்த்து பொதுவாக கரம் குவித்தாள்.

''காலையில் உங்களுடன் சரியா பேச முடியலை. இப்ப நான்..'' என்று அவள் இழுக்கும்போதே கையில் வெற்றிவேலுக்கு என்று எடுத்து வைத்து இருந்த உணவு தட்டை அவளிடம் நீட்ட, அவள் திகைத்தாள்.

''என்ன பார்கிறாய்? உனக்கு எங்க மேலே என்ன வருத்தம் இருந்ததோ எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு என் பையன் இந்த பெண்ணைப் பிடிச்சு இருக்கு என்று சொன்ன ஒரு வார்த்தை வேதம் தான். அதை நான் எப்போதும் மறக்கவோ மறுக்கவோ போறதில்ல. சாப்பாடு கொண்டு போய் கொடு. அப்படியே உங்களுக்குள் ஏதாவது வேறுபாடுகள் இருந்தாலும் பேசித் தீர்த்துக் கொண்டு நல்ல செய்தி சொல்லு'' என்று பாலாம்பிகை சொல்ல அவளின் முகம் வேதனையைக் காட்டியது. அவர் எதிர்பாராத நேரத்தில் சட்டென்று காலில் விழுந்தாள்.

''வயசுல பெரியவங்க, நீங்க எங்க வீடு தேடி வந்த போது உங்களை மதிக்காமல் விட்டேற்றியாகப் பேசிய பிறகும், உங்க பையன் சொன்ன வார்த்தைக்காக, முன்னே பின்னே தெரியாத ஒரு பெண்ணை உங்க வீட்டுக்குள் அனுமதித்தது மட்டும் இல்லாமல் இப்ப அந்த பையனின் தனி அறைக்கே அனுப்பத் தயாரா இருக்கீங்க. என்னை மன்னிச்சுடுங்க அம்மா...''

''ஹேய் எழுந்திரி! என்ன இதெல்லாம்? எப்படா என் பையன் மனசு வந்து கல்யாணம் பண்ணிக்கறேன் என்று சொல்வான் என்று எதிர்பார்த்து ஒவ்வொரு நாளையும்



கழித்தேன் நான். என் பையனின் மன வேதனையை அஞ்சு வருஷமா பார்த்தவள் வாணி நான். ஏமாற்றங்கள் தந்த வலி என்று எனக்கும் புரியும். நீ அந்த மாதிரிப் பேச என்ன காரணமோ என்று தான் நாங்க யோசித்தோம். நம்ம வீட்டில் சந்தோஷம் மட்டும் தான் இருக்கும். போ. வெற்றி பசியோடு காத்திருக்கிறான்'' என்று கையில் ஒரு ட்ரேயைக் கொடுத்து அனுப்ப அவள் மேலே படி ஏறி வந்தாள்.

கதவை மெல்ல தட்டித் திறந்து கொண்டு உள்ளே சென்றதுமே அவனுடைய ''நீயா...?'' என்ற ஒற்றை வார்த்தை கேள்வி அவளுக்கு எரிச்சலை மூட்டியது.

''ஆமா! ஏன் வேறே யாரை எதிர்பார்த்தீங்க?''

''வசந்தி, அம்மா எல்லாம் எங்கே?''

''வசந்திக்கா மைலாப்பூர் கோவிலுக்குப் போய் இருக்காங்க. நீங்க தான் அங்கே இன்று சிறப்பு பூஜைக்குச் சொல்லி இருந்தீங்களாமே? அம்மா கீழே அப்பாவுக்கு சாப்பாடு போட்டுட்டு இருக்காங்க.''

''சரி நீ வச்சுடு. நான் சாப்பிட்டுக்கறேன்.''

''பரவாயில்லை நான் போட்டுட்டுப் போறேன்.''

''நீ என் அம்மா இல்லை. என் சகோதரி இல்லை என்றால், 'என் எதிர்காலம் நீதான்' என்று தன் வாழ்க்கையை என்னுடன் பகிர்ந்து கொண்டவளா இருக்கணும். இது எதுவுமே இல்லாத ஒரு பெண்ணின் கையால் சாப்பிடுவதில் எனக்கு இஷ்டம் இல்லை...'' என்று சொல்லிவிட்டு அவன் கட்டிலில் மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொள்ள அவளுக்கு எரிச்சல் வந்தது.

''ஆமா, என் எதிர்காலம் நீ தான்' என்று சொல்லி இருந்தால் அங்கே பேச்சு வார்த்தை முடிந்து போய் இருக்கும். ஆனால் அதைச் சொல்ல அவளுக்கு மனமில்லை. இவனுக்கு விபத்து என்றதும் பதறி அடித்து ஓடி வந்த செயல் விளக்காத பிரியத்தையா வார்த்தைகள் சொல்லி விடும்?

மௌனமாகத் தட்டில் பரிமாறி விட்டு, அறையை விட்டு வெளியேறும் வரை அசையாமல் படுத்து இருந்தவன், அவள் தலை கண்ணை விட்டு மறைந்த உடனேயே அவசரமாக எழுந்து ஆசையுடன் எடுத்து உண்ண ஆரம்பித்தான்.

அவள் வாயைத் திறந்து, ''நீ எனக்கு வேண்டும்'' என்று சொல்லாமல் விடக் கூடாது! அவள் சொல்லியே ஆக வேண்டும். அதுவரை வார்த்தைப் போராட்டம் தொடரும். சிரிப்புடன் தனக்குள் சொல்லிக் கொண்டவனுக்கு உணவின் ருசி கூடித் தெரிந்தது.



## 25

மறுநாள் மண்டபத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களை பிரித்து எடுத்து தனியே பெட்டியில் பாலாம்பிகையும் கற்பகமும் பேசியபடி அடுக்கி வைத்துக் கொண்டு இருக்க, வாணி சமையல் வேலையை கவனித்துக் கொண்டு இருந்தாள். குழந்தைகள் மேலே அவனின் அறையில் விளையாடிக் கொண்டு இருக்க



இன்னும் வசந்தி கோவிலில் இருந்து திரும்பி இருக்கவில்லை.

''வாணி, கொஞ்சம் இங்கே வா...'' என்ற அம்மாவின் சற்றே பரபரப்பான குரலைக் கேட்டு எட்டிப் பார்த்தவள், வாசலில் நின்று இருந்த சாரதாவையும் சுகன்யாவையும் பார்த்து அதிர்ந்தாள்!

இவர்கள் எங்கே இங்கே வந்தார்கள்? வினோத் நேற்று அங்கே வந்தான் என்றால் அது அவளின் வீடு. தேடிக் கண்டு பிடித்து வந்ததில் ஒரு அர்த்தம் இருக்கு. ஆனால் அவர்களுக்கு அறிமுகம் இல்லாத நபர்களின் வீட்டிற்கு இப்படி ரோஷமே இன்றி வருவார்களா? இங்கே சத்தம் போட்டு சண்டை வளர்ந்தால் அசிங்கமாகி விடுமே? நாளைக்கு ஒரு நல்ல காரியம் நடக்கும் வீட்டில் ரசாபாசம் தேவையா?

கண இமைக்கும் நேரத்துக்குள் உலகையே சுற்றி வரும் வல்லமை படைத்த மனம் வேண்டாத கேள்விகள் அனைத்தையும் கேட்டு முடித்து இருக்க அதில் ஒன்றுக்குக் கூட பதில் தெரியவில்லை. காலை பதினொரு மணிக்கு உன் அன்பிற்கினிய உறவினர்கள் வருவார்கள். அவர்களிடம் போய் சொல்லு என்று எப்படி அவன் அவ்வளவு உறுதியாகச் சொன்னான்? ஒரு வேளை அவனே வரச் சொல்லி இருப்பானோ? எதற்காக?

அவளை அழைத்த பிறகும் அசையாமல் அடுக்களையில் அதிர்ச்சியோடு நின்று இருந்த மகளை அழைத்துச் செல்ல வந்த கற்பகத்தின் காதுகளில் அவளின் கடைசி கேள்வி விழுந்தது.

''நேற்று வினோத் அங்கே வந்து என் உயிரை வாங்கினான். இப்ப இந்த அம்மா இங்கே

வந்துட்டாங்களா?'' அதெப்படி அவன் சொன்ன மாதிரியே இந்த அம்மா கரெக்டா இங்கே வந்து நிற்கிறாங்க?''

''ஆமா! இந்த உலகத்தில நடந்த, நடக்காமல் போன எல்லாத்துக்குமே அந்த தம்பி தான் காரணம். ரொம்ப நல்லா இருக்கு! உன்னை நான் வளர்த்தேனா என்று எனக்கே இப்ப சந்தேகம் வந்து விடும் போல இருக்கு உனக்கு என்ன ஆச்சு? நேற்று மாதிரி வெடு வெடுவென்று பேசாமல் ஒழுங்காய் போய் சந்தோஷமா பேசு'' என்று அம்மா சொன்னதும் வியப்பு வந்தது. ஒரு புன்னகையைப் பூசி வந்தாள்.

''வாங்க... வணக்கம்...'' என்று கரம் குவிக்க வாஞ்சையோடு அருகே வந்து அணைத்து உச்சியை வருடிய மாமியாரை நம்ப முடியாமல் பார்த்தாள் வாணிப்ரியா.

''இத்தனை நாள் உன்னை விட்டு எப்படிப் பார்க்காமல் இருந்தேன் என்று தெரியலை ராசாத்தி. மதுரையில் உன்னைக் கல்யாண வீட்டுல பார்த்ததில இருந்து இந்த ஒரு வாரமா உன் நினைப்புதான்...'' என்று சொல்லி வராத கண்ணீரை சுண்டி விட்ட சாரதாவை திகைப்புடன் பார்த்தாள்.

''ஆமா அண்ணி. உங்களை உடனே பார்க்கணும் என்று அழுது கொண்டே இருந்தாங்க.

அதான் அங்கே மதுரைக்கு போனோம். அங்கே வினோத் எங்களுக்கு முன்னாடி வந்து உங்களைப் பார்த்த விஷயம் தெரிந்தது. நீங்க இங்கே வந்த தகவல் கிடைத்ததும் உடனே ராத்திரியோடு ராத்திரியா கிளம்பி வந்து விட்டோம் என்று கூசாமல் புளுகிய நாத்தனாரை உணர்ச்சியே இன்றி வெறித்துப் பார்த்தாள்.



''அண்ணியா...? அவள் அங்கே இருந்த ஆறு மாத காலத்தில் ஒரு நாள் கூட உறவு முறையைச் சால்லி அழைத்து இருக்காதவளுக்கு இப்போது பாசம் பொங்கி வழிகிறதா? இதில் என்னை காண எக்ஸ் மாமியார் அழுது புலம்பித் தவித்தாரா? நம்ப முடியவில்லையே?

அவள் இங்கே கிளம்பி வந்ததே ஒரு கடைசி நிமிட செய்தி. இதில் அவள் யாரிடம் தான் சென்னைக்குப் போவதைச் சொல்லி விட்டு வந்தாள்? அவர்கள் இவர்களுக்கு தகவல் சொன்னார்கள்? ஆனால் அவளின் மன ஓட்டத்தைப் பற்றி கவலையே படாமல் அவர்கள் தங்களின் நடிப்பைத் தொடர்ந்தனர்.

''கண்ணு! நீ தனியா குழந்தையோடு கஷ்டப்படுவதைப் பார்த்தால் எனக்கு மனசு ஆகலையே?''

கண்ணா? பத்து நாட்களுக்கு முன்பு கல்யாண வீட்டில் நாக்கில் நரம்பில்லாமல் அவர் பேசிய வார்த்தைகளை மீண்டும் நினைத்தது பார்க்கக் கூட அவளுக்கு காதுகள் கூசியது. இப்போது இப்படி உருகுகிறார்களே? அவள் பார்த்துக் கொண்டு இருக்கையிலேயே உள்ளே இருந்து இரண்டு டம்ளர்களில் குளிர் பானம் வந்து சேர எடுத்துக் கொடுத்தாள்.

விஷயத்துக்கு நேரடியா வாங்க உங்க நடிப்பைக் காண எனக்கு சகிக்கவில்லை என்று சொல்லாமல் சொல்லும் விதமாக, ''என்ன விஷயமா வந்தீங்க? நான் என்ன செய்யணும்?'' என்று நேரிடையாக விசாரித்தாள் வாணி.

''நீ எந்த உதவியும் செய்ய வேண்டாம் கண்ணு! உனக்கு உரிமையான சந்தோஷத்தை உன்னிடம்

கொடுத்துப் போக தான் வந்தேன் வாணி'' என்று சாரதா சொல்ல,

''நேற்று வினோத் வந்து உங்களை ரொம்ப தரக் குறைவாகப் பேசி விட்டேன் என்று சொன்னதும் அம்மா அண்ணனை நேற்று ராத்திரி அடிச்சுட்டாங்க அண்ணி'' என்று சுகன்யா தொடர, இருவரையும் மாறி மாறி நம்பிக்கையே இன்றி வெறித்தாள்.

''நாங்க சொல்வதை உன்னால் நம்ப முடியலை இல் லையா? நம்ப முடியாது தான். கடந்த கால அனுபவம் உனக்கு அப்படி இருக்கும். ஆனால் இன்று நான் புது மனுஷி. உன் நல்லதை நினைக்கும் நல்ல மனுஷி. நேற்று இரவு என் கனவில் செந்தில் வந்தான். தெரி யுமா?'' என்று கேட்டுவிட்டு, கண்களைத் துடைத்துக் கொண்ட சாரதாவை திகைப்புடன் பார்த்தாள்.

இங்கே என்ன நடக்கிறது?

''ராத்திரி என் கனவில் செந்தில் வந்தான். நான் அற்பாயுசுல போயிட்டேன் என்று என் வாணி செல் லத்தை அம்போன்னு விட்டுடாதீங்க! அவளுக்கு ஒரு நல்ல பையனாப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கணும் என்று என்னிடம் சத்தியம் செஞ்சீங்களே! அதை மறந்து விட்டீங்களா என்று என்னிடம் வந்து கேட்டுட்டுப் போறான் வாணி'' என்று உரிய ஏற்ற இறக்கங்களுடன் பேச அவளுக்கு மூச்சடைத்தது.

இது என்ன புதுக்கதை? செந்தில் கனவில் வந்தான் என்று சொல்வதே நம்ப முடியவில்லை என்றால் அவனிடம் இவர் தனக்கு மறுமணம் செய்து வைப்பதாக வாக்களித்தது அதை விட நம்ப முடியாத கதையாக இருந்தது.



இதே விஷயம் பத்து நாளைக்குப் பிறகு தலைக் குனிவை ஏற்படுத்தும் விஷயமாக இருந்தது. இப்போது வேண்டுதலாக மாறிய காரணம் என்னவோ?

''வினோத் அவசரப்பட்டு வார்த்தையைவிட்டு விட்டான். அவனையும் உன்னிடம் வந்து மன்னிப்புக் கேட்க வைக்கிறேன். மதுரையில் கல்யாண வீட்டில் நடந்த விஷயம் கூட மாப்பிள்ளையைப் பற்றித் தெரிந்து கொள்ள வைத்த தேர்வு வாணி...''

''நாங்களே உனக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்து உங்க அம்மாவிடம் சொன்னோம். காது கொடுத்துக் கேட்கலை. உனக்குக் கூட அந்தப் பையனைத் தெரியும் வாணி. நீ ஒரு வார்த்தை சொல்லு. நாங்களே நேரில் வந்து உங்க கல்யாணத்தை ஜாம் ஜாமென்று நடத்தி வைக்கிறோம் அண்ணி...'' என்று அடுக்கடுக்காய் வசனம் பேசிய மாமியாரையும் நாத்தனாரையும் நம்ப முடியாமல் வியப்பில் வாய் அடைத்துப் போனாள் வாணிப்ரியா.

அவர்கள் அடுக்கிய பொய்யைக் கேட்க முடியாமல், ''எனக்கு தேவை என்றால் கட்டாயம் உங்களை அழைக் கிறேன். நீங்க இப்ப இடத்தைக் காலி பண்ணுங்க'' என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக வெளியேற்றும் வரை அந்த வீட்டில் இருந்த யாருமே அவள் கண்ணில் படவே இல்லை.

அவர்கள் கண்ணில் இருந்து மறைந்த வினாடி, வசந்தி கோவிலில் இருந்து திரும்ப வர, ஒவ்வொருவராக வெவ்வேறு இடங்களில் இருந்து வந்து ஹாலில் குழும ஆரம்பித்ததில் அவளுக்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்தது.

இவர்களைத் திட்டமிட்டு இங்கே வரவழைத்து இருக்கிறார்கள். இவர்கள் பேசிய வார்த்தைகள் என் மனதைக் காயப்படுத்தியதால், அதை நேரிடையாகச் சொல்லாமல், மறைமுகமாக அவர்ளை காவல் துறை நீதி துறை இரண்டின் மூலமாகவும் நெருக்குதல் கொடுத்து, தன்னைத் தேடி வர வைத்து இருக்கிறாகள்.

உண்மையில் அவர்களுக்கு சொத்தில் பங்கு வேண்டும் என்ற அவசியம் இல்லை.

ஆனாலும்... தனக்காக.. தன் மன நிம்மதிக்காக... தான் சந்தோஷமாக இந்த வீட்டில் அடி எடுத்து வைக்க வேண்டும் என்பதற்காக.... எல்லோரும் சேர்ந்து என்ன வெல்லாம் செய்து இருக்கிறார்கள்? இவர்களுக்கு அவள் என்ன திருப்பிக் கொடுக்க முடியும்?

மாறாத அன்பைத் தவிர...?

கண்கள் பனிக்க அம்மாவின் அருகே வந்து அமர்ந் தாள்.

"அம்மா... நான் உங்களிடம் ஒன்று சொல்லணும்.." என்று ஆரம்பிக்க அங்கே ஹாலின் பல்வேறு பகுதிகளில் வேறு வேறு வேலைகளில் இருந்த அனைவரின் புலன்களும் கூர்மையானது.

"வாணி, இன்று இரவே மண்டபம் போகணும் என்று அண்ணி சொன்னாங்க. நம்ம பேகை அப்படியே எடுத்துக் கொள்ளலாம் இல்லையா?" என்று அவர் சொன்னது காதில் விழாதது போல எதிர் கேள்வி கற்பகம் கேட்க அவள் தடுமாறினாள்.

"அம்மாவிடம் சொல்வதா? வசந்தியிடம் சொல்வதா? இல்லை... அவனிடம் சொல்வதா? எப்படிச் சொல்வது?



யாராவது பேச்சை ஆரம்பித்தால சரி என்று சொல்லி விடலாம். ஆனால் கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கும் எண்ணமே இங்கே யாருக்குமே நினைவில் இருப்பது மாதிரியே தெரியவில்லையே?

மேற்கொண்டு எப்படித் தொடர்வது என்று தெரியாமல் தயக்கத்தோடு, தான் பாதியில் விட்டு வந்திருந்த சமையலை தொடர அடுக்களைக்குள் செல்ல எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை செய்து கொண்டனர்.

"அம்மா, நான் வெற்றிப்பாவோட கிரிக்கெட் விளையாடப் போகிறேன்" என்று தகவலாக உள்ளே எட்டிப் பார்த்துச் சொல்லி விட்டு ஓடிய ராகுலைத் தொடர்ந்து வெளியே வந்தாள். வாசலில் 'அவன்' நின்று இருந்தான்.

அன்று கல்யாண மண்டபத்தில் தான் தேடி அமுததை மனசில் வைத்து தகவல் சொல்லச் சொல்லி இருக்கிறான். மனதில் நன்றி பொங்கியது. ஆனால் அவளின் பார்வையைக் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளாமல் வெளியே சென்று கொண்டு இருந்தான் வெற்றி வேல்.

"டேய் அவருக்கே கையில் அடிபட்டு இருக்கே? எங்கேடா விளையாடப் போகிறாய்?" என்று மகனை அதட்டினாலும் பார்வை அவனிடம் இல்லை. வெற்றி வேலின் முகத்தில் பதிந்து இருந்தது.

"வீட்டுல தான்மா! அவங்க சேரில் உட்கார்ந்து கிட்டே இடது கையால் என்னமா பவுலிங் பண்றாங்க தெரியுமா? செம ஸ்பின். பவி மூணு தடவை அவுட் நான் ஒரு வாட்டி. ரூமில் ஷாட் அடிக்க முடியலை. அதான் இங்கே வெளியே தோட்டத்தில் விளையாட போகிறோம்"

என்று மூச்சு விடாமல் சந்தோஷமாகப் பேசியவனின் முகம் மலர்ச்சியில் இருந்தது. அது அவனின் அருகாமையினால் வந்த உற்சாகம் என்பது புரிந்தது.

அவனுக்கு மட்டுமா? தனக்குமே இந்த வீட்டில் வளைய வருவது எவ்வளவு நிம்மதியை தருகிறது? இந்த கௌரவத்தையா வேண்டாம் என்று மறுத்தாள்?

''பார்த்து விளையாடுங்க. அடிபட்ட கை மேலே பட்டுடப் போகுது...'' என்று அக்கறையோடு சொன்னவளைப் பார்த்துப் புன்னகை செய்தாலும் பதிலேதும் சொல்லவில்லை வெற்றிவேல்.

''எவ்வளவு நேரம் ஆச்சு? இன்னும் சாப்பிட வரணும் என்று கூட தோன்றலை பாருங்களேன். நீங்களாவது போய் கூட்டிட்டு வாங்க. அக்கா வெயிலா இருக்குல்ல?'' என்று வசந்தியை கிளப்ப முயன்றாள்.

''அண்ணனுக்கு சின்ன வயசுல இருந்தே படிப்பு அவ்வளவா வராது. விளையாடுவது என்றால் உயிர். அதனால் விளையாடும் போது பாதியில் கூப்பிட்டால் செமையா கடுப்படிப்பாங்க. நான் போனால் அண்ணன் கடிச்சுக் குதறிடுவாங்க. வேண்டும் என்றால் நீ போ.''

''ஹையோ... நானா...?''

''நீ போனால் தான் சரியா இருக்கும். ஒரு அளவுக்கு மேலே அண்ணன் திட்ட மாட்டார் இல்லையா? ராகுலையும் நீ மிரட்டலாம்...'' என்று சொல்லத் தயக்கத்துடன் அவள் சென்றாள்.

ஐந்து முறை, பத்து முறை, ஐம்பது முறை கூப்பிட பிறகும், 'அம்மா ப்ளீஸ் இந்த ஓவர் மட்டும்மா. நான் ஒரு வாட்டியாவது அவுட் ஆக்காமல் விட மாட்டேன். அது வரைக்கும் வர மாட்டேன்...'' என்று அடம் பிடித்து பவுளிங் போட்டுக் கொண்டிருக்க அவன் விளையாடிக் கொண்டே இருந்தான்.



''சின்ன பையன் தானே? அவனுக்கு ஒரு வாட்டி விட்டுக் கொடுத்து சந்தோஷத்தைக் கொடுத்தால் தான் என்னவாம்'' என்று முணுமுணுத்த ப்ரியாவின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

''அவனுக்கு நான் விட்டுக் கொடுத்தால் எனக்கு என்ன கிடைக்கும்?'' என்ற கேள்வியைத் தொடுக்க அவள் மறு பேச்சின்றி உள்ளே நகர்ந்து விட்டாள். அங்கே சுற்றி இங்கே சுற்றி சரியாக ஒரே இடத்தில் வந்த நிற்பானே?

''உங்களுக்கு எப்ப சாப்பிடணும் என்று தோணுதோ அப்ப வாங்க'' என்று சொல்லி விட்டு உள்ளே சென்றவளுக்கு மணி ஒன்றரையைத் தாண்டியும் அவர்கள் வரவில்லை என்றதும் இருப்புக் கொள்ளவில்லை.

என்னதான் வீராப்பாகச் சொல்லி விட்டு வந்தாலும் காலையில் நாலு இட்லி சாப்பிட்டது எவ்வளவு நேரம் தாங்கும்? குழந்தைகள் தான் விளையாட்டு மும்முரத்தில் இருந்தால் பெரியவனான இவன் வழி நடத்திக் கூட்டி வரக் கூடாதா என்று மனதிற்குள் அர்ச்சனை செய்தாள்.

மனம் கேளாமல், குழந்தைகளுக்கு பருப்பு சாதமும், தயிர் சாதமும் பெரிய கிண்ணங்களில் பிசைந்து எடுத்துக் கொண்டு ஸ்பூனுடன் வெளியே வந்தாள்.

''ஹேய்! நான் அவுட் ஆக்கிட்டேன்...'' என்று உற்சாகத்துடன் கூவியடி ஓடி வந்தவனை, அவன் தூக்கி அணைத்து தன் மடியில் இருத்தும் வேளையில் உள்ளே

இருந்து அவள் வருவது கண்ணில் பட அவசரமாக இறக்கி விட்டான்.

''அம்மா... நான் வெற்றிப்பாவை அவுட் ஆக்கிட்டேன்...'' என்று தன்னிடமும் ஓடி வந்து சொன்னதும் அவசரமாக அவனைத் திரும்பிப் பார்த்தாள். நிச்சயம் மூன்று வயது குழந்தையிடம் அவன் முன்னால் ஆடிய நேர்த்தியைப் பார்த்தால் நிஜமாக அவுட் ஆகி இருக்க வாய்ப்பு இல்லை. அப்படி என்றால் விட்டுக் கொடுத்து இருக்க வேண்டும். அதை தான் சொன்ன போது செய்தால் என்ன? தன் தலை மறைந்த பிறகு செய்து இருக்கிறான். திமிர் பிடித்தவன்!

மனசுக்குள் பொருமினாலும், ''சரி நீயும் பவித்ராவும் கை கால் கழுவிட்டு வாங்க. சாப்பிடலாம்'' என்று சொன்னவள் அவன் புறம் திரும்பவே இல்லை. கண்கள் அவனைப் பார்க்க தவியாய் தவித்தாலும் முயற்சி செய்து அவன் புறம் திரும்பாமல் இருந்தாள்.

தோட்டத்தில் இருந்த குழாயில் கை கழுவி வந்தவர்களின் அருகே அவனும் நாற்காலியில் அமர அவனின் கால் பகுதி மட்டும் பார்வை வட்டத்தில் விழுந்தது.

''ஆன்ட்டி மாமாக்கு கொடுக்கலை, அவங்களுக்கும் பசிக்குமே?'' என்று பவித்ரா சொல்ல, ''இது பருப்பு சாதம் கண்ணு. இதுல காரம் இருக்காது அவங்களுக்கு வேறே சாப்பாடு வீட்டுக்கு உள்ளே இருக்கு...'' என்று அவனைப் பார்க்காமலேயே சொல்ல அவன் முகத்தில் சின்ன புன்னகை மலர்ந்தது.

''பரவாயில்லை. காரம் இல்லை என்றால் என்ன? உங்க அத்தை கொடுத்தால் சாப்பிட நான் ரெடி...''



என்று சொல்ல அத்தையா? உறவு முறை சொல்லிக் கொடுக்கிறானா? மனதிற்குள் பல்லைக் கடித்தாலும் இன்னும் பிடிவாதமாக நிமிர்ந்து பார்க்கவில்லை.

''ஏன்மா வெற்றிபாவை பார்க்க வைத்து சாப்பிட்டால் எங்களுக்கு வயிறு வலிக்காதா? கொடுங்கம்மா...'' என்று இம்முறை ராகுல் வலியுறுத்த வெற்றிவேலின் முகத்தில் பூத்து இருந்த புன்னகை சின்னச் சிரிப்பாக வெளிவர, அவள் நிமிர்ந்து முறைத்தாள்.

''ஏன் இங்கே உட்கார்ந்து இருக்கீங்க? வீட்டுக்குள்ளே போய் சாப்பிட வேண்டியது தானே?'' என்று பல்லைக் கடிக்க அவன் இப்போது சத்தமாகச் சிரித்தான்.

''ஏன் நீ கொடுக்க மாட்டாயா?''

''நான் என்ன உங்களைப் பெற்றவளா? இல்லை உங்களுடன் பிறந்தவளா? நான் எதுக்கு உங்களுக்குக் கொடுக்கணும்?'' என்று எரிச்சலுடன் காலையில் அவன் சொன்னதைத் திருப்பிச் சொல்ல அவனின் சிரிப்பு இப்போது விடாமல் தொடர்ந்து வீட்டின் உள்ளே இருந்தவர்களின் கவனத்தை ஈர்த்தது.

முதலில் பவித்ராவுக்கு முறை சொல்லிக் கொடுத்தவன் இம்முறை ராகுலிடம் திரும்பினான். ''ஏன் ராகுல் நீ என்னை வெற்றிப்பா என்று கூப்பிடுகிறாய்? அப்படிக் கூப்பிட உனக்கு யார் சொல்லிக் கொடுத்தது? உங்க அம்மாவா?'' என்று கேலியாகக் கேட்டவன் பார்வை வாணிப்ரியாவிடம் இருந்தது.

வெற்றிவேல் ராகுலிடம் கேட்ட அந்தக் கேள்வியில் ஒரு கணம் தூக்கி வாரிப் போட அவசரமாக நிமிர்ந்து அவனைப் பார்த்து மறுப்பாகத் தலை அசைத்தாள்.

## 26

அங்கிள் வெற்றிப்பாவாக மாறியதற்குக் காரணம் அவனோ என்று தான் நினைத்துக் கொண்டு இருக்க, கடைசியில் அவன் தான் சொல்லிக் கொடுத்து இருப்பதாக நினைத்து விட்டானே என்ற எண்ணம் வாணிப்ரியாவின் மனதில் தோன்ற சின்ன புன்னகை மலர்ந்தது.

எண்ண போக்கில் கூட எவ்வளவு ஒற்றுமை?

''அன்று பாட்டியை ஸ்டேஷனில் கூப்பிடப் போகும் போது, பாட்டி தாத்தாவை வெற்றிப்பா என்று கூப்பிட்டாங்களே. அதை பார்த்துக் கூப்பிட்டேன். ஏன் உங்களுக்குப் பிடிக்கலையா?'' என்று கேட்டவனின் குரலில் தனக்கு அப்பா என்று அழைக்க ஆள் இல்லை என்ற ஆதங்கம் தெரிந்தது.

''பிடிச்சு இருக்கு. ஆனால் அப்பாவை பேர் சொல்லி அழைப்பது தான் பிடிக்கலை...'' என்று ராகுலின் கன்னத்தை வருடி மென்மையான குரலில் சொல்ல, ராகுல் சந்தோஷத்துடன் நிமிர்ந்த வேளையில், கையில் சாத உருண்டையை வைக்க நீண்ட ப்ரியாவின் கரங்கள் நடுங்குவதை அவனால் உணர முடிந்தது. அவள் எதுவும் பேசவில்லை.

''ஆனால் அப்பா சாமி கிட்டே போய் இருக்காங்க என்று அம்மா சொன்னாங்களே?''



''சாமி தான் என்னை இங்கே அனுப்பி வச்சார். உனக்கு ஞாபகம் இல்லையா? நீ என்னை முதன் முதலில் எங்கே பார்த்தாய் சொல்லு?'' என்று கேட்டதும் அவன் கண்கள் விரிந்தது.

''கோவிலில்...! எஸ்.. அன்னிக்கு பாட்டி கூட ரொம்ப நேரம் சாமிகிட்டே பேசிட்டு இருந்தாங்களே? அப்பத் தான் சாமி உங்களிடம் சொன்னாங்களா?'' என்று கண்டுபிடிப்பை சொல்ல அவன் புன்னகையோடு தலை அசைத்தான்.

''ஆனால் அம்மா ஏன் முன்னாடியே சொல்லலை...?'' என்று அவள் புறம் திரும்ப, அவள் இன்னும் பிரமை பிடித்தபடி அமர்ந்து இருந்தாள்.

''அம்மாவுக்கு அது மட்டுமா தெரியலை? யார் பேச்சுக்கு மதிப்புக் கொடுக்கணும். யார் பேசும் பேச்சை ஒதுக்கணும் இதெல்லாம் கூடத் தெரியலை ராகுல். என்னையே தெரியலை என்றால் பார்த்துக்கோயேன்...'' என்று பார்வையை அவள் முகத்தில் பதித்து சீண்ட அவள் நிமிர்ந்தாள்.

''நிஜமாவாம்மா! உங்களுக்கு அப்பாவைத் தெரியலையா அப்பா பொய் தானே சொல்றாங்க? உங்களுக்குத் தெரியும் தானே?'' என்று சொல்ல ''பேசாமல் சாப்பிடுடா...'' என்று அவனை கண்டித்தபடி உணவை ஊட்டினாள்.

''அத்தை நீங்க மாமாவுடன் டூ விட்டு இருக்கீங்களா? அதனால் தான் அவங்களுக்கு சாப்பாடு கூட கொடுக்கலையா?'' என்று பவித்ரா கேட்க அவனுக்கு இம்முறை லேசாகப் புன்னகை மலர்ந்தது.

ஓரக்கண்ணால் அவனைப் பார்க்க அவனும் கனிவோடு தன் முகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தான். ஒரு கணம் இணைந்த கண்கள் நெஞ்சில் இனம் புரியாத இதத்தைப் பரப்ப அவளின் புன்னகை பெரிதானது.

''ஹேய் மாமா! அத்தை சிரிச்சுட்டாங்க. இப்ப சாப்பாடு கேளுங்க கொடுப்பாங்க. கொடுங்க அத்தை...''

''காலையில் நான் கொடுத்தபோது வேண்டாம் என்று சொன்னார் பவி. அதனால் தான் நான் இப்ப கொடுக்கலை...''

''ஏன் வேண்டாம் என்று காரணம் சொன்னேனே? அப்பவும் இப்பவும் வாங்க நான் ரெடியாகத் தான் இருந்தேன். யாரிடம் நான் சாப்பாடு வாங்குறேன் என்று எனக்கு சொல்ல சொல்லு பவி...''

''குழந்தையிடம் பேசுற பேச்சா இது?''

''ஆரம்பித்தது நீயா நானா?''

''இருந்தாலும் உங்களுக்கு இவ்வளவு பிடிவாதம் ஆகாது.''

''அதிலும் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பித்தது நீதான்...''

''இப்ப என்ன தான் வேண்டும் உங்களுக்கு? குழந்தைகளை நடுவில் வைத்துக் கொண்டு ஏன் இப்படி அழிச்சாட்டியம் பண்ணுறீங்க?''

குழந்தைகள் அருகே வந்த பெரியவர்களிடம் ஓடிச் சென்றதை கூட கவனிக்காமல் மாறி மாறி இவர்களின் விவாதம் தொடர்ந்து கொண்டு இருந்தது.

''கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், எதுக்கு இவ்வளவு விவாதம் பண்ணுகிறாய்? நேரடியா பதிலைச் சொல்லிட்டுப் போயேன்?''



''என்ன பதில் சொல்லச் சொல்றீங்க?''

''ஆமா! கேள்வி கேட்கறவங்களை என்ன பதில் சொல்லணும் என்று கேட்பது தான் புத்திசாலித்தனம்...''

''அந்தக் கேள்விக்கு பதில் உங்களுக்குத் தெரியாதா?''

''நீ பதில் சொன்னால் தானே, தெரியுமா தெரியாதா என்று சொல்ல முடியும்?''

''ஆக்ஷன் ஸ்பீக்ஸ் லவுடர் தென் வேர்ட்ஸ் என்று கேள்விப்பட்டதில்லையா?''

''இல்லை...''

''நான் யார் என்று உங்களுக்குத் தெரியாதா?'' என்று கண்களை நேருக்கு நேர் பார்த்து, நிதானமான குரலில் கேட்டாள் வாணிப்ரியா.

''நீ யார் என்று தெரியும். ஆனால் எனக்கும் உனக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியலை...'' என்று அவன் நிர்த்தாட்சண்யமாகச் சொல்ல, அவள் அவன் சட்டை காலரை பிடித்து உலுக்கி, ''நான் உன் பெண்டாட்டிடா...'' என்று வெடித்துச் சிதறினாள்.

அடுத்த வினாடி ''இன்னொரு முறை சொல்லுங்க...'' என்ற வசந்தியின் கேலிக் குரல் கேட்டதும் திரும்பி பார்த்தவள் அங்கே வீட்டில் இருந்த அனைவரும் நின்று இருப்பதை பார்த்து, ''ஹையோ!' என்று அலறி விட்டு கூச்சத்துடன் சிவந்த தன் முகத்தை அவசரமாக அவன் மார்பிலேயே புதைத்துக் கொள்ள அவனை சந்தோஷமாக அணைத்துக் கொண்டான் வெற்றிவேல்.

ஒரு கணம் அணைப்பில் அடங்கினாலும் மொத்த குடும்பமும் அங்கே நிற்பது நினைவில் வர, அவசரமாக விலகினாள் ப்ரியா.

"அப்பா! அண்ணி உங்களுக்கு இப்பவாவது எங்க அண்ணனுக்கு ஓகே சொல்லணும் என்று தோன்றி யதே..." என்று கேலிச் சிரிப்புடன் சொல்ல அவள் கூச்சத்துடன் சிரித்தாள்.

மன்னிப்பு கோரும் பார்வை ஒன்றை பாலாம்பிகை வெங்கடேஸ்வரன் தம்பதியினரிடம் வீசியவள், அவசர மாக நகர்ந்து அவர்களின் கால்களில் விழுந்து நமஸ் கரித்தாள்.

"நல்லா இரும்மா! சந்தோஷமா நூறு வருஷம் புருஷன் பிள்ளை குட்டிகளோடு வாழணும" என்று மனப்பூர்வமாக ஆசீர்வாதம் செய்ய அடுத்த அம்மாவின் அருகில் சென்று அவரை கண்ணில் நீருடன் அணைத்துக் கொண்டாள்.

"ரொம்ப சந்தோஷம் வாணி..." என்று வாய் சொன் னாலும் கண்களில் ஆனந்த கண்ணீர் வழிந்தது.

"அண்ணி லேட்டா வந்தாலும் லேட்டஸ்டா வந்து அம்மா அப்பாவை ஒரே நமஸ்காரத்தில் கவுத்துட்டாங்க. நீ என்ன பண்ணிட்டு இருக்க?" என்று அண்ணனைச் செல்லமாக மிரட்ட,

"அவளுக்கு தேவை காலில் விழுந்தாள்! எனக்கென்ன தேவை?" என்று சிரித்தான்.

"அக்கா நீங்க என்னைப் போய் வாங்க போங்க என்று பேச வேண்டாம்..."

"என் அண்ணி! எங்க அம்மாவிடமும் அத்தையிட மும் மாட்டி விட்டு திட்டு வாங்க வைக்க உங்களுக்கு எத்தனை நாளா ஆசை? அண்ணி என்பது அம்மா ஸ்தானம். மரியாதையா பேசலை என்றால் எங்க வீட்டில்



பெண்டு கழட்டிடுவாங்க. அத்தை அம்மாவை விட அதில் படு ஸ்ட்ரிக்ட்.

"அம்மாவையே வா போ என்று கூப்பிட்டும் பிள்ளைகள் இல்லையா அக்கா? நான் அத்தையிடம் சொல்கிறேன். நீங்க எப்பவும் போலவே இருக்கணும். நீங்க மட்டும் இல்லா விட்டால் இன்னிக்கு நான் இந்த இடத்தில இவ்வளவு பெருமையா சந்தோஷமா இருக்க முடியுமா?"

"ஹேய்! நான் என்ன பண்ணினேன்? நீ நல்ல பெண் என்பதால் அண்ணனுக்கு பிடித்தது அவ்வளவு தான்" என்று பெருந்தன்மையாக வசந்தி சொல்ல ரகு அருகில் வந்தான்.

"முதன் முதலில் அம்மாவிடம் போட்டுக் கொடுத் தவள் நீதான் என்ற அர்த்தத்தில் சொல்கிறாளோ என்னவோ...?" என்று வெற்றிவேல் கிண்டல் அடிக்க, "பவித்ராவுக்கு முடி வெட்டிட்டு வா என்று தூக்கத்தைக் கலைச்சு நீ அனுப்பவில்லை என்றால் இவர்கள் சந் திப்பது எங்கே..." இப்போது ரகுராமன் இடையிட்டான்.

"ரகு, நீ போய் கல்யாண வேலை என்ன என்ன மிச்சம் இருக்கு என்று பாரு. வசந்தி மண்டபத்துக்கு பேக் பண் ணும் வேலையைப் பாரு. என்னங்க, நீங்க குழந்தைகளை கொஞ்ச நேரம் தூங்க வைங்க. வாங்க அண்ணி, நாம் சாப்பாட்டு வேலையைக் கவனிக்கலாம்.

சீக்கிரம் ரெண்டு பேரும் சாப்பிட வாங்க" என்று அங்கே கூடி இருந்த அனைவருக்கும் வேலையைப் பகிர்ந்து கொடுத்து உத்தரவிட்ட பாலாம்பிகை அங்கே இருந்து கிளம்பினார்.

''பிள்ளைக்கு தனிமை கொடுத்து இடத்தைக் காலி பண்ணுங்க என்று அத்தை எவ்வளவு டீசண்டா சொல்றாங்க பாரு...'' என்று ரகுவும்,

''இதுக்கு மேலே இங்கே நின்று இருந்தால் அந்த டீசன்சி காணாமல் போய் கழுத்தை பிடித்துத் தள்ளினாலும் தள்ளிடுவாங்க. நமக்கு இது தேவையா?'' என்று வசந்தியும் கேட்டுச் சேர்ந்து சிரித்து விட்டு நகர வெற்றிவேலின் பார்வை ஆர்வத்துடன் வாணிப்ரியாவின் மேல் பதிந்தது.

''ப்ரியா...''

''நான் கோபமாக இருக்கேன்...'' என்று முகத்தை வேறு புறம் திருப்பி சொன்னவளின் குரலில் குதூகலமே இருந்தது.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம். அப்படியே இரு...'' என்று சொல்லிவிட்டு அவன் நகரத் துவங்க அவள் ஓடி வந்து அவன் சட்டையைப் பிடித்து இழுத்து நிறுத்தி திருப்பினாள்.

''கோபமா இருக்கேன் என்று சொன்னால் ஏன் எதுக்கு என்று கேட்டு சமாதானப்படுத்த மாட்டீங்களா? சரி இரு என்று சொல்லி அப்படியே விட்டுட்டுப் போனால் என்ன அர்த்தம்? அன்றும் அப்படித்தான்! ஆளுக்கு முன்னால கிளம்பி வீட்டை விட்டு வெளியே ஓடியாச்சு...? என்னைப் பற்றிக் கொஞ்சமாவது உங்க மனசுல நினைப்பு இருந்தால் அப்படிச் செய்து இருப்பீங்களா?''

அவளின் இடையை வளைத்து அருகே இழுத்து அணைத்தவன் கரங்களை விலக்க முயன்று தோற்றவள் ''விடுங்க என்னை...'' என்று சிணுங்கினாள்.

''விடுறதுக்கா இவ்வளவு பண்ணி உன்னை அங்கே இருந்து கடத்திக் கூட்டிட்டு வந்தாங்க.''



''யாரு காரைக் கடத்தினா? நானா தானே வந்தேன்...?''

''அப்படியா...? நீயா வந்தாயா? எதுக்கு...?''

''எதுக்கு என்றால்? உங்களுக்கு அடிபட்டு இருந்ததே'' என்று ஆரம்பித்தவள் அப்போதுதான் அவன் கரங்கள் இரண்டும் உடும்பு பிடியாய் தன்னை அணைத்து இருப்பதை உணர்ந்து விழி விரித்தாள்.

''ஹேய் கூட்டு களவானிங்களா...? உங்களுக்கு அடி படவே இல்லையா? கையில் அவ்வளவு பெரிய கட்டுப் போட்டு இருந்தீங்க? நெற்றியில் பிளாஸ்டர் காலில் சுளுக்கு. எக்ஸ்ரே என்று என்னென்னவோ கதை எல்லாம் சொன்னீங்க? எல்லாம் பொய்யா.

உங்களை...'' என்று அவள் அடிக்கத் துரத்த அவன் அவள் கையில் சிக்காமல் ஓடுவதாக கொஞ்ச நேரம் பாவலா காட்டி விட்டு அங்கே இருந்த கல் பெஞ்சில் அமர்ந்து அவளையும் அருகே இருத்திக் கொண்டான்.

''எனக்கு கை கால் எல்லாம் நல்லா இருக்கு. எங்கேயும் அடிபடலை...'' என்றவன் அவளை இழுத்து அருகே அமர வைத்தான்.

அவளின் தோளை சுற்றி இடது கையை படர விட்டு, வலது கையால் அவளின் முகவாயை நிமிர்த்தி, ''மனசுக்குள்ளே இவ்வளவு ஆசையையும் அன்பையும் வைத்துக் கொண்டு ஏன்டீ அப்படிப் பேசினாய்? என்னை விடு, அம்மா அப்பாவும் வந்து இருக்கும்போது அப்படி என்னைப் பயன்படுத்தலாமா?'' என்று அவன் கேட்க அவளுக்குக் கண்கள் கலங்கியது.

''நான் மிச்ச எல்லா வார்த்தைகளையும் காதில் போட்டுக் கொள்ளக் கூடாது என்று தீர்மானமா இருந்தேன். ஆனால்... என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால்

நாலே மாசத்தில் நீங்க இல்லாமல் போய்டுவீங்க என்று சொன்னதும், அதை என்னால் அலட்சியம் பண்ண முடியலை. நீங்க நல்லா இருக்கணும் என்று தான் என் மனசே கேளாமல் அப்படிப் பேசினேன். ஆனாலும் இந்த விபத்து செய்தி கேட்ட உடனே எனக்குத் தோன்றியது சாரதா அத்தை சொன்ன அந்த வார்த்தை தான் தெரியுமா? அப்படியே வெந்து போய் விட்டேன். உங்களை முழுசாய் உங்க வீட்டில் பார்க்கும் வரை என் உயிர் என் வசம் இல்லை'' என்று தட்டுத் தடுமாறியவளின் கண்களில் ஈரம் சுரக்க ஆரம்பித்து இருக்க அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''லூசு... பைத்தியம் முட்டாள்... இன்னும் உனக்கு என்ன எல்லாம் பட்டம் கொடுக்கணுமோ அத்தனையும் கொடுக்கலாம். உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? உண்மையில் அந்த விபத்தில் எனக்கு பெரிய காயம் ஏற்பட்டு இருக்க வேண்டும். ஆனால் உனக்காக பேசிய வக்கீல் என்னை அந்த நேரம் அழைத்ததால், உள்ளே சிக்னல் சரியாக இல்லை என்று முதல் மாடியில் இருந்து கீழே இறங்கி வெளியே வந்து பேசினேன். அதான் எனக்குக் காயம் கம்மி. தீ பிடித்த பிறகு உஷாராக சென்று பிறருக்கு உதவ முடிந்தது. இன்னிக்கு நான் உயிரோடு சின்ன சிராய்ப்போடு நின்று இருக்கிறேன். என்றால் அதற்குக் காரணம் நீ. உன் அதிர்ஷ்டம் என்று நான் சொல்கிறேன்.. நீ என்றால் பைத்தியம் மாதிரி உளறிக் கொண்டு இருக்கிறாய்...''

''சாரி... நான்... அன்று...''

''ஆன்னா ஊன்னா கண்ணுல தண்ணி வந்துடுமே? என் பெண்டாட்டியாக வரணும் என்று ஆசைப் படுபவள் அதற்கு ஏற்ற மாதிரி தைரியசாலியாக இருக்க



வேண்டாமா? தடங்கல்கள் இல்லாத வாழ்க்கையில் கிடைக்கும் வெற்றியில் என்ன பெருமை இருக்கு? போராடும் குணமும் ஜெயிக்கணும் என்ற வெறியும் எப்போதுமே இருக்கணும் ப்ரியா. அது இருந்தால்தான் வெற்றிகரமா வாழ முடியும்...''

''சொல்றதுக்கென்ன? ஈசியா சொல்லிடலாம் அனுபவிக்கிறவங்களுக்கு தானே அந்த வலி தெரியும்? இந்த விபத்து விபரம் மட்டும் தான் பொய்யா? இன்னும் நிறைய பொய்கள் சொல்லி இருக்கீங்களா?''

''ஹலோ, நாங்க யாருமே உன்னிடம் எந்த பொய்யுமே சொல்லவே இல்லை.''

''இதோ... இந்த மாதிரி புளுகுறீங்களே? இதுவே மிகப் பெரிய பொய்தான்...''

''நோ மை டியர். உண்மையை உன்னிடம் சொல்லவில்லை என்று சொல்லு. அது உண்மை. ஆனால் பொய் சொன்னோம் என்று சொன்னால்... அது பொய்...'' என்று கண் சிமிட்டி சிரித்தவன் கன்னத்தில் கிள்ள உயர்ந்த கை அப்படியே பதிந்து வருட, அவன் ரசனையோடு தன் கையை அவளின் கை மேல் வைத்தான்.

''இன்னும் வேறென்ன உண்மையை என்னிடம் சொல்லாமல் மறைத்து வைத்து இருக்கீங்க?''

அவளின் கையை தன் கைகளுக்குள் வைத்து வருடியபடி, ''நிறைய இருக்கே! அதை எல்லாம் நாளைக்கு கல்யாணம் முடிந்த பிறகு விடிய விடிய கதை பேசலாமா?''

''முக்கியமா ஒன்று ரெண்டை மட்டும் இப்ப எடுத்து விடுவது?'' என்றவள் அவனை நெருங்கி அமர அவன் அவளை அணைத்துக் கொண்டான்.

"அதைச் சொன்னால் இப்படி என்னோடு நெருங்கி இழைஞ்சுகிட்டு இருக்கும் என பெண்டாட்டி காணாமல் போய் ஒரு காளி சொரூபம் வர வாய்ப்பு இருக்கே?" என்றவன் மூக்கு அவளின் மூக்கை உரச அவள் கன்னத்தைக் கிள்ளினாள்.

"இப்படிச் சொன்னால் எப்படி காளி சொரூபம் வரும்? வராது தைரியமா சொல்லுங்க..."

"அப்படிங்கற..." என்று இழுத்தவன் எதுக்கும் இருக்கட்டும் என்று குனிந்து அவளின் நெற்றியில் ஒரு முத்தம் பதித்தான்.

"இந்தக் கல்யாணத்திற்கு சம்மதம் சொல்ல வேண்டி கேட்டுக் கொள்ள உன்னைத் தேடி 'அந்த வீட்டுல' இருந்து ரெண்டு ஜீவன் தேடி வந்ததே? அது நம்ம ஏற்பாடு தான்..." என்று அவன் சொல்ல அவள் வாயைப் பிளந்தாள்.

"ஹா! நிஜமாவா..?"

"உனக்கென்ன கிருஷ்ணா பிரமாதமா என்று நினைப்பா? அகில உலகமும் உன் வாய்க்குள் தெரியாது. வாயை மூடு..." என்று சொல்லி அவளின் இதழ்களைச் சேர்த்து வைத்தவன் அவசரமாக அதில் முத்தம் பதித்தான்.

"கிடைச்சப்ப கேப்ல எல்லாம் கொஞ்சிக்கோங்க..."

"நான் எவ்வளவு கொடுத்தாலும் ஒன்றும் திரும்பி வர மாட்டேங்குதே?" அதான் எனக்கு வருத்தம்" என்று போலியாக சலித்துக் கொண்டவனை கன்னத்தில் செல்லமாகக் கிள்ளினாள்.

"வரும் வரும்... எல்லாம் வர வேண்டிய நேரத்தில் கரெக்டா..."



"வரட்டும் வட்டியோடு வாங்கிக்கறேன்..." என்று ரசனையாகச் சிரித்தான்.

"இருந்தாலும் உங்க தரத்துக்கு நீங்க அவங்களோடு எல்லாம் இறங்கி பேசக் கூடாதுங்க. எனக்கு சங்கடமா இருக்கு தெரியுமா?"

"ஹேய் லூசு! அவங்களோடு நான் பேசவே இல்லை. அவங்களை தான் என்னைத் தேடி வர வைத்தேன். பண பைத்தியங்களை எங்கே அடித்தால் எங்கே வலிக்கும் என்று தெரிந்து வைத்து இருந்தேன். அடித்தேன்! தன்னால் இங்கே வந்து விழுந்துட்டாங்க..." என்று சொல்ல அவளின் முகம் அவமானத்தில் குன்றியது.

"ப்ரியா, அவர்களுக்காக நீ முகம் கன்ற வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் நம் வாழ்வில் எந்தக் காலத்திலும் முக்கியத்துவம் பெறப் போவதும் இல்லை. நினைக்கத் தகுதி இல்லாத ஒரு விஷயத்தை மறந்து விடு..." என்று ஆறுதல் சொன்னவன் அவளை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.



## 27

"எனக்கு நீ வேண்டும். அதுக்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன்" என்று அழுத்தமாகச் சொன்ன வெற்றிவேலைப் பெருமையாகப் பார்த்த ப்ரியா எழுந்தாள்.

"அத்தை சாப்பிட வரச் சொன்னாங்க. வாங்க உள்ளே போகலாம். பசிக்குது. ரொம்ப நேரம் இங்கே இருந்தால்

நல்லா இருக்காது'' என்று முணுமுணுக்க அவன் சிரிப்புடன் எழுந்தான்.

''உன் குணத்துக்கு பாதி வாக்கியம் தான் பொருத்தமா இருக்கு. பசிக்குது என்று சொல்வது பொருந்தவே இல்லையே? உனக்கு அதெல்லாம் கூட வருமா?'' என்று கிண்டல் பண்ண அவள் அழகு காட்டினாள்.

''ம்கூம்! நேற்று ராத்திரியில் இருந்து சாப்பிடாமல் இருந்தால் பசிக்காமல் என்ன பண்ணும்?'' என்று அவள் மெல்லிய குரலில் சொல்ல அவசரமாகத் திரும்பிப் பார்த்தவன், கனிந்தான்.

''சாரி ப்ரியா. அது வசந்தி உன்னை இங்கே அழைச்சுட்டு வர வேண்டும் என்ற ஆசையில் அப்படிப் பண்ணிட்டாள். எனக்கும் உன்னை உடனே பார்க்கணும் போல இருந்தது ப்ரியா. அதுக்கும் மேலே நம்ம வீட்டுல முக்கியமான விசேஷம் நடக்கும்போது, நீ இல்லாமல் இருந்தால் எப்படி என்று தோணுச்சு. அதனால் நானும் அதைத் தடுக்கவில்லை. எங்களை மன்னிச்சிடு...'' என்று இறங்கிய குரலில் வெற்றி சொல்ல, அவள் அவனை நெருங்கி உரசி நடந்தாள்.

''எனக்கு கூடத்தான் உங்களைப் பார்க்கணும் என்ற ஆசை இருந்தது. அதனால் தான் ஓடி வந்தேன். ஆனால் இவ்வளவு சந்தோஷமான செய்தியை ஏன் இப்படி ஜெம் மாதிரி முகத்தை வச்சுட்டுச் சொல்றீங்க?'' என்று சொன்னவளின் குரலில் குறும்பும் முகத்தில் சிரிப்பும் இருக்க புன்னகை செய்தான்.

''ஜெம் மாதிரியா...? வார்த்தைக்கும் குரலில் இருக்கும் பாவனைக்கும் சம்பந்தமே இல்லையே? ஏதோ வில்லங்கமா சொல்ற மாதிரி இருக்கு. எனக்குத் தெரிஞ்ச வரை ஜெம் என்பது நல்ல வார்த்தை தானே?''



அவனுக்குப் புரியவில்லை என்பதாலேயே புன்னகை மேலும் விரிய, ''ரொம்ப நல்ல வார்த்தை. ஜெண்டில்மேன் என்பதன் சுருக்கம் என்று சொல்லலாம் விலை மதிப்பில்லாத கல் என்ற பொருளும் கொள்ளலாம். ஜிஞ்சர் ஈட்டன் மங்கி என்றும் சொல்லலாம்'' என்றவளின் முகத்தில் சிரிப்பு இருக்க அவனும் சிரித்தான்.

''என்னையே மங்கி என்று சொல்லும் அளவுக்கு வாய் வந்து விட்டதா? ஆனால் பரவாயில்லை. உன்னை இந்த மாதிரி கவலை இல்லாமல் சந்தோஷமா சிரித்தபடி பார்க்கும்போது எப்படி இருக்கு தெரியுமா? அதை விட்டுட்டு கூம்பிப் போன தாமரை மாதிரி உம்முன்னு முகத்தை வச்சுக்கிட்டு, தேவை இல்லாத கவலைகளைத் தூக்கித் தலையில் வச்சுக்கிட்டு, ஹாரிபிள் ப்ரியா! இப்பதான் மனசே நிம்மதியா இருக்கு...''

''எனக்கும் தான். இப்ப உரிய இடம் வந்து சேர்ந்த நிம்மதி வந்துடுச்சு. ஆனால் அதுக்கு நீங்க ரொம்பக் கஷ்டப்பட்டுட்டீங்க போல...''

''அப்படி ஒன்றும் பெரிதா கஷ்டப்படலை. ரெண்டே நாள் வேலை. உன்னை என்னிடம் சேர விடாமல் தடுக்கும் மாய திரை எங்கே இருக்கு என்று பார்த்தேன். கண்டு பிடித்தேன். அவங்களை வழிக்கு கொண்டு வர வக்கீல் நோட்டீஸ் அனுப்பினேன்.''

''ஆனால் நான் கையெழுத்து போட்ட பேப்பர் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?''

''ராகுலுக்கு பெர்த் சர்ட்டிபிகேட் வாங்கப் பேப்பரில் கையெழுத்து போட்டுக் கொடுத்தாயே?''

''அது சரி சொன்ன வேலையை விட்டுட்டு. என்ன வெல்லாமோ பண்ணினீங்களாக்கும்? அப்ப பெர்த் சர்ட்டிபிகேட் வாங்கலையா?''

''வாங்கியாச்சே! அது மட்டுமில்லை. இங்கே நம்ம வீட்டுப் பக்கத்தில் இருக்கும் ஸ்கூல் அட்மிஷனும் போட்டாச்சே?''

''எப்படி...?''

''அப்பா ஓய்வு பெற்ற அரசு அலுவலர் இல்லையா? அவருடன் சென்றேன். நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன் என்று இதைக் காட்டினேன். வேலை முடிஞ்சுது'' என்று சொன்னவன் அருகில் அலமாரியில் இருந்த திருமண அழைப்பிதழை நம்ப முடியாமல் விழிகளை விரித்தாள்.

''கல்யாண இன்விடேஷனா எப்போ அடித்தீங்க? யாருக்கு கொடுத்தீங்க? இப்பதானே நான் உங்களிடம் சம்மதம் சொன்னேன். அதுக்குள்ளே எப்படி?''

''ஒரு குருட்டு நம்பிக்கை தான். அம்மா அவங்க சஷ்டியப்த பூர்த்தி கல்யாணத்தில் நான் பெண்டாட்டி பிள்ளையோடு இருக்க வேண்டும் என்று ரொம்ப ஆசைப்பட்டாங்க. அதனால் இந்த பத்திரிகை ஒரு ஐம்பது மட்டும் அடிச்சேன். ரொம்ப நெருங்கியவங் களுக்கு மட்டும் தான் கொடுத்தேன். நடந்தாலும் சரி நடக்கா விட்டாலும் சரி என்ற தைரியம் தான். எப்படியும் அவர்களின் வருகை வீணாகப் போவதில்லையே?''

''இருந்தாலும்... நீங்க... இவ்வளவு நம்பிக்கை என் மேலே வச்சு இருக்கம்போது.. இவ்வளவு வேலைகள் செய்து இருக்கும் போது... நான்... ப்ச்! எவ்வளவு அசிங்கமா உங்களை. சை! நான்... எனக்கு...'' அவள் மேலே பேச முடியாமல் அவன் மார்பில் புதைந்தாள்.

''நானும் அழக்கூடாது என்று தான் பார்க்கிறேன். ஆனால்... எனக்காக. நீங்க... இவ்வளவு வேலைகள் பார்த்துப் பார்த்து...''



''ஷ்! ப்ரியா, ஸ்டாப் இட்... இந்த அழுமூஞ்சி எனக்கு வேண்டாம்! இப்ப அழுகையை நிறுத்தவில்லை என்றால் நாளைக்கு நடக்க இருக்கும் கல்யாணத்தை நானே...'' என்று ஆரம்பிக்கம் போதே ஒரு கையை அவன் வாய் மேல் வைத்து அவசரமாக மூடினாள்.

''வேண்டாங்க... விளையாட்டுக்குக் கூட அந்த வார்த்தை சொல்லாதீங்க. நம் வாயில் இருந்து நல்ல வார்த்தைகள் மட்டும் தான் வரணும். எனக்கு நீங்க வேண்டும்...'' என்று கலங்கிய கண்களுடன் அவள் சொல்ல அவன் அவளை இழுத்து அணைத்து அவளின் உச்சியில் கன்னத்தைச் சாய்த்தான்.

''அன்னிக்கும் சொல்கிறேன். இன்னிக்கும் சொல் கிறேன். இது உனக்காகச் செய்யும் வேலை இல்லை. இதுல முழுக்க முழுக்க என் சுயநலமும் பாதி இருக்கு. உன்னைவிட ஒரு நல்ல பெண் எனக்குக் கிடைப்பாளா சொல்லு?'' என்று பெருமையாகக் கேட்கும் வெற்றி வேலைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

இவன் என்னவன்! என்ற எண்ணம் தந்த பெருமிதம் அவளின் முகத்திலும் பிரகாசித்தது.

''நாலு வருஷமா கல்யாணம் என்ற வார்த்தையைக் கேட்டால் நாலு கால் பாய்ச்சலில் காத தூரம் ஓடிக் கொண்டு இருந்த என்னை, நின்று திரும்பிப் பார்க்க வைத்த முதல் பெண் நீ. அறிமுகமே இல்லாத ஒரு குழந்தைக்காக உன் நேரத்தை கேள்வி கேட்காமல் செலவு பண்ணத் துணிந்தாய் அல்லவா...?''

''அது என் வேலை தானே? அதை போய் பெரிசா சொல்லிட்டு...''

''அது உன் வேலையாக இருக்கலாம் ப்ரியா. ஆனால் நீ வசந்தியின் ப்ரெண்ட் இல்லையே? நீயும் ஆச்சு உன்

மாமாவும் ஆச்சு என்று அவளை ஒரு ஓரமாக உட்கார்த்தி வைத்து இருக்கலாமே? என் அத்தைக்கு கோவிலில் வைத்தியம் பார்த்தாயே! அது?''

''நான் செய்தது எல்லாம் சப்பை மேட்டர். ஆனால் நீங்க செய்தது...''

''அது உனக்காக என்று சொல்ல முடியாதே? யார் என்றே தெரியாத ஒரு பெண்ணின் நலத்துக்காக நீ போராடும் போது ராமருக்கு அணில் உதவிய மாதிரி நானும் ஒரு செங்கலை அசைத்தேன் அவ்வளவுதான்...''

''அது எனக்காக இல்லை. ஓகே. ஆனால் ராகுலை கவனித்துக் கொண்டது? நம் பிள்ளை என்று சொன்னது...''

''அது பெரிய விஷயமா...? நீ கூடத்தான் பவித்ராவை கவனித்துக் கொண்டாய். நானாவது உன்னிடம் உன்னை எதிர்பார்த்தேன். நீ வசந்தியிடம் எதுவுமே எதிர்பார்க்க வில்லையே?''

''நான் எதிர்பார்க்கவில்லை என்றாலும் அவங்க விடலை. ஆயிரம் தகிடு தத்தம் பண்ணி, என்னைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டிய இடத்தில சேர்த்து விட்டாங்களே...''

''இதுதான் நீ வந்து சேர வேண்டிய இடம் என்று சொல்ல இப்பவாவது மனசு வந்ததே?''

''இதைப் பத்தி இனிமேல் பேச வேண்டாமே?''

''வேறே எதைப் பற்றிப் பேசணும்?''

''கையிலும் காலும் அடிபட்டு இருக்கு என்று பொய் சொல்லி ஜாலியா உட்கார்ந்து இருந்தீங்க இல்லையா? இப்ப கல்யாண வேலையைப் பார்க்கலாம் இல்லையா?''

''மாப்பிள்ளையைப் போய் கல்யாண வேலை பார் என்று சொல்கிறாயே? உனக்கு கொஞ்சமாவது மண்டை யில் மசாலா இருக்கா.''



''மாப்பிள்ளையா? நீங்களா...?''

''பின்னே இல்லையா? பார்த்தும்மா கண்ணை சிமிட் டிக்கோ இல்லை என்றால் கருவிழி வெளியே பிதுங்கி விழுந்துவிடப் போகிறது'' என்று சொல்ல அவள் திகைத்தாள்.

இப்போ தானே பத்திரிகை காண்பித்தான்? அதற்குள் மறந்து விட்டால் எப்படி? கல்யாணம் என்ற ஒன்று இனிமேல் தான் நடக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. அதனால் அதற்கு முக்கியத்துவம் மனசு தரவில்லை.

''விளையாட்டே இல்லை. நாளைக்கு காலை ஐந்தில் இருந்து ஆறுக்குள்ளே நமக்குக் கல்யாணம். அதே மண்டபம் நெருங்கிய உறவினர்கள் மட்டும் இருப்பாங்க. எட்டில் இருந்து ஒன்பதுக்குள்ளே அம்மா அப்பாவுக்கு சஷ்டியப்த பூர்த்தி...'' என்று சொல்ல அவளுக்கு மனம் நெகிழ்ந்தது.

''நான் ஒன்று சொல்லட்டுமா...?''

''இதென்ன கேள்வி? உனக்கு எல்லா உரிமையும் என்னிடத்தில் இருக்கு சொல்லு...''

''வந்து.. நமக்கு கல்யாணம் என்று ஒன்று தனியா நாளைக்கு பண்ணினால்... அதை ராகுல்... எப்படி எடுத்துக்குவானோ தெரியலை... அதனால்...'' என்று தயக்கமாகச் சொன்னவளை புன்னகையுடன் பார்த்தான்.

''அதை நான் யோசிக்க மாட்டேனா? நாளைக்கு காலையில் மண்டபத்தில் எல்லா ஹோமமும் செய்ய ஏற்பாடு பண்ணி இருக்கு. அதனால் அக்னியை சுற்றி, நாம எட்டு பேரும் மாலையோடு உட்கார்ந்து இருக்கப் போகிறோம். நடுவில் உனக்கு ஒரு தாலி செயின் போட்டு விடுவது வித்தியாசமா தெரியாது. அதனால் அந்தக் கவலையை விடு...'' என்று சொல்ல அவளின் மனம் நிறைந்தது.

"இது அம்மாவுக்குத் தெரியுமா?"

"ஐடியாவே அம்மா கொடுத்தது தான். சஷ்டியப்த பூர்த்தி கல்யாணம் செய்யும் போது பையன் பொண்ணு எல்லாம் கல்யாணம் ஆகி பேரக் குழந்தைளுடன் செய்வது விசேஷம் என்று சொல்லிட்டே இருந்தாங்க. சுபஸ்ய சீக்கிரம்..." என்று கண் சிமிட்டியவன் மார்பில் அன்புடன் சாய்ந்தவளை ஆசையுடன் அணைத்துக் கொண்டான் வெற்றிவேல்.



## 28

அடுத்த நாள் அதிகாலையில் பொழுது புலர்வதற்கு முன்பே இருந்த சுப வேளையில், கணபதி ஹோமம் முடித்த கையோடு வெற்றிவேலுக்கும் வாணிப்ரியாவிற்கும் எளிமையாகத் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

அவர்களின் நல வாழ்க்கையை உண்மையான அன்புடன் வேண்டும் உறவும் நட்பும் சூழ நடந்த அந்த திருமணத்தில், சாரதா வினோத் மற்றும் சுகன்யா மூவரும் வந்து இருந்ததைப் பார்க்கையில் அவளுக்கு விழி வியப்பில் தெறித்துவிடும் போல இருந்தது.

அதிகாலை ஐந்து மணிக்கு பல்லாவரத்தில் இருந்து பயணம் செய்து வந்து அவர்களை நேரில் வாழ்த்தி விட்டு வாய் எல்லாம் பல்லாக வெற்றி சிரிப்புடன் சென்ற அந்த மூவர் கூட்டணியின் மலர்ந்த முகத்தை வாணி ப்ரியாவால் நம்பவே முடியவில்லை.

"என்ன அப்படி ஒரு ஆச்சரியம்? கண்ணு விரியும் அழகைப் பார்த்தால் இப்படியே அம்மா அப்பாவோட



அறுபதாம் கல்யாணத்தை வசந்தி - ரகு தலையில் கட்டிட்டு உன் கை பிடிச்சு இழுத்துக் கொண்டு இப்படியே நைசா வீட்டுக்கு ஓடிப் போகலாம் போல இருக்கே?" என்று காதுகளில் சரசமாகக் கேட்ட கணவனை வியப்புடன் பார்த்தாள்.

"என்னால் நம்பவே முடியலைங்க. நான் இரண்டாம் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் இவங்களுக்கு எப்படி இவ்வளவு சந்தோஷம் வந்தது?" என்று நம்ப முடியாமல் கேட்க அவன் கண்ணடித்து 'அதை நைட் சொல்கிறேன்' என்று ஒத்தி வைத்தான்.

பாலாம்பிகை கண்ட கனவு நனவாக, அன்றைய அவரது அறுபதாம் திருமண விழாவில், வெற்றிவேல் - வாணிப்ரியா தம்பதியினர் மகன் ரகுளுடனும், ரகுராமன் வசந்தி தம்பதியினர், மகள் பவித்ராவுடனும் அருகே நின்று ஆன்மீக சடங்குகளைச் செய்ய, அவரின் மனம் சந்தோஷத்தில் நிறைந்து இருந்தது.

"இதைவிட மேலான திருமணப் பரிசை எங்களுக்கு நீ கொடுக்க முடியாது வெற்றி..." என்று மனம் நிறைந்து வெங்கடேஸ்வரன் சொல்ல வெற்றி, மனைவி மகனுடன் குடும்ப சமேதராக அவர்களின் கால்களில் விழுந்து அவர்களின் மனப்பூர்வமான வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டான்.

மருமகளுக்கு தங்களின் பரிசாக மகாலக்ஷ்மியின் படம் பொரித்த நான்கு தங்கக் காசுகளை அவளின் தாலிக் காடியில் கோர்த்து கொடுத்தவர், "நான் வெற்றியிடம் மருமகளை மட்டும் தான் கேட்டேன். ஆனால் என் மகன் படு சூட்டிகை. கெட்டதுக்கும் மேலே போனையும் சேர்த்துக் கொடுத்து விட்டான். ஆனால் ஆஸ்திக்கு ஒரு

ஆண் மட்டும் போதாது ஆசைக்கு ஒரு பெண்ணும் வேண்டும். சீக்கிரம் என் கையில் கொடுத்துடு...'' என்று ஆசீர்வாதம் செய்தார் பாலாம்பிகை.

''இவ்வளவு நாள் கழிச்சு உன் மருமகளையும் பேரனையும் எங்க கண்ணில் காட்ட உனக்கு மனசு வந்து விட்டதா?'' என்று திருமணத்திற்கு வந்தவர்களில் பாதி பேர் விசாரணை செய்ய, அதை ஒரு புன்னகையுடன் ஆமோதித்து வம்புப் பேச்சுக்கு வழி விடாமல் செய்த புகுந்த வீட்டினரின் அன்பு அவளின் மனதில் எல்லை இல்லா நிம்மதியைத் தந்தது.

இரவு உணவுக்குப் பிறகு, வசந்தி ராகுலையும் பவித்ராவையும் அழைத்துக் கொண்டு சினிமாவுக்குச் சென்றுவிட, பெரியவர்கள் மூவரும் வாசலில் அமர்ந்து அன்றைய சந்தோஷ நிகழ்வுகளை பகிர்ந்து கொள்ள, வெளிப்படையாகத் தெரியாமலேயே வெற்றிவேல் - வாணிப்ரியா இருவரின் தனிமைக்கு ஏற்பாடு செய்தனர்.

அறை வாசலுக்கு வந்து, எதிர்கொண்டு அழைத்துச் சென்றவனின் பின் தொடர்ந்த மனைவியை நோக்கி கை நீட்டி, ''கடைசியில் பெரிய மனது பண்ணி என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு என் அறைக்குள் வந்து விட்டாய். நானும் ஹீரோவாகி விட்டேன்...'' என்று கண் சிமிட்டிச் சொல்ல அவன் அருகே அமர்ந்து, காதலோடு அவன் தோளில் சாய்ந்தாள்.

''நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு முன்னாலும் நீங்க ஹீரோதான்...''

''ம்ஹூம்! ஒருத்தி நீ ஹீரோ இல்லை என்று சொன்னதாகத் தான் ஞாபகம். யாருக்கு நான் ஹீரோ? யாரும் என்னிடம் அப்படிச் சொல்லவில்லையே?'' என்று கொஞ்சியவன் கரங்கள் அவளின் தோளை வருட இதழ்கள் அவன் கன்னத்தில் உரசியது.



''முதலில் ராகுலுக்கு...''

''ஆஹா! இது எனக்குத் தெரியாதே? அது எப்போல இருந்து...?''

''உங்களைப் பார்த்த முதல் வினாடியில் இருந்தே! ஒன்றா? இரண்டா...? அங்கிள் ஆர்ம்ஸ் செம ஸ்ட்ராங். அதில் நான் தொங்கினேன் என்று ஆரம்பித்து, மழை நேரத்தில் எலெக்ட்ரிக் போஸ்ட் தொடாதே என்று சொன்னார். அங்கிள் தருண் ஆதித்யாவிடம் ஆட்டோக்ராப் வாங்கித் தந்தார். வெற்றிப்பா லெப்ட் ஹேண்டில் ஸ்பின் பவுலிங் போட்டார். இரண்டு கையாலும் எழுதினார். என்று உங்களைப் பற்றிய பேச்சு நிற்கவே நிற்காது...'' என்று சீண்டலுடன் முகத்தில் பெருமை வழியப் பேசியவளைத் தன்னோடு சேர்த்து இறுக்கிக் கொண்டான்.

''முதலில் ராகுல் என்று சொல்லியாச்சு. அடுத்த இன்னும் யாரோ இருக்காங்க போல இருக்கே? அது யாரு...?'' என்று கேலியாகக் கேட்டவன் அவளின் முகத்தை நிமிர்த்தி நெற்றியில் நெற்றியை வைத்து லேசாக முட்டினான்.

''ம்ம்ம்... ராகுலுக்கு அப்புறம் என்னைத் தவிர வேறே யாரு உங்களை ஹீரோ என்று சொல்வாங்க?''

''உனக்கு நிஜமாவே என்னைப் பிடிக்குமா? அன்று கோவிலில் இருந்து சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பிட்ட?'' என்று மனசுக்குள் இருந்த ஆதங்கத்தைக் கேட்டான் வெற்றிவேல்.

''பிடிக்காமல் என்னங்க? ரொம்பப் பிடிக்கும். அதுவும் சின்ன பொண்ணுக்கு நீங்க செய்த உதவியைப் பார்த்த பிறகு, ராகுலை நீங்க ஒரு ஆபத்தில் இருந்து காப்பாற்றினீங்க என்று தெரிந்த பிறகு, எப்படிங்க பிடிக்காமல் போகும்?''

''நான் அதைச் சொல்லலை ப்ரியா. நிறைய நல்ல விஷயங்கள் கண்ணில் படும் போது பிடிப்பது வேறே. ஆனால் சில நேரம் ஒன்றுமே இல்லாமல் உன்னை உனக்காகவே எனக்குப் பிடிக்கும். அந்த மாதிரி எப்பவாவது என்னைப் பார்த்து ஒரு வினாடி நினைத்து இருக்கிறாயா என்று கேட்டேன்..'' என்ற அவனின் கேள்வியைக் கேட்டதுமே அவளின் முகம் சிவந்தது.

''என்ன இப்படி சிவக்கிறாய்? நினைத்து இருக்கிறாயா? நிஜமாவா? எப்போ?''

''அதிசயத்தில் நீங்க குழந்தைகளுடன் நீரில் விளையாடியபோது வேறே எந்த நினைப்பும் இல்லாமல், நான் ஒரு பெண், நீங்க ஒரு ஆண் என்ற பரஸ்பர ஈர்ப்பு மட்டும் இருந்தது. அந்த வினாடியில் விழுந்து விட்டேன் என்று நினைக்கறேன்.''

''ஆமா! நீ அன்று ஒரு மாதிரி தான் இருந்தாய். அம்மாவின் அழைப்பை எடுக்க உனக்கு இரண்டு முறை சொல்ல வேண்டி இருந்தது. பிறகும் அது அம்மா என்பதை நீ உணரவில்லை. சாப்பிட நாங்களாக வரும் வரை கனவு லோகத்தில் இருந்தாய். அவ்வளவு தூரம் ஆசைப்பட்டு விட்டு அப்புறம் என்னடி ஆச்சு? அந்த வேஸ்ட் பார்ட்டிங்க என்னவோ சொன்னாங்க என்று எங்களை மண்டை காய விட்டுவிட்டாயே...?'' என்று சலித்துக் கொண்டதும் அவளுக்கு அன்று காலையில் அவன் சொன்னது நினைவு வந்தது.

''காலையில் அந்த வேஸ்ட் பார்ட்டிங்க மூன்று பேரும் எப்படி அவ்வளவு சந்தோஷமா வந்து என் கல்யாணத்தில் கலந்து கொண்டு பரிசும் கொடுத்துட்டுப் போனாங்க என்று கேட்டதற்கு ராத்திரி சொல்கிறேன்



என்று சொன்னீங்களே? எப்படி நடந்தது அது? என்னால் இன்னமும் நம்பவே முடியலை...''

''உன்னால் எந்தக் காலத்திலும் நம்ப முடியாது. ஏன் என்றால் நீ துஷ்டனைக் கண்டால் தூர விலகு டைப். ஆனால் அவங்க அப்படி இல்லை. சதா சர்வ காலமும் யாரை எப்படி கவிழ்க்கலாம்? அதில் எப்படி ஆதாயம் பார்க்கலாம் என்று கணக்கு பண்ணுபவங்க...''

''நான் என்ன கேட்டால் நீங்க என்ன சொல்றீங்க? சுத்தி வளைக்காமல் நேரடியா பதில் சொல்லுங்க.''

''ஏற்கனவே கொடுத்த வக்கீல் நோட்டீசையும், காவல் நிலையத்தில் செந்திலின் மரணத்தில் சந்தேகம் இருக்கிறது என்று கமிஷனர் ஆபீசில் கொடுத்த புகார் கடிதத்தையும் செயல் இழக்க வைக்க வேண்டும் என்றால், அதன் வீரியத்தை குறைக்க வேண்டும் என்றால், அவள் இரண்டாம் கல்யாணம் பண்ணிக் கொண்டால் உங்கள் பக்கம் கேஸ் பலமாகி விடும். அதன் பிறகு அவளால் ஒன்றும் செய்ய முடியாது என்று எனக்குத் தெரிந்த வக்கீல் மூலம் அவர்களின் காதில் போட்டு வைத்தேன். அவ்வளவுதான்! வேலை முடிந்தது...'' என்று சொல்ல அவளின் முகத்தில் ஆர்வமும் அவன் மேல் கொண்ட காதலும் பொங்கிப் பெருகியது.

அவளின் முகத்தை விரல்களால் வருடி, ''எனக்கு வேண்டியது உன் சந்தோஷமான சம்மதம். அவங்களுக்கு வேண்டியது அவங்க சொத்து குறையக் கூடாது... வின் வின் சிச்சுவேஷன் என்று கேள்விப் பட்டு இருக்கியா...? அது தான் இது... எப்படி...?'' என்று கண் சிமிட்டிக் கேட்க அவனை அவள் பார்வையால் விழுங்கினாள். அந்தப் பார்வையின் வீரியம், அந்த ஆண் மகனின் கம்பீரத்தை

அசைத்துப் பார்த்து அவளிடம் கொஞ்சிக் குழைய வைத்தது.

''இன்னும் ஏதாவது சந்தேகம், விளக்கம் கேட்க வேண்டும் என்றால் இப்பவே கேட்டு விடு. எனக்கு நிறைய வேலை இருக்கு'' என்று சொன்னவனின் கைகளும் கண்களும் அது என்ன வேலை என்று சொல்லாமல் சொன்னது.

''முக்கியமான வேலை என்றால், அதை முதலில் பார்க்க வேண்டியது தானே? என்னிடம் என்ன கேள்வி?'' என்று முணுமுணுப்பாக சொன்னவளின் கரங்கள் அவனின் கழுத்தில் மாலையாக படர அவன் அவளை தன்னுடன் சேர்த்து அணைக்க, சுற்றுப்புறம் மறந்து அவனுக்குள் புதைந்தவளின் மனம் நிறைந்து இருந்தது.

பணத்தை பெரிதாக மதிக்கும் உலகில் மனதை பெரிதாக மதிக்கும் அவனும் அவளும், 'நீயின்றி நானில்லை நானின்றி நீ இல்லை' என்று ஒன்றோடு ஒன்றாகக் கலந்து இனிய இல்லறம் நடத்தத் துவங்கி விட்டார்கள்.

**பொன்னை விரும்பும் பூமியிலே**

**என்னை விரும்பும் ஒருயிரே**

**புதையல் தேடி அலையும் உலகில்**

**இதயம் தேடும் என்னுயிரே...!**

**இனி எல்லாம் சுகமே!**

*